


லட்சுமி பாலாஜி பதிப்பகம் ★ பனி விழும் இரவு... ★ முத்துலட்சுமி ராகவன்



## முத்துலட்சுமி ராகவன்

# பனி விழும் இரவு...



லட்சுமி பாலாஜி பதிப்பகம்
லட்சுமி பாலாஜி பதிப்பகம் ★ பனி விழும் இரவு... ★ முத்துலட்சுமி ராகவன்
முத்துலட்சுமி ராகவன்
பனி விழும் இரவு...

முத்துலட்சுமி ராகவன் எழுதிய

# ‘ பனி விழும் இரவு...’

## 1

பனி கொட்டிக் கொண்டிருந்தது.. இருப்பது இந்தியாவா இல்லை அண்டார்டிகாவா என்ற சந்தேகம் மூர்த்தியின் மனதில் எழுந்தது.. பனி படர்ந்த காலையோர பூமரங்களின் பனித்துளிகள் சொட்டியதில் சாலை நனைந்து ஈரமாகியிருந்தது.. மார்கழிப் பனியின் குளுமை மழையின் குளிரோடு இணைந்து வெடவெடக்க வைத்தது..

சாலையில் அங்கொருவரும் இங்கொருவருமாக நடந்து கொண்டிருந்த மக்கள் எஸ்கிமோக்களைப் போல ஸ்வெட்டர் அல்லது மழை தாங்கும் ஜெர்கின் போன்றவற்றை அணிந்து குடைக்குள் பதுங்கியிருந்தார்கள். ஜெர்கினை அணிந்தபின்னும் குடை பிடித்திருந்த ஓர் ஆசாமியை வேற்றுக் கிரக வாசிகளைப் பார்ப்பதைப் போல வினோதமாக பார்த்து வைத்தான்.. பதிலுக்கு அந்தக் குளிர்மழையில் குடை கூடப் பிடிக்காமல் நனைந்தபடிச் சென்றவனை அவர்கள் வினோதத்திலும் வினோதமாக பார்த்து வைத்தார்கள்..

பெங்குவின் பறவையைப் போல அந்தப் பனிமழையை விரும்பி நனைந்து கொண்டிருந்தவனைப் பார்த்தவர்களின் விழிகளில் மின்னிய வியப்பில் துளியும் பாதிக்கப்படாதவனாக தோள்களைக் குலுக்கியபடி அவர்களைக் கடந்து சென்றான் அவன்.. ஊசிக்குளிர் அவனது உடம்பைத் துளைத்ததை அவன் லட்சியம் செய்யவில்லை.. பனிக்காற்று அவனது செவிகளிலும் நாசிகளிலும் நுழைந்து தும்மல் வரவைத்ததைப் பொருட்படுத்தவில்லை.. என்னவோ கொடைக்கானல்

குளிர் மழைக்கு இதமாக வெயில் அடித்துக் கொண்டிருந்ததைப் போல அந்த இரவின் பனிமழையை அவன் கொண்டாடினான்..

அது வெயில் காலமல்ல.. சீசனில்லாத கொடைக்கானல் மழையில்லாத பகல் பொழுதிலேயே வெறிச்சோடிப் போயிருக்கும்.. குளிர் நிரம்பிய பனி படர்ந்த இரவில் கொட்டும் மழையில் எப்படியிருக்குமென்று சொல்லத் தேவையில்லை.. மனதை மருட்டி விடும் தன்மை கொண்ட சிதோஷ்ண சூழல் அது.. குளிரில் வெடவெடக்க வீட்டுக்குள் பதுங்கி, கம்பளி போர்த்தி குளிரை விரட்டக் கொதிக்கும் தேநீரை தொண்டைக்குள் சரிக்க வேண்டிய நிலையில் அதையேதும் செய்யாமல் சாலையில் இறங்கி மழையில் நனைந்தபடி பனி விழும் இரவில் அவன் தன் போக்கில் நடந்து கொண்டிருந்தான்.. அவன் மனதுக்குள் சுழன்று கொண்டிருந்த சூறாவளிக் காற்றில் அவனது உடல் கொடைக்கானலின் பனி விழும் இரவின் குளிர் மழையை உணரவில்லை..

இதுபோல அவன் இரவுகளில் அலைவது ஒன்றும் புதிதான ஒன்றல்ல.. மனதில் அமைதியை இழந்து வாடும் மணித்துளிகளில் அவன் கொடைக்கானலின் குளிரை பொருட்படுத்தாமல் சாலையில் இறங்கி நடந்து விடுவான்.. கால் போன போக்கில் போய் விட்டு மனதின் புயல் ஓய்ந்த பின்னால் வீடு திரும்பி படுக்கையில் விழுந்து உறங்கி விடுவான்.. சில இரவுகளில் விடியும்வரை நடந்ததும் உண்டு..

கொடைக்கானலின் குளிர் அவனைப் பாதித்த தில்லை.. தன் மண்ணின் மைந்தன் என்பதினாலோ என்னவோ இதுவரை அவனைக் கொடைக்கானலின் குளிர் தாக்கியதேயில்லை.. அதை

"அவனுக்குத் தடித்த தோல்டா.." என்று அவனைத் தெரிந்தவர்கள் விமரிசிப்பார்கள்..

அந்த தடித்த தோலுக்கான அர்த்தம் பலவகைப்படும்.. குளிரால் பாதிக்கப்படாத தோல் என்பது மட்டுமல்ல..

சட்டென்று அடிதடியில் இறங்கிவிடும் முரடன் என்பதற்கும் அவ்வார்த்தை பொருந்தும்..

மூர்த்தி முரடன்.. படு முரடன்.. யோசிக்காமல் எவரிடமும் கைநீட்டி விடுவான்.. அதற்கான நியாயமும் அவன் பக்கம் இருக்கும் என்பதினால் அடி வாங்கியவர்கள் ஒன்றும் சொல்லாமல் கொள்ளாமல் ஓடி விடுவார்கள்.. இல்லையென்றால் அவன் கைக்கு எட்டாத தொலைவில் தள்ளி நின்று கத்துவார்கள்..

"அடிங்.." என்று அவன் ஓரடி வைத்ததும் தலைதெறிக்க ஓடி தலை மறைவாகி விடுவார்கள்..

அவனிடம் பேசிப்பழகும் துணிவு எவருக்கும் இருந்ததில்லை.. மற்றவர்களைப் பொருத்தவரை அவன் முள்மரம்..!

"அம்மாடி..! அவன் முகத்தில முள்ளைக் கட்டிக்கிட்டு அலைகிறவனில்ல.."

இதுபோன்ற வார்த்தைகளைக் கேட்டும் கேட்காதவனைப் போல அவன் முறைத்தபடி நடந்து விடுவான்.. 'சிடுமூஞ்சி' என்ற பெயரை சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை சொல்வதில் அவனுக்கு எந்தவொரு பாதிப்பும் ஏற்பட்டதில்லை.. இவர்களில் இடைபட்ட பருவத்தினரான குமரிகளும் இருக்கிறார்களே என்று மனதுக்குள் குமைந்ததில்லை.. மற்றவர்களைக் கூட அவன் விட்டு விடுவான்.. குமரிகளைத்தான் அவர்கள் குளிர் காய்ச்சலில் விழுந்து விடும் அளவுக்கு விரோதிகளைப் போல முறைத்து வைப்பான்..

அவன் அப்படித்தான்.. அவனை அறிந்தவர்கள் விலகிச் சென்று விடுவார்கள்.. அறியாதவர்கள் 'பட்டு' அறிந்தபின் தலைதெறிக்க விலகி ஓடி விடுவார்கள்.. அது குறித்த கவலை அவனுக்குள் எழுந்ததேயில்லை..

அவன் ஒன்றும் தனிமை விரும்பியல்ல.. பரபரப்பான வாழ்க்கைச் சூழலில் தன்னைப் பிணைத்துக் கொண்டிருப்பவன்தான்.. பலருக்கு சம்பளம் கொடுக்கும்

முதலாளிதான்.. ஜனங்களின் மத்தியில் தன்னைத் தனிமைப் படுத்திக் கொள்ளும் வித்தை அவனுக்குத் தெரிந்திருந்தது..

கொடைக்கானல் மலையின் பல்வேறு அடையாளங்களில் ஒன்றான சாக்லெட் தயாரிக்கும் பேக்டரிக்கு உரிமையாளன் அவன்.. 'மது..' சாக்லெட் நூற்றாண்டைத் தாண்டிய வரலாற்றைக் கொண்டது.. அவனுடைய மூதாதையரின் கைகளில் தவழ்ந்து வந்து அவனது கைகளுக்கு மாறிய பரம்பரைச் சொத்து.. ஓர்நாள் அவன் கையை விட்டும் அது பிரிந்தது.

அவன் அதை விரிவு படுத்தினான்.. சாக்லெட் தயாரிப்பில் உள்ள அதி நவீன தொழில் நுட்பங்களைக் கற்றுக் கொள்ள வெளிநாடுகளுக்குப் பயணம் செய்து அவற்றைக் கற்றுத் திரும்பி வந்து பேக்டரியின் தயாரிப்புகளில் மாற்றம் செய்வதற்குள் பேக்டரி பிடுங்கப்பட, அவன் புதிதாக 'கொடை' சாக்லெட் பேக்டரியை ஆரம்பித்ததான்.. தான் கற்றவற்றை  சாக்லெட் தயாரிப்புகளில் புகுத்தினான்.. வெகு விரைவில் அவனது பேக்டரியின் தயாரிப்புகள் உள் நாட்டு வர்த்தகத்தின் முண்ணனியையும் கைப்பற்றி வெளிநாட்டு வர்த்தகத்திலும் தமக்கென்ற ஓர் இடத்தைப் பிடித்தன..

சாக்லெட் தயாரிப்பில் கிடைத்த பணத்தை வேறு சில தொழில்களில் முதலீடு செய்தான்.. அதில் அவனது பெரியப்பா மகன் நவீனுக்கு பலத்த ஆட்சேபம் உண்டு.. அவன் கிடைத்த தொழில்களை விரிவுபடுத்தவுமில்லை.. புதிய தொழில்களைத் தொடங்கவுமில்லை.. கிடைத்த தொழில்களில் வந்த வருவாயில் எப்போதும் போல ஆடம்பரமாக வாழ்ந்து வந்தான்.. மூர்த்தி அப்படிச் செய்யாமல் பேக்டரியின் கட்டிடம் முதற்கொண்டு தயாரிப்புகள் வரை அதி நவீனமாக்கித் தொழிலில் ஏற்றம் காண்பித்ததில் அவனுக்குள் குமைச்சல் உண்டானது.. அதுவும் போதாது என்று அவன் புதிய தொழில்களைத் தொடங்கியதை அவனால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை.. மூர்த்தியின் முரட்டுத்தனமான சுபாவம்

அவனைக் குடும்பத்திலிருந்து தனிமைப் படுத்தியிருந்தது அவனுக்குக் 'கோள்' சொல்ல வசதியாக இருந்தது..

ஏற்கனெவே பரம்பரை பேக்டரி அவன் பொறுப்பில் இருந்தபோது அவன் அதைத்தான் செய்து வந்தான்.

"தெரியுமா தாத்தா.. நம்ம சாக்லெட்டின் ருசியே மாறிப் போயிருச்சாம்.. உங்க சாக்லெட்டுக்குன்னு ஸ்பெசல் ருசி இருக்கும்டா.. அது காணாம போயிருச்சுன்னு என் பிரண்ட் ஒருத்தன் சொன்னான்.. கேட்கவே கஷ்டமா இருந்தது.."

"பேக்டரியிலகூட கெடுபிடி பண்றானாம்... சீனியருக்கு மரியாதை கொடுக்கிறது இல்லையாம்.. உங்களுக்கு என்ன தெரியும்ன்னு எடுத்தெரிஞ்சு பேசறானாம்.. டைகட்டின புதுப் பசங்களை வேலைக்குச் சேர்த்துட்டு தாத்தா வேலைக்குச் சேர்த்த அத்தனை பேருக்கும் 'கல்தா' கொடுத்து வீட்டுக்கு அனுப்பிட்டானாம்.."

"அவன் களையெடுக்கிறான் தாத்தா.. பேக்டரியில் உங்க ஆதரவாளர்கள் யாரும் இருக்கக் கூடாதுன்னு நினைக்கிறான்.. பேக்டரியை ஃபுல் அண்டு ஃபுல்லா கண்ட்ரோலுக்குள்ளக் கொண்டு வரனும்னு பிளான் பண்ண ஸ்கெட்ச் போட்டுத் தூக்கறான் தாத்தா.."

"அது மட்டுமா..? சாக்லெட் பேக்டரியோட பணத்தை வேற தொழில்களுக்கு இடம் மாத்தறான்.. மெல்ல மெல்ல இதை நஷ்டக் கணக்கில காண்பிச்சுட்டு அவன் ஆரம்பிச்சிருக்கிற தொழில்களில லாபக்கணக்கைக் கொண்டு வரத் திட்டம் போட்டு வேலை செய்யறான் தாத்தா.."

"ம்ப்ச்.. நம்ம குடும்பத்துக்குன்னு ஒரு பெயர் இருக்கு தாத்தா.. அது இவனால கெட்டு அழியுது.. என்னைப் பாருங்க நான் குடும்பத்தின் பெயர் குறையாம பார்த்துக்கிறேன்.. எனக்குக் கிடைத்த தொழில்களை பாரம்பர்யப் பெருமை குலையாம கட்டிக் காக்கிறேன்.. மூர்த்தி அப்படியில்ல தாத்தா.."

"அவன் குணம்தான் சரியில்லை.. குடும்பத்தோட சேர்ந்து இருக்கத் தோதுபட மாட்டான்னு வெளியே அனுப்பி

வைச்சோம்... இப்ப தொழிலையும் அழிக்கப் பார்க்கிறானே.. இதுக்கு என்ன செய்கிறது..?"

"என்ன செய்ய முடியும்..? சாக்லெட் பேக்டரியைப் பிடுங்கிக்கவா முடியும்..? அது பரம்பரைச் சொத்தாச்சே.."

மதுசூதனன் அதையும் செய்தார்.. சாக்லெட் பேக்டரியை பிடுங்கிக் கொண்டார்..

அப்படிப் பரம்பரைச் சொத்தில் மட்டும் பல் விளக்கக் கூடாது என்றுதான் மூர்த்தி சுயமாக புது தொழில்களை ஆரம்பித்திருக்கிறான் என்பதை அவனைப் பெற்ற அன்னை அறிவாள்.. சுயமாய் சம்பாதித்துச் சாப்பிட வேண்டும் என்ற தன்மானம் கொண்டவன் மூர்த்தி.. அவனது உடலில் ஓடுவது அத்தகைய கோட்பாடுகளைக் கொண்ட ரத்தம்.. சுயமரியதையில் அவன் சிங்கம்.. அதைக் குடும்பத்தினரின் முன்னிலையில் சொல்ல முடியாமல் கண்ணீரை துயரத்துடன் கட்டுப்படுத்திக் கொள்வாள்..

வசுந்தரா பெரிய வீட்டு மருமகள்.. தன் மகனுக்கான கண்ணீரை அவள் வெளிக்காட்டி விட முடியாது.. குடும்பத்தின் இரண்டாவது மருமகள் தான், தன் மகன் என்று தனித்து நினைக்கக் கூடாது.. அதை அவளது கணவரான கோவிந்த ராஜனே விரும்ப மாட்டார்..

"நான் முதலில் என் அப்பா அம்மாவுக்குப் பிள்ளை அதற்கடுத்துத்தான் உனக்குப் புருசன்.."

முதலிரவில் அவர் பேசிய முதல் வார்த்தைகள் இவைகள்தான்.. மனைவிக்கே அடுத்த இடம் எனும்போது பெற்ற பிள்ளைகளை எப்படி முதலிடத்தில் வைப்பார்..?

மதுசூதனன் பழமைப் பெருமையில் குளிர் காய்பவர்..

"எங்கப்பா ராவ் பகதூர்.." என்று இன்று வரை பீற்றிக் கொண்டிருப்பவர்..

பரம்பரைச் சொத்துக்களைத் தான் சுயமாக சம்பாதித்த சொத்துக்களைப் பங்கிட்டுக் கொடுத்ததைப் போலக் கொடுத்திருப்பவரிடம் இப்படி வத்திக் குச்சிகளைக்

கொழுத்திப் போட்டால் அவர் தீப்பிழம்பாக மாறாமல் என்ன செய்வார்..?

அந்தப் பங்கிடுதலையும் அவர் பெற்ற பிள்ளைகள் காலத்தில் செய்து அவர்களை தொழிலதிபர்களாக்கி அழகு பார்க்கவில்லை.. அவர் முன்னே கம்பீரமாக நடந்து செல்ல.. பிள்ளைகள் மூவரும் ஓரடி பின்னுக்குத் தள்ளி 'பாட்ஷா' ஸ்டைலை அவருக்கு அளித்து ஃபாலோ பண்ணுவார்கள்.. பேரன்கள் தலையெடுக்கும்வரை அந்தச் 'கெத்து'க் குறையாமல் வாழ்ந்து வந்தவர் அவர்..

வயதாகி விட்டது என்பதினால்.. அவர் சொத்தைப் பங்கிட்டுக் கொடுத்ததாக சொல்லிக் கொண்டாலும் உண்மையான காரணம் அவர் மனதில் புதைந்திருந்தது..

மதுசூதனனின் அதிகார ஆசை குறையவேண்டிய நேரம் வந்துவிட்டது.. அவரது மகன்களுக்குப் பெண் கொடுக்கும் போதே தங்களின் மருமகன்களுக்கு

எந்தெந்த தொழில்கள் கிடைக்கும் என்று கேட்டு உறுதிப் படுத்திக் கொண்டவர்கள், அவரின் சம்பந்திகள் பேரன்கள் பிறந்த பின்பும் மருமகன்களுக்கு சொத்துக்கள் கிடைக்காவிட்டால் சட்டப்படியான நடவடிக்கைகளை மேற்கொண்டு விடுவார்கள்.. இதையெல்லாம் மனதில் வைத்துத்தான் தன் பெருமையைத் தக்க வைத்துக் கொள்ள தானே சொத்துக்களைப் பகிர்ந்து கொடுத்து விட்டார் அவர்..

அதிலும் மூன்றாவது மகனின் மாமனார் வயநாட்டுச் சிங்கம்... சிம்மக் குரலில் அவர் கர்ஜனை செய்ய ஆரம்பித்தால் மதுசூதனன் குலை நடுங்கி விடுவார்..

'ஆஹா..' என்று சொத்துக்களைக் கைப்பற்றிக் கொண்ட மூத்த மகன்வழிப் பேரன் பரம்பரைப் பெருமையைக் கட்டிக் காக்கிறேன் என்று சொல்லிக் கொண்டு உழைக்காமல் சோம்பியிருக்க மூர்த்தி மட்டும் தான் சுயமாய் ஆரம்பித்த சாக்லெட் தயாரிக்கும் பேக்டரியை விரிவு படுத்தி நவினமானதாக்கிக் காட்டியதில் அவன் வயிற்றிலும் வாயிலும் அடித்துக் கொண்டான்.. இந்த வேகத்தை

அவனிடமும் மற்றவர்கள் எதிர்பார்த்து விட்டால் என்ன செய்வான்..?

'கொடை' சாக்லெட்டின் சுவை அப்படிப்பட்டதாக இருந்தது.. அதைச் சாப்பிட்ட நவீனின் நண்பன்..

"எல்லா லட்டும் லட்டுதாண்டா.. திருப்பதி லட்டோட டேஸ்ட் அப்படியே நாக்கிலே நின்று விடுமில்ல.. அது போலதான் 'கொடை' சாக்லெட்டோட டேஸ்ட் நாக்கிலேயே நிற்குதுடா மச்சான்..." என்றுதான் சிலாகித்திருந்தான்..

'மது' சாக்லெட்டிலும் மூர்த்தி தன் திறமையைக் காட்டியிருந்தான்தான்.. அதை அப்படியே தோசையைத் திருப்பிப் போட்டதைப் போல மாற்றிச் சொல்லிய திறமை கொண்டவன் நவின்.. மூர்த்தியின் பெரியப்பாவான ஜனார்த்தனத்தின் மூத்த மகன்..

தடியூண்டும் மதுசூதனன் காலத்துத் தாத்தாக்களுக்கு ஓய்வு கொடுத்து வீட்டுக்கு அனுப்பி வைத்துத்தானே ஆக வேண்டும்..? வயோதிகத்தில் அவர்களால் வேலை செய்ய முடியவில்லை.. சீனியர்களுக்கு கட்டில் கொடுத்து ஓய்வெடுக்கச் சொல்லிவிட்டு ஜீனியர்களை சாட்டை முனையைச் சுழற்றிப் பம்பரம் போல சுற்ற வைத்து வேலை வாங்க முடியுமா..? நவினம் என்பது கட்டிடத்தின் தோற்றத்தையும் தயாரிப்புகளின் சுவையையும் மாற்றுவது மட்டுமல்ல.. வேலை செய்யும் பணியாளர்களுக்கான வேலை வரம்புக் காலத்தை நிர்ணயம் செய்து ஒழுங்கு படுத்துவதும்தான்.. ஓய்வு பெற்றுப் போனவர்கள் கணிசமான ஓய்வூதியத் தொகையுடன்தான் சென்றார்கள்.. அது மதுசூதனனிடம் மறைக்கப்பட்டது.. மூர்த்தி மதுசூதனனின் விசுவாசிகளைக் களையெடுக்கிறான் என்று சொல்லப்பட்டது..

கொடைக்கானல் மலையில் சில தொழில்கள் வளமானவை.. அங்கே கிடைக்கும் யூகலிப்ட்ஸ் தைலத்தின் மகிமை நம் இந்திய மக்களுக்கே அவ்வளவாகத் தெரியாது.. நாம் அறியாத நமது நாட்டின் மூலிகை வளங்களின் பயன்பாடுகளை வெளிநாட்டினர் நன்கு

அறிந்து வைத்திருக்கிறார்களே.. மூர்த்தி உல்லன் தயாரிக்கும் பேக்டரியையும், யூகலிப்ட்ஸ் தைலம் தயாரிக்கும் கம்பெனியையும் ஆரம்பித்து அவற்றை ஏற்றுமதி செய்ய ஆரம்பித்திருந்தான்.. அவற்றில் பணம் பெருகியது.. அது மதுசூதனனின் கவனத்துக்கு

அவரது தொழிலை மூர்த்தி அழிக்கிறான் என்று கொண்டு செல்லப்பட்டது.. சுயமாக அவன் தொடங்கி நடத்திக் கொண்டிருக்கும் தொழில்கள் மதுசூதனனின் தொழில்களை அழித்து விடுமாம்.

இது குறித்து கவலைகள் ஏதுமின்றித் தன் போக்கில் அந்தப்பனி விழும் இரவில் நடந்து கொண்டிருந்த மூர்த்தி குளிர் மழையில் நனைந்தபடி குளிர் தாங்காமல் கோழிக் குஞ்சைப் போல நடுங்கிக் கொண்டிருந்த அவளைப் பார்த்தான்..

2

ஒரு மரத்தடியில் அவள் நின்றிருந்தாள்.. மழைக்கு ஒதுங்கியிருக்க வேண்டும்.. ஆனால் கொடைக்கானல் போன்ற மலைபிரதேசத்தில் இரவு நேரத்தில் மழையில் நனையாமலிருக்க மரத்தடியில் ஒதுங்கக் கூடாது.. பனியில் நனைந்திருக்கும் மரத்தின் இலைகள் மழைநீருடன் பனித்துளிகளையும் சேர்த்துக் சொட்டும்.. அதீத குளிரில் விறைத்துப் போய்விடும் அபாயம் உண்டு..

'இவள் வெளியூர்வாசியாக இருக்க வேண்டும்..' என்று நினைத்துக் கொண்டான்..

அவனுடைய கணிப்பை மெய்ப்படுத்துதல் போல அவளருகில் லெதர்பேக் இருந்தது.. கொட்டும் மழைக்கும் உடலைத் துளைக்கும் குளிருக்கும் தடுப்புக் கவசம் போல சேலை முந்தானையை இழுத்துப் போர்த்தியிருந்தாள். அடிக்கும் மழைக்கும் கொடைக்கானலின் குளிருக்கும் தடுப்புக் கவசம் போட்டு விட முடியுமா..? கனத்த உல்லன்

ஸ்வெட்டரையும் மீறி உள்ளிறங்கும் குளிர் பனி காலத்தில் அதிக வேகத்துடன் இருக்கும் என்பதை அறியாதவளாய் கோழிக் குஞ்சைப் போல கை, கால்கள் வெட வெடக்க நின்றிருந்தவளைப் பார்க்க பரிதாபமாகத்தான் இருந்தது.. நள்ளிரவைத் தொடும் அந்த நேரத்தில் கொடைக்கானல் போன்ற மலைப் பிரதேசத்தில் பனி பெய்யும்

குளிர் மழையிரவில் மழையில் நனைந்தபடி அவள் தன்னந்தனியாக நிற்பது பாதுகாப்பானதல்ல என்று இவளுக்குத் தெரியாதா என்ற கோபம் அவனுக்குள் எழுந்தது..

மூர்த்தி பெண்களிடம் அதிகமாக பேச மாட்டான்.. தவிர்க்க முடியாமல் பேசும் நேரங்களில் எதிரியை முறைப்பதைப் போல முறைத்தபடி அவன் பேசும் பேச்சில் பயந்து போகும் பெண்குலம் ஒரு மணி நேரத்துக்கு நீடிக்க வேண்டிய அதி முக்கிய உரையாடலைக்கூட ஒரிரு வார்த்தைகளில் முடித்துக் கொண்டு தலை மறைவாகி தப்பித்து விடும்... கல் போன்ற கடின முகமும்.. இடுங்கிய கண்களும், கோபப் பார்வையுமாக இருப்பவனிடம் மனுஷி பேசுவளா என்று தமக்குள் பேசிக் கொள்வார்கள்...

பகலிலேயே பெண்களிடமிருந்து பத்தடி தள்ளி நிற்பவன் நள்ளிரவைத் தொடும் அகால வேளையில் தனித்து நிற்கும் பெண்ணிடம் பேசி விடுவானா என்ன..?

'இவள் யாராயிருந்தால் எனக்கென்ன..? கொடைக்கானலுக்கு மிட்நைட்டில் வருகிறவ எப்படிப்பட்டவளா இருப்பா..?'

எரிச்சலுடன் கடந்து செல்ல முயன்றான்.. அவனது நினைவு தவறு என்பதைப் போல அவள் மருண்ட விழிகளுடன் அவனைப் பார்த்தாள்.. காட்டன் புடவையும், நீண்ட பின்னலும், கண்ணியமாக அவள் உடையுடுத்தியிருந்த நேர்த்தியும், தூண்டில் போடாத இறைஞ்சலுடன் கூடிய பார்வையும் அவனுக்குள் குற்ற உணர்வை ஏற்படுத்தின..

'ச்சை..! இதென்ன பெருந்தொல்லை..!'

அவனுக்கு வெறுப்பாக இருந்தது.. அவள் மீதான இரக்கம் அவன் கால்களைத் தடை போட்டதில் அவன் கோபம் கொண்டான்.. கொடைக்கானலில் பிறந்து வளர்ந்தவனுக்கு கொடைக்கானலின் குளிர் இரவு எப்படிப்பட்டதாக இருக்கும் என்று நன்கு தெரியும்.. அது மலைவாசஸ்தலம்..! பனி பொழியும் குளிர் பிரதேசம்..! வீடுகளைவிட ரிசார்ட்டுகளும் ஸ்டார் ஹோட்டல்களும் இருக்கும் ஊர்.. உள்ளூர்வாசிகளை விட சுற்றுலா வரும் வெளியூர்காரர்கள்தான் அங்கே அதிகமாக நடமாடுவார்கள்.. மதுவின் போதையோடு இரவில் ஊரைச் சுற்றும் கயவர்களின் கண்களில் அவள் பட்டு விட்டால் என்ன ஆகும் என்பதுகூடத் தெரியாத சிறு பிள்ளையா இவள் என்று பல்லைக் கடித்தான்..

அவள் யாரோ, அவன் யாரோதான்.. ஆனாலும் அந்த குளிர் மழையிரவில் தனித்து நிற்பவளைக் கண்டு கொள்ளாமல் கடந்து செல்ல அவனால் முடியவில்லை.. மனதுக்குள் குற்றவுணர்வு எழுந்தது.. கொடைக்கானலுக்கு அந்தக் குளிர் மழையீல் கும்மாளம் போட வரும் தடிமாடுகளின் தேவை என்னவாக இருக்கும் என்பதை அறிந்திருந்தும் அதைப் பற்றிய கவலையில்லாமல் எப்படிக் கடந்து செல்வது..? இது உத்தமர்கள் வாழும் உலகமல்லவே.. நிச்சயமாக அவளது பத்திரத்திற்கு எந்தவித உத்திரவாதமும் இல்லையெனும் போது எனக்கென்ன என்று எப்படி அவன் போவது..? கண்டு கொள்ளாமல் அவன் சென்று விட்ட பின்பு அவளுக்கு ஏதாவது பாதகம் நிகழ்ந்து விட்டால் வாழ்நாள் முழுவதும் ஒர்விதமான குற்றவுணர்வு அவனைத் துரத்துமே.. அவன் நிம்மதியான தூக்கத்தைத் தொலைத்து விடுவானே..

மூர்த்தி முரடன்தான்.. மூர்க்கன்தான்.. கோபக்காரன்தான்.. ஆனால் நல்லவன்.. மிகவும் நல்லவன்.. பலாப்பழத்தைப் போன்றது அவனது இரக்க குணம்.. முள் போன்ற அவனது கடுமையான குணாதிசயம் அவனது இரக்க குணத்தை மறைத்து நின்றது.. கல்லுக்குள் ஈரம் இருப்பதை யாரறிவார்..? பாறையிலும் பூ முளைக்கும் என்பதை எவர் உணர்வார்..?

வானத்தில் வெளிச்சம் பரவியது.. இரவைப் பகலாக்கும் மின்னல் வெட்டியது.. அடுத்த நொடியில் பலமான இடிச் சப்தம் எழுந்ததில் அவள் பதறித் துடித்துக் காதுகளைப் பொத்திக் கொண்டு..

"அம்ம்ம்.. மா.." என்று அலறினாள்..

என்னவோ அவனையே அவள் அம்மா என்று அழைத்து விட்டதைப் போல மூர்த்தி ஒரு கையில் அவளைப் பற்றி மறுகையில் லெதர்பேக்கை எடுத்துக் கொண்டு மரத்தடியை விட்டு வெளியே இழுத்து வந்தான்..

அறியாத ஆண்மகன் கையைப் பிடித்து இழுக்கிறானே என்று பயந்து நடுங்கியவள் விடுபட போராடியபடி..

"விடு.. என்னை விடு.." என்று கத்தினாள்..

"முதல்ல உன் திருவாயை மூடறியா..? நீ பெரிய அழகின்னு கையைப் பிடித்து இழுக்கலை.. மின்னல், இடியோடு மழை கொட்டறப்ப மரத்தடியில எந்த முட்டாளும் நிற்க மாட்டாங்க.."

எதனால் அவளுடைய கையைப் பிடித்து இழுத்தான் என்பதை அவன் அறிவுறுத்தியதில் அவள் உதட்டைக் கடித்தபடி..

"ஐ ஆம் ஸாரி.." என்றாள்..

"இது ஒன்றைக் கண்டுபிடிச்சு வைச்சிருக்கீங்க.. எதற்கெடுத்தாலும் 'ஸாரி' சொல்லிக்கிட்டு.." அவன் முகத்தைச் சுளித்தான்..

"மழை கொட்ட ஆரம்பித்ததும் என்ன செய்யறதுன்னு தெரியலை.. அவசரத்தில மரத்தடியிலே ஒதுங்கி நின்னுட்டேன்.." மெல்லிய குரலில் அவள் விளக்கம் சொன்னது வீணையின் நாதம் போல ஒர்விதமான லயத்துடன் ஒலித்தது..

'தேன் குரல்..!' இப்படித்தான் அவனுக்குத் தோன்றியது..

கொட்டும் மழையில் நனைந்திருந்த அந்த நிலையிலும் அவள் வெகு அழகான தோற்றத்துடன் மிளிர்ந்தாள்.. நெஞ்சத்தைக் கிள்ளும் மென்மை கொண்ட அழகு அவளழகு..

'இவ போய் இந்த நடுராத்திரியில கொடைக்கானல் ரோட்டில் நின்று தொலைக்கிறாளே.. அறிவுங்கிறது சுத்தமா இல்லையா..?' அவனுக்குக் கோபம்தான் வந்தது..

"ஹலோ..! மே மாதத்திலேயே இங்கே பனி கொட்டும்.. இது டிசம்பர் மாதம்.. மழை கொட்டறதைவிட அதிகமா பனி கொட்டற ஊர் இது.. இந்த பனி விழும் இரவில கொட்டற மழையில ஸ்வெட்டரும் குடையும் இல்லாம சொட்டச் சொட்ட நனைந்துக்கிட்டு நிற்கறிங்களே.. குளிர் காய்ச்சலிலே விழுந்தா என்ன செய்வீங்க..? இது விசக்குளிர்.. கவலையேயில்லாம நிற்கறிங்க..?" அதட்டினான்..

"இப்படியாகும்ன்னு எனக்குத் தெரியாதுங்க.." அவளுக்குக் கண்ணீர் வழிய ஆரம்பித்தது..

முகத்தில் வழிந்த மழைநீருடன் கலந்த கண்ணீர் மழைத்தாரையுடன் தாரையாக கலந்து அவள் முகம் நனைத்தது.. பனியில் நனையும் ரோஜாவைப் போல மாசு மறுவற்ற அவளது முக வடிவில் அவனது பார்வை லயித்தது..

'சூது வாதில்லாத முகம்..'

இது போன்ற முகங்களைப் பார்ப்பதென்பது அரிது.. கபடம் தவழும் முகங்களைப் பார்த்தேப் பழக்கப்பட்டவனுக்கு அவளிடம் பொய்யில்லை என்று தோன்றியது..

"தெரியாதுன்னா என்ன அர்த்தம்..?" கோபம் குறையாமலே கேட்டான்..

"இங்கே என் பிரண்ட் ஒருத்தி இருக்கிறா.. நான் அவ வீட்டுக்கு வந்தேன்.. வந்து பார்த்தா வீடு பூட்டிக் கிடக்கு.. அக்கம் பக்கத்தில விசாரித்தா அவர்களுக்கு எதுவும் தெரியாதுன்னு சொல்லிட்டாங்க.. கொடைக்கானலுக்கு நான் வந்து இறங்கறப்பவே இருட்டிருச்சு.. அவ வீட்டு

அட்ரஸைக் கண்டு பிடிக்க நேரமாகிருச்சு.. அவ இல்லைன்னதும் பஸ் ஸ்டாண்டுக்குத் திரும்பிடலாம்ன்னு வந்துக்கிட்டு இருக்கிறப்ப மழை பிடிச்சுக்குச்சு.. மரத்தடியில ஒதுங்கினேன்.." திக்கித் திணறிப் பேசினாள்.

"ஓ.." அவன் யோசனையுடன் தாடையைத் தடவினான்..

"ஆட்டோ, கால் டாக்ஸின்னு எதுவும் இந்தப் பக்கம் வரலே.. ஆள் நடமாட்டமும் இல்ல.." அவள் பயத்துடன் சுற்று முற்றும் பார்த்தாள்..

"இது என்ன உங்க ஊரா..? இருட்டின் பின்னாலே ஷாப்பிங், சினிமான்னு வெளியே போகிறதெல்லாம் உங்க ஊரில்தான்.. இது கொடைக்கானல்.. ஈவினிங் டைமிலேயே பனி கொட்ட ஆரம்பிச்சிரும்.. இருட்ட ஆரம்பிச்சதும் வீட்டைப் பூட்டி இழுத்துப் போர்த்திக்கிட்டு கணப்பைப் போட்டுக்கிட்டோ இல்லை ஹீட்டரை ஆன் பண்ணிட்டோ பதுங்கிக்குவாங்க.."

அவள் முகத்தையே உற்றுப் பார்த்தபடி அவன் பேசப்பேச அவள் விழிகளில் பயம் நிரம்பியது.. குளிரில் நடுங்கியபடி வெடவெடத்தவள்..

"இப்ப நான் என்ன செய்யட்டும்..?" என்று மழலையாகி அவனிடமே யோசனை கேட்டாள்..

இதை எக்குத்தப்பானவர்களிடம் இவள் கேட்டு வைத்திருந்தால் என்ன ஆகியிருக்கும் என்ற கவலை யோடு..

"இந்த ஊரில் உங்களுக்கு வேறு யாரையும் தெரியாதா..?" என்று கேட்டான்..

அப்படி எவர் முகவரியையாவது அவள் சொன்னால் அங்கே அவளைப் பத்திரமாகச் சேர்த்து விடலாமே என்ற எண்ணம் அவனுக்கு..

"தெரியாதே.." அவள் மிரண்டு விழித்தாள்..

"தெரியாதா..?" வேறு என்ன செய்வது என்று அவனுக்கும் தெரியவில்லை.. அவளை அம்போ என நடுரோட்டில் விட்டு

விட்டுச் செல்லவும் தயக்கமாக இருந்தது..

"நைட் ஆகிருச்சே.." நடுங்கினாள்..

"வெறும் நைட்டில்லை.. மிட்நைட்.." அவன் அறிவுறுத்தினான்..

"ஆமாமில்ல.." அவள் இன்னும் அதிகமாக நடுங்கினாள்..

"மிட் நைட்டில எந்த பஸ்ஸீம் கிளம்பாது.. விடியனும்.."

"அதுவரைக்கும் எங்கே தங்கறதுன்னு தெரியலையே.. ஹோட்டலில் தங்க பயமாயிருக்கு.."

எதற்கு பயம் என்று அவன் கேட்கவில்லை.. இதுவாவது தெரிகிறதே என்ற நினைவோடு..

"இங்கே அதிக நேரம் நின்றுக்கிட்டு இருக்க முடியாது... இந்தப் பனியையும் மழையையும் எப்படித் தாங்கிக்கிட்டு இருக்கீங்கன்னு தெரியலை.. குடைதான் எடுத்துக்கலை.. கொடைக்கானல் குளிருக்கு ஸ்வெட்டரையாவது போட்டுக்கனும்னு தோணலையா..?" என்று கடிந்து கொண்டான்..

"இல்லைங்க.. திடிர்ன்னு கிளம்ப வேண்டியதா கிருச்சு.. எங்கே போகிறதுன்னு தெரியாம வீட்டை விட்டு வெளியே வந்துட்டேன்.. பஸ் ஸ்டாண்டில உட்கார்ந்து யோசிச்சப்ப எதிரே கொடைக்கானல் போகிற பஸ் நின்றுக்கிட்டு இருந்தது.. இங்கே என் பிரண்ட் ஒருத்தி இருக்காங்கிற நினைவு வந்ததும் சட்டுன்னு பஸ்ஸில ஏறிட்டேன்.."

அவனுக்கு என்னடா இது என்று ஆகிவிட்டது.. அவள் இப்படியொரு விளக்கம் சொல்வாள் என்று அவன் சுத்தமாக எதிர்பார்க்கவில்லை..

"காதலா..?" ஒரு தினுசான குரலில் வினவினான்..

"காதலா..?" விரக்தியுடன் அவள் கேட்டுவிட்டு..

"அதுக்கெல்லாம் நேரமில்லைங்க.." என்று தோளைக் குலுக்கினாள்..

காதலிக்க நேரமில்லை என்று சொல்பவளை விசித்திரமாக பார்த்து வைத்தவனுக்கு இவள் புரியாத புதிர் என்று தோன்றியது.. பனிவிழும் அந்த மழையிரவில் கெடைக்கானலின் சாலையில் நின்று கொண்டு இது போன்ற உரையாடலை ஒரு பெண்ணுடன் அவன் உரையாடுவான் என்று எவர் ஆருடம் கூறியிருந்தாலும் அவன் நம்பியிருக்க மாட்டான்.. விசித்திரமான வகையில் அதுபோன்ற சூழலில் அப்படியொரு உரையாடலை அவன் உரையாடிக் கொண்டிருந்தான்..

"எந்தப் பிரச்னையாக இருந்தாலும் ஒரு பெண் வீட்டை விட்டு வெளியே வரலாமா..?"

"நானா வெளியே வரலைங்க.. வெளியேற்றப் பட்டேன்.."

அவள் சொன்ன பதிலில் அவன் திகைத்துத்தான் போனான்.. இன்னும் என்னவெல்லாம் சொல்லப் போகிறாளோ என்ற நினைவுடன்..

"உங்க அப்பாம்மாவுக்கு உங்க மேல என்ன கோபம்ங்க..?" என்று புருவங்களைச் சுருக்கினான்..

அவனுக்கு அவனுடைய பங்களா நினைவுக்கு வந்தது.. கூட்டுக் குடும்பமாக வாழ்ந்தவர்களிடமிருந்து பிரிந்து அவன் தனித்து வெளியேறிய போது அவனைப் பெற்றவர்கள் தடுத்தார்கள்.. அவனுடைய அப்பா கோவிந்தராஜன் அவன் கையைப் பிடித்துக் கெஞ்சினார்.. அம்மா வசுந்தரா கால்களைப் பிடிக்கப் போனாள்.. அவன் கோபத்துடன் தடுத்து..

"இவங்க வாய் வார்த்தையிலே என்னைப் பாவின்னு சொன்னாங்க.. நீங்க நிஜமாவே பாவியாக்கப் பார்க்கறீங்களேம்மா.." என்று சப்தம் போட்டதில் கைகளைக் குவித்து 'போகாதே..' என்று அழுதாள்..

அப்பழுக்கற்ற பாசம் பெற்றவர்களின் பாசம்.. அந்த பாசம் அவளுக்கு அணை போடவில்லையா..? சிறகுகளுக்கு அடியில் பாதுகாப்பதை விடுத்து வெளியே போ என்று தாய்பறவை சொல்லுமா..? அப்படி வெளியேற்றும்

அளவிற்கு அவள் என்ன தவறு செய்தாள்..? காதலும் காரணமில்லை, காதலிக்க நேரமே இல்லை என்கிறாள்.. பொதுவாக காதலைத்தானே பெற்றவர்கள் கடும் தவறு என்று சாடுவார்கள்..?

'காதலிக்க நேரமிருந்திருந்தால் இவள் காதலித்திருப்பாளா..?' மனதில் எழுந்த கேள்வியில் அவன் திடுக்கிட்டான்..

3

'நினைத்து யார்..? நான்தானா..?'

உதட்டை மடித்துக் கடித்தபடி அவளை உறுத்துப் பார்த்தான்.. தவத்தைக் கலைக்க வந்த தேவலோக ஆடலரசியை முனிவன் முறைப்பதைப் போல அவன் பார்த்த பார்வையில் அவள் என்ன தவறு செய்தேன் என்று நடுங்கிப் போனாள்..

"ப்ளீஸ்.. என்னைத் தப்பா நினைச்சிராதீங்க.." கெஞ்சினாள்..

"நான் எப்போங்க உங்களைத் தப்பா நினைச்சேன்..?" அவனுக்கு கேபாம் வந்து விட்டது..

இது தேவையற்ற வேலையென்று நினைத்தான்.. வழியோடு போகிறவன் வழியில் சந்திப்பவர்களிடம் வாய் வளர்க்க நின்றால் இப்படித்தான் ஆகும் போல..

"கோபப்படறிங்களே.." பற்கள் கிடுகிடுக்கச் சொன்னாள்..

'எதனால் இந்த அளவுக்கு நடுங்குகிறாள்..?' அவனது கோபம் தணிந்தது..

அவளது அந்த நடுக்கம் அவனது கோபத்தைக் கண்ட பயமாகவும் இருக்கலாம்.. ஆனாலும் பனி கொட்டும் மழையிரவில் கொடைக்கானலில் ஈரப் புடவையை இழுத்துப் போர்த்திக் கொண்டிருப்பவள் உடல் நடுங்கப் பற்கள் கிடுகிடுக்கத்தானே பேசுவாள்..?

அவளை அந்த நிலையில் பார்க்கும் போது கோபம் வந்து தொலைக்கவில்லை.. இரக்கம்தான் வந்து தொலைத்தது.. அவளுக்கு உலர்ந்த ஆடைகளையும் கம்பளியையும் கொடுத்துக் கணப்பருகில் உட்கார வைத்து பசிக்குச் சுடச்சுட உணவளிக்க வேண்டும் என்றுதான் தோன்றியது..

சுமக்க விரும்பாத சு்தான் என்றாலும் அகதி போல நடுரோட்டில் நிர்கதியாய் நிற்பவளை அம்போ என விட்டு விட்டு நடக்க முடியவில்லை.. அந்த ஓர் இரவில் எதுவும் நடக்கலாம்.. அவளுக்கு உடனடித் தேவை குளிர் தாக்காத மழை நனைக்காத ஓர் கூரை..!

"கோபப்படலை.. நீங்க சொல்ல வந்ததைச் சொல்லுங்க.."

அவனது நிதானத்தில் அமைதி கொண்டவளாக அவள்..

"எனக்கு அப்பாம்மா இல்லைங்க.." என்றாள்..

"ஓ.." அவனுக்கு எதுவோ புரிவதைப் போல இருந்தது..

'அதுதானே பார்த்தேன்.. பெத்தவங்க எப்படி மகளை வீட்டை விட்டுத் துரத்துவாங்க..?'

அவனது இரக்கமான பார்வையில் அவள் இமைகளைச் சிமிட்டிக் கண்ணீரை அடக்க முயன்றாள்.. அவளது லெதர் பேக்குடன் கிளம்பினான்.. அவள் பதறினாள்..

"அது என்னோட பேக்குங்க.."

"நானும் என்னுடையதுன்னு சொல்லலையே.. வாங்க.." அவன் முன்னால் நடந்தான்..

"எங்கே..?" அவள் பதட்டத்துடன் அவனிடமிருந்த லெதர் போக்கை பறிக்க முயன்றாள்..

"என் வீட்டுக்கு.." அவன் பேக்கைக் கொடுக்க வில்லை..

"உதவி செய்ய நினைப்பதற்கு நன்றி.. பட்.. முன்னே பின்னே தெரியாதவங்க வீட்டுக்கு இந்த மிட்நைட்டில எப்படி வரமுடியும்..?"

"காலால் நடந்து வாங்க.."

இலகுவான அவனது கேலிக்கு சிரிக்க முடியாத சோர்வோடு அவனைப் பார்த்தாள்.. கை கூப்பினாள்..

"ப்ளீஸ்.. என்னை பஸ்ஸ்டாண்டில விட்டு விட்டால் போதும்.."

"விடிவதற்குள் விறைந்து விடுவீங்க... கொடைக்கானலின் குளிரையும் மழையையும் இதுவரை நீங்க தாங்கி நின்றதே அதிசயம்.. பேசாம வாங்க.."

"இல்லைங்க.. வேண்டாம்.."

பிடிவாதமாக மறுத்தவளை நின்று தீர்க்கமாக பார்த்தான்.. அவள் தலையைக் குனிந்து கொண்டாள்..

"எனக்கும் இது தேவையில்லாத தொல்லைதாங்க.. லேடிஸ்ன்னாலே எனக்கு அலர்ஜி.."

"உங்க அம்மான்னாலும் அலர்ஜியா..?"

"என் அம்மா விதி விலக்குங்க.. இதையெல்லாம் உணக்கையாப் பேசத் தெரிஞ்சவங்களுக்கு இந்த மையிருட்டில பாதுகாப்பில்லாம தனியா நிற்கக் கூடாதுன்னு மட்டும் தெரியலையே.."

"பஸ்ஸ்டாண்டுக்கு வழி கேட்டேனே.."

"நான் பஸ்ஸ்டாண்டுக்குத்தான் கூப்பிட்டுக்கிட்டுப் போவேன்னு என்ன நிச்சயம்..?"

"ஒரு நம்பிக்கைதாங்க.."

"எதை வைத்து என்னை நம்பறிங்க..?"

"இந்த இடத்திலும் நாம தனியாத்தான் நிற்கிறோம்.. மிஸ்பிஹேவ் பண்ணனும்னு நினைத்தா இங்கேயே ஸ்டார்ட் பண்ணியிருப்பீங்களே.. ஏமாற்றித் தனியிடத்துக்குக் கூப்பிட்டுக் கொண்டு போக வேண்டிய அவசியமே இல்லையே.. இங்கே நான் கத்தினாலும் கதறினாலும் ஏன்னு கேட்க ஆளில்லையே.."

"அட.. நீங்களே எடுத்துக் கொடுக்கறிங்களே.."

அவன் விசமமாகச் சொன்னதில் அவள் பயந்து போனாள்..

"பயப்படாதீங்க.." சிரித்தான் அவன்..

மழை விட்டபாடாக இல்லை.. நனைந்த உடையுடன் இருந்தவளை அதி விரைவாக வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போய்விட வேண்டுமென்று அவனது அறிவு துரிதப்படுத்தியது..

"இந்த நம்பிக்கையை என் வீட்டுக்கு வருவதிலும் காட்டுங்க.. உங்க நல்லதுக்குத்தான் சொல்கிறேன்.."

"ஆனாலும்.."

"அதோ.. என் வீடு வந்து விட்டது.."

அவன் சுட்டிக் காட்டிய திசையில் விளக்குகளின் ஒளிச் சிதறலில் பார்த்தவள் பிரமித்துப் போனாள்..

அது வீடல்ல.. மாளிகை..!

மழைத்தாரைகளின் ஊடே தெரிந்த மாளிகையின் பிரம்மாண்டத்தில் அவளுக்குள் பயம் வந்தது..

"நீங்க யார்..?" என்றாள்..

"நான் மூர்த்தி.." அவன் நடையை எட்டிப் போட்டான்..

அவனது பங்களா வாசலில் இருந்த செக்யூரிட்டிகளுக்கான கூண்டு போன்ற அறையைக் கண்டவள் தேங்கி நின்றாள்..

"ஏன் நின்னுட்டிங்க..? வாங்க.."

"இல்லைங்க.. உங்க செக்யூரிட்டி முன்னாலே நாம் ஆர்கியூ பண்ண வேண்டாம்.. அது நல்லாயிருக்காது.."

"உங்களுக்கே அது நல்லாயிருக்காதுன்னு தெரியுதில்ல.. அப்புறமும் ஏன் அதைச் செய்யனும்னு அடம் பிடிக்கறிங்க.. கமான்.. லெட்'ஸ் கோ.."

"இப்படி நடுராத்திரியில் ஒரு பெண்ணை நீங்க அழைத்துக்கிட்டு வந்தா உங்க வீட்டில் இருக்கிறவங்க என்ன நினைப்பாங்க..?"

"எது நினைத்தாலும் அதை என்னிடம் கேட்க மாட்டாங்க.."

"எனக்குச் சங்கடமாக இருக்கும்.."

"இருக்கட்டுமே.. பஸ்ஸ்டாண்டில் பாதுகாப்பில்லாம குளிரிலும் மழையிலும் நனைந்து விறைத்துப் போகிறதுக்கு இது பெட்டர்.."

அவன் நிற்காமல் நடந்து கொண்டே பேசினான்.. போடா என்று தேங்கி நிற்க முடியாமல் அவள் திணறினாள்.. அவன் கையிலிருந்த லெதர்பேக்கில் அவளது துணிகளும் அவள் படித்த படிப்பிற்கான சான்றிதழ்கள் அடங்கியிருந்த ஃபைலும் கொஞ்சம் பணமும் இருந்தன.. அவைதான் அவளின் வாழ்வாதாரம்..!

வேறு வழியின்றி அவனைத் தொடர வேண்டிய நிர்பந்தத்தை அவன் உருவாக்கி விட்டதில் அவள் சினமடைந்தாள்.. அவன் இவ்வளவு பெரிய பணக்காரனாக இருக்கக் கூடும் என்று அவள் நினைக்கவில்லையே... அவன் உயர்ந்த நிலையில் இருக்கும் பெரும் பணக்காரன் என்பது அவளை அச்சுறுத்தியது.. நள்ளிரவில் அவளுக்குத் துணைநின்ற உதவி அழைத்து வருபவன் மிகப்பெரும் பணக்காரனாக இருப்பது அவள் எளிதாக கடக்கக் கூடிய ஒன்றல்ல..

"நீங்க யார்ன்னு கேட்டேனே.." அழுத்தமாக அவள் கேட்டாள்..

"விசாரணையெல்லாம் பலமா இருக்கு.." அவன் பலமாகச் சிரித்துவிட்டு..

"நான் மூர்த்தின்னு சொன்னேனே.." என்று நினைவுறுத்தினான்..

"பெயரைச் சொன்னால் மட்டும் போதுமா..? அதை மட்டும் வைத்து உங்கள் வீட்டுக்கு வந்துவிட முடியுமா..?" சட்டமாக கேட்டாள்..

"நீங்க அதையும் சொல்லலைங்க.. பெயரைக் கூடத் தெரிந்துக்காம உங்களை என்வீடு வரைக்கும் அழைத்துக் கிட்டு வந்திருக்கேன் பாருங்க.. இதுக்கே எனக்கு நீங்க காம்ளிமெண்ட் கொடுக்கனும்.. தெரியுமா..?" என்றான் மூர்த்தி..

"உங்களை யாருங்க கூப்பிட்டுக்கிட்டு வரச் சொன்னது..?" கோபத்துடன் கேட்டவள் அவன்..

"என் மனச்சாட்சி..!" என்று சொன்னதும் விக்கித்து விட்டாள்..

அவனது அந்தப் பதில் அவளது அந்தராத்மாவைத் தொட்டு அசைத்தது.. கண்கள் கலங்க..

"மனச்சாட்சி..!" என்று விரக்தியுடன் சொன்னாள்..

"ம்ம்ம்.. மனச்சாட்சிதான்..?" அழுத்தமாக அவன் சொன்னான்..

"இப்போதெல்லாம் மனச்சாட்சியோடு யார் இருக்கிறாங்க..? எல்லோரும் சட்டையைக் கழட்டி ஆணியில் மாட்டி வைப்பதைப் போல மனச்சாட்சியைக் கழட்டி கடாசிட்டு வாழறாங்களே.. சட்டையையாவது கழட்டி ஆணியில் மாட்டி வைத்துட்டு திரும்பவும் எடுத்துப் போட்டுக்கறாங்க.. கழட்டிக் கடாசின மனச்சாட்சியை மட்டும் யாருமே தேட மாட்டேங்கிறாங்களே.." குமுறினாள்..

அவளது குமுறலில் அவன் அவளை ஆழ்ந்து நோக்கினான்.. புரிதலுடன் கூடிய தோழமையுணர்வு அவன் மனதில் உதயமானது.. இதுபோன்ற புரிதல் உணர்வும் இணக்கமும் ஒரு பெண்ணிடம் அவனுக்கு உண்டாகியிருப்பதில் வியப்புக் கொண்டான்..

"இந்த வயசில் இப்படியொரு பிலாசபியா..?" என்று கேட்டான்..

"ம்ப்ச்.. வயசுக்கும் தத்துவத்துக்கும் என்னங்க சம்பந்தம்..? போதி மரத்தடியைத் தேடி புத்தர் அலைந்தப்ப அவருக்கு என்ன தடியூண்டும் வயதா ஆகியிருந்தது..?"

அவளது கேள்வி அவனது ஆச்சரியத்தை அதிகப் படுத்தியது.. இந்த இளம்வயதில் எத்தனை துன்பங்களை அனுபவித்திருந்தால் இப்படிப் பேசுவாள்..?

மழையில் நனைந்து உடலோடு ஒட்டியிருந்த சேலை அவளது யௌவனத்தின் அழகைத் தெள்ளத் தெளிவாகக்

காட்டத் தேவலோகத் ரம்பையைப் போல நின்றிருந்தவளின் கவர்ச்சிகரமான வசீகரம் மிக்கப் பேரழகு அவனைத் தாக்கியது..

'புத்தரைப் பற்றிப் பேசும் வயதா இவளுக்கு..?'

தாய், தகப்பனில்லாமல் வளர்ந்தவள் எவர் வீட்டில் தங்கியிருந்தாள் என்ற கேள்வி அவனுள் எழுந்தது.. அதை அவனது விழிகளில் படித்தவள்..

"என்ன..?" என்றாள்..

"உங்களை வீட்டை விட்டு வெளியேற்றிட்டாங்கன்னு சொன்னீங்களே.. யார் வீட்டில் தங்கியிருந்தீங்க..?" என்று கேட்டான் மூர்த்தி..

"என் வீட்டில்தாங்க.." அமைதியான அவளது பதில் அவனைக் குழப்பியது..

"மழையிலும் பனியிலும் நனைந்தா மூளை சில்லுன்னுதான் ஆகும்ன்னு சொல்வாங்க.. இங்கே நேர்மாறா உங்க மூளை சூடாகிருச்சு போல இருக்கே.. குழப்பறிங்க.." என்றான்..

"குழப்பலைங்க.. உண்மையைத்தான் சொல்றேன்.. அது என் பெயரில் இருக்கிற வீடுதான்.." தெள்ளத் தெளிவாக அவள் சொன்னாள்..

"உங்க வீட்டைவிட்டு உங்களை யாரால் வெளியேற்ற முடியும்..?"

"என் சித்தியால் முடியுமே.."

"சித்தியா..?"

"ஆமாங்க.. என் அப்பாவின் இளைய தாரம்.. என் சித்தி.."

"உங்க அப்பா உங்களை சப்போர்ட் பண்ணலையா..?"

"அம்மா முதலில் இறந்துட்டாங்க.. அப்பா ரீமேரேஜ் பண்ணிக்கிட்டார்.. என் சித்திக்கு மகன் பிறந்த மறுவருடம் அவரும் இறந்து விட்டார்.."

மூர்த்திக்கு எதுவும் விளங்கவில்லை.. அதற்குள் செக்யூரிட்டி அவசரமாக கேட்டைத் திறந்து விட்டான்.. அவர்களுக்காக கேட்டைத் திறந்து விட்ட செக்யூரிட்டி தடிமனான ரெயின் கோட்டை அணிந்திருந்தான்.. தலையோடு போர்த்தப் பட்டதைப் போல இருந்த அந்த ரெயின் கோட் மழையோடு குளிரும் அவனைத் தாக்காமல் கவசம் போல அவனைக் காத்து நின்றது.. அவனைக் கண்டதும் அவள் எதுவும் பேசாமல் வாயை மூடிக் கொண்டாள்..

'கொடைக்கானல் போன்ற மலை வாசஸ்தலத்தில் பனி விழும் குளிர் இரவில் கொட்டும் மழையில் நனைந்தபடி தெளிவான மனநிலையில் இருப்பவன் உலாவப் போவானா..? இவனை நம்பி இவன் பின்னால் போகிறேனே..' அவளுக்கு பதக் பதக் என்று இருந்தது.. மனதுக்குள் பயந்தாள்..

முன்னால் நடந்து சென்றவனின் கம்பீரத் தோற்றம் அப்படியில்லை என்று அடித்துச் சொன்னது..

'இது இவனோட நேச்சர்ன்னா.. இப்படி நட்ட நடுராத்திரியில் பெண்களை வீட்டுக்கு அழைத்துக்கிட்டு வருவதும் இவனுடைய நேச்சரா இருக்குமோ..' அவளுக்கு படபடப்பாக இருந்தது..

கேட்டை மூடிக் கொண்டிருந்த செக்யூரிட்டி விழிகள் தெறித்து விடுவதைப் போல வியப்புடன் அவளை 'ஆ' வென்று பார்த்த பார்வையில் அவள் நிம்மதியானாள்..

'ஊஹீம்.. இது போலப் பெண்கள் யாரும் இதுவரை இங்கே வந்ததில்லை போல.. இல்லைன்னா முதலாளி அழைத்துக் கொண்டு வரும் பெண் என்ற பயமின்றி இந்த செக்யூரிட்டி இப்படிக் கண்ணை முழிச்சுக்கிட்டு 'ஆ'ன்னு ஆச்சரியமா பார்க்க மாட்டான்..'

கேட்டிலிருந்து வீட்டிற்கு முன்னாலிருந்த அகன்ற போர்டிகோவுக்குச் செல்லும் பாதை சலவைக்கற்கள் பதிக்கப்பட்டு பளபளப்பாக இருந்தது.. பாதையின்

இருபக்கமும் தோட்டமிருக்க.. சிறிய அளவில் கைபிடிச் சுவர் தோட்டத்தை ஒட்டிக் கட்டப்பட்டிருந்தது..

பதினைந்து கார்கள் நிற்குமளவிற்கு மைதானம் போலப் பரந்து விரிந்திருந்த போர்டிகோவில் கரும்பச்சை வண்ணத்தூண்கள் இருந்தன.. இரண்டு நபர்கள் இருபக்கமும் நின்று கைகளை விரித்துத் தொட்டுக் கொள்ளும் அளவில் அவற்றின் சுற்றளவு இருந்ததில் அவள் அந்தத் தூண்களில் ஒன்றைத் தொட்டுப் பார்த்தாள்..

நீண்ட சலவைக்கற்கள் வரிசை கட்டிப் போடப் பட்டிருந்ததைப் போன்ற படிக்கட்டுகளில் மூர்த்தி தாவி ஏறினான்.. தயக்கத்துடன் நின்றவளைத் திரும்பிப் பார்த்து..

"கம்.." என்றான்..

காலிங் பெல்லின் ஓசையில் கதவைத் திறந்த பெண்மணி ஐம்பதைத் தொடும் வயதில் இருந்தாள்.. எளிமையான நூல் புடவையும், மெல்லிய தங்கத்தாலி சரடும், நெற்றியில் பெரிய அளவிலான மெரூன் வண்ண ஸ்டிக்கர் பொட்டுமாக இருந்தவள் மரியாதையுடன் ஒதுங்கி விழிவிட்டதில் அவள் அந்த வீட்டில் வேலை செய்யும் பெண்மணியாக இருக்க வேண்டும் என்று இவள் யூகித்தாள்.. அந்தப் பெண்மணி மூர்த்தியின் பின்னால் வந்த இவளை படு ஆச்சரியத்துடன் பார்த்தாள்..

4

"இவங்க நம்ம கெஸ்ட் சாவித்திரியம்மா.."

மூர்த்தி முறுவலித்தான்.. மாளிகை போன்ற அவனது பங்களாவில் ஐம்பது வயது மதிக்கத்தக்க ஒரு பெண்மணியும் இருக்கிறாள் என்பதில் பாதுகாப்புணர்வு கொண்டவள் சாவித்திரியை நிம்மதியுடன் நோக்க அவள் இவளைப் பார்த்து..

"வாம்மா.." என்றாள்..

"மாடியில் கெஸ்ட் ரூமைக் காட்டுங்க.. ஹீட்டரைப் போட்டு விடுங்க.. இவங்க உடனடியா நனைஞ்ச டிரஸ்ஸை மாத்தியாகனும்.. குளிரிலும் பனியிலும் மழையிலும் நனைஞ்சு விறைச்சுப் போயிருக்காங்க.. சூடா சாப்பிட ஏதாவது செய்து கொடுத்து சாப்பிட வைங்க.. அப்புறம் இவங்களுக்குத் துணையா கெஸ்ட் ரூமில் நீங்களும் படுத்துங்க.. வாக்கிங் போனப்ப வழியில் பார்த்தேன்.. கொடைக்கானலுக்கு புதிதாம்.. யாரோ ஒரு பிரண்டைத் தேடி வந்திருக்காங்க.. அவங்க இல்லைன்னதும் எங்கே போகிறதுன்னு தெரியாம நின்றுக்கிட்டு இருந்தாங்க.. இந்த மிட்நைட்டில் யங்லேடி தனியாய் நிற்கிறது ஸேஃபில்லைன்னு எடுத்துச் சொல்லி அழைத்துக்கிட்டு வந்தேன்.. முன்னே பின்னே அறிமுகம் இல்லாத ஆணுடன் வரமாட்டேன்னு பிடிவாதம் பிடித்தாங்க.. வலுக்கட்டாயமா இழுத்து வந்திருக்கேன்.. தனியாப் படுக்க விட்டா சந்தேகத்திலேயே தூங்க மாட்டாங்க.."

அவன் சொல்லச் சொல்ல சாவித்திரி அவளைத் திரும்பித்திரும்பிப் பார்த்துக் கொண்டாள்.. வீட்டில் வேலை செய்யும் பெண்மணியிடம் இவ்வளவு விளக்கம் சொல்கிறானே என்று மனதுக்குள் வியந்தாள் அவள்..

"சாவித்திரியம்மா என் அம்மாவின் ஊரைச் சேர்ந்தவங்க.. என்னைப் பார்த்துக்கனும்னு அம்மா நான் பிறந்த போதே அழைத்து வந்தவங்க.. அம்மாவோட ரெப்ரசென்டேட்டிவ் ஸோ... நான் தும்மினாலும் இவங்களுக்கு விளக்கம் சொல்லியாகனும்.. ஹா.. ஹா.. என்ன சாவித்திரியம்மா.. அப்படித்தானே..?" அவள் மனதைப் படித்ததைப் போலப் பதில் சொல்லிவிட்டு அவன் சிரித்தான்..

அவன் சிரிப்பதைக் கனிவுடன் பார்த்த சாவித்திரியின் கண்கள் கலங்கின.. காணாததைக் கண்டு விட்டதைப் போன்ற நெகிழ்ச்சியுடன் தன் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.. மூர்த்தி மாடியேறி விட்டான்.. வேலை முடிந்தது என்று விட்டு விட்டுச் செல்பனைப் பின் தொடர முடியாமல் அவள் தயங்கி நின்றாள்..

"வாம்மா.." சாவித்திரி அழைத்தபடி மாடியேறினாள்.

மூர்த்தி வைத்து விட்டுச் சென்றிருந்த லெதர் பேக்கை எடுத்துக் கொண்டவள் சாவித்திரியைப் பின் தொடர்ந்தாள்.. மாடியில் நடு மையமாக அகன்ற ஹால் நீண்டிருக்க இரு பக்கமும் அறைகள் இருந்தன.. ஓர் அறையைத் திறந்து விட்ட சாவித்திரி அறையின் ஹீட்டரை ஆன் பண்ணி விட்டாள்..

"பாத்ரூம் ஹீட்டரைத் தேவையானப்ப போட்டுக்க.. இப்பக் குளித்து டிரஸ் மாத்திக்க.. உனக்குச் சாப்பிட சூடா உப்புமாக் கிளறிக் கொண்டு வரேன்.." நகரப் போனாள்..

"நீங்க சாரோட அம்மா அனுப்பி வைத்தவங்கன்னு சார் சொன்னாங்களே.. சாரோட அம்மா இங்கே இல்லையா..?" என்ற அவளது கேள்வி சாவித்திரியை தடுத்து நிறுத்தியது..

அது எதற்கு உனக்கு என்பதைப் போல சாவித்திரி பார்த்த பார்வையில் இவளது முகம் மாறிவிட்டது..

"ஐ ஆம் ஸாரிங்க.. இந்த மிட்நைட்டில் சார் என்னைப் பார்த்தினாலேதான் எனக்கு ஹெல்ப் கிடைத்தது.. அதே சமயத்தில இந்த மிட் நைட்டில பனியிலயும் குளிரிலயும் கொட்டற மழையிலயும் நனைந்துக்கிட்டு யாராவது வாக்கிங் போவாங்களா..? நான் தெரியாம மாட்டிக்கிட்டேன்.. சார் தெரிந்தே இதைச் செய்திருக்கிறாரே.. அதனாலதான் கேட்டேன்..." சங்கடத்துடன் சொன்னாள்..

சாவித்திரி பெருமூச்சு விட்டாள்.. நீண்ட, நெடிய, துயரம் நிரம்பிய பெருமூச்சு அது..

"மனசில புழுக்கம் இருந்தா இப்படித்தான், பனியிலயும் குளிரிலயும் மழையிலயும் நனைந்துக்கிட்டுக் கால்போன போக்கில் போகத் தோணும்.." தன் போக்கில் சொல்லி விட்டுப் போய் விட்டாள்..

நனைந்திருக்கும் உடையை மாற்றிக் கொள்ளும் சிந்தையின்றி அப்படியே நின்று விட்டாள் அவள்.. மரத்தடியில் அவள் பனியிலும் மழையிலும் நனைந்து உடல் நடுங்க வெடவெடத்தபடி நின்றிருந்தபோது அவ்வளவுதான்

என்று நினைத்தாளே.. சில நிமிடங்களுக்கு முன்னால் நகர்ந்த அந்த மணித்துளிகள் அவளது கண்முன் சுழன்றன.. இடியும் மின்னலுமாக கொட்டிய மழைத் தாரைகளின் இடையே அவளைக் காக்க வந்த ரட்சகனாக அவன் வெளிப் பட்டானே.. கடவுள் அனுப்பி வைத்த தூதன் என்று அவனை நினைத்தாளே.. அவன் மனதில் புழுக்கம் இருக்கிறதா..? அந்த மனவெம்மையைத் தணிக்கும் மார்க்கமின்றி அவன் பனி பொழியும் நள்ளிரவில் கொட்டும் மழையில் கொடைக்கானலின் சாலைகளில் உலாவக் கிளம்பி வந்தானா..?

'அவன் மட்டும் அப்படி வந்திருக்காவிட்டால் என் நிலைமை என்னவாகியிருக்கும்..?'

அவள் மனதில் நன்றி பெருக்கெடுத்தது.. அறையைப் பார்த்தாள்.. அதன் பட்டோடபம் அவளை பயமுறுத்தியது.. அதுபோன்ற அறைகளை அவள் திரைப்படங்களிலும், டிவியில் வரும் விளம்பரங்களிலும் தான் பார்த்திருக்கிறாள்.. நேரடியாகப் பார்ப்பாள்.. அங்கே தங்குவாள் என்று நினைத்தும் பார்த்ததில்லை..

'எதைத்தான் நினைத்துப் பார்த்தேன்..?'

துயரச் சுமையில் மனம் கனத்தது.. அடக்கி வைத்திருந்த கண்ணீர் ஆறாகப் பெருக்கெடுத்து ஓடியது.. தன்னை யாரேனும் பார்க்கிறார்களோ என்ற பயத்துடன் சுற்று முற்றும் பார்த்தாள்.. சாவித்திரி போகும் போது அறைக்கதவைச் சாத்திவிட்டுப் போயிருந்ததினால் அறையில் அவள் மட்டும் தனித்திருப்பதை உணர்ந்து கொண்டவள் அவசரமாக கன்னத்தைத் துடைத்துக் கொண்டாள்..

அறையில் பரவியிருந்த ஹீட்டரின் வெப்பத்தில் நனைந்திருந்த உடை சற்று உலர்ந்திருந்தது.. லெதர் பேக்கைத் திறந்தவள் உள்ளேயிருந்த மாற்றுடைகளை எடுத்துக் கட்டிலின் மீது வைத்தாள்.. லெதர் பேக் என்பதினால் மழைநீர் பேக்கின் வெளிப்புறத்தை மட்டுமே நனைத்திருந்தது.. உள்ளே ஈரம் தாக்கவில்லை..

அந்த அறையின் பரப்பளவுதான் அவளுடைய வீடு என்பதில் அவளுக்குப் பிரமிப்பாக இருந்தது.. முன்புறம் ஆர்ச் போல வளைவு கொடுத்து சுவரையொட்டி வளைவாக சோபா செட் போடப்பட்டிருந்தது.. ஒருபக்க சுவரை அடைத்து 'டிவி..' இருந்ததில்..

'சினிமாத் தியேட்டர் போலவே இருக்கே..' என்று அயர்ந்து போனாள்..

எவ்வளவுதான் பிரமிப்பது.. அவளது வாழ்க்கைத் தரத்தில் எல்.ஈ.டி வாங்குவதே ஒரு பெருங்கனவு போல இருந்த நிலையில் இங்கே சுவரை அடைத்து சோனி டி.வி.

வரவேற்பறை போல தோற்றமளித்த அறையின் முன்புறத்திலிருந்த ஆர்ச்சைத் தாண்டி உள்ளே பார்த்தால் அங்கும் சோபா செட்கள் இரண்டிரண்டாக அணி

வகுத்து ஜன்னல்களின் ஓரமாகப் போடப் பட்டிருந்தன.. அறையின் விட்டத்தில் ஆரம்பித்துத் தரையைத் தொடும் ஜன்னல்களின் கண்ணாடி கதவுகளை கனத்த திரைச்சீலைகள் மறைத்துத் தொங்கிக் கொண்டிருந்தன.

'இதுக்கு எதுக்கு ஜன்னலை வைக்கனும்..?'

அவளுக்கு என்ன தெரியும்..? பகல் பொழுதில் திரையை விலக்கி ஜன்னலோரமாக போடப் பட்டிருக்கும் சோபாவில் உட்கார்ந்து பார்த்தால் கொடைக்கானலின் இயற்கையழகு கண்ணாடி கதவுகளுக்கு அப்பால் தெரிந்து மனதை கொள்ளை கொள்ளும் என்பது.. அவள் பாவம் சாத்தூரில் பிறந்து வளர்ந்தவள்.. கொடைக்கானல் எந்தத் திசையில் இருக்கிறது என்றுகூட அவளுக்குத் தெரியாது.. இது போன்ற மாளிகைகளும் இருக்கின்றன.. என்பதை இப்போதுதானே நேரில் பார்க்கிறாள்..?

அறையின் மூலையில் வேலைப்பாடுகளுடன் கூடிய மர டேபிளில் கம்யூட்டர் பொருத்தப்பட்டிருந்தது.. அறையின் மையத்தில் நான்கு நபர்கள் கை, கால்களைப் பரத்தி விரித்துப் படுத்து உறங்கும் அளவில் மிகப் பெரிய கட்டில்.. அதில் நுரை மெத்தை, தலையணைகளுடன் புத்தம் புதிய

விரிப்புக்களை உடுத்தி அவளை ஓய்வெடுக்க 'வா' என்று அழைத்தது..

சுவரோடு ஒட்டிய கதவொன்றைத் திறந்தால் நீண்ட உடை மாற்றும் அறை இருபக்கமும் மர அலமாரிகளுடன் அசத்தியது.. மையத்தில் சுவரை அடைத்ததைப்

போலக் கண்ணாடி.. அதன் முன் குஷன் பதிக்கப்பட்ட நாற்காலி..

உடை மாற்றும் அறையிலிருந்த கதவைத் திறந்தால் அதையொட்டி குளியலறை இருந்தது.. தனித்த பெரிய அறையைப் போலிருந்த குளியலறையில் இருந்த பாத் டப்பின் பளிங்கு வெண்மையில் மயங்கிப் போனாள்..

'கெஸ்ட் ரூமே இப்படின்னா அவன் ரூம் எப்படியிருக்கும்..?'

வழியில் பார்த்தவளை வீட்டுக்கு அழைத்து வந்து ஃபைவ் ஸ்டார் ஹோட்டல் ரூமே தோற்றுப் போகும் அளவில் டென் ஸ்டார் ஹோட்டல் ரூம் போன்றதொரு அறையில் தங்க வைத்திருக்கும் அந்த தயாளன் எப்பேற்பட்ட கோடிஸ்வரனாக இருப்பான்.. அவன் அவளை மதித்துத் தன் வீட்டிற்கு வந்திருக்கும் விருந்தாளி என்று சொன்னானே..

கடவுள் கருணையற்றவர் என்று நினைத்தாளே.. இதுபோன்ற ஈர மனம் படைத்த மனிதர்களும் இவ்வுலகில் இருக்கிறார்கள் என்று அவளுக்கு அடையாளம் காட்டிய கடவுள் கருணை மனம் படைத்தவர்தான்..

குளியலறையிலிருந்த வெந்நீர் குழாயைத் திருகி விட்டு ஷவரின் அடியில் நின்றபடி ஈர உடைகளைக் களைந்தவளுக்கு உயிர் வந்ததைப் போல இருந்தது.. கொதிக்கும் வெந்நீரில் குளித்து, உடைமாற்றி ஈரத் துணிகளை அலசிப் பிழிந்து பக்கெட்டில் போட்டவளுக்கு அவற்றை எங்கே காய வைப்பது என்று தெரியவில்லை.. குளியலறையிலிருந்த வாஷிங் மெஷினைப் பார்த்தவள் துணிகளை அதில் போட்டு டிரையரை ஆன் பண்ணினாள்..

கணப்பொழுதில் துணிகள் உலர்ந்து விட்டதில் அவளுக்கு கண்ணைக் கட்டியது..

'கெஸ்ட் ரூமின் பாத்ரூமில் டிரையருடன் இருக்கும் வாஷிங்மெஷினா..?'

இப்படிப்பட்ட வசதிகளுடன் கூடிய மாளிகையில் அவள் உறங்கி எழ ஓர் வாய்ப்புக் கிடைத்திருக்கிறது என்பதை அவளால் நம்ப முடியவில்லை.. கனவோ என்ற மலைப்பு ஏற்பட்டது.. கண்களைக் கசக்கி விட்டுக் கொண்டாள்.. தெளிவாக காட்சி தெரிந்ததில் அவள் காண்பது கனவல்ல என்று நிச்சயமானது..

விலை குறைந்த வாஷிங்மெஷின் ஒன்றைத் தவனை முறையில் வாங்க முன்பணம் கட்ட அவள் ஒராண்டு பணம் சேர்க்க வேண்டியிருந்தது.. ஒரு வழியாகப் பணம் சேர்த்து தவணை முறையில் வாஷிங் மெஷினை வாங்கியவள் அந்தத் தவணையைக் கட்டி முடிப்பதற்குள் படாத பாடு பட்டு விட்டாள்.. என்னதான் வாயைக் கட்டி வயிற்றைக் கட்டினாலும் தவணை கட்ட பணம் மீதமாகவில்லை..

'எப்படி மீதமாகும்..? வாயையும் வயிற்றையும் நான் கட்டினால் மட்டும் போதுமா..?' கசப்புடன் நினைத்துக் கொண்டாள்..

"வினய் நெய்யில்லாமல் சாப்பிட மாட்டான்ம்மா.. அதனால நெய்யைக் கட் பண்ண வேணாம்.. ஒன்னு செய்யேன்.. நீ காலையிலும் சாயந்திரமும் உன் ஆபிசில் காபி குடிப்பியே.. அதைக் கட் பண்ணிவிடேன்.. கணக்கு சரியாவரும்.."

கணக்குப் போட்டுக் காய் நகர்த்திக் காரியமாற்றுவதில் அவளது சித்தி லீலாவதி கெட்டிக்காரி.. சாலையோரக் குடிசையொன்றில் தாய், தகப்பனில்லாமல் தனித்து வாழ்ந்த கூலித் தொழிலாளி அவள்.. கட்டிடங்களில் சித்தாள் வேலை கிடைத்தால் மட்டுமே சோறு கிடைக்கும்.. ஓலையால் மறைக்கப்பட்ட குடிசையில் மழைகாலம் வந்து விட்டால் தங்க முடியாது.. வெள்ளம் ஓலைக் குடிசையை அடித்துச் செல்ல இவள் பாதி கட்டப்பட்ட கட்டிடங்களில் ஒன்றிக் கொள்வாள்... அப்போதுதான் கொத்தனார் வேலை

செய்த வீரப்பனுடன் அவளுக்கு நெருக்கம் ஏற்பட்டது.. அவருடன் மட்டுமல்ல.. அவளுக்கு பலருடன் நெருக்கம் இருந்தது என்பது வீரப்பனுக்குத் தெரியாது..

வீரப்பன் ஐம்பதைக் கடந்த வயதில் இருந்தார்.. லீலாவதிக்கோ இருபது வயது.. பசியும், வாழ்க்கை நடத்துவதற்கான போராட்டமும் அவளை வீழ்த்தி விட்டது.. வயதைப் பற்றி அவள் யோசிக்கவில்லை.. அவளுக்குத் தேவை, இருக்க இடமும், உடுக்க உடையும் மட்டுமே...

என்னதான் லீலாவதியின் இளமையில் வீரப்பன் மயங்கி மோகம் கொண்டாலும் அவளுக்கு மனைவியென்ற உரிமையைக் கொடுக்க மறுத்தார்.. லீலாவதியின் கசடுகள் அவருக்குத் தெரிந்திருந்தது ஒருபக்கம் என்றால் மறுபக்கம் அவரது மனைவி அபிராமியின் மீதான காதலும் மகளின் மீதான பாசமும் அவருக்கு அணை கட்டி தடுத்து நிறுத்தியிருந்தன..

"உனக்குத் தனிவீடு வாடகைக்கு எடுத்துத் தர்றேன்.. நீ சித்தாள் வேலைக்கு வரவேணாம்.. மாசாமாசம் செலவுக்குப் பணம் கொடுக்கிறேன்.. மளிகை ஜாமான் வாங்கிப் போடறேன்.. இது போதாதா உனக்கு..?"

வீரப்பன் கேட்ட கேள்வியில் ஒன்றிக் கொள்ள இடமும் வயிற்றுக்கு உணவும் உடுத்திக் கொள்ள மாற்றுடைகளும் இல்லாமல் இருந்தவள்தானே நீ என்ற கேள்வியும் சேர்த்துப் பொதிந்திருந்தது..

இவற்றுக்காகத்தானே நீ என்னிடம் வந்தாய் என அவர் சொல்லாமல் சொல்லியதில் லீலவாதி ஒன்றும் துடித்துப் போய் விடவில்லை.. அவற்றுக்காகத்தான் அவள் அவரிடம் வந்தாள் என்பதுதான் உண்மை.. இப்போதைக்கு இது.. இதை விடப் பெரிய இடம் கிடைத்தால் அப்போது கை மாறிக் கொண்டால் போயிற்று என்ற அலட்சியத்துடன் அவளும் வீரப்பனின் ஏற்பாட்டிற்கு சம்மதித்தாள்..

வீரப்பனின் இந்த மறைவு வாழ்பு பற்றி அபிராமி அறிந்த போது அவள் கணவரிடம் சண்டை போடவில்லை.. ஆழ்ந்த துயரத்துடன் ஓர் பார்வை பார்த்தாள்.. அந்தப் பார்வையில்

துடித்துப் போன வீரப்பன் லீலாவதியின் வீட்டுப் பக்கம் தலைவைத்துக்கூடப் படுக்காமல் ஒதுங்கி கொண்டார்..

தூண்டில் போட்டு அவரைத் தன் பக்கம் இழுத்துத் தனிவீடு வாடகைக்கு எடுத்துக் குடி வைக்கம் அளவிற்குக் கொண்டு போன லீலாவதி அவ்வளவு எளிதாக அவரை ஒதுங்க விட்டு விடுவாளா என்ன..?

குளிர்காய்ச்சல் என்று தகவல் அனுப்பி அவருக்குப் பரிதாபத்தை வரவழைத்து அவளைத் தேடிவர வைத்தாள்.. நலம் விசாரிக்க வந்தவரைக் குளிருக்குப் போர்வையாக்கிக் குளிர் காய்ந்து தன் வலையில் மறுபடியும் சிக்க வைத்தாள்..

சாகசம் தெரிந்தவர்களுக்கு எல்லாமே கை வந்த கலை..

## 5

வீரப்பனால் லீலாவதியிடமிருந்து மீள முடியவில்லை.. குற்ற உணர்வில் அபிராமியின் முகம் பார்க்க முடியாமல் தவித்தார்.. பெருந்தன்மை மிக்க

அபிராமி கணவரின் துரோகம் குறித்து எந்தவிதக் கேள்வியும் கேட்டு அவரைச் சங்கடப்படுத்தவில்லை.. மௌனமாக அவரது துரோகத்தைச் சகித்துக் கொண்டாள்.. மனைவியின் அந்தக் குணம் வீரப்பனின் மனதை வாள் போட்டு அறுத்தது..

இப்படி இருதலைக் கொல்லி எறும்பிடம் சிக்கிக் கொண்டதைப் போலத் தத்தளித்த கணவர்மீது கருணை கொண்டவளாய் அவருக்கு விடுதலை கொடுப்பதைப் போல அபிராமி இறந்து விட்டாள்.. நெஞ்சை வலிக்கிறது என்று சரிந்த மனைவி மருத்துவ மனைக்குச் செல்வதற்குள் உயிர் துறந்து விட்ட அதிர்ச்சியில் உறைந்து போனார் வீரப்பன்..

"அவங்களுக்கு ஹார்ட் அட்டாக் வந்திருக்கு வீரப்பன்.. இவங்க ஹார்ட் பேசண்ட்டுன்னு உங்களுக்குத் தெரியாதா..?"

டாக்டர் கயல்விழி 'பாதகா' என்றொரு பார்வை பார்த்தாள்.. வீரப்பனின் மனம் நொறுங்கியது..

"என்னிடம்தான் அவங்க ரெகுலரா ட்ரீட்மெண்ட் எடுத்துக்கிறாங்க.. உங்க ஹஸ்பெண்டையும், மகளையும் அழைத்துக்கிட்டு வாங்கன்னு ஆயிரம் தடவை அவங்களுக்குச் சொல்லியிருப்பேன்.. இதோ, அதோன்னு சாக்குப் போக்குச் சொல்லிட்டு தானாய் தன்னுயிரைக் குறைத்துக்கிட்டாங்க.. ம்ப்ச்.. என்ன மாதிரியான மனுசன் நீங்க..?"

வீரப்பனுக்கு புரிந்து விட்டது.. வாய் விட்டு எதையும் கேட்காமல் மனதளவில் அவரை விட்டு விலகி நின்று உயிர் துறந்து விட்டாள் அபிராமி..

"இவங்க மனது கஷ்டப்படும்படி எதையும் பேசாம, அதிக வேலைப்பளு கொடுக்காம கண்ணாடிப் பாத்திரம் போல நீங்க பத்திரமா கவனித்திருந்தா இப்படி ஆகியிருக்காது.."

வீரப்பனின் துரோகம் அவரது மனைவியின் இளகிய இதயத்தை செல்லரித்து மரணப்பாதையில் அழைத்துச் சென்று விட்ட துயரத்தில் மூழ்கியிருந்தவரைத் தேடி வந்த லீலாவதி உறவினரின் முன்னிலையில் அவர் சட்டையைப் பிடித்து உலுக்கி..

"என் வயிற்றில் வளரும் உங்க குழந்தைக்கு என்ன பதில்..?" என்று நியாயம் கேட்டாள்..

'குழந்தையா..?'

வெறுமனே போய் வந்த மறைவு வாழ்க்கையென்று லீலாவதியுடன் இருந்த இருப்பிற்கு அவர் பெயர் சூட்டியிருக்க அடுத்த காயை சாதுர்யமாக நகர்த்தி அவரை வெட்டி வீழ்த்தி விட்டாள் லீலாவதி..

திட்டம் போட்டு அவள் காய் நகர்த்தி சதுரங்க விளையாட்டை விளையாடி விட்டதை தாமதமாகப் புரிந்து கொண்ட வீரப்பனுக்கு அவளுக்குத் தாலி கட்டுவதைத் தவிர வேறு வழியிருக்கவில்லை..

லீலாவதிதான் அபிராமியின் காரியத்திற்கு வந்திருந்த உறவினர்களின் முன்னிலையில் வீரப்பனின் சட்டையைப் பிடித்து நியாயம் கேட்டு விட்டாளே.. அவரது குழந்தை அவள் வயிற்றில் வளர்கிறது என்பதைக் கேட்ட உறவினர்கள் அவர் முகத்தில் காறி உமிழாத குறையாக பேசித் தீர்த்து விட்டார்கள்..

"இதையெல்லாம் மனசில போட்டு மருகி மருகித்தான் உன் பொண்டாட்டி நெஞ்சுவலி வந்து செத்துப் போயிட்டா போல.. கல்யாண வயசில உனக்கு

ஒரு மக இருக்கா. .நீ என்னடான்னா உன் மகளுக்கு மாப்பிள்ளை தேடறதை விட்டுட்டு உனக்கு இன்னொரு பெண்டாட்டியைத் தேடி வாழ்ந்திருக்க.. நல்லா இருக்குடா வீரப்பா.. உன்னை நல்லவன்னு நினைச்சோம்.. நீ இப்படிக் கேடு கெட்டவனா இருக்கியே.."

அத்தனை வருடங்களாய் வீரப்பன் கட்டிக் காத்து வந்த மரியாதையும், கௌரவமும் காற்றில் பறந்து விட்டன.. இது அபிராமி கொடுக்கும் தண்டனையென்று வாய் திறவாமல் சகித்துக் கொண்ட வீரப்பன் லீலாவதியின் கழுத்தில் மூன்று முடிச்சை வேண்டா வெறுப்பாகப் போட்டுத் தொலைத்தார்.. அடுத்த நிமிடமே அவரது வீட்டிற்கு ஏஜமானியாக மாறினாள் லீலாவதி..

"நீ உன் வீட்டுக்குப் போ.." பல்லைக் கடித்தபடி தாழ்ந்த குரலில் சீறினார் வீரப்பன்.. பதிலுக்கு..

"என்னது..? என்னை வீட்டை விட்டு வெளியே போகச் சொல்றீங்களா...? பேருக்குத்தான் தாலி கட்டினீங்களா..? ஐயோ, ஐயோ.. இந்த அநியாயத்தைக் கேட்க யாருமே இல்லையா..? இவரைக் கட்டிக்கிட்ட இந்த வயித்துப் பிள்ளைக்காரி எங்கே போவேன்..? பொண்டாட்டின்னும் பார்க்காம இந்த மனுசன் என்னை வீட்டை விட்டு வெளியே

துரத்தப் பார்க்கிறாரே.." என்று அவள் உரத்த குரலில் பிலாக்கணம் வைத்ததில் வீரப்பன் அடுத்த குற்றச்சாட்டுக்கு ஆளானார்..

'அடப்பாவி மனுசா..' என்று ஒட்டு மொத்த உறவினர் கூட்டமும் வீரப்பனைச் சாடிய சாடலில் அவரது வாய் மூடிக்கொள்ள லீலாவதி அபிராமியின் இல்லத்துக்கு அரசியானாள்..

'லீலாவதி கெட்டிக்காரி..'

கசப்புடன் முகம் சுளித்தாள் அவள்.. காலிங்பெல் ஒலித்தது.. திறந்தாள்.. மூடப்பட்ட பெரிய டிரேயுடன் உள்ளே வந்த சாவித்திரி அவளைப் பார்த்து..

"உட்காரும்மா.." என்றாள்..

தயக்கத்துடன் சோபா நுனியில் உட்கார்ந்தவளைப் பார்த்து..

"நல்லா உட்காரும்மா.. விழுந்துரப் போற.." என்றவள் அவள் முன்னால் டீப்பாயை நகர்த்தி வைத்து..

"சாப்பிடு.." என்று டிரேயை வைத்தாள்..

வேண்டாம் என்று மறுக்க முடியாமல் பசி வயிற்றைக் கிள்ளியது.. காலையில் பஸ் ஏறுமுன் சாப்பிட்டது.. அன்று முழுவதும் சாப்பிடாமல் அலைந்து திரிந்து மழையில் நனைந்து ஓய்ந்து போயிருந்தவளுக்கு பசி மறந்து போயிருந்தது.. கண் முன் இருந்த உணவு டிரேயைக் கண்டதும் மறந்திருந்த பசி வயிற்றில் சுரக்க டிரேயை மூடியிருந்த தட்டை எடுத்துப் பார்த்தாள்..

சூடான ரவா கிச்சடியும் தொட்டுக் கொள்ளத் தேங்காய் சட்னியும் இருந்தன.. சின்னஞ்சிறு பிளாஸ்க்கில் என்ன இருக்கிறது என்று திறந்துப் பார்க்கக்கூட முடியாத வேகத்தோடு கிச்சடியை சாப்பிட்டு முடித்தாள்..

'பாவம்.. செம பசியில இருந்திருக்கா..' சாவித்திரியின் முகத்தில் காருண்யம் வழிந்தது..

"சூடா பாலைக் குடிம்மா.. தெம்பா இருக்கும்.. தூக்கமும் நல்லா வரும்.." பிளாஸ்க்கில் இருந்த பாலை தம்ளரில் ஊற்றிக் கொடுத்தாள்..

அந்த உபசரிப்பில் கண்கலங்கி விட்டாள் அவள்.. அபிராமி இருந்த போது இதுபோன்ற கவனிப்பும் உபசரனைகளும் அவளுக்குக் கிடைத்தன.. அவள் போன அன்றே அவையனைத்தும் அபிராமியுடன் சேர்ந்தே போய் விட்டனவே..

'தாயில்லாத பிள்ளைக்கு சீரில்லை..' மனம் கனத்தது..

சீர் என்பதை கவனிப்பு, பாசம், கனிவு, என்ற பலபொருள்களில் எடுத்துக் கொள்ளலாம்.. தாயின் பெருமையை உணர்த்தும் முதுமொழி எத்துனை உண்மையானது..

"ஏம்மா கண் கலங்கற..?" சாவித்திரி இதமாக வினவினாள்..

"எங்கம்மா ஞாபகம் வந்துருச்சு.." பால் தம்ளரை அவள் வாங்கிக் கொண்டாள்..

"உங்கம்மா எங்கே இருக்கிறாங்க..?" யதார்த்தமாகத்தான் சாவித்திரி கேட்டாள்..

"சாமிகிட்ட இருக்கிறாங்க.." அவள் குரல் கம்மக் கூறியதில் அதிர்ச்சியாகி அவள் முகத்தைப் பார்த்தாள்..

"அப்பா..?"

"அவரும் இல்லைங்க.."

'ஐயோ.. பாவம்..' வாய் விட்டுச் சொல்லாமல் மௌனித்தாள் சாவித்திரி.. சில சமயங்களில் இரக்கம் கூட ஒருவருக்கு தாழ்வுணர்வை உண்டு பண்ணி விடும்.. அதனால் ஓர் பெருமூச்சுடன் அதைத் தவிர்த்தவள்..

"உன் பெயர் என்னம்மா..?" என்று வினவினாள்..

"அர்ச்சனா..!"

அவள் அர்ச்சனைப் பூக்களைப் போல வெகு அழகாக இருந்தாள்.. பசி நீங்கிய முகத்தில் ஓர்விதத் தெளிவும் மலர்ச்சியும் ஏற்ப்பட்டிருந்ததில் அப்பொழுதுதான் மலர்ந்த நறுமலரை நினைவு படுத்தினாள்.. தலையோடு நனைத்து வெந்நீரில் குளித்து உலர்ந்த உடைக்கு மாறித் தலை முடியை விரித்து விட்டிருந்ததில் அது தோகை போல தரையில் புரண்டு கொண்டிருந்தது.. கொடி போன்ற உடலமைப்பு.. சந்தனத்தை அரைத்துப் பூசியதைப் போல ஒரு நிறம்.. வட்ட முகத்தில் இருந்த பெரிய கண்களில் சோகம் நிரம்பியிருந்தது..

'இந்த வயசில் தாய், தகப்பனில்லாம அநாதையா நின்னா சோகம் வராம என்ன செய்யும்..?'

சாவித்திரி அவள் சாப்பிட்ட டிரேயை எடுக்க முயல அர்ச்சனா தடுத்துத் தன் கையில் டிரேயை எடுத்துக் கொண்டு எழுந்தாள்..

"நான் கொண்டு வர்றேங்க.."

"நீ தூங்கும்மா.. நான் போய் இதுகளைக் கிச்சனில் வைத்துட்டு வர்றேன்.."

"அதுக்கு நானும் கூட வர்றேனே.."

பிடிவாதமாக வந்த அர்ச்சனாவிடம் இருந்த பண்பு சாவித்திரியைக் கவர்ந்தது.. அவர்கள் பேசியபடி படியிறங்கினார்கள்..

"கொடைக்கானலுக்கு உன் பிரண்டைப் பார்க்க வந்ததா மூர்த்தி தம்பி சொல்லுச்சே.."

"ஆமாங்க.. ரேகான்னு ஒரு பிரண்ட்.. என்னுடன் படிச்சவ.. கொடைக்கானலில இருந்தா.. அவளைத் தேடித்தான் வந்தேன்.. வீடு பூட்டிக் கிடக்கு.."

"நீ வருகிறதா அவளிடம் சொல்லலையா..?"

"இல்லைங்க.. காலையில வீட்டை விட்டு வெளியே வந்தப்ப எங்கே போகிறதுன்னே டிசைட் பண்ணலை.. பஸ் ஸ்டாண்டில கொடைக்கானல் போகிற பஸ் கிளம்பிக்கிட்டு

இருக்கிறதைப் பார்த்தேனா.. டக்குன்னு ரேகா ஞாபகம் வந்துருச்சு.. பஸ்ஸில் ஏறிட்டேன்.."

விசித்திரமாக அர்ச்சனாவைப் பார்த்தாள் சாவித்திரி..

'இவளைப் பார்த்தா மனம் போன போக்கில் அலைகிறவளைப் போலத் தெரியலையே..'

மூர்த்தியைப் போல சாவித்திரிக்கும் குழப்பம் வந்தது..

"அப்பாம்மா இல்லைன்னு சொன்னியே.. வீட்டை விட்டு வெளியில் வந்ததாவும் சொல்கிற.. யார் வீட்டில இருந்த..?"

"என் வீட்டில்தாங்க.."

இதை விடத் தெளிவான பதில் உலகத்தில் இருக்க முடியாது என்று தோன்றியது சாவித்திரிக்கு..

"மூர்த்தித் தம்பியிடமும் நீ இப்படித்தான் சொன்னியா..?" என்று விசாரித்தாள்..

"எப்படி..?" அர்ச்சனாவுக்குப் புரியவில்லை..

"மொட்டைக் காத்தான் குட்டையில விழுந்தான் என்கிறதைப் போலச் சொன்னியே.. அதைச் சொன்னேன்.." விளக்கம் சொன்னாள் சாவித்திரி..

அர்ச்சனா சிரித்து விட்டாள்.. சிரிக்கும் போது அவளது கண்களும் சேர்ந்து சிரித்த அழகில் வியந்து போனாள் சாவித்திரி.. அந்தச் சிரிப்பின் இடையே இழையோடிய சோகத்தின் முகவரியை சாவித்திரியால் இனம் காண முடிந்தது..

சோகம் சுமப்பவர்களால் சோகத்தை சுமந்து கொண்டிருக்கும் பாவப்பட்ட ஜீவன்களை இனம் காண முடியாதா..?

'பெண்ணாகப் பிறப்பெடுத்தாலே இப்படித்தான்.. மனம் கனக்க மனதின் வலியை மறைத்துக் கொண்டு எதுவும் நடக்காதது போல் வாழ்ந்தாக வேண்டும்..' நெடிய மூச்சு வெளிப்பட்டது..

'பெண் மட்டுமா மனச்சுமையுடன் வாழ்கிறாள்..? ஆண்கள் அதற்கு விதி விலக்கா..? சுமை தாங்கும் சுமைதாங்கிகளாய் வாழ்பவர்களும் இவ்வுலகில் உண்டே.. மூர்த்தியை மறந்து விட்டாயா..?' சாவித்திரியின் மனம் கேட்டது..

மற்றுமொரு நெடுமூச்சு.. அர்ச்சனா சங்கடம் கொண்டாள்..

"நான் ஏதாவது உங்க மனசைப் பாதிக்கிறதைப் போலச் சொல்லிட்டேனா..?"

"ஏன் அப்படிக் கேட்கிற..?"

"மூட்-அவுட் ஆகிட்டேங்களே.."

"மூட்-அவுட் ஆகிட்டேனா..? நீ தெளிவாச் சொன்ன விளக்கத்தில தலை சுத்திக் கிறுகிறுத்துப் போயில்ல இருக்கேன்.."

"போங்க ஆண்ட்டி.."

அர்ச்சனாவுக்கு வெட்கம் வந்து விட்டது.. சோகப் பதுமை போல இருப்பவளிடம் மலர்ச்சி வந்தால் அவள் தங்கப் பதுமை போல ஜொலிக்கிறாள் என்பதை கண்டு கொண்டாள் சாவித்திரி..

"அதுசரி.. என்னை போங்க ஆண்ட்டின்னு கொடைக்கானலை விட்டு விரட்டி விடத்தான் வந்திருக்க போல.."

"அச்சச்சோ.. அப்படி எங்கே சொன்னேன்..?"

"இப்பச் சொல்லலை..?"

"என்னன்னு..?"

"போங்க ஆண்ட்டின்னு.."

"அது ச்சும்மா.. சொல்கிறது.."

"ஊஹீம்..?"

அர்ச்சனா சமையலறையிலிருந்த சின்க்கில் பாத்திரங்களைப் போட்டு.. விட்டுக் குழாயைத் திறக்கப்

போனாள்..

"என்னம்மா செய்கிற..?" சாவித்திரி தடுத்தாள்..

"இதைக் கழுவி வைக்கிறேன் ஆண்ட்டி.."

"வேண்டாம் வா.. காலையில் குறிஞ்சி வந்து கழுவி வைப்பா.."

"ஏனாம்..? இப்பக் கழுவி வைத்தால் என்னவாம்..?"

"என்னவா..? இது கொடைக்கானல்ம்மா.. நடுராத்திரியில குழாயைத் திறந்தா சில்லுன்னு பனிக்கட்டி போலத் தண்ணி கொட்டும்.. நீ தாங்க மாட்ட.."

"மணிக்கணக்கா பனியையும் கொட்டற மழையையும் தாங்கி நின்றுக்கிட்டு இருந்தவதானே ஆண்ட்டி.. சார் அந்தப்பக்கம் இந்த நேரத்துக்கு கடவுள் போல வந்து காப்பாத்தி அழைச்சுக்கிட்டு வரலைன்னா இன்னும் அங்கேயேதான் நின்றுக்கிட்டு இருந்திருப்பேன்..?"

சாவித்திரிக்குப் பாவமாக இருந்தது.. அர்ச்சனா எதற்காக இந்த பனி விழும் இரவில் கொடைக்கானலின் குளிர் மழையில் நனைந்து கொண்டு நின்றாள் என்று புரியாவிட்டாலும் அந்த நிலைமைக்கு அவளை அவளது வாழ்க்கை துரத்தியிருக்கிறது என்பதை மட்டும் புரிந்து கொள்ள முடிந்தது..

"அதான் பாதுகாப்பா வந்துட்டேயில்ல.. இனியும் அந்த நினைப்பு எதுக்கு..? விட்டுத் தள்ளு.."

சாவித்திரி அர்ச்சனாவை இழுத்துக் கொண்டு படியேறினாள்..

## 6

"அப்புறம்..?"

ஆதுரத்துடன் வினவினாள் சாவித்திரி.. அர்ச்சனாவின் வாயைக் கிளறிக் கதை கேட்கும் தொனியாக இல்லாமல் அவளது மனதில் உள்ள சோகத்தை இறக்கி வைத்து இளைப்பாற வைத்து மடி தாங்கும் தாயின் குரலாக அவள் கேட்ட தொனி இருந்தது..

அர்ச்சனா சாவித்திரியின் பக்கமாக ஒருக்களித்துத் திரும்பிப் படுத்தாள்.. அறையில் ஹீட்டரினால் உண்டான வெப்பம் குளிருக்கு இதமாக இருந்தது.. கனத்த கம்பளியை இழுத்துப் போர்த்திக் கொண்டதில் கதகதப்பு வந்தது.. தூக்கம்தான் வரவில்லை..

இரவு விளக்கின் மெல்லிய வெளிச்சத்தில் அவளது கண்களில் துளிர்த்தக் கண்ணீர்த் துளிகள் பளபளத்தன.. ஆறுதலாக் குறை கேட்கும் அன்னையின் வடிவாய் சாவித்திரி தென்பட்டாள்.. அவளிடம் மனதில் இருந்த சுமையை இறக்கி வைத்துக் கொண்டிருப்பதில் அர்ச்சனாவுக்குள் இளைப்பாறுதல் உண்டானது..

வா.. என் அருகில் அமர்ந்து உன் மனதில் உள்ள குமுறல்களைக் கொட்டு.. மடி தாங்க நானிருக்கிறேன் என்று சொல்லும் நல் உள்ளங்கள் இந்த உலகில் மிகக் குறைவு.. அப்படியே கேட்டாலும் அது அடுத்தவரின் வாழ்வை அறிய விழையும் அற்ப ஆசையினால் கேட்கப் படுவதாக இருக்கும்..

இவள் நம் விருந்தாளி என்ற அறிமுகத்துடன் மூர்த்தி சாவித்திரியிடம் அர்ச்சனாவை ஒப்படைத்து விட்டுப் போய் விட்டான்.. அர்ச்சனாவுக்காக அறையைக் காட்டி.. அந்த நடு நிசியிலும் அலுப்பையும், களைப்பையும் முகத்தில் காட்டாமல் சூடாக உணவும், பாலும் தயாரித்துக் கொண்டு வந்து கொடுத்து அவளை உண்ண வைத்து, அவள் உறங்கப் பாதுகாப்பாக துணைக்கு வந்து படுத்திருக்கும் சாவித்திரியின் மீது அர்ச்சனாவுக்குள் பிரியம் சுரந்தது..

"என்னம்மா பிரச்னை..?" என்ற இதமான கேள்வி மட்டுமே அர்ச்சனாவுக்குப் போதுமானதாக இருந்தது..

அவள் மடி சாய்ந்து அழுது தீர்த்து விடும் வேகத்துடன் தன் வாழ்க்கையைச் சொல்ல ஆரம்பித்து விட்டாள்..

"அப்புறம் என்ன ஆண்ட்டி.. சித்தியின் கையில் வீட்டோட மொத்த அதிகாரமும் போய் விட்டது.. அவங்க தடாலடியா வந்து நின்று தாலிகட்ட வைத்துக் குடும்பத்துக்குள்ளே நுழைஞ்சிருவாங்கன்னு அப்பா எதிர்பார்க்கலை போல.. இடிஞ்சு போயிட்டார்.."

வீரப்பனின் நிலைமை அப்படித்தான் ஆகியிருந்தது.. லீலாவதியை மனைவியாய் ஏற்க அவரால் முடியவில்லை.. அபிராமியின் இடத்தில் லீலாவதியை நிறுத்தி

வைக்க நேர்ந்து விட்டதில் மனம் உடைந்து விட்டார்.. லீலாவதி அவருடன் மட்டும் வாழவில்லை.. இந்த உண்மை தெரிந்திருந்ததால்தான் அவளை தள்ளியே நிறுத்தியிருந்தார்.. சபலத்தில் வீழ்ந்து அவளுடன் தொடர்பை வைத்துக் கொண்டிருந்தாலும் அதற்கு ஓர் எல்லைக் கோட்டை வகுத்திருந்தார்..

அபிராமி இறந்து விடுவாள்.. லீலாவதி அவளுக்கான எல்லைக் கோட்டை அழித்துவிட்டு அவர் வீட்டில் நுழைந்து விடுவாள் என்று அவர் நினைத்துக் கூடப் பார்த்ததில்லை.. லீலாவதி அவருடைய மனைவியென்ற பட்டத்தை வாங்கிக் கொண்டதும் அவர் நினைத்துப் பார்க்காத அத்தனையையும் நடத்திக் காட்டி விட்டாள்..

"உன்னை பேங்கில் பார்த்ததா நடராஜன் சொன்னானே..?"

"ஆமாம்.. பேங்குக்குத்தான் போயிருந்தேன்.."

"என்னம்மா.. இந்தப் பக்கம்ன்னு அவன் கேட்டதுக்கு நகையை அடகு வைக்க வந்திருக்கிறதாய் சொன்னாயாமே..?"

"ஆமாம் சொன்னேன்.."

"ஒரு பவுனில்ல, இரண்டு பவுனில்ல.. அறுபது பவுன் நகையை அடகு வைத்துப் பத்து லட்சம் பணம் வாங்கினாயாமே..?"

"ஆமாம் வாங்கினேன்.."

"உனக்குன்னு ஒரு குண்டுமணி நகைகூட சொந்தமா இல்லை.. எங்கிருந்து வந்தது அந்த அறுபது பவுன்..?"

"எல்லாம்.. உங்களாலே வந்ததுதான்.."

பூடகமாகச் சொன்னவளை உற்றுப் பார்த்த வீரப்பனுக்கு மனதில் என்னென்னவோ சந்தேகங்கள் வந்தன..

'ஒருவேளை இவளுக்கு நான் நகையேதும் வாங்கிக் கொடுக்கலைங்கிறதைக் குத்திக் காட்டிப் பேசறாளோ..?'

எப்படி வாங்கிக் கொடுப்பார்..? எந்த நொடியிலும் அவருடனான தொடர்பை அறுத்துக் கொண்டு வேறு எவருடனும் அவள் சென்று விடலாம் என்ற நிலையில் அவளுடன் பழகிக் கொண்டிருந்தவர் அவளுக்காக வீட்டு வாடகை, மளிகை, துணிமணி, செலவுக்குப் பணம் என்று அள்ளி விட்டதே அதிகம்.. இதை லீலாவதியும் அறிவாள்.. அறிந்தும் ஓர்நாள்கூட ஏன் அப்படி நினைக்கிறீர்கள்..? உங்களை விட்டு நான் எங்கே போவேன் என்று வாய் வார்த்தைக்குக் கூடக் கேட்டதில்லை.. மாறாக அவரை விட உயர்ந்த நிலையிலிருக்கும் எவர் பெயரையாவது சொல்லி அவரிடம் போயிருந்தால் தங்கத்தால் இழைத்திருப்பார், இவரிடம் போயிருந்தால் பட்டுக்களாக வாங்கிக் குவித்திருப்பார் என்று புலம்பிக் கடுப்பேற்றுவாள்.. கடுப்புத் தாங்காமல் அவர் அவளிருக்கும் தெருப் பக்கம் கூடப் போகாமல் விலகியிருந்தால் கண்ணீரும் கம்பலையுமாக சரசமாடி அவரைக் கவிழ்த்துத் தன் வீட்டுக்கு வர வைத்து விடுவாள்..

'சாகசக்காரி..'

அவரது மகள் அர்ச்சனா இருக்கும் வீட்டிற்குள் இப்பேற்பட்ட குணம் கொண்ட லீலாவதி நுழைந்து விட்டாளே என்றுதான் அவருக்குப் பதைப்பாக இருந்தது..

அவரது சபல புத்தியால் அன்பு மனைவியை பறி கொடுத்ததுமில்லாமல் அருமை மகளின் பாதுகாப்புக்கும் உலை வைத்து விட்டாரே.. என்ன செய்வார்..?

லீலாவதியை வீட்டை விட்டுத் துரத்தவும் முடியாமல், வீட்டில் ஒருத்தியாக நினைக்கவும் முடியாமல் தொண்டையில் முள் சிக்கிக் கொண்டதைப் போல அவஸ்தைப் பட்டார் அவர்..

அப்படித் தவித்துக் கொண்டிருந்தவரின் தலைமீது இடி மீது இடியாக இறக்கிக் கொண்டிருந்தாள் அவரின் 'சதி' லீலாவதி..

"என்னால் வந்ததா..?"

"பின்னே.. யாராலே வந்ததாம்..? உங்களுக்குப் பெண்டாட்டியா ஆனதினாலதானே இந்த வீட்டுக்கு உடந்தைப் பட்டவளா நான் ஆக முடிஞ்சது..?"

"பெண்டாட்டி, கிண்டாட்டின்னு உரிமை கொண்டாடினேன்னு வை.. அடித்துப் பல்லைப் பேர்த்திருவேன்.."

"அதுக்கு 'ஆ'ன்னு வாயைத் திறந்து நான் பல்லைக் காட்டிக்கிட்டு இருப்பேன் பாருங்க.. ரொம்பத் துள்ளாதீங்க.."

"நகை எப்படி வந்தது.. அதைச் சொல்லுடி.."

"ஊம்..? என் சக்களத்தி போட்டுக்கிட்டு இருந்த நகை இப்ப என்னோடதா ஆகியிருச்சில்ல..?"

'இவள் அபிராமியைச் சொல்கிறாள்..' வீரப்பன் நகையை மறந்து விட்டு..

"யாருக்கு யாருடி சக்களத்தி..?" என்று எகிறினார்.

"இப்ப எதுக்கு இந்தக் குதி குதிக்கறிங்க..? நான்தான் அவளுக்குச் சக்களத்தி.. போதுமா..?"

"அஃது.. யாரை என்ன பேச்சுப் பேசற..?"

மூச்சிரைக்கச் சொன்னவருக்கு அப்போதுதான் அவள் சொல்லிக் கொண்டிருக்கும் விவரம் புரிந்தது..

"அடிப்பாவி.. என்னடி செஞ்சு வைச்சிருக்கிற..?" ஓடிப் போய் பீரோவைத் திறந்து பார்த்தார்.. அதிலிருந்த அபிராமியின் நகைப்பெட்டி காலியாக இருந்தது.. லீலாவதியை இழுத்துப்

போட்டு மிதித்தார்.. என்ன பிரயோசனம்..? யானை வாயில் போன கரும்பு திரும்புமா..?

"அடகு வைத்த பணம் எங்கேடி..?"

"அதை வைத்துத்தானே என் பேரில வீட்டடி மனை வாங்கினேன்.."

"அடிங்.. யாரு பணத்தை வைச்சு யாரு வீட்டடி மனை வாங்கறது.. உன் மூஞ்சிக்கெல்லாம் சொந்த வீடு ஒரு கேடா..?"

அன்று வீரப்பன் கேட்ட கேள்விதான் மூன்றே வருடங்களில் அர்ச்சனாவை லீலாவதி வீட்டை விட்டுத் துரத்தக் காரணமாக அமைந்தது..

பாவம் அர்ச்சனா, அவளுக்கு இந்தக் கதையெல்லாம் தெரியாது.. அபிராமி இறந்த போது அவளுக்கு பத்தொன்பது வயது.. கல்லூரியில் பி.காம் மூன்றாம் வருடம் படித்துக் கொண்டிருந்தாள்.. வங்கி வேலையில் அவளுக்கு விருப்பம் என்பதற்காக பி.காம் பட்டப் படிப்பில் அவளை வீரப்பன் சேர்த்திருந்தார்..

எதிர்பாராத தாயின் மறைவு.. அடுத்த சில நாள்களில் மாற்றாந்தாயின் வரவு என்று அடுத்தடுத்த அதிர்ச்சிகளில் கதிகலங்கிப் போயிருந்த அர்ச்சனா மனதின் திகிலை மறைக்கப் படிப்பில் தன்னை கரைத்துக் கொண்டாள்.. அச்சம் அதிகமாகும் போது அபிராமியின் படத்தை எடுத்து வைத்து அதில் தலை சாய்த்துக் கண்ணீர் விடுவாள்.. அருளே வடிவான அபிராமி மகளை மடி தாங்கி தலை கோதி ஆறுதல் கொடுப்பதைப் போன்ற உணர்வில் தூங்கி விட்டாள்..

அவர்கள் குடியிருந்த வீடு அர்ச்சனாவின் பெயரில் இருந்தது.. அபிராமி சேர்த்து வைத்திருந்த நகைகள் அனைத்தும் மகளுக்காகத்தான்.. அவற்றை லீலாவதி கைப்பற்றித் தன் பெயரில் அடகு வைத்து அந்தப் பணத்தில் அவள் பெயருக்கு வீட்டடி மனையை வாங்கி விட்டாள்..

ஒரே கல்லில் இரண்டு மாங்காய் அடிக்கும் சாகசமும் சாதுர்யமும் லீலாவதிக்கு மட்டும்தான் வரும்.. அவளே சதி லீலாவதி.. சதி செய்ய அவளுக்குச் சொல்லித்தர வேண்டுமா என்ன..?

அலமாரியின் சாவி அவளிடம் இல்லை.. பூதம் புதையலைக் காப்பதைப் போல அதை வீரப்பன் அடி மடியில் கட்டிக் காவல் காத்துக் கொண்டிருந்தார்.. லீலாவதியிடமிருந்து பாதுகாக்க பத்திரப்படுத்தியிருக்கும் சாவியை லீலாவதி கேட்டால் கொடுத்து விடுவாரா என்ன..?

லீலாவதி தன் விளையாட்டுக்கு பகடைக் காயாக எந்த மகளுக்காக வீரப்பன் அலமாரியின் சாவியை அடி மடியில் கட்டிப் பாதுகாக்கிறாரோ.. அந்த மகளையே பயன் படுத்திக் கொண்டாள்.. தாய் மறைந்து விட்டத் துக்கத்தில் புதையுண்டிருந்த அர்ச்சனாவை அழைத்தாள்..

"இப்படியே உட்கார்ந்திருந்தா எப்படி கண்ணு..? உன்னால உன் அப்பாவும் துக்கமா இருக்காரு பாரு.."

தகப்பனைச் சுட்டிக்காட்டி லீலாவதி பேசவும் மனம் தாளாத அர்ச்சனா..

"அப்பா.." என்று வீரப்பனைத் தேடிக் கிளம்பி விட்டாள்..

"கொஞ்சம் இரு கண்ணு.. உன் அப்பா ரெண்டு நாளா பச்சைத் தண்ணியக் கூடத் தொண்டையில ஊத்திக்கலை.. சூடா சாதம் வைத்துக் குழம்பு, காய்ன்னு சமைச்சிருக்கேன்.. கொண்டு போய் சாப்பிட வை ராஜாத்தி.." தடுத்து நிறுத்தி அவள் உருகிய உருகலில் தன்னையும் அறியாமல்..

"கொடுங்க சித்தி.." என்று உறவு கொண்டாடி விட்டாள் அர்ச்சனா..

'அப்படி வழிக்கு வாடி என் சக்களத்தி மகளே..' லீலாவதியின் இதழ்களில் வெற்றிப் புன்னகை தவழ்ந்தது..

"பாவம் உன் அப்பா.. பசியோட இருப்பாரு.. நான் கொடுத்தா சாப்பிட மாட்டாரு.. நீயே உன் கையால

பரிமாறினா சாப்பிட சான்ஸ் இருக்கு.. அவரைச் சாப்பிட வைச்சிருவ இல்ல.."

"என்ன சித்தி இப்படிக் கேட்டுட்டிங்க.. அம்மா போன பின்னாலே இனி அப்பாதானே எனக்கு எல்லாமும்.. நான் பார்த்துக்குவேன் சித்தி.."

'ஆமாண்டி.. அப்பனும் மகளும் பாசப்பயிரை வளர்க்கத் தண்ணி விடத்தானே நான் வந்திருக்கேன்.. ஒட்டு மொத்தமா அத்தனையையும் உருவிட்டு ஓட்டிவிட வந்திருக்கேண்டி..'

"சாப்பாட்டைக் கொடுங்க சித்தி.. யோசனையா ஆகிட்டிங்களே.."

"அதுவா கண்ணு.. உன் அப்பாவோட அழுக்குத் துணிகளைத் துவைச்சு மடிச்சு அயர்ண் பண்ணி வைச்சிருக்கேன்.. அதை எங்கேம்மா வைக்கிறது..?"

"பீரோவில அடுக்கி வையுங்க சித்தி.."

"பீரோ பூட்டியிருக்கு அர்ச்சனா.."

"சாவி அப்பாகிட்ட இருக்கும்.. நீங்க சாப்பாட்டைக் கொடுங்க.. அப்பா சாப்பிட்டு முடித்ததும் நான் சாவியைக் கேட்டு வாங்கிக்கிட்டு வர்றேன்.."

"நான் சாப்பாடை எடுத்து வைக்கிறதுக்குள்ள நீ சாவிய வாங்கிக்கிட்டு வந்துட்டா, நீ உன் அப்பாவை சாப்பிட வைக்கிறதுக்குள்ள நான் பீரோவில உன் அப்பாவின் துணிகளை அடுக்கி வைச்சுருவேன்.. காலையில இருந்து ஒத்தை ஆளா ஓடியாடி வேலை செய்ததில இடுப்பு ஒடிஞ்சிருச்சும்மா.. கொஞ்ச நேரம் படுத்து எழுந்தாத் தேவலை போல இருக்கு.."

சோர்ந்து போன முகத்துடன் லீலாவதி இடுப்பை நீவி விட்டு வலி தாளாதாதைப் போல முகத்தைச் சுளித்தாள்.. அப்பாவி அர்ச்சனா வீரப்பனிடமிருந்து சாவியை வாங்கி வரக் கிளம்பினாள்..

"நான் கேட்டேன்னு சொல்லாதேம்மா.. என்மேல இருக்கிற கோபத்தில உன் அப்பா நான் துவைச்ச துணிகளை உடுத்தவும் மாட்டாரு.. சமைச்ச சாப்பாட்டை சாப்பிடவும் மாட்டாரு.. நீயே எல்லாத்தையும் செய்ததாச் சொல்லும்மா.. அப்பத்தான் உன் அப்பா பசிக்குச் சோற்றைச் சாப்பிட்டு அழுக்கில்லாத சுத்தமாத் துவைச்ச துணிகளை உடுத்துவாரு.." லீலாவதி எடுத்துச் சொல்லி அனுப்பி வைத்தாள்..

மறந்தும் லீலாவதி சாவியென்ற பெயரைச் சொல்லவில்லை.. சாப்பாடு, துவைத்த துணியென்று அவள் காட்டிய கரிசனத்தில் அர்ச்சனா சாவி தனக்குத்தான் வேண்டுமென்று கேட்டு வாங்கி வந்து கொடுத்து விட்டாள்..

அன்றே அபிராமியின் நகைகளை அபேஸ் செய்த லீலாவதி அவற்றை வங்கியில் அடகு வைத்துத் தன் பெயருக்கு வீட்டடி மனையை வாங்கி விட்டாள்..

அபிராமியின் நகைகளை தன் பெயருக்கு லீலாவதி வங்கியில் அடகு வைத்ததின் மூலம் நகைகளைக் கைப்பற்றி தன் பெயரில் வங்கியில் வைத்துப் பாதுகாத்து விட்டாள்.. இது அவள் பெற்ற முதல் வெற்றி.. அடகு வைத்ததின் மூலம் கிடைத்த பணத்தில் தன் பெயருக்கு ஒரு வீட்டடி மனையை வாங்கி விட்டது இரண்டாவது வெற்றி..

இப்படித்தான் அவள் ஒரே கல்லில் இரண்டு வெற்றிகளை ஈட்டினாள்.. பணம் கையில் இருந்தால் அதை வீரப்பன் பறித்து அர்ச்சனாவின் பெயரில் முதலீடு செய்து விடலாம்.. அதற்கு வழியில்லாமல் செய்தாகி விட்டது.. அவள் பெயரில் அபிராமியின் நகைகளை அடகு வைத்ததை வீரப்பானல் நிரூபிக்க முடியாது.. நகையனைத்தையும் அபிராமி உயிருடன் இருக்கும் போதே லீலாவதிக்குக் கொடுத்து விட்டார் என்று வீரப்பனின் நெருங்கிய நண்பரான நடராஜனிடம் லீலாவதி புளுகியிருந்தாள்.. அதை நம்பிய நடராஜன் நீயெல்லாம் ஒரு மனிதனா என்று வீரப்பனிடம் காறி உமிழாத குறையாக கேள்வி கேட்டு விட்டு ஊர் முழுக்க அந்தச் செய்தியை பரப்பி விட்டிருந்தார்..

அதை பொய்யென்று வீரப்பன் எப்படிச் சொல்வார்..?

## 7

கத்தியின்றி ரத்தமின்றி யுத்தம் செய்து வெற்றி பெறுவதில் லீலாவதி கில்லாடியிலும் கில்லாடி.. வீரப்பனின் மனைவியென்ற உறவில் அவரது வீட்டிற்குள் நுழைந்த சில தினங்களிலேயே அறுபது பவுன் நகையை அபேஸ் செய்து காட்டி விட்டாள்..

மகளின் எதிர்காலம் என்னவாகும் என்ற பயம் வீரப்பனை வாட்ட ஆரம்பித்து விட்டது.. லீலாவதியின் வயிற்றில் வளரும் குழந்தைக்கு அவர்தான் தந்தை என அவர் நம்பத் தயாராக இல்லை.. டி.என்.ஏ டெஸ்ட் அது இது என்று போனால் லீலாவதி அசிங்கமான ஆதாரங்களைக் காட்டி அவரை சந்தி சிரிக்க வைத்து விடுவாள் என்பதினால்தான் வாயை மூடிக் கொண்டு அவள் கழுத்தில் தாலியைக் கட்டி வைத்தார்.. அவள் எதற்கும் துணிந்தவள்..

அர்ச்சனா பட்டப் படிப்பை முடித்து விட்டு எம்.காம் படிக்க ஆரம்பித்தாள்.. அவளுக்குப் பிடித்தமான வங்கித் தேர்வை எழுதி விட்டு மாலை நேரங்களில் கம்யூட்டர் வகுப்புகளுக்குப் போனாள்.. எப்படியாவது மகளை தன் சொந்தக்கால்களில் நிற்க வைத்துவிட வேண்டும் என்பதில் வீரப்பன் முனைப்பாக இருந்தார்..

அவருக்கும் அபிராமிக்கும் இடையே இருந்த உன்னதமான காதல் நிரம்பிய தாம்பத்யத்தின் அடையாளம் அர்ச்சனா..! அபிராமியின் வயிற்றில் பிறந்தவள்.. அவள் வாழ்வாங்கு வாழ வேண்டும்.. அதற்கு படிப்பும் வேலையும் அவசியம்..

இரவு பகலாக அவர் உழைத்து மகளுக்குத் தேவையான வசதிகளை செய்து கொடுத்தார்.. ஆச்சரியத்திலும் ஆச்சரியமாக லீலாவதி அவற்றைத் தடுக்கவில்லை.. அர்ச்சனாவை வீட்டுக்குள் முடக்கிப் போடாமல் மேலே படிக்கவும், அரசாங்க வேலைகளுக்கான பரிட்சைகளை

எழுதவும் அவள் அனுமதித்தற்குப் பின்னால் பலமான சுயநலம் மறைந்திருந்ததை வீரப்பன் உணராமல் போனார்.. அதை உணர்ந்திருந்தால் மகள் பெயரில் இருக்கும் வீட்டைக் காட்டி கையில் இருக்கும் பணத்தில் நகைகளை வாங்கிப் போட்டு நல்ல இடத்தில் அவளுக்குத் திருமணம் செய்து வைத்து மகளுக்கான பாதுகாப்பை அளித்திருப்பார்..

"இது என் மகள் பெயரில் இருக்கும் வீடு.. நீயும் நானும் என் சம்பாத்தியத்தில் வாடகை வீட்டில்தான் இருந்தாகனும்.." என்று லீலாவதியின் தலைமுடியைப் பிடித்து இழுத்து வீட்டை விட்டு வெளியேற்றி தானும் வெளியேறியிருப்பார்..

ஐந்தாண்டு காலத் திட்டம், ஆறாண்டு காலத் திட்டம் என்பதையெல்லாம் தாண்டி லீலாவதி ஆயுள்காலத் திட்டம் போட்டு வைத்திருப்பாள் என்பதை அவர் அறியாமல் போனார்..

'இந்தாளு கட்டிடம் கட்டற வேலை பாத்து என்னத்தை சம்பாதிக்கிறது..? வயசும் ஆகிப் போச்சு.. பொண்டாட்டி செத்துப் போனதில தெம்பில்லாம மூலையிலே சுருண்டு கிடக்கு.. இதை நம்பி எந்தப் பிரயோசனமும் இல்ல.. இந்த வீட்ட இந்தாளோட மக பேரில இருந்து என் பேருக்கு மாத்திக்கிட்டா மட்டும் போதுமா..? சோத்துக்கும் சுகமா வாழறதுக்கும் வழி வேணாமா..? இந்தாளு சம்பாத்தியத்தில முக்கி முனங்கி ஒரு வீட்டைக் கட்டி அறுபது பவுனு நகைகயை சேர்த்து வைச்சதே பெரிசு.. இதுக்கு மேல ஓடி ஓடி ஒன்பத்திரண்டு தோப்புக்கரணம் போட்டாலும் ஒத்தைப் பைசாவச் சேர்க்க முடியாது.. அதுக்கு படிப்பும் கவர்ண்மெண்ட் வேலையும் வேணும்.. இந்தாளால செய்ய முடியாததை இந்தாளோட மக செய்யட்டுமே..' இதுதான் லீலாவதியின் எண்ணம்..

அவளுக்கு என்றுமே மாதச் சம்பளத்தின் மீது ஒர் மோகம் உண்டு.. படிப்பறிவில்லாத சித்தாளான அவளால் அவளது வட்டத்திற்குள்தான் வலை வீச முடிந்தது.. மாதாந்திர சம்பளகாரர்கள் இவளை வீட்டு வேலைக்காரியாக மட்டுமே பார்த்தார்கள்.. அதைத் தாண்டி வர முகம் சுளித்தார்கள்..

சதி லீலாவதியும் விரலுக்கேற்ற வீக்கம் என்று அவள் அளவுக்கு சதி பண்ணி வீரப்பனைக் கணக்குப் பண்ணினாள்.. எதிர்பாராதவிதமாக அவருக்கு வீட்டுக்காரியாகவும் ஆகிவிட்டாள்.. அவள் கனவு கண்ட மாதச் சம்பளம் அர்ச்சனாவின் மூலமாக கிடைப்பதைப் போல இருந்தால் அதை எதற்காக வேண்டாம் என்று சொல்ல வேண்டும்..?

உழவுக்கு அனுப்ப எண்ணம் கொண்டு விட்டால் மாட்டுக்குத் தண்ணீர் காட்டி வைக்கோல் போட்டுப் பராமரிக்க வேண்டும் இல்லையா..? அதைத்தான் லீலாவதியும் செய்தாள்..

'கண்ணு.. கண்ணு..' என்று பாசம் காட்டுவதைப் போலப் பேசி அர்ச்சனாவைக் கைக்குள் போட்டுக் கொண்டாள்.. லீலாவதியைப் பற்றி எடுத்துச் சொல்லி அவளிடமிருந்து விலகி நிற்கும்படி வீரப்பன் அறிவுறுத்திப் பார்த்தார்.. தேனொழுகும் குரலில் பேசி அர்ச்சனாவைத் தன் பக்கமாக லீலாவதி இழுத்துக் கொண்டாள்..

"உன் அம்மா செத்துப் போனதுக்கு நானும் உன் அப்பாவும் சேர்ந்து வாழ்ந்ததுதான் காரணம்ங்கிற குற்ற உணர்ச்சியில உன் அப்பா என்னை வெறுத்து ஒதுக்கறாரு அர்ச்சனா.. நான் என்ன செய்வேன்..? உன் அம்மா ஒர் நோயாளின்னு என்னிடம் அழுது கெஞ்சி அந்த வாழ்க்கைக்கு சம்மதிக்க வைத்தார்.. என்கூட வேலை பார்த்த கொத்தனாருக்கு கொஞ்ச வயசுதான்.. என்னைக் கட்டிக்கனும்னு ஆசைப்பட்டார்.. அவரைக் கல்யாணம் பண்ணியிருந்தா நான் மதிப்பும் மரியாதையுமா வாழ்ந்திருப்பேன்.. இந்நேரத்துக்கு ரெண்டு புள்ளைக்கு தாயாகியிருப்பேன்.. அதையெல்லாம் உன் அப்பாமேல இருந்த இரக்கத்தினால வேண்டாம்ன்னு சொல்லிட்டு மறைவு வாழ்க்கை வாழ்ந்தேன்.. தப்பு செஞ்சது அவரு.. தண்டனை எனக்கா..?"

மூச்சை இழுத்துப் பிடித்து ஏற்ற இறக்கங்களுடன் உணர்ச்சிப் பிழம்பாக லீலாவதி பேசும் வசனத்தில் உருகிப்

போய் விடுவாள் அர்ச்சனா.. லீலாவதியின் கைகளை இறுக்கிப் பிடித்து..

"நானிருக்கேன் சித்தி உங்களுக்கு.." என்று சொல்லி விடுவாள்..

இப்படி அபிராமி பெற்ற மகளை லீலாவதிக்காக வாழ்கிறேன் என்று சொல்ல வைக்கும் சாகசம் நிறைந்தவள் தான் லீலாவதி.. அவளுக்கு வினயம் நிறைந்த வினய் மகனாகப் பிறந்தான்.. எப்படிப்பட்ட கோணத்திலும் எந்தவொரு அசைவிலும் அவன் வீரப்பனைக் கொண்டிருக்கவில்லை, அவரது ஜாடை அவனுக்குத் துளியும் இல்லை என்று ஊரே சுட்டிக்காட்டியது.. மாறாக அவன் வீரப்பனுடன் வேலை பார்த்த வேறு ஒருவனின்  பிரதி பிம்பமாக இருந்ததில் வீரப்பன் மனம் வெறுத்துப் போனார்... மகளைக் குறித்த கவலை அதிகரித்தது..

மறந்தும் அவர் வினய்யின் பக்கம் போக வில்லை.. அதைக் குறித்து லீலாவதி கிஞ்சித்தும் கவலைப் படவில்லை.. அவளுக்கு என்ன..? அவள் பெயரில் ஒரு வீட்டுமனை.. அடகு வைத்த அறுபது பவுன் நகைகள்.. கடன் வாங்கி நகைகளைத் திருப்பி பாதி நகைகளை விற்று கடன்களை அடைத்தாலும் மீதம் முப்பது பவுன் நகை மிஞ்சுமே.. எது எப்படிப் போனாலும் உப்பாளியான வீரப்பன் வேலைக்குப் போகாமல் இருக்க மாட்டாரே.. தினமும் அவர் கொடுக்கும் பணத்தில் தனக்கென்று

ஒதுக்கி வைத்துக் கொண்டு போனால் போகிறது என்று தகப்பனுக்கும் மகளுக்கும் ரசம் சோறையும் துவையலையும் கண்ணில் காட்டுவாள் லீலாவதி..

"குடும்பம் பெரிசாகிருச்சு அர்ச்சனா.. உன் அப்பா கொடுக்கிற பணம் பத்த மாட்டேங்குது.. ரசம் சோறு துவையல்ன்னாலும் தினமும் கிடைக்கனுமே.. உன் அப்பா உடம்புக்கு முடியலைன்னு ஒரு வாரம் படுத்துக்கிட்டா இந்த வீடு என்னவாகிறது..? அவர் என்ன மாதச் சம்பளமா வாங்கறாரு..?"

இப்படிப் பேசிப்பேசி அர்ச்சனாவின் மனதில் எப்படியாவது ஒரு வேலையைத் தேடிக் கொண்டுவிட வேண்டும் என்ற வைராக்கியத்தை லீலாவதி விதைத்து வைத்தாள்..

வீரப்பன் லீலாவதியுடன் பேச மாட்டார்.. அவள் கையால் பச்சைத் தண்ணீர் கூட வாங்கிக் குடிக்க மாட்டார்.. அவள் பெற்ற மகனைத் திரும்பியும் பார்க்க மாட்டார்..

இதைக் குறித்த கவலைகள் எதுவுமின்றி சந்தோசமாக சீவிச் சிங்காரித்து வலம் வந்தாள் லீலவாதி.. தகப்பனும் மகளும் வீட்டை விட்டு வெளியே கிளம்பியவுடன் தனக்கான பிரத்யேக சமையலை விதம் விதமாக செய்து வயிறார சாப்பிட்டு விட்டு வெளியில் சென்று வேலை பார்த்து, படித்து களைத்து வீடு திரும்புவர்களுக்கு ரசம் சோறையும் துவையலையும் கண்ணில் காட்டுவாள்.. வீரப்பன் பல்லைக் கடிப்பார்.. ஒரு ஆளின் வருமானத்தில் இதைவிடப் பெரிதாக என்ன சமையல் செய்துவிட

முடியும் என்று லீலாவதியைத் தாங்கிப் பேசுவாள் அர்ச்சனா.. அதில் வீரப்பனின் கவலை அதிகரிக்கும்..

சம்பாதிக்கும் பணத்தில் பாதியை மட்டும் லீலாவதியிடம் கொடுத்து விட்டு மீதப் பணத்தை அவர் சேமித்துக் கொண்டுதான் இருந்தார்.. அபிராமியின் பொடி பொட்டு நகைகளை வீட்டிலிருந்து அகற்றி வேறு ஒரு இடத்தில் பத்திரப்படுத்தியிருந்தார்.. அர்ச்சனா லீலாவதியை நம்புவதை புரிந்து கொண்டவர் அவள் பெயரிலிருக்கும் வீட்டைப் பாதுகாக்க என்ன வழியென்று ஆழ்ந்து யோசித்து லீலாவதி செயல்படுத்திய திட்டத்தை பின்பற்றி ஓர் திட்டத்தைத் தயாரித்து அதை செயல் படுத்தி விட்டார்..

கல்லூரிக்குக் கிளம்பிய அர்ச்சனாவை பாதி வழியில் நிறுத்தி தன்னுடன் அவர் அழைத்துக் கொண்டு போன போது என்ன, ஏது என்று ஆயிரம் கேள்விகளைக் கேட்டுத் துளைத்து எடுத்து விட்டாள் அர்ச்சனா.. அனைத்துக்கும் அபிராமியின் பெயரைச் சொல்லி அவள் வாயை அடைத்து விட்டார் வீரப்பன்..

"எதுக்குப்பா காலேஜை கட் பண்ணச் சொல்றீங்க..?"

"உன்னால அப்பாவுக்கு ஒரு உதவி ஆகனும்மா.."

"அதை வீட்டிலேயே சொல்லியிருந்தா நாம சேர்ந்தே வந்திருக்கலாமே.."

"வீட்டில் அந்தப் பிடாரி இருக்கிறாளேம்மா.."

"சித்தியை அப்படியெல்லாம் திட்டாதீங்கப்பா.. அவங்க பாவம்.."

'அவளா பாவம்..? இப்படியொரு ஏமாளியாய் இருக்கிறாயே அர்ச்சனா..' வீரப்பனுக்கு நெஞ்சை வலிப்பதைப் போல இருந்தது..

"அவங்களுக்குத் தெரியாம நாம எதையும் செய்யக் கூடாதுப்பா... அது தப்பு... அவங்களை விலக்கி வைக்கிறதைப் போல ஆகிரும்.."

"எனக்கு மட்டும் அவளை விலக்கி வைக்கனும்ங்கிற எண்ணமா என்ன..? இது அபிராமியின் மரியாதை சம்பந்தப்பட்டதாச்சே.."

வீரப்பன் சாதுர்யமாக மனைவியின் பெயரைச் சொன்னதும் அர்ச்சனா லீலாவதியை மறந்து விட்டாள்.. தாயின் நினைவில் பதறிப் போனாள்..

"அம்மாவின் மரியாதைக்கு என்னப்பா..?"

"ஒன்னுமில்லை அர்ச்சனா.. அவ உனக்கு நகை வாங்கிச் சேர்த்து வைக்கனும்ங்கிற ஆசையில எனக்குத் தெரியாம பத்து வட்டிக்கு கடன் வாங்கிட்டா.."

"ஐயோ.."

"அந்த நகைகளை நான் தெரியாத்தனமா லீலாவதிக்குக் கொடுத்துட்டேன்.. அவ அதை அடகு வைச்சுக் கிடைச்ச பணத்தில அவ பேருக்கு வீட்டு மனை வாங்கிக்கிட்டா.."

அர்ச்சனா மௌனமானாள்.. தன்னை தன் மகள் வெறுத்தாலும் பரவாயில்லை.. அவளது வீட்டைக் காப்பாற்றி விடவேண்டும் என்ற முனைப்பில் அவளது

மௌனம் கக்கிய வெறுப்பைத் தாங்கிக் கொண்டார் வீரப்பன்..

அவரை அவர் மகள் வெறுக்கட்டும்.. கூடவே அபிராமியின் நகைகளை அபகரித்த லீலாவதியின்மீது துளியளவாவது வெறுப்பு வராதா..? அது போதும் அவருக்கு.. அர்ச்சனா லீலாவதியை முற்றிலுமாக நம்பி விடக்கூடாது..

"சித்தியிடம் போன நகை திரும்பாதுப்பா.. அதை மறந்திருங்க.. எனக்கு நகை மேல ஆசையில்லை.."

"அது அபிராமி உனக்காக கடன் வாங்கி செய்து வைத்த நகைகள் அர்ச்சனா.."

"இதையெல்லாம் அந்த நகைகளைத் தூக்கிச் சித்தியிடம் தாரை வார்க்கிறபோதே நினைத்துப் பார்த்திருக்கனும்ப்பா.. நினைத்துப் பார்க்க வேண்டிய நேரங்களில நீங்க எதையும் நினைக்காம மனம் போல வாழ்ந்துட்டிங்க.. இப்ப அம்மா போன பின்னாலே அதையெல்லாம் நினைத்து என்ன ஆகப் போகுது..?"

"ஒன்னும் ஆகாதுதான்.. ஆனா அர்ச்சனா.. அபிராமி வாங்கின கடன் வட்டியோட வளந்து நிக்குதேம்மா.. அதை அடைக்கலைன்னா அபிராமிக்குத்தானே கெட்ட பெயர் வரும்..? அவ வாழ்ந்த காலத்திலதான் நான் எதுவும் செய்யாம போயிட்டேன்.. அவ போன பின்னாலேயாவது அவளை யாரும் ஒற்றை வார்த்தை சொல்லி விடாம காப்பாற்றி விடனும்னு துடிக்கிறேன்ம்மா.."

வீரப்பன் அழுதார்.. கூடவே அர்ச்சனாவும் சேர்ந்து அழுதாள்.. தகப்பனும், மகளும் மனதில் சுமந்து கொண்டிருந்த துயரத்தின் பாரத்தைக் கண்ணீரில் கரைத்தார்கள்.. அழுது அழுது ஓய்ந்து போன அர்ச்சனா கண்களைத் துடைத்தபடி..

"கடன் எவ்வளவு இருக்கும்ப்பா.." என்று கேட்டாள்..

"அபிராமி என்னவோ பதினாறு லட்சம்தான் வாங்கியிருக்கா.. அது வட்டியோட வளர்ந்து இப்ப எழுபது லட்சத்தில வந்து நிற்குதும்மா.."

வீரப்பன் கெட்டிக்காரர்.. அர்ச்சனாவின் பெயரில் இருக்கும் வீட்டை குறைந்த தொகைக்கு அடமானம் வைத்தால் லீலாவதி விழித்துக் கொள்வாள்.. குடியிருக்கும் வீடு அடமானத்தில் இருக்கக் கூடாது கண்ணு.. கடன் பட்டாவது நான் அதைத் திருப்பி விடுகிறேன்.. நீ வீட்டை என் பெயருக்கு எழுதி வைத்து விடு என்று சொல்லி அவள் பெயரிலிருக்கும் வீட்டடி மனையையும், நகைகளையும் விற்றுப் பணத்தைப் புரட்டி அர்ச்சனாவின் வீட்டை மீட்டு விடுவாள்.. அர்ச்சனாவும் சித்தி செய்த தியாகத்தில் நெகிழ்ந்து போய் வீட்டை லீலாவதியின் பெயருக்கு எழுதி வைத்து விடுவாள்..

எந்த வகையிலும் லீலாவதியால் அசைக்க முடியாத கடன் தொகையாக இருக்க வேண்டும் என்று எழுபது லட்சத்தை அவர் சொன்னார்.. சாத்தூரின் மையப் பகுதியில் பேருந்து நிலையத்தை ஒட்டி இருக்கும் அவரது வீடு என்பது லட்சத்திற்கும் மேல் விலை பெறும்.. வீட்டின் பெயரில் எழுபது லட்சத்திற்குக் கடன் கொடுக்க தேசிய உடமை வங்கியொன்றின் மேலாளர் சம்மதம் தெரிவித்திருந்தார்.. அவருக்கு வீரப்பனின் குடும்பக்கதை பற்றி நன்றாகவே தெரியும்.. வீரப்பனின் நண்பர் அவர்.. அவருக்கும் லீலாவதி வலை வீசியிருக்கிறாள்.. அவர் அகப்பட்டாமல் சினந்து அவளை விரட்டியடித்திருக்கிறார்.. அதை வீரப்பனிடம் சொல்லாமல்..

"டோன்ட் வொர்ரி வீரப்பன்.. உங்க மகளின் பாதுகாப்புக்காக நான் இந்த ஹெல்ப்பைப் பண்றேன்.." என்று மட்டும் சொல்லியிருந்தார்..

"இப்ப என்ன செய்யலாம்ப்பா..?" கவலையான அர்ச்சனா சட்டென முகம் பிரகாசிக்க..

"நம்ம வீடு இருக்கேப்பா.. அதை விற்று கடனை அடைச்சுடலாம்ப்பா.." என்றாள்..

இது.. இது.. இதைத்தானே வீரப்பனும் எதிர் பார்த்தார்.. அர்ச்சனாவே இந்த வார்த்தைகளைச் சொல்ல வேண்டும் என்று அவர் எதிர் பார்த்தது நடந்து விட்டது..

8

அர்ச்சனா மென்மையானவள்.. சூது, வாது தெரியாதவள்.. அபிராமியின் சாவுக்குக் காரணமான லீலாவதியையும் மன்னித்து அவள்மீது பாசம் காட்டும் அளவுக்கு கருணை உள்ளம் கொண்டவள்.. லீலாவதியின் மகனை தன் தகப்பனுக்குப் பிறந்தவன் என்று நம்பி அவன்மீது தம்பி, தம்பியென்று பிரியத்தை அள்ளிக் கொடுப்பவள்.. லீலாவதியின் சாகசத்தின் அளவு எத்தகையது என்பதை அறியாதவள்..

இப்படிப்பட்ட குணநலன்களை கொண்ட பெண்ணை சூனியக்காரியின் சுயரூபமாக இருக்கும் லீலாவதியிடமிருந்து மீட்காவிட்டாலும் காக்க வேண்டுமல்லவா..? அதை அர்ச்சனாவுக்குச் சொல்லிப் புரிய வைக்க முடியாது.. நாடகமாடித்தான் வழிக்குக் கொண்டுவர முடியும்..

அதைத்தான் வீரப்பன் செய்து கொண்டிருந்தார்..

"வீட்டை விற்றுவிட்டா லீலாவதி குய்யோ, முறையோன்னு அலறி ஊரைக் கூட்டுவாளேம்மா.."

"ஆமாமில்ல.. குடியிருக்க சொந்தமா வீடில்லைன்னா அவங்க கோபப்படத்தானே செய்வாங்க..?"

இதுதான் அர்ச்சனா.. கால்வாயோரமாக ஓலைத் தடுப்புகளால் மறைக்கப்பட்டிருந்த குடிசையொன்றில் வசித்து வந்தவள்தான் லீலாவதி.. வீரப்பனின் தயவினால் ஒரு ஓட்டு வீடு வாடகைக்குக் கிடைத்தது..

இவற்றையெல்லாம் அர்ச்சனா அறிந்திருந்தாலும் சொல்லிக் காட்டமாட்டாள்.. நினைத்தும் பார்க்க மாட்டாள்.. சொந்தமான வீடு ஒன்றில் குடியிருக்க வேண்டம் என்றுதானே வீரப்பனின் வயதையும் பொருட்படுத்தாமல் லீலவாதி அவருக்கு இளையதாரமாக வாழ்க்கைப்பட்டாள் என்று லீலாவதியின் தரப்பிலிருக்கும் நியாயத்தையும் (?) தியாகத்தையும் (???) தாங்கிப் பிடித்துப் பேசுவாள்..

"அந்தக் கருமாயத்துக்குத்தான் நான் வீட்டை அடமானம் வைக்கலாம்ங்கிற முடிவுக்கு வந்திருக்கேன்.." எரிச்சலுடன் சொன்னார் வீரப்பன்..

"வைக்கலாம்தான்.. ஆனா நம்ம வீட்டு மேல எழுபது லட்சம் கடன் கொடுப்பாங்களாப்பா..?" சந்தேகத்துடன் கேட்டாள் அர்ச்சனா..

"கொடுப்பாங்கம்மா.. எனக்குத் தெரிஞ்ச பேங்க் மேனேஜர் ஒருத்தர் நம்ம மேல பரிதாபப்பட்டு நம்ம வீட்டு மேல எழுபது லட்சம் லோன் கொடுக்கறேன்னு சொல்லியிருக்காரு.." என்றார் வீரப்பன்..

"அப்புறம் என்னப்பா.. வெளியே தெரியாம வீட்டு மேல லோன் வாங்கி அம்மா பட்ட கடனை அடைச்சிரலாம்.." அர்ச்சனா பரபரபத்தாள்..

"அதுக்கான ஏற்பாடுகளைச் செய்துட்டேன் அர்ச்சனா.. பேங்கிலயும் ரெஜிஸ்ட்ரர் ஆபிசிலயும் நீ வந்து கையெழுத்துப் போடனும்மா.. அது மட்டும்தான் பாக்கி.."

அப்பாவி அர்ச்சனா அப்பா சொன்னதற்குத் தலையாட்டி விட்டாள்.. வங்கிக்கும், பத்திரப்பதிவு அலுவலகத்திற்கும் சென்று அவர் கையெழுத்துப் போடச் சொன்ன இடங்களில் கையெழுத்துப் போட்டு விட்டாள்..

வீரப்பன் கெட்டிக்காரர்.. சாத்தூரில் வளர்ந்து வரும் புறநகர் பகுதியில் ஒரு பங்களாவை எழுபது லட்சத்திற்கு விலை பேசி வைத்திருந்தார்.. மகள் பெயருக்கு அதை வாங்கி விட்டார்.. தான் போடும் கையெழுத்து வீட்டின் மீது கடன் வாங்குவதற்கு மட்டும்தான் என்று அர்ச்சனா நினைத்துக் கொண்டிருக்க.. அவர்கள் குடியிருந்த வீட்டின் மீது கடனை வாங்கி மகள் பெயரில் புதிதாக ஒரு சொத்தையும் வாங்கிக் கொடுத்து விட்டார் வீரப்பன்..

மிக வசதியானவர்கள் உருவாக்கிக் கொண்டிருந்த பகுதியில் நவீனமான பங்களாக்களின் மத்தியில் அர்ச்சனாவுக்கும் ஒரு பங்களா அமைந்து விட்டது.. வீரப்பனின் மறைவுக்குப் பின்னர் அந்தப் பக்கமாக அவள்

வங்கிக்கு வேலைக்குச் சென்று வந்திருக்கிறாள்.. அவள் பெயரில் வாங்கும் போது முழுமையடையாமலிருந்த கட்டிடங்கள் முழுமை பெற்று வீட்டுக்கு உடையவர்கள் குடியேறி நகரின் வி.ஜ.பி ஏரியாவாக அப்பகுதி மாறி விட்டிருந்தது..

பங்களாக்கள் இருக்கும் பகுதி என்பதால் பிரதான சாலையோரம் ஷாப்பிங் மால், சூப்பர் மார்க்கெட், தையலகம், உயர்தர ஹோட்டல், ஜவுளிக்கடை என்று பெரிதான கடைத்தெரு உருவானதில் அப்பகுதி பிரபலமான நகர்ப் பகுதியாகி பார்ப்பவர்களின் மனதில் ஓர்வித ஏக்கத்தையும் பொறாமையையும் உண்டு பண்ணிக் கொண்டிருந்தது..

அர்ச்சனாவின் பெயரில் வாங்கும் போது எழுபது லட்சமாக இருந்த பங்களா அதைவிட மூன்று மடங்கு அதிகமாக விலையேறும் என்று அதை மகள் பெயருக்கு வாங்கி வைத்த வீரப்பன் கூட எதிர்பார்த்திருக்க மாட்டார்.. அந்தப் பகுதியிலிருந்த பல பங்களாக்களைக் கட்டி விற்பனை செய்த பில்டர் வீரப்பனின் தொழில் திறமையைப் பாராட்டி அவர்மீதிருந்த அபிமானத்தால் குறைந்த விலைக்குக் கொடுத்த பங்களா அது..

அந்த பில்டரிடம் நெடுங்காலமாக வேலை பார்த்து வருபவர் வீரப்பன்.. தொழில் செய்பவர்களுக்கு தொழில் திறமையுள்ள பணியாளர்களின் மீது பிரியமும், மதிப்பும் இருக்கும்.. அப்படி பில்டரின் பிரியத்துக்குப் பாத்திரமாக இருந்த வீரப்பன் தனக்கென்று எந்தச் சலுகையையும் பில்டரிடம் கேட்டதில்லை.. எதிர் பார்த்ததில்லை.. அவர் கேட்ட முதல் சலுகை தன் மகளுக்கானது என்பதில் மறுப்பே சொல்லாமல் வீரப்பன் கை காட்டிய பங்களாவை அவர் கேட்ட விலைக்கே கொடுத்து விட்டாள் பில்டர்..

பணக்காரர்கள் வசிக்கும் பகுதியில் மிகப் பெரிய பங்களா ஒன்று தன் பெயரில் இருக்கிறது என்று அர்ச்சனாவுக்குத் தெரியாது... அதை வாடகைக்கு விட்டிருந்த வீரப்பன் அந்த வாடகைப் பணத்தை அர்ச்சனாவின் வீட்டு லோனுக்காக

கட்டும்படியான ஏற்பாட்டைக் செய்திருந்தார்.. மீதத் தொகையை இவர் கட்டி விடுவார்..

வீரப்பனின் மறைவுக்குப் பின்னர் அவரது நண்பரான நடராஜன் அதே ஏற்பாடு தொடரும்படி பார்த்துக் கொண்டார்.. அதிகமான வாடகையில் குடியிருந்தவர்கள் வாடகைப் பணத்தை வங்கிக் கடனுக்குக்கட்டி விட்டு அதற்கான ரசீதை நடராஜனிடம் கொடுத்து விடுவார்கள்.. நோய்வாய் பட்டிருந்த வீரப்பன் தன் அந்திமத் தருணத்தில் தான் சேர்த்து வைத்திருந்த தொகையை மகள் பெயருக்கு மாதவட்டி வரும்படி வங்கியில் டெபாசிட் செய்து விட்டுப் போயிருந்தார்.. அந்த வட்டியை மகள் பெயரிலிருந்த

வீட்டுக் கடனுக்கு வரவு வைக்கும்படி கேட்டுக் கொண்டிருந்தார்.. இதற்கான கையெழுத்துக்களை வீட்டுக்கடன் சம்பந்தமான கையெழுத்துக்கள் என்று சொல்லி அர்ச்சனாவிடம் கையெழுத்துக்களை வாங்கியிருந்தார்..

வீட்டு வாடகையும், வங்கி டெபாசிட்டில் இருந்த ஐம்பது லட்சத்திற்கான வட்டிப் பணமும் சேர்ந்து அர்ச்சனாவின் பெயரிலிருந்த வீட்டுக்கடனுக்கு வரவாகிக் கொண்டிருக்க, அதைப் பற்றி அறியாத பேதையாக அர்ச்சனா லீலாவதிக்கு உழைத்துக் கொட்டிக் கொண்டிருந்தாள்.

கிராமத்திலிருந்த ஓட்டு வீடு, ஏழு ஏக்கர் நிலம் போன்ற சொத்துக்களை விற்று கையிலிருந்த பணத்தையும் போட்டு ஒன்று சேர்த்த ஐம்பது லட்சம் அது.. அப்படியொரு சேமிப்பை மகள் பெயருக்கு வீரப்பன் உருவாக்கி வைத்து விட்டுப் போவார் என்று எவர்தான் நினைத்துப் பார்த்தார்கள்..?

"நடராஜா..! நான் பிழைக்க மாட்டேன்னு எனக்குத் தோணுதுடா.. அபிராமிக்கு நான் செஞ்ச துரோகம் என்னை மெல்ல மெல்ல கொன்று தின்றுக்கிட்டு இருக்கு..

நான் போயிட்டா என் மகளை ஆதரிக்க யாருமில்லை.." வீரப்பன் கண்ணீர் விட்டபோது.. மனம் தாளாமல் அவர் கை பிடித்து..

"நான் இருக்கேண்டா வீரப்பா.. உன் மகளுக்கு ஆதரவா தகப்பனைப் போல பாசம் காட்ட நானிருக்கேன்.." என்று சத்தியம் செய்து கொடுத்தார் நடராஜன்..

அவரிடம் அர்ச்சனாவின் பெயரிலிருந்த பங்களாவுக்கான பத்திரம், டெபாசிட் பத்திரம், வீட்டுக்கடன் சம்பந்தமான விவரங்கள் அடங்கிய ஃபைல், நாற்பது பவுன் நகை முதலியவற்றை ஒப்படைத்த வீரப்பன்.

"இதுகள்ளாம் உன்னிடம் இருக்குன்னு அர்ச்சனாவிடம் சொல்லிராத நடராஜா.. அவ உடனடியா அந்தச் சண்டாளி லீலாவதிகிட்ட எல்லாத்தையும் ஒப்பிச்சிருவா.. லீலாவதியப் பத்தி உனக்கே தெரியும்.."

"இந்த ஊருக்கே தெரியும்டா வீரப்பா.."

"அவ கைபிடிக்குள்ள நம்ம அர்சச்னா இருக்கா.."

"மீட்கத்தான் வழி தெரியலையேடா.. பாங்க் வேலை கிடைச்சிருக்கு.. நல்ல நல்ல இடத்தில இருந்தெல்லாம் சம்பந்தம் வருது.. அர்ச்சனா சரின்னு சொல்லாமத் தட்டிக் கழிச்சுக்கிட்டு இருக்காளேடா வீரப்பா.."

அர்ச்சனா அப்படியொரு முட்டாளாகத்தான் இருந்தாள்.. வீரப்பனின் சொல்படி அவர் சொன்ன இடத்திலெல்லாம் கையெழுத்துப் போட்டுக் கொடுத்தவள் அதைப்பற்றி லீலாவதியிடம் மூச்சுக்கூட விடவில்லை.. அபிராமி பட்ட கடனை அடைக்க வாங்கிய கடன் என்பதால் தாயின் மரியாதையைக் காக்க அவள் மௌனம் காத்தாள்.. அதனால் அது குறித்த கவலையேதும் இல்லாமல் வீரப்பன் நிம்மதியடைய முடிந்தது..

அதில் தகப்பனுக்கு நிம்மதியைத் தந்த அர்ச்சனா திருமண விசயத்தில் மட்டும் தகப்பன் சொல்வதைக் கேட்க மறுத்தாள்.. வங்கியில் வேலை கிடைத்ததில் சந்தோசப் பட்டுப் போனவள் சம்பளத்தை அப்படியே வீட்டுக் கடனுக்கு கட்டி விடலாம் என்று தகப்பனுக்கு ஆலோசனை சொன்னாள்..

'அதுக்கு லீலாவதி விடனுமே..' மகளின் அப்பாவித்தனத்தில் வீரப்பன் துயரம் கொண்டார்..

மகள் அடைப்பாள் என்றா மகள் பெயரில் அவர் வீட்டுக்கடனை வாங்கினார்..? அதை வைத்து வேறொரு மதிப்புமிக்க சொத்தை மகள் பெயரில் வாங்கி வைத்து அவளது எதிர்காலத்தை வளப்படுத்தவும், தற்போது குடியிருக்கும் வீட்டை லீலாவதியின் பெயருக்கு மாறி விடாமல் தடுப்பதற்காகவும்தானே வாங்கினார்..? கடனை வாங்கியவர் அதை அடைப்பதற்கான வழிமுறைகளை செய்யாமல் இருப்பாரா..? மகள் பெயரில் இருக்கும் சொத்து நிலைக்க வேண்டும், அதிகரிக்க வேண்டும் என்று யோசித்து செயல்படுபவர் அவள் கடனில்லாமல் வாழவும் வகை செய்வார்தானே..

அர்ச்சனா தகப்பனின் பாசத்தையும் உணரவில்லை.. அவளது சொத்தை அவர் பாதுகாத்து பெருக்கி வைத்திருப்பதையும் அறியவில்லை.. அர்ச்சனாவுக்காக அவர் சேர்த்து வைத்திருக்கும் நகைகளையும் டெபாசிட் பணத்தையும் ஒன்று சேர்த்தாலே போதும்.. வீட்டுக்கடன் அடைந்து விடும்.. அர்ச்சனாவுக்கு நகரின் மையப் பகுதியில் இருக்கும் வீடும், பணக்காரர்கள் வசிக்கும் ஏரியாவில் ஓர் பங்களாவும் சொந்தமாக இருக்கும்.. அவரது உறவு வட்டாரத்தில் இந்தச் சொத்தக்களைப் பெரிதாக பேசுவார்கள்.. மூன்று கோடி மதிப்புள்ள வீடுகளுக்குச் சொந்தக்காரி என்று அர்ச்சனாவை பிரமிப்பாகப் பார்ப்பார்கள்.. பெரிய இடத்துச் சம்பந்தம் தேடிவரும்..

அந்தக் கொடுப்பினைதான் வீரப்பனுக்கு இல்லையே.. மகள் பெயரிலிருக்கும் சொத்துக்களைப் பற்றியும் பணம், நகைகளைப் பற்றியும் அவர் மூச்சுக்கூட விட முடியாதே.. அப்படி விட்டால் அடுத்த நொடியே அந்தச் செய்திகள் லீலாவதியின் காதுகளுக்கு இடம் மாறி விடுமே.. அதன் பின் அவை அர்ச்சனாவின் உடமைகளாக இருக்குமா..?

படித்து வங்கியில் வேலை பார்க்கும் அர்ச்சனா லீலாவதியின் கைபிடிக்குள் இருந்தாள்.. எம்.காம் பட்டப் படிப்பின் இரண்டாம் வருட ஆரம்பத்தில் வங்கியில் வேலை

கிடைத்ததும் உடனடியாக தபால் மூலம் படிப்பைத் தொடர்ந்தவள் வேலைக்குச் சேர்ந்து விட்டதில் லீலாவதி அகமகிழ்ந்து போனாள்..

"என்னமோ போ கண்ணு.. வயசான மனுசனை நம்பி வயித்தில பிள்ளையை வாங்கிக்கிட்டேன்.. அந்த மனுசனும் சம்பாதிக்க முடியாம சீக்காளியா படுத்துட்டாரு.. நானும், என் மகனும் வயித்துப் பாட்டுக்கு என்ன செய்கிறதுன்னு மனசு கிடந்து அடிச்சிக்கிட்டு இருந்துச்சு.. உன் அப்பாவோட பொறுப்பை நீ ஏத்துக்கிட்ட.. இனி காலம் பூரா நானும், என் மகனும் வாழ்க்கைப் பாட்டைப் பத்திக் கவலைப்படாம நிம்மதியா இருக்கலாம்.. குடும்பத்தைப் பார்த்துக்கத்தான் நீ இருக்கியே.." என்று சொல்லி அர்ச்சனாவின் தலையில் குடும்ப பாரத்தைச் சுமத்தி விட்டாள்.. அத்துடன் விட்டாளா..?

"நீ மட்டும் வேலைக்குப் போகலைன்னா கண்ணு, நானும் என் மகனும் விசத்தைக் குடிச்சிட்டு மண்டையைப் போட்டிருப்போம்.." என்று அழுது அர்ச்சனாவின் சம்பளம் கிடைக்காவிட்டால் என்ன ஆகும் என்பதை சொல்லாமல் சொல்லி பயமுறுத்தி வைத்து விட்டாள்..

இது தகப்பன் சுமக்க வேண்டிய குடும்ப பாரம் என்ற நினைவு அர்ச்சனாவின் மனதில் ஆழமாக பதிந்து விட்டது.. இருந்தும் அவள் வீட்டுக் கடனை அடைக்கிறேன் என்று சொன்னாள்தான்..

"அதுக்கென்னம்மா.. லீலாவதியிடம் உன் சம்பளப் பணத்தை எதிர்பார்க்க வேண்டாம்ன்னு நான் சொல்லிடறேன்.." என்று மகளின் சம்பளப் பணத்தையும் சேமிக்க முயன்றார் வீரப்பன்..

"வேண்டாம்ப்பா.. வேண்டாம்.." மிரட்சியுடன் மறுத்து விட்டாள் அர்ச்சனா..

"ஏம்மா..?"

"வீட்டுக் கடனை அப்படியே விட்டு விடலாம்ப்பா.. சம்பள பணத்தை பே-ஸ்லிப்போடு அப்படியே கொண்டு வந்து கொடுத்து விடனும்னு சித்தி சொல்லியிருக்காங்க.."

"அடி செருப்பாலே.. அப்படியா அந்தக் கிராதகி சொன்னா..? யார் சம்பளத்தில யார் உரிமை கொண்டாறது..? நீ உழைத்துச் சம்பாதிக்கும் சம்பளத்தை பே-ஸ்லிப்போடு அவகிட்டக் கொடுக்கனுமா..? இவ உன்னைப் படிக்க வைத்தாளா..? பார்த்துக் கிட்டாளா..?"

"இதையெல்லாம் நாம கேட்க முடியாதுப்பா.."

"ஏன்ம்மா..?"

"ஏன்னா இது நீங்க இழுத்து விட்ட வினை.. கையில் குழந்தையோடு உங்க மனைவிங்கிற உறவில நம்ம வீட்டில இருக்காங்க.. நாம பொறுப்பெடுத்துத்தான் ஆகனும்.. இது நீங்க சுமக்க வேண்டிய சுமைப்பா.. உங்களுக்கு ஒரு சொல்வராம இருக்கனும்னா நான் இந்தச் சுமையைச் சுமந்தாகனும்.."

"அர்ச்சனா.."

லீலாவதிக்கு அடிமையாகிக் கொண்டிருந்த மகளை அந்த அடிமைத் தளையிலிருந்து மீட்க முடியாத ஏக்கத்துடன் உயிர் துறந்தார் வீரப்பன்.. அவரது சாவிற்கு லீலாவதி ஒரு சொட்டுக் கண்ணீரைக்கூட விடவில்லை.. கதறி அழுது புரண்ட அர்ச்சனாவை மடியில் போட்டு ஆறுதலும் சொல்லவில்லை.. அவளுக்கான விடுதலை அது என்பதைப் போலச் சலனமின்றி உள்ளறையில் ஒதுங்கிக் கொண்டாள்.

## 9

"என் அழகுக்கும் பவிசுக்கும் ஜமின்தார் மாளிகையிலே இருந்து பெண் கேட்டு வந்தாங்க.. கிரகம்.. உங்கப்பனுக்கு இரண்டாம் தாரமாகி இப்ப அவரும் இல்லாம லோல் படறேன்.. வயசான மனிதனுக்கு இரண்டாம் தாரமாகி கையிலே ஒரு குழந்தையோடு கதியத்து நிற்கனும்ன்னு எனக்கென்ன தலையெழுத்து..? நியாயம் அது இதுன்னு

இப்படி வந்து மாட்டிக்குவேனா..? அதையெல்லாம் தூக்கி உடப்பில போட்டுட்டு

பணக்கார வீட்டில வாழப் போயிருந்தா இப்படி ஐந்துக்கும் பத்துக்கும் உன்னிடம் கையேந்தி நிற்கிற நிலைமை வந்திருக்குமா..?"

வீரப்பன் இறந்த இரண்டே நாள்களில் இதுபோன்ற பிலாக்கணத்தை ஆரம்பித்து வைத்தாள் லீலாவதி.. அவள் விட்ட அம்பு சரியான இடத்தில் தாக்கியது.. தகப்பன் சுமக்க வேண்டிய சுமையைத் தான்தான் சுமக்க வேண்டுமென்று அர்ச்சனாவின் மனதில் பதிந்து விட்டது.. அவள்

"நான்றிருக்கிறப்ப நீங்க ஏன் கண்ணீர் விடனும் சித்தி..? உங்களையும் வினய்யையும் பார்த்துக்க வேண்டியது என் பொறுப்பு.." என்று சொல்லி விட்டாள்..

லீலாவதிக்கு அதுதானே வேண்டும்.. அர்ச்சனாவின் மனது அலைபாயக் கூடாது.. காதல், கல்யாணம் என்றெல்லாம் அவள் கனவு கண்டு விடக் கூடாது.. கடைசிவரை அவள் லீலாவதியையும் அவள் பெற்ற மகனையும் தாங்கிக் கொண்டிருக்க வேண்டும்..

அர்ச்சனாவும் அது போலதான் இருந்தாள்.. ஐந்துக்கும் பத்துக்கும் என்னிடம் ஏன் நீங்கள் கையேந்தி நிற்க வேண்டும்..? இதோ.. சம்பளப் பணம் மொத்தத்தையும் உங்களிடம் தந்து விட்டேன் என்று சம்பளத்தை அப்படியே லீலாவதியிடம் ஒப்படைக்கத் துணிந்தாள்.. நல்ல வேளையாக வீரப்பன் அவளுக்கு ஒரு வழியைக் காட்டியிருந்தார்..

அர்ச்சனாவின் சம்பளப் பணம் அவளது வங்கிக் கணக்கில் முதலீடு செய்யப்படும்.. தேவையான பணத்தை அவள் மாதந்தோறும் வித்ட்ரா செய்வாள்.. வீரப்பன் உயிரோடு இருந்தவரை அப்படித்தான் நடந்து கொண்டிருந்தது.. முதல் மாதச் சம்பளத்தை அவள் முழுமையாக வித்ட்ரா செய்து தகப்பனாரின் கையில் கொடுத்து கால்களில் விழுந்து ஆசிர்வாதம் வாங்கிய போதே அவர் பாதிப் பணத்தைக் கவரில் வைத்து மீதிப் பணத்தை அவளிடம் கொடுத்து..

"எப்போதுமே உன் முழுச் சம்பளத்தை வீட்டில் கொடுக்காதே அர்ச்சனா.. பாதியைக் கொடுத்து விட்டு மீதியை சேமிக்கப் பழகு.." என்று அறிவுரை சொன்னார்..

"எதுக்குப்பா..?" அப்பாவியாய் மகள் கேட்டபோது அவருக்குத் துயரமாய் இருந்தது..

'கடவுளே..! என் மகளை இந்த ராட்சசியிடமிருந்து காப்பாற்று..' என்று மனதுக்குள் மருகியவர்..

"உன் அம்மா பட்ட கடனை அடைக்கனுமே அர்ச்சனா.. இந்த வீட்டின் மேல் கடன் வாங்கியிருக்கிறோமே அர்ச்சனா.. மறந்து விட்டாயா..?" என்று நினைவு படுத்தினார்..

"ஆமாமில்ல.." மகள் கவலையானாள்..

கவலைப்பட ஏதுமில்லை என்று மகளின் முடிகோதி தைரியம் சொல்லத் துடித்த மனதை அடக்கிக் கொண்டவர்..

'கவலைப்படட்டும்.. இந்தக் கவலைதான் என் மகளின் சம்பளப் பணத்தில் பாதியையாவது காப்பாற்றும்..' என்று மனதுக்குள் சொல்லிக் கொண்டார்..

அர்ச்சனாவுக்குப் பொய் சொல்லத் தெரியாது.. லீலாவதி சம்பளப் பணம் எவ்வளவு என்று கேட்டால் உள்ளது உள்ளபடி சொல்லி விடுவாள்.. அதை மறைத்துப் பேச ஓர் காரணம் வேண்டும்.. அந்தக் காரணத்தை 'தாய்க்காக பட்ட கடன்' என்ற பாச உணர்வு கொடுக்கும்..

"மீதிப் பணத்தையும் அப்படியே தூக்கி அந்தக் கிராதகி கையில் கொடுத்து விடாதேம்மா.."

"ஏன்ப்பா..? சித்திக்கு செலவுக்கு பணம் வேண்டாமா..?"

"வேண்டும்தான்.. ஆனால் அவளுக்குச் சிக்கனமாய் இருக்கத் தெரியாது.. நீ கொடுக்கும் பணத்தை இரண்டே நாளில் செலவு செய்துவிட்டு மீதி நாள்களை ஓட்ட என்ன செய்வது என்று கடன் வாங்கி விடுவாள்.. நமக்கு இருக்கிற கடன் போதாதா..?"

வீரப்பன் பயமுறுத்தினார்.. அர்ச்சனாவும்..

"கடனா..?" என்று பயந்து விட்டாள்..

"கடன்தான் அர்ச்சனா.. சிக்கனத்திற்குப் பெயர் பெற்ற அபிராமியே கடன் வாங்கி வைத்திருக்கிறப்ப, பணத்தைக் கண்ணில் கண்ட அடுத்து நிமிசம் அதைக் கரைப்பாய் கரைத்து விடும் இவள் கடன் வாங்க மாட்டாளா..? அதனால வீட்டுக்குத் தேவையான மளிகை, காய்கறிகளை நீயே வாங்கிக் கொடுத்துரு.. அப்பப்ப கைச்செலவுக்கு நூறோ, இருநூறோ தா.. அதுதான் அவளுக்கும் நல்லது.. உனக்கும் நல்லது.."

"அவங்க என் பேங்குக்கு வந்து சம்பளப் பணம் எவ்வளவுன்னு மத்தவங்களிடம் கேட்டுச் செக் பண்ணுவாங்களே.."

'அவளா பெற்று வளர்த்து படிக்க வைத்து வேலை வாங்கிக் கொடுத்தாள்..?'

வீரப்பனுக்கு லீலாவதியை வெட்டிப் புதைத்து விட வேண்டும் போல ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.. அடக்கிக் கொண்டார்.. இது அவளுடைய மகளுக்கு அவர் இழுத்து விட்டிருக்கும் துன்பம்.. தற்காத்துக் கொள்ள வழி சொல்லித் தர வேண்டியதுதான் இப்போதைய அதி முக்கிய வேலை.. ஆத்திரப் படுவதல்ல..

"பண்ணட்டுமே.. மத்தவங்க சீனியர்.. அதிகச் சம்பளம்ன்னு சொல்லு.. உனக்கான பிடித்தங்களை அதிகப்படுத்திச் சொல்லு.. எது எப்படின்னாலும் வீட்டின் மேல் நீ வாங்கியிருக்கிற கடனை லீலாவதிக்குத் தெரியாமத் திருப்பிக் கட்ட பணம் வேண்டுமில்லையா..? அதற்கு நீ சேமித்தாக வேண்டுமே.."

"ஒன்றா.. இரண்டா..? எழுபது லட்சம் அப்பா.. அவ்வளவு பணத்தைச் சேர்க்க என்னால முடியுமா..?"

"முடியாதுதான்.. இப்படியே வாழ்க்கை போய் விடுமா அர்ச்சனா.. உனக்குச் சம்பளம் கூடும்.. பே கமிசன், அரியர்ஸ் அப்படி இப்படின்னு மொத்தமா கைக்குப் பணம் கிடைக்கும்.. அப்பப்ப எல்லாத்தையும் ஒன்றாச் சேர்த்து

லோனுக்குக் கட்டிக் கொண்டே வந்தா லோன் பணம் குறையுமில்லையா..? நீ ரிட்டயராகிறப்ப ஒருவேளை முழுப்பணத்தையும் அடைத்திருக்கலாமே.."

"சரிப்பா.."

லீலாவதியிடம் தன் சம்பளம் எவ்வளவு என்று முழுத் தொகையையும் கூறாமல் பாதிப்பணத்தை மட்டும் கூறும் மன தைரியத்தைப் பெற்றாள் அர்ச்சனா.. கையில் கொண்டு வரும் பணத்தையும் அப்படியே லீலாவதியின் கையில் கொடுத்து

விடாமல் வீட்டுக்குத் தேவையானதை மட்டும் வாங்கிக் கொடுத்து அவ்வபோது கைச்செலவுக்கென பணம் கொடுத்தாள்..

'நானென்ன இவளுக்குச் சமையல்காரியா..? வீட்டைக் காவல் காக்கும் வேலைக்காரியா..?'

லீலாவதிக்குப் பொசுபொசுவென இருக்கும்.. வீரப்பனை நினைத்துக் கோபத்தை அடக்கிக் கொள்வாள்.. அந்த மட்டிலும் அன்றாட உணவுக்கும் தேவைக்கும் தட்டுப்பாடு இல்லாமல் வாழ்க்கை சீராக ஓடுகிறதே என்ற எண்ணம் அவளுக்கு.. அதை ஏன் கெடுத்துக் கொள்ள வேண்டும்..?

வீரப்பன் இறந்ததும் அவளுக்குக் கொண்டாட்டமாகி விட்டது.. அர்ச்சனாவை அடிமைப்படுத்தும் வழிமுறைகள் தான் அவளுக்குத் தண்ணீர்பட்ட பாடாயிற்றே..

அர்ச்சனாவும் அடிமையானாள்.. வீட்டிற்குத் தேவையான மளிகை, காய்கறி இத்யாதி போன்றவற்றைத் தானே வாங்கிக் கொள்வதாகவும் அதைப் பற்றி அர்ச்சனாவுக்கு என்ன தெரியும் என்றும் அந்தச் சுமையை அர்ச்சனா சுமக்க வேண்டாம், லீலாவதியே சுமப்பாள் என்றும் லீலாவதி சொன்னதன் பேரில் அர்ச்சனா சம்பளப் பணத்தில் பாதியைக் கொண்டு வந்து லீலாவதியிடம் கொடுத்து விட்டாள்..

லீலாவதி சாகசக்காரிதான்.. நாசுக்கு நாகரிகத்தை யெல்லாம் தூக்கியெறிந்து விட்டுத் துப்பறிகிறவள்தான்..

ஆனாலும் அவளால் அர்ச்சனா முழுச்சம்பளத்தையும் கொடுக்காமல் பாதியைத்தான் கொடுக்கிறாள் என்று கண்டு பிடிக்க முடியவில்லை.. அவள் படிக்காதவள்.. தவிரவும் அந்த ஊருக்குள் அவளுக்கு நல்ல பெயர் இல்லையென்பதால் அவளிடம் யாரும் சகஜமாக பேச மாட்டார்கள்.. அவள் பேசினாலும் முகச் சுளிப்புடன் பதில் பேசாமல் நகர்ந்து விடுவார்கள்.. அவளும் அப்படி.. அவள் செய்து கொள்ளும் மேக்கப்பும் அப்படி.. கீழ்த்தரமானதாக இருக்கும்..

மற்றவர்களே லீலாவதியைக் கண்டால் முகச் சுளிப்புடன் நகர்ந்து விடும்போது அர்ச்சனா வேலை பார்க்கும் வங்கியில் இருப்பவர்களைப் பற்றிச் சொல்லவே வேண்டாம்.. அர்ச்சனாவைப் போன்ற நல்ல பெண்ணைப் பீடித்திருக்கும் பீடை என்று மனதுக்குள் திட்டியபடி 'வெட்டவா, குத்தவா..' என்பதைப் போல முறைப்பார்கள்.. முகம் கொடுத்துப் பேச மாட்டார்கள்.. அதிலும் அர்ச்சனாவின் தோழி..

"அவ எவ்வளவு சம்பளம் வாங்கினா உனக்கு என்ன..?" என்று சண்டைக்கே வந்து விட்டாள்..

ஆதலினால் அர்ச்சனா வேலை செய்யும் வங்கியின் பக்கம் தலை வைத்துக்கூடப் படுக்காமல் ஒழுங்காய், மரியாதையாய் அவள் கொடுக்கும் பணத்தைக் கணக்குக் கேட்காமல் வாங்கிப் பத்திரப் படுத்திக் கொள்ள ஆரம்பித்தாள் லீலாவதி..

அடுத்த வேளை உணவுக்கு வழியின்றி, ஒண்டிக் கொள்ள ஓலைக் குடிசையுமின்றி இருந்தவளுக்குச் சொந்தமாக அவள் பெயரில் வீட்டடி மனை இருக்கின்றது.. அடகு வைத்திருக்கும் நகைகள் இருக்கின்றன.. குடியிருக்க வசதியான வீடு இருக்கிறது.. உடுத்திக் கொள்ள அபிராமியின் விலையுயர்ந்த பட்டுப்புடவைகள் இருக்கின்றன.. கைகுளிர செலவளிக்க அர்ச்சனா மாதா மாதம் கொடுக்கும் பணம் இருக்கின்றது.. இவை போதாதா..? அர்ச்சனாவின் சம்பளப் பணம் எவ்வளவு என்பதை அறிந்து கொள்வதில் ஆர்வம் காட்டி அவள்

விசாரிக்க ஆரம்பிக்க.. எவராவது ஒரு புத்திசாலி அர்ச்சனாவைத் தூண்டி விட்டு விட்டால் உள்ளதிற்கு மோசம் வந்து விடாதா..?

அப்படிச் சேர ஆரம்பித்ததுதான் அர்ச்சனாவின் சேமிப்பு.. லீலாவதியின் ஆசைகளுக்கு அளவில்லை.. அவள் வீட்டிலிருந்த டிவி, வாஷிங்மெஷின், கட்டில்,

சோபா முதலிய எல்லாவற்றையும் பழைய விலைக்குப் போட்டுப் பணத்தை வாங்கிப் பத்திரப் படுத்திக் கொண்டு.. புதிதாக வாங்கித் தரும்படி அர்ச்சனாவைக் கட்டாயப் படுத்தினாள்..

"ஏற்கனெவே இருந்ததெல்லாம் நல்லாத்தானே இருந்துச்சு சித்தி..?" அர்ச்சனா பல்லைக் கடித்தபடி கேட்டாள்..

"என்னத்த நல்லா இருந்துச்சு..? அத்தனையும் ஓட்டையும் உடைசலுமா இருந்துச்சு.. வீடான வீட்டில புதுசு புதுசா சாமான்க இருக்க வேண்டாமா..?" லீலாவதி நியாயம் பேசினாள்..

'ஓலைக் குடிசைகூட இல்லாமல் இருந்த உனக்கு என் வீட்டுச் சாமான்கள் எல்லாம் ஓட்டை உடைசலாய் தெரிகிறதா..?' இமைகளை இறுகமூடி மனதுக்குள் பொறுமத்தான் முடிந்தது.. வாய் விட்டுக் கேட்க முடியவில்லை.. இதைக் கூட அர்ச்சனா செய்திருக்க மாட்டாள்.. தாயும் அவளைத் தொடர்ந்து தந்தையும் அடுத்தடுத்து மறைந்த துயரத்தை அவளது மனதால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.. பெற்றவர்களை மறக்க முடியாமல் அவர்களது பிரிவுத் துயரைத் தாங்கிக் கொள்ள முடியாமல் உழன்று கொண்டிருந்தவளுக்கு லீலாவதியின் ஆட்டம் தலைவேதனையாக இருந்தது..

"புதுசு வாங்கப் பணம் வேணுமே சித்தி.."

"இன்ஸ்ட்டால்மெண்டில் வாங்கிப் போட்டாப் போச்சு.." சொன்னபடி வீடு முழுவதும் புதியவைகளை இறக்குமதி செய்தாள் லீலாவதி.. அதற்கான தவணைப் பணத்தைச்

சரிகட்ட அர்ச்சனாவின் உணவிலும்.. கைச் செலவுக்குக் கொடுக்கும் பணத்திலும் கை வைத்தாள்..

"ரசம் சோறு துவையலோட சாப்பாட்டை முடிச்சுக்கனும் அர்ச்சனா.. ஸ்கூட்டியிலே வேலைக்குப் போகனும்னு நினைக்காதே.. தவணை அடைகிற வரைக்கும் பஸ்ஸில் வேலைக்குப் போ.."

அர்ச்சனா பல்லைக் கடித்தபடி ரசம் சோறையும் துவையலையும் விழுங்கி விட்டு பஸ் பிடிக்க ஓட அவளது தலை மறைந்ததும் லீலாவதி கறியும் மீனும் முட்டையுமாக சமைத்து மகனைச் சாப்பிட வைத்துத் தானும் சாப்பிடுவாள்.. வினய் தாயை மிஞ்சிய தனயன்.. அர்ச்சனா வீட்டிலிருக்கும் போது அவனுக்கு ரசம் சாதம் சாப்பிட்டு போரடிக்கிறது என்ற அழுது வைப்பான்..

அர்ச்சனா இந்த நாடகங்களை அறியாதவள் அல்ல.. அந்தத் தெருவில் இருப்பவர்கள் லீலாவதியுடன் பழக மாட்டார்கள்.. அபிராமி, வீரப்பனுடன் சொந்த பந்தமாக பழகியவர்கள் அவர்கள்.. அர்ச்சனா பிறந்தது அந்த வீட்டில்தான்.. அவள் கைக்குழந்தையாய் இருந்த போது தூக்கி வளர்த்த தோழமைகள் அவர்கள்.. இப்போது அர்ச்சனாவிற்கு நடந்து கொண்டிருக்கும் அநீதியைப் பற்றி தங்களுக்குள் பேசிக் கவலைப்படுபவர்கள் அவள் அந்தப் பக்கம் போனதும் இந்தப் பக்கம் லீலாவதியும் அவளது மகனும் சசிருசியாய் அசைவ உணவுகளைச் சமைத்துச் சாப்பிடுவதைப் பற்றி அவளிடம் சொல்லாமல் இருப்பார்களா..?

அறிந்தும் அறியாதவளைப் போல வேலைக்கு போய் வந்து கொண்டிருந்த அர்ச்சனாவின் ஸ்கூட்டி விற்கப் பட்டு லீலாவதியின் காதுகளில் புது தோடுகளாக உருமாறியது..

"இந்த மாசம் வினய்க்கு ஸ்கூல் பீஸ் கட்ட வேண்டியிருந்தது அர்ச்சனா.. எனக்கு வேற வழி தெரியல.." அப்பட்டமாகப் புளுகினாள் லீலாவதி..

"அதுக்குத்தான் லோன் போட்டுப் பணம் கொடுத்தேனே சித்தி.."

"தவனைப் பணம் கட்ட அந்தப் பணத்தையும் சேர்த்துப் போட வேண்டியதாப் போச்சு அர்ச்சனா.."

ஒருவழியாய் தவணை அடைந்து அர்ச்சனா ஸ்கூட்டி ஒன்று வாங்க வேண்டும் என்று சொன்ன போது எதற்கு வீண் செலவு என்று தடுத்தாள் லீலாவதி..

"இந்தா இருக்கு பஸ் ஸ்டாப்.. இங்க ஏறினா உன் பேங்க் வாசலில இறங்கிக்கலாம்.. உனக்கு எதுக்கு ஸ்கூட்டி..?"

அர்ச்சனா நிமிர்ந்து ஓர் மௌனப் பார்வை பார்த்தாள்.. லீலாவதியின் வாய் அடைத்துக் கொண்டது..

10

சில சமயங்களில் வார்த்தைகளால் சாதிக்க முடியாததை ஓர் சிறு மௌனப்பார்வை சாதித்து விடும்.. கூர்மையான அர்ச்சனாவின் பார்வையில் லீலாவதி சுதாரித்துக் கொண்டாள்..

'ஆத்தி.. முதலுக்கே மோசம் வந்திரும் போல.. இவ பாட்டுக்கு ஆஸ்டலில இருந்துக்கறேன்னு வீட்ட விட்டு வெளியில போயிட்டா மாசா மாசம் முள்ளங்கிப்பத்த போல சுளையாக் கிடைக்கிற பணமும் சேந்து போயிடுமே.. அடி லீலாவதி.. வாயை மூடிக்கடி.. இவ ஸ்கூட்டி வாங்கினா மாசா மாசம் வர்ற பணத்தில கொஞ்சம்தான் குறையும்.. வீட்டை விட்டுப் போயிட்டா மொத்தப் பணமும் போயிரும்டி..'

சதி லீலாவதி சித்தி லீலாவதியாகி சாகசச் சிரிப்பொன்றை சிரித்து வைத்தாள்.. இதற்கு இவள் சிரிக்காமலே இருந்திருக்கலாம என்று நினைத்துக் கொண்டாள் அர்ச்சனா.. சில சிரிப்புக்கள் அழகானவை.. சில சிரிப்புகள் அருவெறுப்பானவை..

"வேலைக்குப் போற பொண்ணுக்கு ஸ்கூட்டி வேண்டும்தான்.. நீயென்ன மொத்தமாவா பணம் கொடுத்து வாங்கப் போற..?"

"மொத்தப் பணத்துக்கு நான் எங்கே போவேன் சித்தி..? டியுவிலதான் வாங்கனும்.."

"அது சரி.. டியு கட்டறதுக்கான பணத்த உன் செலவைக் குறைச்சுக் கட்டப் போற.. நான் எதுக்கு தடுக்கனும்..? ம்ஹீம்.. இன்னும் கொஞ்ச நாளைக்கு இந்த வீட்டில ரசம் சோறும் துவையலும்தான்.. இந்த வாரக் கடைசியில மீன் எடுக்கலாம்ன்னு நினைச்சேன்.. எடுக்க நினைச்சாலும் குடுத்து வைக்கனும்ங்கிறது இதுதான் போல.."

'அது எடுத்து வைத்தாலும் கொடுத்து வைக்கனும் என்கிற பழமொழி.. தெரிந்தால் பேசு.. தெரியலைன்னா வாயை வைத்துக்கிட்டு சும்மா இரு..'

தனக்கு மட்டும் ரசம் சோறு கிடைக்கும் என்பதை புரிந்து கொண்ட அர்ச்சனா எதுவும் பேசாமல் கிளம்பி விட்டாள்.. மனதில் மகிழ்ச்சி இருந்தால்தான் ருசியான உணவைத் தேடும்.. மகிழ்வில்லாத மனதிற்கு மீன் வறுவலும், ரசம் சோறும் ஒன்றுதான்..

லீலாவதி அந்த ரசம் சோறையும் போடாமல் அர்ச்சனாவின் வயிறைக் காயப் போட்டிருப்பாள்.. அவளுடைய சொல் பேச்சைக் கேட்காத அர்ச்சனாவை அப்படித்தான் தண்டிக்க வேண்டும் என்ற ஆங்காரம் அவளுக்கு இருந்தது.. ஆனால் ஓடோடி உழைக்க அர்ச்சனாவுக்கு சக்தி வேண்டுமே..

"ஃபுட் கிவ் அஸ் எனர்ஜி.." வினய் உரக்கப் பாடம் படித்து லீலாவதியின் மனதின் ஓட்டத்தைச் சொல்லிக் கொண்டிருந்தான்..

என்னவோ செய்து கொள் என்று எதிலும் பட்டுக் கொள்ளாமல் வாழப் பழகிக் கொண்டாள் அர்ச்சனா.. வேலைக்குப் போவது.. வீட்டுக்கு வருவது.. வார இறுதியில் சேர்ந்திருக்கும் அவளது அழுக்குத் துணிகளை வாஷிங் மெஷினில் போட்டுத் துவைத்து உலர்த்தி அயர்ன் பண்ணி அவளது அறையில் உள்ள சுவர் அலமாரியில் அடுக்கி வைப்பது என்று தன் வாழ்வின் ஓட்டத்தை வகுத்துக் கொண்டாள்..

லீலாவதி அர்ச்சனாவின் துணிகளை வாஷிங் மெஷினில் போட்டுத் துவைத்து வைக்கும் வேலையை எல்லாம் வைத்துக் கொள்ள மாட்டாள்.. வார இறுதியில் ஞாயிறன்று அர்ச்சனா தன் துணிகளைத் துவைக்கப் போகும் போது..

"இதுகளையும் கொஞ்சும் சேர்த்துப் போட்டுத் துவைச்சிரு அர்ச்சனா.." என்று லீலாவதி அவளுடைய துணிகளையும் வினய்யின் துணிகளையும் எடுத்துக் கொடுத்ததுண்டு..

அர்ச்சனா அவளுக்கே உரித்தான மௌனப் பார்வையோடு அவற்றைத் தொடாமல் தன் துணிகளை மட்டும் துவைக்க எடுத்தபடி..

"உங்க துணிகளையும் வினய்யின் துணிகளையும் எப்படித் துவைக்கிறதுன்னு எனக்குத் தெரியாது சித்தி.. எசகு பிசகாய் அதில எதுவும் கிழிந்து வைத்துட்டாக் கஷ்டம்.. அதனால உங்க துணிகளை நீங்களே துவைத்துக்கிறதுதான் பெட்டர்.. மெஷினில துணிகளைப் போட்டு எடுக்கறதில என்ன கஷ்டம்..? சமையல் வேலை ஒன்னும் அதிகமில்லைல்ல..? ரசம் சோறும் துவையலும் செய்திட்டு நாள் முழுவதும் சும்மாதானே இருக்கீங்க..? இதையும் செய்யலைன்னா பொழுது எப்படிப் போகும்..? அதோட சித்தி.. வாரம் முழுவதும் ஓடிக்கிட்டு இருக்கிறவளுக்கு ஞாயிற்றுக் கிழமையாவது ரெஸ்ட் வேணும்.. வேண்டும்ன்னாச் சொல்லுங்க.. வேலையை விட்டுட்டு உங்களுக்கு வீட்டு வேலையில ஒத்தாசையாய் இருக்கேன்.. செய்யட்டுமா..?" என்று கேட்ட போது..

'ஆத்தி' என்று மனதுக்குள் அரண்டு போனவளாக..

"நீ சொல்கிறதும் சரிதான்.. எங்க துணிகளை எப்படி மெஷினில் போட்டு எடுக்கறதுன்னு உனக்குத் தெரியாதுதான்.. இதுக்குப் போயி எதுக்காக வேலையை விடறேன்னு அச்சானியமாப் பேசற..? எங்க துணிகளை நான் துவைத்துக்க மாட்டேனா..?" என்று வெள்ளைப் புறாவை பறக்க விட்டாள்..

'அஃது..' அர்ச்சனா தன் வேலையைப் பார்க்கக் கிளம்பி விட்டாள்..

இந்த இறுக்கமும் மௌனப் பார்வையும் வீரப்பன் இருந்தபோது அர்ச்சனாவிடம் இருந்ததில்லை.. அப்படி இருந்திருந்தால் அவள் எப்படிப் பிழைக்கப் போகிறாளோ என்ற கவலையில் ஆழ்ந்து அவர் மருகியிருக்க மாட்டார்.. அவர் போன பின்புதான் அர்ச்சனா இறுகிப் போனாள்.. தாயும், தந்தையும் அற்ற வாழ்வு இருண்டதொரு கானகமாக காட்சியளித்து அவளை மருட்டியது..

வீரப்பன் இருந்தபோது லீலாவதியிடம் காட்டிய நெருக்கத்தை அவர் போன பின்பு அர்ச்சனா காட்டவில்லை உன்னையும் உன் பிள்ளையையும் பார்த்துக் கொள்ள நானிருக்கிறேன் என்று சொன்னவள் போகப் போக எதையும் சொல்லாமல் இறுகிப் போனாள்.

மகள் என்ற பாசத்தை லீலாவதி காண்பித்ததில்லை.. அக்கா என்ற பாசம் வினய்யிடமும் இருந்ததில்லை.. உன் அப்பன் என்னை இழுத்துக்கொண்டு வந்து விட்டான்.. அதனால் என்னையும் என் பிள்ளையையும் காலம் முழுவதும் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு உனக்கு இருக்கிறது என்பதைப் போன்ற வசனங்களை அவ்வபோது அள்ளி விடுவாள் லீலாவதி.. வினய்யோ அந்த வீட்டின் உரிமையாளன் அவன்தான் என்பதைப் போலவும்.. அர்ச்சனா அந்த வீட்டில் அகதி என்பதைப் போலவும் திமிராகப் பார்த்து வைப்பான்..

எக்கேடோ கெட்டுத் தொலைக்கட்டும் என்று எதையும் மனதில் போட்டுக் கொள்ளாமல் லீலாவதிக்கு உழைத்துக் கொட்டிக் கொண்டிருந்தாள் அர்ச்சனா.. அப்படியே காலம் கழிந்திருந்தால் இப்படி அர்ச்சனா பனி விழும் இரவில் கொட்டும் மழையில் கொடைக்கானலில் உள்ள தோழியின் வீட்டுக்கு வந்து அவளில்லாத சூழலில் அனாதையாக நடு ரோட்டில் நின்றிருக்க மாட்டாள்..

"அர்ச்சனாக் கண்ணு.." என்று குழைவான குரலில் லீலாவதி அனர்த்தத்தை ஆரம்பித்து வைத்தாள்..

அவள் 'கண்ணு' என்று அழைத்தாலே ஏதோ ஒரு வில்லங்கத்தை விலை கொடுத்து அழைக்கப் போகிறாள்

என்று அர்த்தம்.. அதனால் ஒன்றும் அர்ச்சனா உஷாராகி விடவில்லை.. லீலாவதி ஒன்றை நினைத்து விட்டால் அதிலிருந்து தப்பிப்பது வெகு கடினம்.. அர்ச்சனா உஷாராவதினால் மட்டும் எந்தவொரு ஆணியையும் பிடுங்கி விட இயலாது.. அதனால்தான் வீரப்பன் மகளைக் காப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்து வைத்து விட்டுப் போய்ச் சேர்ந்தார்..

"என்ன சித்தி..?"

"நம்ம வினய் ரெண்டு நாளாச் சாப்பிடலை கண்ணு.. அழுதுக்கிட்டே இருக்கான்.."

'இல்லையே.. நேத்துக்கூட இவன் புரோட்டா தின்றுக்கிட்டு இருந்தானே.. என்னைக் கண்டதும் என்னவோ அவன் புரோட்டாவை நான் பிடுங்கித் தின்று விடுவேன் என்பதைப் போலத் தட்டை முதுகுக்குப் பின்னால ஒளித்து வைத்துக்கிட்டானே..'

"என்ன அர்ச்சனா.. பேசாமல் இருக்கிற..?"

"நீங்க சொல்கிறதை யோசிச்சுக்கிட்டு இருக்கேன்.."

"எதுக்காக அழுகிறான்னுதானே..?"

"ம்ம்ம்.."

"இதுதான் கூடப் பொறந்த பொறப்புங்கிறது.."

'இவன் என் கூடப் பிறந்தவனா..?'

அர்ச்சனாவிற்குக் கேட்கச் சகிக்கவில்லை.. வினய் எந்த மனிதனின் ஜாடையில் இருக்கிறானோ அந்த மனிதனை அர்ச்சனா அறிவாள்.. அவனும் வீரப்பனுடன் பணி புரிந்தவன்தான்.. வீரப்பன் உயிரோடு இருந்தவரை அந்தப் பக்கம் எட்டிப் பார்க்காமல் தலை மறைவாய் எங்கோ ஓடி விட்டான்.. வெளி மாநிலத்துக்குப் போய் விட்டான் என்று பேசிக் கொண்டார்கள்.. அந்த ஊரில் இருந்தால் லீலாவதி அவன் தலையில் விழுந்து விடுவாள் என்று கெட்டிக்காரத்தனமாக ஒதுங்கிக் கொண்டவன் இப்போது வீரப்பனின் இரண்டாவது மனைவி என்ற பெயரில்

வினய்யை வீரப்பனின் மகன் என சொல்லிக் கொண்டு வீரப்பனின் வீட்டில் லீலவாதி செட்டில் ஆகி விட்ட நிலையில் திரும்பி வந்திருக்கிறான்.. அடிக்கடி வீட்டுக்கு வந்து போகிறான்.. வினய்யை மடியில் தூக்கி வைத்துக் கொண்டு மணிக்கணக்கில் கொஞ்சுகிறான்..

'திடிர்ன்னு எப்படி முளைச்சான்..?'

அவன் லீலாவதியுடன் போன் தொடர்பில் இருந்திருக்க வேண்டும் என்று அக்கம் பக்கத்தினர் சொன்னார்கள்.. லீலாவதி வீரப்பனின் இரண்டாவது மனைவிதான் என்ற எண்ணம் ஊர் உலகத்தின் மனதில் அழுத்தமாகப் பதிந்து அவள் அந்த வீட்டில் உரிமையுள்ளவளாக கால் ஊன்றிய பிறகு அவனை மீண்டும் வரவழைத்திருக்கிறாள் என்றார்கள்..

'எந்தக் கழுதை எப்படிப் போனால் எனக்கென்ன..?'

அர்ச்சனா அருவெறுப்புடன் பேசாமல் இருந்து விடுவாள்.. அவள் பேசி என்ன ஆகப் போகிறது என்றாலும், அன்னியன் அதிலும் கெட்டவன் ஒருவன் அவளது வீட்டிற்கு வந்து போவதில் அவளது மனம் நடுங்கத்தான் செய்தது..

"இவர் உன் அப்பாவின் நண்பர் அர்ச்சனாக் கண்ணு.. நண்பரின் மகனைத் தன்னோட மகனா நினைச்சுக் கொஞ்சறாரு.. பாவம்.. வினய்யும் அப்பா இல்லாத பிள்ளையாச்சே.. இவரைப் பார்த்தா அவனுக்கு அப்பாவைப் பார்த்ததைப் போல இருக்காம்.. ஒட்டிக்கிட்டான்.."

லீலாவதி சொன்ன போது அவளுக்கு பற்றிக் கொண்டு வந்தது.. அந்த மனிதன் அர்ச்சனாவைப் பார்த்த பார்வை மகளைப் பார்க்கும் பார்வையாக இல்லை.. உடல் கூசிப் போன அர்ச்சனா மாடிக்கு விரைந்து விட்டாள்..

அந்த வினய் அர்ச்சனாவுடன் பிறந்தவனாம்..

"என்னன்னு சொல்லுங்க.." எரிச்சலானாள் அர்ச்சனா.

"வினய்யோட படித்த பசங்களில ஒருத்தன் நீ குடியிருக்கிற வீடு உனக்குச் சொந்தமானதில்லன்னு மத்த பசங்க முன்னாடி சொல்லிட்டானாம்.. உன் அக்கா வீட்டில நீ குடியிருக்கிற.. நாளைக்கே கல்யாணமானா உன் அக்கா புருசன் உன்னை வீட்டை விட்டுத் துரத்தி விடுவான்னு கெக்கலி கொட்டிச் சிரிச்சானாம்.. பாவம் புள்ள.. அப்ப அழுக ஆரம்பிச்சவன்தான்.. இன்னும் நிப்பாட்டலை.."

வீட்டின் மீது லீலாவதி குறி வைத்து விட்டாள் என்பதைப் புரிந்து கொண்டாள் அர்ச்சனா..

'பிரளயம் வெடிக்கப் போகுது..'

அவளுக்குப் பயமாக இருந்தது.. ஊரின் நடு மையத்திலிருக்கும் அந்த வீடு எத்தனை லட்சங்கள் பெறும் என்பது அர்ச்சனாவை விட லீலாவதிக்கு நன்றாகவே தெரியும்.. அதை விட்டுக் கொடுப்பாளா..?

"நான்தான் கல்யாணம் பண்ணிக்கிறதாவே இல்லயே.." அர்ச்சனா நழுவ முயன்றாள்..

அப்போதும் அப்படிச் சொல்லாதே என்று லீலாவதி சொல்லவில்லை.. திருமணம் செய்து கொள்ளாமல் இருக்க முடியுமா..? அது சரியல்ல.. ஊரும் உலகமும்

என்ன பேசும் என்று கேட்கவில்லை.. அப்படியெல்லாம் மனிதத்தனம் உள்ளவர்கள்தான் கேட்பார்கள்.. லீலாவதி கேட்க மாட்டாள்..

"அது உனக்கும் எனக்கும் தெரியும் கண்ணு.. ஊர் உலகத்துக்குத் தெரியுமா..?" என்றுதான் கேட்டாள்..

'கடவுளே..' என்றிருந்தது அர்ச்சனாவுக்கு..

"இப்ப நான் என்னதான் செய்யனும்..?" தலையைப் பிடித்துக் கொண்டாள்..

'அப்படி வா வழிக்கு...' லீலாவதிக்கு கொண்டாட்டமாக இருந்தது..

இந்த ஒரு நாளுக்காக எத்தனை வருடங்களாக காத்திருக்கிறாள் என்று அவளுக்குத்தான் தெரியும்.. வீரப்பன் இருக்கும்வரை அவள் வீட்டைப் பற்றிப் பேச முடியாது.. இறந்தவுடன் பேச முடியாது.. ஓரிரண்டு வருடங்களாவது ஆக வேண்டும்.. அந்த தினம் இன்று வந்து விட்டது..

"ஒன்னுமேயில்ல கண்ணு.. இந்த வீட்ட என் பேருக்கு எழுதிக் கொடுத்துரு.. உனக்கும் வினய்க்கும் நான் அம்மாவாச்சே.. இந்த வீடு உனக்கும் வினய்க்கும் பொதுவான சொத்தா ஆகிரும்.. அப்ப எந்தப் பயலும் நாக்கு மேல பல்லப் போட்டு ஒரு வார்த்த சொல்ல முடியாதில்ல..?"

அதற்கென்ன சித்தி.. ஆகட்டும்.. என்ற வார்த்தைகளைத் தான் அர்ச்சனா சொல்வாள் என்ற எதிர்பார்ப்புடன் லீலாவதி காத்திருக்க.. அர்ச்சனாவோ..

"அது எப்படி முடியும் சித்தி..?" என்று கேட்டு வைத்தாள்..

"ஏன் முடியாது..?" பத்ரகாளியானாள் லீலாவதி..

"இந்த வீட்டு மேல லோன் இருக்கு.. பத்திரம் பேங்கில இருக்கு.. லோனைக் கட்டாம இந்த வீட்டை யார் பெயருக்கும் நான் எழுதிக் கொடுக்க முடியாது சித்தி.."

அர்ச்சனா சொல்லி விட்டாள்.. இப்படி நடந்திருக்கும் என்று நினைத்துப் பார்த்திராத லீலாவதி ஸ்தம்பித்து நின்று விட்டாள்..

## 11

"என்ன..?"

"ஆமாம் சித்தி.. இந்த வீட்டு மேல எழுபது லட்சத்துக்கு மேல லோன் வாங்கியிருக்கோம்.. இப்ப அது வட்டியும் முதலுமாச் சேர்ந்து ஒரு கோடியைக் கூடத் தாண்டலாம்.."

லீலாவதியின் முகம் பார்க்காமல் சொன்னாள் அர்ச்சனா.. இந்தச் செய்தி லீலாவதிக்கு எப்பேற்பட்ட அதிர்ச்சியைத் தரக்கூடும் என்பதை அவள் அறிந்திருந்தாள்.. ஓர்வகையில் இந்த நிகழ்வு அவளுக்குத் திருப்தியைத் தந்தது.. எவனோ ஒரு அருவெறுக்கத்தக்க மனிதனை வீட்டிலே சேர்த்துக் கொண்டு அர்ச்சனாவிற்கு முள்ளின் மீது நிற்பதைப் போன்ற சங்கடத்தைத் தரும் லீலாவதியை ஏதாவது ஓர்வகையில் தாக்க வேண்டும் என்ற அர்ச்சனாவின் நீண்டநாள் மன உளைச்சல் அன்று நிறைவேறி விட்டது..

"ஒரு கோடியா..? இந்த வீட்டை வித்தாக் கூட அவ்வளவு தேறாதே.." இடிந்து போனாள் லீலாவதி..

"உண்மைதான் சித்தி.. வீடு ஜப்தியானாலும் ஆகி விடலாம்.. நாம் எதற்கும் தயாராக இருந்துக்கனும்.." இன்னும் கொஞ்சம் புளியைக் கரைத்து ஊற்றினாள் அர்ச்சனா..

"எதற்கும் தயாரா இருந்துக்கனும்னா..?" லீலாவதியின் சூனியக்காரக் கண்கள் இடுங்கின..

"அதாவது சித்தி.. எந்த நேரமும் எதுவும் நடக்கலாம்.. நாம வீட்டை விட்டு வெளியேறி வாடகை வீட்டில் குடியேற வேண்டியிருக்கலாம்.." அர்ச்சனா அடுக்கினாள்..

"வாடகை வீட்டிலா..? சொந்த வீட்டில் குடியிருந்துட்டு எப்படி வாடகை வீட்டில் இருக்கிறது..?" லீலாவதியின் குரூர முகம் அஷ்டகோணலானது..

'நீ வாடகை வீட்டில் இருந்ததே இல்லை பாரு.. அதுக்குக்கூட வழியில்லாம என் அப்பாவை வலை போட்டு பிடித்த.. அதெல்லாம் மறந்து விட்டு இப்ப இந்தக் கேள்வியைக் கேட்கறியா..?'

மௌனமாக மனதுக்குள் பொருமினாள் அர்ச்சனா.. பல தருணங்களில் மனதில் நினைப்பதை பேச முடியாமல் மௌனம் காக்க வேண்டியிருக்கிறது.. இதுகூட அக்கினிக்குஞ்சை அடைகாக்கும் செயல்தான்.. சிறு துளி வெளிப்பட்டாலும் எதிராளியைச் சுட்டுப் பொசுக்கி விடும்..

அதைச் செய்ய இயலாமல் நம் மனதில் அக்கினியை ஏற்க வேண்டும்..

வாழ்க்கை என்பது துரோகங்களை அடையாளம் காட்டுவது.. அதன் ஒவ்வொரு திருப்பத்திலும் நமக்குப் பூங்கொத்து காத்திருக்கிறதோ இல்லையோ.. துரோகம் காத்திருக்கும்..

இது வாழ்க்கைக்கான போராட்டம்.. வாழ்வதற்காக எதையும் செய்பவர்கள் கைகளில் நாம் மாட்டி விட்டால் நம்மை மூச்சுத்திணற பாதாளத்தில் அழுத்தி விட்டு நம் மீது ஏறித் தாவத் தயங்க மாட்டார்கள்.. நியதிகள் நிலையானவையல்ல.. வாழ்வதற்கான போராட்டத்தில் நியதிகள் சிதைக்கப்படுவதும் நீதிகள் மறுக்கப்படுவதும் வாடிக்கையாகி விட்டது.. சுயநலம் என்பது தர்ம நியாயங்களைப் பார்க்காது.. தான் வாழ எதையும் செய்யும்.. எவரையும் கொல்லும்..

லீலாவதி அப்பேற்பட்ட சுயநலக்காரி.. சாகசக்காரி.. சூனியக்காரி.. கருணையின்றி வீரப்பனின் மீது பழி போட்டுத் தன் வயிற்றில் வளர்ந்த கரு அவருடையதுதான் என்று சாதித்து அவரது வீடு புகுந்தவள்.. மனக் கவலையில் அவரை மாள வைத்து அவர் பெற்ற மகளைத் தனக்கும் தன் மகனுக்கும் உழைத்துப் போட வைத்தவள்.. அதை அர்ச்சனாவின் கடமையென்று அவள் மனதில் உருவேற்றியவள்..

அவளைப் பொறுத்தவரை அர்ச்சனாவுக்கென்று எதுவும் இல்லை.. அவளது நகைகளை லீலாவதி கைப்பற்றி அடகு வைத்து விட்டாள்.. இனி அவள் பெயரில் இருக்கும் வீட்டைத் தன் பெயருக்கு மாற்றி எழுதி வாங்கிக் கொள்வது மட்டும்தான் பாக்கி.. அதை உடனடியாகச் செய்யாமல் வீரப்பன் இறந்து ஓரிரண்டு வருடங்கள் கழித்து வாங்கிக் கொள்ளலாம் என்பது அவளது எண்ணமாக இருந்தது.. அதன் பின்னால் அர்ச்சனா லீலாவதியுடன் இருந்தாலும்.. இல்லாவிட்டாலும் லீலாவதி பிழைத்துக் கொள்வாள்..

"இந்தா பாரு லீலா.. இந்தக் குட்டிப் பாக்க படுஷோக்கா இருக்கா.. எனக்கே இவளத் தூக்கிட்டுப் போயி தாலி கட்டிடலாம் போல இருக்கு.." லீலாவதியின் காதலனும் வினய்யின் தகப்பனுமான பாண்டரங்கன் பல் இளித்த போது..

"அடி செருப்பாலே.." என்று சீறினாள் லீலாவதி..

"இதப் பாருடா.. மகள்ன்னு வாய் வார்த்தைக்கு சொல்லிக்கிட்டு இருக்கன்னு பாத்தா நிஜமாவே நீ அந்தக் குட்டிய உன் மக மாதிரி நினைக்கிற போல.. ஒரு பேச்சுக்கு சொல்ல வந்தா இப்படிக் கோபப் படற.." ஜகா வாங்கினான் பாண்டுரங்கன்..

"யாருக்கு யார் மகள்..? அவ எனக்கு மகளா..? அவளையும் என்னையும் பக்கத்தில பக்கத்தில நிற்க வைச்சா அவ அக்கா மாதிரியும் நான் தங்கச்சி மாதிரியும் தெரிவோமில்ல.. அம்புட்டு அழகா, இளமையா இருக்கிறவ நானு.. என்னப் பாத்தா அவளுக்கு அம்மா மாதிரி தெரியுதா உனக்கு..?"

"இதப் பாருடா.. அப்புறம் எதுக்கு அந்தச் சீறு சீறுனவ..? நான் என்னவோ ஏதோன்னு பயந்துட்டேன்.."

"ஏய்யா.. தளதளன்னு தக்காளிப்பழம் போல நான் உன் கண்ணுக்கு முன்னால அலைஞ்சேன்.. உன் புள்ளயையும் வயித்தில வாங்கிக்கிட்டேன்.. என்னைத் தூக்கிட்டுப் போக வேணாம்.. கூட்டிக்கிட்டுப் போயாவது தாலி கட்டனும்ங்கிற எண்ணமில்லாம

ஓடி ஒளிஞ்சுக்கிட்டவன் நீ.. இப்ப இவளப் பாத்து தூக்கிக்கிட்டுப் போயி தாலி கட்டனும்னு என்கிட்டயே சொல்ற இல்ல.."

"ஹி..ஹி.. சும்மா ஒரு இதுல சொன்னது லீலா.."

"நீ எதுல சொன்னயோ.. நீதான் அப்பன்னு வினய்க்குச் சொல்லிட்டேன்.. மெல்ல விதவைக்கு மறுவாழ்வு கொடுக்கறேன்னு பேரை வாங்கிக்கிட்டு என் கழுத்தில

தாலியைக் கட்டப் பாரு.. உனக்கு என்ன விட்டாத் தோதா எவளும் எம்புட மாட்டா.."

"ஏனாம்..?"

"யோவ்.. இன்னைக்கு நிலைமைக்கு எழுபது பவுன கையில வைச்சிருக்கேன்.. இந்த அர்ச்சனாவோட அம்மாகாரி நகைகள பேங்கில அடகு வைச்சு அந்தப் பணத்தில என் பேரில வீட்டடி மனையை வாங்கிப் போட்டேனா.. அப்ப அது பத்து லட்சம்.. இன்னைக்கு ஐம்பது லட்சம்.. இந்த லீலாவதிய ஒன்னும் ஏப்ப சாப்பன்னு நினைச்சிராதே.."

'ஆ' வென வாய் பிளந்து விட்டான் பாண்டுரங்கன்.. லீலாவதியே சொன்னதைப் போல அவனது நிலைமைக்கு லீலாவதியிடம் இருக்கும் வசதி ஏணி வைத்தாலும் எட்டாதுதான்..

"அந்தம்மாவோட நகைகளைத்தான் அடகு வைச்சுட்டதாச் சொல்றியே லீலா.. அப்புறம் எப்படி உன் கையில எழுபது பவுன் இருக்குன்னு சொல்ற..?"

"அறுபது பவுன் நகையை அடகு வைச்சேனில்ல.. அதைக் கொஞ்சம் கொஞ்சமா பணம் கட்டி மீட்டாச்சுய்யா.. அதுக்கப்புறம் பத்து பவுனைச் சேர்த்து எழுபது பவுனா ஆக்கியாச்சு.."

"எப்புடி புள்ள..?"

"அது அப்படித்தான்.. இந்த அர்ச்சனாக் கழுத வாங்குற சம்பளத்த அப்படியே கையில கொண்டு வந்து கொடுத்திருதா.. இரண்டு பேருக்கு மட்டும் ஆக்கிச் சாப்பிடறதில என்ன செலவு வந்துறப் போகுது..?"

"இரண்டு பேரா.. அர்ச்சனாவோட சேர்த்து மூணு பேரில்லையா..?"

"அதுக்கு ரசம் சோறுதான்.. எப்பவும்.."

"என்ன லீலா இப்படிச் சொல்ற..?"

"ஆமாய்யா.. இன்ஸ்ட்டால்மெண்ட்டில சாமான் வாங்கிப் போட்டப்ப செலவைக் குறைச்சுத் தவணை கட்டனும்னு ரசம் சோத்தைப் போட ஆரம்பிச்சேன்.. அப்ப இருந்து மாறவே இல்ல.. அந்தக் காசு மிச்சமாச்சு.."

"ஏன் புள்ள.. பாவம்.. சம்பாதிக்கிற புள்ள வயித்தில அடிக்கறியே.."

"என்னய்யா.. பாசம் பொங்கி வழியுது..?"

"அதெல்லாம் இல்ல புள்ள.."

"இருக்கக் கூடாது.. இருந்தா இந்த லீலாவதியோட வேற முகத்தப் பார்ப்ப.."

"ம்க்கும்.. இந்த முகத்தப் பாக்கவே சகிக்கல.."

"என்னய்யா முணுமுணுக்கிற..?"

"ஹி.. ஹி.. உன் பேச்சை மீறுவேனான்னு சொன்னேன் லீலா.."

"அஃது.. அப்படியே செல்லிப்பழகு.. மாசத்துக்கு பதினைந்தாயிரம் மிச்சமாகும்.. அத அப்படியே ஐம்பது மாதத் தவணையில பத்து லட்சரூபா சேர்ற சீட்டுப்பணத்தில கட்டிக்கிட்டு வந்தேன்.. கழிவு போக மாசத்துக்கு பதினைஞ்சாயிரத்துக்குள்ளதான் வரும்.. இவ பணத்த வைச்சே இவளோட நகைகள மீட்டுக் கையில வைச்சுக்கிட்டேனில்ல.."

"எல்லாம் சரிதான் புள்ள.. எனக்கே இவளக் கல்யாணம் கட்டிக்கிட்டா என்னன்னு ஆசையா இருக்கே.. இவ கூட வேலை பார்க்கிற பயலுகளில எவனுக்காச்சும் அந்த ஆசை வராமலா இருக்கும்..?"

"என்னய்யா சொல்ற..?"

"காலாகாலத்தில இந்த வீட்ட உன் பேருக்கு எழுதி வாங்கிருன்னு சொல்றேன்.. இல்லேன்னா இந்தக் குட்டி எவன் கூடயாவது ஓடிப் போயிருவா.. இவ கூட இந்த வீடும் சேர்ந்து ஓடிப் போகும்.. பார்த்துக்க.."

'ஆமாமில்ல' என்று தோன்றி விட்டது லீலாவதிக்கு.. பொறுத்தார் பூமி ஆள்வார்தான்.. ஆனால் அந்தப் பொறுமைக்கும் ஒர் அளவு இருக்க வேண்டுமல்லவா..? காத்திருப்பவள் வீட்டை நாளை வருபவன் அடித்துக் கொண்டு ஓடிவிட்டால் என்ன செய்வது..? லீலாவதி ஒன்றும் பொறுமை சிகாமணி அல்லவே.. அவள் இத்தனை நாள் பொறுமையாய் இருந்ததே அதிசயம்..

லீலாவதி பொறுத்தது போதும் என்று பொங்கி யெழுந்தாள்.. வினய் அழுகிறான் என்று சொல்லி வீட்டைத் தன் பெயருக்கு எழுதிக் கொடுத்து விடும்படிக் கேட்டாள்.. அர்ச்சனா எழுதிக் கொடுத்து விடுவாள் என்றுதான் நம்பினாள்.. அர்ச்சனாவை அவள் அப்படித்தானே ஆட்டுவித்துக் கொண்டிருந்தாள்..? லீலாவதி எதைக் கேட்டாலும் எதிர் கேள்வி கேட்காமல் அர்ச்சனா அதைச் செய்தாக வேண்டும்.. நொடிப் பொழுது யோசிக்கக் கூடாது..

அர்ச்சனாவும் நொடிப்பொழுதும் யோசிக்காமல் வீட்டின்மீது லோன் இருப்பதைச் சொல்லி விட்டாள்.. லீலாவதி பேயறைந்ததைப் போல நின்று விட்டாள்..

லீலாவதி ஒன்றை மறந்து விட்டாள்.. அவள் வீரப்பனுக்கு இரண்டாவது மனைவி, வினய் வீரப்பனின் மகன் என்ற உறவு இருந்ததினால்தான் அர்ச்சனா லீலாவதிக்கு அடிமைப்பட்டிருந்தாள்.. வீரப்பன் சுமக்க வேண்டிய சுமை, அவர் நிறைவேற்ற வேண்டிய குடும்பப் பொறுப்பு என்பதினால் மட்டுமே இளமைப் பருவத்துக்குரிய கனவுகளைத் துறந்து சன்யாசினியைப் போலத் தன்னை ஆக்கிக் கொண்டு லீலாவதிக்கு சம்பாதித்துப் போட்டாள்.. சும்மா ஒன்றும் அர்ச்சனா 'அவள் ஒரு தொடர்கதை..' ஆகவில்லை.. இவை அத்தனையும் பாண்டுரங்கனின் வரவினால் அழிந்து போய் விட்டன.. அவளது ஓட்டத்திற்கான காரணத்தை பாண்டுரங்கன் இல்லாமல் செய்து விட்டான்.. வினய் பாண்டுரங்கனின் மகன் என்பதை லீலாவதி வினய்யிடம் சொல்லிக் கொண்டிருந்ததை அர்ச்சனா கேட்டு விட்டாள்.. அன்று இரவு

அவள் தூக்கத்தைத் தொலைத்ததை லீலாவதி அறிய மாட்டாள்..

அர்ச்சனா இரவு முழுவதும் பொட்டுத் தூக்கமில்லாமல் அழுதாள்.. எவனோ ஒருவனின் பிள்ளையை வயிற்றில் சுமந்து கொண்டு வீரப்பனின் மீது பழியைப் போட்டு அதன் மூலமாக அபிராமியின் நிம்மதியைக் குலைத்து அவளை நோய்ப் படுக்கையில் லீலாவதி தள்ளி விட்ட கொடுஞ்செயலை நினைத்துப் பார்த்தாள்.. கணவருக்கும் லீலாவதிக்கும் தொடர்பிருக்கிறது என்ற நினைவில் தன்னுயிரைத் தானே குறைத்துக் கொண்ட அபிராமி போய்ச் சேர்ந்து விட்டாள்.. குணம் கெட்டவளை இரண்டாம் தாரமென்ற பெயரில் வீட்டில் சேர்த்து விட்டோமே, அவளால் மகளுக்கு என்ன ஆபத்து வரப் போகிறதோ என்ற கவலையில் வீரப்பனும் போய்ச் சேர்ந்து விட்டார்.. அவர்கள் இருவரையும் மேலுலகம் அனுப்பி வைத்து விட்ட கையோடு தன் ஆசைக் காதலனை வீட்டுக்கு வரவழைத்து அவனுடன் சேர்ந்து விட்டாள் லீலாவதி.. அந்த வீடு வீரப்பனும், அபிராமியும் மகளுக்காக என்று பார்த்துப் பார்த்துக் கட்டிய வீடு.. கோவிலுக்கு நிகரானது.. கோவிலில் இருந்த தெய்வங்களை அனுப்பிவிட்டு லீலாவதி அதை உடைமையாக்கிக் கொள்ள நினைப்பதா..?

வீடு மூழ்கும் நிலையில் இருக்கிறது என்றானதும் லீலாவதியும் பாண்டுரங்கனும் சேர்ந்து கூடிக்கூடி ரகசியம் பேசினார்கள்.. என்ன பேசிக் கொள்கிறார்கள் என்று அர்ச்சனாவுக்குத் தெரியவில்லை.. மழை மேகம் சூழ்ந்த சனிக்கிழமை மதியம் வேலை முடிந்து அவள் வீட்டுக்கு வந்தாள்.. வங்கிகளில் சனிக்கிழமை மதியம் வரைதான் வேலை.. பசியுடன் வந்தவளுக்கு எப்போதும் போல ரசமும் சோறும் காத்திருந்தன.. சாப்பிட மனமில்லாமல் அவளுடைய அறைக்குப் போய் விட்டாள்.. லேசாக கண் சொறுக வாரத்தில் இரண்டு நாள்கள் மட்டுமே அரிதாக கிடைக்கும் மதிய நேர உறக்கத்தில் ஆழ்ந்தவள் அருகில் யாரோ இருப்பதைப் போலத் தோன்றிய உள்ளுணர்வின் உந்துதலில் சட்டென கண் விழித்தாள்.. அவளது முகத்துக்கு வெகு அருகாமையில் இருந்தது பாண்டு ரங்கனின் முகம்..

பதறி கட்டிலை விட்டு எழுந்து ஓடிக் கதவைத் திறந்து வெளியே பாய்ந்தவள்..

"சித்தி.." என்று அலறினாள்..

மூடப்பட்டிருந்த அறைக்குள் பாண்டுரங்கன் எப்படி வந்தான்..?

"நான்தான் அவரை உள்ளே இருக்கச் சொன்னேன்.." அஞ்சாமல் சொன்னாள் லீலாவதி..

"என்னது..?"

"ஆமாண்டி.. இந்த வீடு இல்லேன்னு ஆகிப் போச்சு.. நீயும் எவன் கூடவாவது ஓடிப் போயிட்டா நானும் வினய்யும் புவ்வாவுக்கு என்ன பண்ணுவோம்..?"

"அதுக்கு..?"

"நீ பாண்டு ரங்கனைக் கல்யாணம் பண்ணிக்க.. பேருக்குத்தான் கல்யாணம்.. இவர்கூட வாழச் சொல்ல மாட்டேன்.."

வாழவிட மாட்டேன் என்ற வன்மமும் உறுதியும் லீலாவதியின் குரலில் தொனித்தன..

12

அர்ச்சனாவுக்குக் குமட்டிக் கொண்டு வந்தது.. இப்படியும் மனிதர்கள் இருப்பார்களா..?

"ச்ச்சீ.." என்றாள் அருவெறுப்பாக..

"நீ இப்படி மாய்மாலம் பண்ணுவேன்னுதான் இன்னைக்கு ஒருநாள் மட்டும் உன்கூட இருக்கறேன்னு இவர் சொன்னார்.. அதுக்குப் பின்னாலே நீ இவருக்குக் கழுத்தை நீட்டித்தானே ஆகனும்..? இவரும் வீட்டோட மாப்பிள்ளையா 'நம்ம்..ம' கூடவே இருந்துக்குவாரு.. எல்லோரும் பிரியாம 'ஒன்ன்ன..னா..' இருந்துக்கலாம்.."

லீலாவதி பேசிய பேச்சைத் தாங்க முடியாமல் கையில் அகப்பட்டதை எடுத்து அவள் மீது வீசி விட்டாள் அர்ச்சனா.. அது டேபிள் விளக்காக இருந்ததில் லீலாவதியின் தலையில் பலமாக அடிபட்டு விட்டது.. ரத்தம் கொட்ட ஆரம்பிக்க அவள்..

"ஐயோ.." என்று தரையில் சரிந்தாள்..

"லீலா.." பாண்டுரங்கன் அவள் பக்கத்தில் ஓடினான்..

அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்ட அர்ச்சனா ஒரே பாய்ச்சலாய் ஓடி வாசலைத் தொட்டு விட்டாள்.. அவள் ஓடியதில் லீலாவதியை மறந்துவிட்ட பாண்டுரங்கன் அவளை 'அம்போ' எனத் தரையில் விட்டு விட்டு அர்ச்சனாவைப் பிடிக்க வாசலுக்கு ஓடினான்..

'திடும்.. திடும்' என்ற காலடி சப்தத்தில் திரும்பிப் பார்த்த அர்ச்சனா பாண்டுரங்கனைக் கண்டதும் தெருவுக்குப் பாய்ந்தாள்.. காய்கறி வண்டியில் காய்களைப் பொறுக்கியபடி ஊர் புறணி, உலகப் புறணிகளைப் பேசிக் கொண்டிருந்த அக்கம் பக்க வீட்டுப் பெண்கள், தலைவிரி கோலமாக ஓடி வந்த அர்ச்சனாவையும் அவளைத்

துரத்திக் கொண்டு வந்த பாண்டுரங்கனையும் பார்த்ததும் அனைத்துக் கதைகளையும் மறந்து அர்ச்சனாவைத் தங்கள் பக்கமாக இழுத்துக் கொண்டார்கள்..

"என்னம்மா ஆச்சு அர்ச்சனா..?"

"ஏன் இப்படி ஓடி வர்ற..?"

"இந்த ஆள் எதுக்காக உன்னைத் துரத்தறான்..?"

"தப்பா நடந்துக்கப் பார்க்கிறானா..? சொல்லும்மா.. என் வீட்டுக்காரர்கிட்டச் சொல்லிப் பல்லு பதினாறையும் பேர்க்கச் சொல்றேன்.."

ஆளுக்கு ஒன்றாக குரல்கள் எழும்ப பாண்டுரங்கன் பயந்து நின்றான்.. ஆக்ரோசமாக ரத்தம் கொட்டும் தலையுடன் வீட்டை விட்டு வெளியில் வந்த லீலாவதி..

"ஏண்டா.. அங்கே ஒருத்தி தலை உடைந்து ரத்தம் கொட்டிக் கிடக்கிறேன்.. நீ அதை என்ன ஏதுன்னு பாக்காம இவ பின்னால ஓடி வர்றயா..? இருக்குடா உனக்கு.." என்று பாண்டு ரங்கனிடம் தாழ்ந்த குரலில் சீறிவிட்டு, அக்கம் பக்கத்தினரிடம்..

"தப்பா நடந்துக்கப் பார்த்தது இவர் மட்டுமில்லை.. இந்த அர்ச்சனாவும்தான்.. குடும்ப நண்பரா வீட்டுக்கு வந்து போயிக்கிட்டு இருந்த மனுசனோட தொடர்பு வைச்சிருந்திருக்கா.. இன்னைக்கு ரெண்டு பேரையும் நான் ஒன்னாப் பாத்துட்டேன்.. திட்டினேன்.. அதனால வெளிய ஓடி வந்திட்டாங்க.. விட்டுத் தொலைங்க.. என்னத்தச் செய்கிறது..? தாய், தகப்பனில்லாத பொண்ணாப் போயிட்டா.. இவளோட அப்பாவுக்கு நான் இரண்டாம் தாரமா வாக்கப் பட்டுத் தொலைச்சிருக்கேனே.. ஊர் சிரிக்கிறதுக்கு முன்னாடி கல்யாணத்தைப் பண்ணித் தொலைச்சிரலாம்.. ஏய்.. வாடி வீட்டுக்குள்ள.. நாளைக்கே கோவிலில வைத்து தாலியைக் கட்டச் சொல்றேன்.." என்று உரக்கப் பேசினாள்..

"ஐயோ.." அர்ச்சனா கண்களை விரித்து வாயைப் பொத்திய விதமே நடந்தது என்ன என்பதைச் சொல்லாமல் சொல்லியது..

அதற்குள் அக்கம் பக்கத்து வீடுகளில் இருந்த ஆண்களும் தெருவுக்கு வந்து கூடி விட்டார்கள்.. அவர்களில் ஒருவர் விரலை உயர்த்தி..

"நிறுத்தும்மா.." என்று லீலாவதியிடம் சப்தம் போட்டார்..

"எதை நிறுத்தச் சொல்றீங்க..? கல்யாணத்தையா..?"

"அதையும் சேர்த்துத்தான் சொல்கிறேன்.. வாயிருந்தா நீ எதை வேண்டும்ன்னாலும் பேசிருவியா..? அர்ச்சனாவைப் பிறந்ததிலிருந்து பார்த்துக்கிட்டுத்தான் இருக்கோம்.. அபிராமி வயிற்றில் பிறந்த மகள் இவ.. நீ சொல்கிற இழிசெயலை ஓர்நாளும் செய்திருக்க மாட்டா.."

சொன்னவரின் உதாசீனப் பார்வை உன் வயிற்றில் பிறந்த மகளாக இருந்தால் அதைத் தயங்காமல் செய்திருப்பாள் என்று சொல்லாமல் சொல்லியது.. அதில் லீலாவதி வெகுண்டாள்.. சண்டைக்குப் போனாள்..

"கண்ணாலே கண்ட பின்னாலும் இப்படிச் சொல்வீங்களா..?"

"கண்ணாலே எதைக் கண்டோம்..? எங்க அர்ச்சனா பயந்து ஓடி வந்ததைக் கண்டோம்.. இந்த ஆள் துரத்திக்கிட்டு வந்ததைக் கண்டோம்.."

'எங்க அர்ச்சனா..' என்ற உரிமையுணர்வு அந்தத் தெருவில் குடியிருந்த அத்தனை பேரின் முகத்திலும் ஆண், பெண் பேதமின்றி பெரியவர்கள், சிறியவர்கள் என்ற பாகுபாடு இன்றிப் படிந்திருப்பதைக் கண்ட லீலாவதியின் சினம் கூடியது..

"நான் பார்த்துட்டேன்ங்கிற பயத்தில இவ ஓடி வந்தா.."

"நீ பார்த்தா எதுக்குப் பயப்படனும்..? நீயென்ன அபிராமியா..?"

நக்கலாக ஒருவர் கேட்க அதைவிட நக்கலாக அங்கிருந்தவர்கள் சிரித்தார்கள்..

"ஏம்மா.. நீயே முறையில்லாத வாழ்வை வீரப்பனுடன் வாழ்ந்தவ அதை நினைச்சே அந்த உத்தமி உயிரை விட்டா.. அந்த உத்தமி போய் சேர்ந்ததை வசதியா ஆக்கிக்கிட்டு வீரப்பன் தலையில விழுந்த.. அவரையும் அனுப்பி வைச்சுட்டு இந்த ஆள்கூட லூட்டியடிச்சுக்கிட்டு இருக்க.. உன்னை இந்தத் தெருவில குடியிருக்க விட்டதே தப்பு.. அர்ச்சனாவோட முகத்துக்காக பொறுமையாப் போனா நீ இந்த அப்பாவி பொண்ணுமேலேயே களங்கத்தை உண்டாக்கி இவனை இது தலையில கட்டப் பார்க்கறியா..?"

"அதானே.. கேட்கிறதுக்கு யாருமில்லன்னு நினைச்சியா..? இந்த தெருக்காரங்க இருக்கோம்மா.."

"வேதாச்சலம்.. இதுகூடல்லாம் பேசி நம்ம தரத்தை நாமே குறைச்சுக்கக் கூடாது.. நீ போலிஸீக்குப் போனைப் போடு.. இந்த நாய் அர்ச்சனாகிட்ட வம்பு பண்ணுச்சுன்னு நாமே கம்ப்ளெயிண்ட் குடுத்து உள்ளே தூக்கிப் போடலாம்.."

"அதைச் செய்யுங்க முதலில.. இவன் ஆளும் முகரையும்.. தெருவில வயசுப் பொண்ணுக நடக்கக்கூட முடியல.."

"வயசுப் பொண்ணுக மட்டுமா..? பாட்டிகளையும் இந்தப் பய விட்டு வைக்கறதில்ல.. கேவலமா பார்த்து வைக்கிறான்.."

"அடிடா அவனை.."

"நொறுக்கிக் கூடையில அள்ளிச் சாக்கடையில் கொட்டுங்கடா.."

தெருவே ஒன்றுகூடி அடிக்க வந்ததில் பாண்டுரங்கன் வீட்டுக்குள் ஓடி ஒளிந்து கொண்டான்.. நிலைமை கைமீறி விட்டதைப் புரிந்து கொண்ட லீலாவதி..

"இனி இந்த வீட்டுக்குள்ள கால வைச்சேன்னா நடக்கறதே வேற.." என்று உறுமினாள்..

"யார் வீட்டுக்குள்ள யார் கால் வைக்கக் கூடாது..? இது அர்ச்சனாவைப் பெத்தவங்க கட்டின வீடு.." எதிர் வீட்டுப் பார்வதி சத்தம் போட்டாள்..

"நிறுத்தும்மா சும்மா.. இவ வீட்டுக்குள்ள வர்றதா இருந்தா பாண்டுரங்கனுக்குக் கழுத்தை நீட்டியாகனும்.. இல்லேன்னா வீட்டை விட்டு வெளியே போயிடனும்.. இந்த லீலாவதியை யாருன்னு நினைத்தா.." என்று ஆரம்பித்த லீலாவதி அடுத்த அரைமணி நேரத்துக்கு தெருவில் நின்று காடு காத்ததில் பெண்மணிகள் அனைவரும் காதைப் பொத்திக் கொண்டு மசக்கை வந்தவர்களைப் போல வாந்தி எடுத்தார்கள்..

இப்படிப்பட்ட மட்டக் கேவலமான வார்த்தைகளும் இருக்கக் கூடும் என்பதை அந்தத் தெருவிலிருந்த ஆண்கள் அன்றுதான் கேட்டறிந்தார்கள்..

"என்னய்யா இது.. இந்தப் பொம்பள இவ்வளவு அசிங்க அசிங்கமாப் பேசுது..? காதை டெட்டால் ஊத்திக் கழுவனும் போல.. நாறுது.."

"சாக்கடை..! இப்படித்தான் பேசும்.. சாக்கடையில இருந்து சந்தன மணமா வரும்..? நாற்றம்தான் வரும்.."

"இந்த வீரப்பன் மட்டும் உயிரோட இருந்திருந்தா உன்னாலதானய்யா இந்தப் பொம்பள இந்தத் தெருவுக்குள்ள வந்து தொலைச்சதுன்னு ஒருபிடி பிடிச்சிருப்பேன்.."

"அவரே அதைத் தாங்க மாட்டாமத்தான் உயிரை விட்டாரு.." பொறுக்க மாட்டாமல் ஒருவர் போலிஸீக்குப் போனைப் போடப் போக தடுத்த இன்னொருவர்..

"யோவ்.. போலிஸ் வந்தா அர்ச்சனாவையும் விசாரிக்கும்.. இந்த லீலாவதிக்கு எல்லாம் அத்துபடி.. அர்ச்சனா அப்படியா..?" என்று கிசுகிசுத்தார்..

"அதையும் யோசிக்கனுமில்ல..?" போன் செய்யப் போனவர் நிதானிக்க.. அதை அறியாத லீலாவதி அந்த மனிதர் போலிஸீக்க போன் செய்கிறார் என்று நினைத்து விட்டாள்..

"வரச் சொல்லு போலிஸை.. இன்னைக்கு ரெண்டில ஒன்னைப் பார்த்துடறேன்.." என்று அவருடன் சண்டைக்குக் கிளம்பி விட்டாள்..

அந்த மனிதருக்கு லீலாவதியின் நிழலைப் பார்த்தால் கூட அருவெறுப்பு வரும்.. அவள் நேரடியாக சண்டைக்கு வரவும் முகத்தைச் சுளித்தபடி அர்ச்சனாவைப் பார்த்து..

"எப்படிம்மா இந்தப் பொம்பளை இருக்கிற வீட்டில நீ இருக்கிற..?" என்று கேட்டு விட்டார்..

"இருக்கவே வேணாம்ய்யா.." லீலாவதி ஆங்காரமாக வீட்டுக்குள் சென்று அர்ச்சனாவின் பெட்டியைத் தூக்கி வீதியில் வீசி விட்டுக் கதவை அடைத்துக் கொண்டாள்..

வாயு வேகம், மனோவேகம் என்பார்கள்.. அதையும் தாண்டிய வேகம் கொண்டது லீலாவதியின் சதியும்

சாகசமும் நிரம்பிய சூட்சும புத்தியின் வேகம்..

எப்போது பாண்டரங்கனால் ஆபத்து வரப் போகிறது, அதை லீலாவதி உண்டாக்கி விட்டாள் என்பதை அர்ச்சனா அறிந்து கொண்டு விட்டாளோ, அதன் பின்னால் அவள் உயிரே போனாலும் லீலாவதியுடன் வசிக்க மாட்டாள் என்பதை லீலாவதி கணக்கிட்டு விட்டாள்..

இனி தலைகீழாக நின்றாலும் அர்ச்சனாவின் மனதில் லீலாவதி வீரப்பனின் இரண்டாவது மனைவி, வினய் வீரப்பனுக்குப் பிறந்தவன் என்ற எண்ணத்தை நிலை நிறுத்த முடியாது.. ஓர்முறை எதிர் வீட்டுப் பார்வதி அச்சனாவிடம்..

"ஏன் அர்ச்சனா.. உங்க வீட்டுக்கு ஒர் ஆள் வந்து போகிறானே.. அவனை வினய் அப்பான்னு கூப்பிடறானே.. அவனும் வினய்யும் அச்சு அசல் ஒரே ஜாடையில செஞ்சு வைச்ச சிலை போல இருக்கிறாங்களே.. கவனிச்சியா..?" என்று கேட்டதை லீலாவதி கேட்டு விட்டாள்..

அப்போது அர்ச்சனாவின் முகத்தில் வந்த வெறுப்பையும் கோபத்தையும் லீலாவதி மறக்கவில்லை.. அர்ச்சனாவிற்கு உண்மை தெரிந்து விட்டது என்பதை அவள் தெரிந்து கொண்டாலும் அதை வெளியில் காண்பித்துக் கொள்ளவில்லை.. அர்ச்சனாவே நேரடியாகக் கேட்டாலும் ஆமாண்டி, அதுக்கு என்ன இப்ப..? என்று கேட்கும் தெனாவெட்டும் திமிரும் கொண்டவள் லீலாவதி.. எதற்கும் அஞ்சாதவள்..

அர்ச்சனா அந்த வீட்டுக்குள் வர மாட்டாள் என்று ஆனபோதே அவளை அந்த வீட்டுக்குள் வர விடக் கூடாது என்ற முடிவை லீலாவதி எடுத்து விட்டாள்.. அவள் முந்திக் கொள்ள வேண்டும்.. அர்ச்சனா வீட்டை விட்டு வெளியேறியதாக இருக்கக் கூடாது.. லீலாவதி வீட்டை விட்டு துரத்தி விட்டதாக இருக்க வேண்டும்.. வீடு அர்ச்சனாவின் பெயரில் இருந்தால் என்ன..? வங்கிக் கடனில் மூழ்கினால்தான் என்ன..? வங்கி வந்து வீட்டைக் கைப்பற்றும்வரை லீலாவதி அந்த வீட்டை விட்டு

வெளியேற மாட்டாள்.. அர்ச்சனாவை அந்த வீட்டுக்குள் காலடி வைக்க விடவும் மாட்டாள்..

இதுபோல ஓர்நாள் வந்தால் என்ன செய்வது என்று லீலாவதி திட்டமிட்டு வைத்திருந்தாள்.. அவளுக்கு என்ன..? அவள் ஒன்றும் கூலி வேலை கிடைத்தாலும் போதும் என்று இருக்க இடமில்லாமல் நின்ற பழைய லீலாவதி இல்லையே.. நூறு பவுன் நகையும், வங்கியில் ரொக்கப் பணமும், சொந்தமாக வீட்டடி மனையும் வைத்திருக்கிற சாகச லீலாவதியாயிற்றே..! அவள் வாழும் வசதியான வாழ்க்கையைத் தொடரும் வழி அவளுக்குத் தெரியும்.. அன்று விலகி ஓடிய பாண்டுரங்கன் இன்று சேர்ந்து வாழச் சம்மதம் கொடுத்து விட்டான்.. என்ன ஒன்று.. அவனுக்குத் தாலி கட்டிய மனைவியென்ற அங்கீகாரம் லீலாவதிக்குக் கிடைக்காது.. அவன் வேறு ஒருத்தியைத் திருமணம் செய்து கொள்வதைச் சகித்துக் கொண்டு அவனுக்கு ஆசைநாயகியாக வாழ்ந்தாக வேண்டும்..

'அதனால் என்ன கெட்டுப் போச்சு..? வினய்க்கு வீரப்பனோட இனிசியல் கிடைச்சாச்சு.. எனக்கும் பணம் சொத்து, பத்து நகைன்னு கிடைச்சாச்சு.. ஆசைக்கு சேர்ந்து வாழ பாண்டு ரங்கனும் கிடைச்சாச்சு.. பாண்டுரங்கன் ஒன்றும் பசையில்லாத ஆள் இல்லையே.. வினய் அவனோட மகன்.. என்னையும் வினய்யையும் வசதியா வாழ வைப்பான்.. இந்த வீடு இல்லைன்னா என்ன..? நான் வாங்கிப் போட்டிருக்கிற வீட்டடி மனையில் பாதியை விற்று அந்தப் பணத்தை வைத்து பங்களாவே கட்டிக்குவேன்.. அது போகவும் மீதம் பணம் இருக்கும்.. அதை பேங்கில போட்டு வட்டியை வாங்கி வாழ்ந்துக்க மாட்டேனா..?'

லீலாவதி வாழ்ந்து விடுவாள்.. அர்ச்சனாவைத்தான் நிம்மதியாக வாழ விட மாட்டாள்.. இதைத் தெரிந்து வைத்திருந்ததினால்தான் வீரப்பன் மகளுக்காக வீட்டின் மேல் கடன் வாங்கி இன்னொரு வீட்டை வாங்கி வைத்து மகளின் சொத்தைக் காப்பாற்றி வைத்து விட்டார்..

13

"தெருக்காரங்க 'என் வீட்டுக்கு வா'ன்னு சொல்லிப் போட்டி போட்டுக்கிட்டுக் கூப்பிடத்தான் செய்தாங்க.. எனக்குத்தான் யார் வீட்டுக்கும் போக மனமில்லை.."

சோர்ந்த குரலில் துயரத்துடன் சொன்னாள் அர்ச்சனா.. கண்ணீர் நிரம்பிய விழிகளுடன் கசங்கிய மலரைப் போல இருந்தவளைப் பார்த்த சாவித்திரியின் மனம் வலித்தது..

'இந்த இளம் வயதில் இவளுக்கு இத்தனை இன்னல்களா..?'

இவளும் மூர்த்தியைப் போலதான் என்று நினைத்துக் கொண்ட சாவித்திரி பெருமூச்சு விட்டாள்.. அர்ச்சனா தாய், தந்தையற்ற அநாதை.. மூர்த்தி தாய், தந்தையிருந்தும் அநாதை..

"ஏம்மா.. எல்லோரும் உனக்குத் தெரிந்தவங்கதானே.. அவங்களே சொன்னதைப் போல நீ பிறந்ததிலிருந்து உன்னைத் தெரிந்தவங்க அவங்க.. அவங்களில ஒருத்தங்க வீட்டில தற்காலிகமாத் தங்கிக்கிட்டு லேடிஸ் ஹாஸ்டலில இடம் பார்த்துப் போயிருக்கலாமே.. அதை விட்டுட்டு அறியாத ஊருக்கு நைட் டயத்தில கிளம்பி வரலாமா..? மூர்த்தி கண்ணில பட்டதினால தப்பிச்ச.. இல்லைன்னா என்ன ஆகியிருக்கும்..? இந்த உலகத்தில நல்லவங்களை விட அதிகமா கெட்டவங்க வாழ்கிறாங்க அர்ச்சனா.."

"இதை என்னிடம் சொல்கிறீங்களா ஆண்ட்டி..? லீலாவதியைச் சித்தின்னு கூப்பிட்டு அவங்ககூட ஒரே வீட்டில இருக்க வேண்டிய கொடுமையை அனுபவிச்சவ நான்.. என்ன ஒன்னு.. எங்க அம்மா நல்லவங்களா இருந்ததினால நல்லவங்க மத்தியில பிறந்து வளர்கிற கொடுப்பினை எனக்குக் கிடைச்சது ஆண்ட்டி.. எங்க தெருக்காரங்க பாசமானவங்கதான்.. என்னைப் பத்திரமாப் பார்த்துக்குவாங்கதான்.. ஆனா ஆண்ட்டி.. அதே தெருவிலதான எனக்காக என்னோட அப்பாம்மா விட்டுட்டுப்

போன வீடும் இருக்கு..? அந்த வீட்டில லீலாவதி இருக்காளே.. அவ கண்ணெதிரிலே அதே தெருவில வேறு ஒரு வீட்டில அகதியைப் போல என்னால் தங்க முடியுமா..? அப்படி நானிருந்தா என் அம்மாவோட ஆத்மா சாந்தியடையுமா..?"

அர்ச்சனாவின் குமுறலில் மனம் நைந்தாள் சாவித்திரி.. உணர்ச்சிக் குவியலில் மூழ்கியவளாக உதடுகள் துடிக்க அழுத அர்ச்சனாவை இழுத்து மடியில் சாய்த்துக் கொண்டாள்.. அன்னையின் மடியாய் அவளது மடியை நினைத்து அடைக்கலம் புகுந்த அர்ச்சனாவின் முதுகு அழுகையில் குழுங்கியது.. சாவித்திரியின் மனம் கசிந்தது.. தாய்மைப் பெருக்குடன் அர்ச்சனாவின் முதுகைத் தட்டிக் கொடுத்தாள்..

"அடைக்கலம் கொடுக்கிற அன்பானவங்க வீட்டில நான் தங்க முடியாது ஆண்ட்டி.. எனக்குன்னு யாருமே இல்லைங்கிற உண்மை அப்போத்தான் எனக்குத் தெளிவாச்சு.. அம்மா வழி சொந்தம்ன்னோ அப்பா வழிச் சொந்தம்ன்னோ நான் அடைக்கலம் தேடிப் போக முடியாது.. அம்மா வழிச் சொந்தம் அப்பாவுக்கு லீலாவதியோட இருந்த தொடர்பினாலே அம்மா மனசொடிஞ்சு செத்துப் போயிட்டாங்கங்கிற கோபத்தில விலகிப் போயிட்டாங்க.. இப்ப நான் போனா அப்பா செய்த தப்பையே சொல்லிச் சொல்லிக் காட்டுவாங்க.. என்னால அதைத் தாங்கிக்க முடியாது.."

"உன் அப்பா செய்தது பெரிய தப்பு அர்ச்சனா.. உன் அம்மா வழிச் சொந்தங்களோட ஆத்திரத்தில நியாயம் இருக்குதானே..? அதைத் தப்புன்னு சொல்ல முடியுமா..?"

"அவங்க கோபம் தப்புன்னு நான் சொல்லலை ஆண்ட்டி.. என்னால தாங்கிக்க முடியலைன்னுதான் சொன்னேன்.. அம்மாவுக்கு அப்பா அநியாயம் செய்ததை நான் என்றைக்குமே நியாயப்படுத்த மாட்டேன்.. என் அம்மாவுக்கு அப்பா உண்மையா நடந்துக்கலை.. பட் எனக்கு நல்ல அப்பாவாத்தான் இருந்தார்.. அவரோட பாசத்தில குறையில்லை.."

"ம்ம்ம்.."

"அப்பா வழிச் சொந்தமெல்லாம் அப்பா செய்த அதே தவறைக் காரணம் காட்டி விலகி போயிட்டாங்க.. அவராலே அவங்களுக்குத் தலை குனிவுன்னு விலக்கி வைச்சிட்டாங்க.."

"செய்வாங்கதானே.. உன் அப்பா செய்த தப்பால அங்களுக்கும் கெட்ட பெயர்ன்னா கோபம் வராதா..?"

"நீங்க வேற ஆண்ட்டி.. அவங்களிலயும் பலர் அப்பா செய்த தப்பை செய்துக்கிட்டுத்தான் இருக்காங்க.. என்ன ஒன்னு.. அவங்க மாட்டிக்கலை.. அப்பா மாட்டிக்கிட்டார்.. இந்த உலகத்தில சந்தர்ப்பம் கிடைக்காத வரைக்கும்தான் யோக்கியர்களாக இருக்கிறாங்க.. இங்கே இருக்கிற அத்தனைபேரும் உத்தமர்ன்னா நினைக்கறிங்க..?"

சாவித்திரியிடம் அதிர்வு தெரிந்தது.. அவளது விழிகள் பிரதிபலித்த மனதின் வலியில் அர்ச்சனா குழம்பினாள்.. அவள் எதுவும் தவறாகச் சொல்லி விட்டாளோ..?

"ஆண்ட்டி..?"

"ஒன்றுமில்லைம்மா.. ஏதோ நினைவு.. சந்தர்ப்பம் கிடைத்தாலும் தவறு செய்யாமல் நேர்வழியில் நடக்கிற உத்தமர்கள் இங்கே குறைவுதான்ம்மா.. நம்ம மூர்த்தி தம்பியைப் போல.."

'நம்ம மூர்த்தியா..?'

அவனுக்கும் அர்ச்சனாவுக்கும் என்ன சம்பந்தம்..? அநாதயாய் நின்று கொண்டிருந்தவளுக்கு ஒரிரவு தங்க இடம் கொடுத்து ஆதரிக்கும் அனாதை ரட்சகன்.. விடிந்ததும் அர்ச்சனா தன் வழியில் போய் விடுவாள்.. என்றேனும் ஓர்நாள் இந்த பனிவிழும் இரவில், மழை பெய்யும் பொழுதில் அவனைச் சந்தித்த நினைவு வரக்கூடும்.. அதைத் தவிர்த்து வேறு என்ன இருக்கிறது..?

"ஸோ.. என்னாலே சொந்தங்களைத் தேடிப் போக முடியலை.. இப்போதைக்கு எங்க ஊரை விட்டு

வெளியேறனும்னு தோணுச்சு.. பெட்டியை எடுத்துக்கிட்டு எங்க சொந்தக்காரங்க வீட்டுக்குப் போகப் போகிறதா எங்க தெருக்காரங்களிடம் பொய் சொல்லிட்டு பஸ் ஸ்டாண்டுக்கு வந்தேன்.. எங்கே போகிறதுன்னுதான் தெரியலை.. உள்ளூரில் இருக்கும் பிரண்ட்ஸ் வீட்டுக்குப் போகலாம்.. லேடிஸ் ஹாஸ்டலில் இருக்கலாம்.. இரண்டு இடத்திலயும் லீலாவதி என்னைத் தேடி வந்து அசிங்கப் படுத்தச் சான்ஸ் இருக்கு.. வெளியூரில இருக்கிற பிரண்ட்ஸைப் பத்தி மனசில யோசிச்சுக்கிட்டு இருந்தப்பக் கொடைக்கானல் போகிற பஸ் வந்தது.. இங்கே ஒரு பிரண்ட் இருக்கிறாளேன்னு சட்டுன்னு பஸ்ஸில ஏறிட்டேன்.. கொடைக்கானலுக்குள்ள பஸ் நுழையறப்பவே பத்து மணி ஆகிருச்சு.. அதுக்கு மேலே அவ வீட்டைத் தேடிப்

போனா வீடு பூட்டிக்கிடக்கு.. திரும்பி வர்றப்ப மழை பிடிச்சுக்குச்சு.."

கை, கால்கள் வெடவெடக்க குளிருக்கு இதமாக கம்பளியைப் போர்த்திக் கொண்டிருந்தவளைப் பரிவுடன் பார்த்த சாவித்திரி..

"தூங்கும்மா.. காலையிலே எழுந்ததும் என்ன செய்கிறதுன்னு யோசிக்கலாம்.." என்றாள்..

"இதில் யோசிக்க என்ன இருக்கு ஆண்ட்டி..? என் பிரண்டின் வீட்டைத் தேடிப் போவேன்.. அவ இல்லைன்னா கொடைக்கானலை விட்டுக் கிளம்பிருவேன்.."

"கிளம்பி..? எங்கே போவ..?"

"தெரியலை.. பட்.. போய்த்தானே ஆகனும்.."

"அது என்னவோ நிஜம்தான்.. பேங்கில வேலை பார்க்கிறதாச் சொன்னியே.. வேலை என்னவாகிறது..? இந்தக் காலத்தில கவர்ண்மென்ட வேலை கிடைக்கிறது குதிரைக் கொம்பாச்சே.."

"லாங் லீவ் போட்டுட்டு டிரான்ஸ்பருக்கு அப்ளை பண்ணலாம்னு இருக்கேன் ஆண்ட்டி.. உடனடியா ஒரு

சி.எல்லை மட்டும் மேனேஜரோட ஈமெயில் ஐ.டிக்கு மெயில் பண்ணியிருக்கேன்.."

"சரி.. இப்பத் தூங்கு.."

மனதில் இருப்பதைக் கொட்டி விட்டதாலோ என்னவோ சாவித்திரியம்மாளின் அருகாமை தந்த பாதுகாப்பில் அச்சமின்றி உறங்கி விட்டாள் அர்ச்சனா.. அவள் தூங்குவதையே பார்த்துக் கொண்டிருந்த சாவித்திரியின் முகத்தில் விசனம் இருந்தது.. அவள் தூங்க வெகு நேரமானது..

காலையில் விழிப்பு வந்து தானாகவே எழுந்து விட்டாள் அர்ச்சனா.. வேலைக்குச் செல்வதற்காக குறித்த நேரத்தில் விழித்துப் பழக்கப் பட்டவள் அவள்.. ஞாயிறாக இருந்தாலும் விழிப்பு வந்து விடும்..

கண் விழித்துப் பார்த்தவளுக்குக் கதைகளில் வருவதைப் போல தான் எங்கேயிருக்கிறோம் என்ற திகைப்புத்தான் முதலில் வந்தது.. அவள் கனவிலும் பார்த்திராத ஆடம்பரமான அழகிய அறையில் நுரை மெத்தையில் படுத்திருப்பதை நம்ப முடியாமல் இமைகளைக் கொட்டிப் பதறி எழுந்தவளுக்கு முதல்நாள் நடந்த நிகழ்வுகள் நினைவுக்கு வந்தன..

'ஒரேயொரு நாள்.. அந்த ஒரு நாளுக்குள்தான் எத்தனையெத்தனை நிகழ்வுகள்..'

என்று லீலாவதியைப் பற்றி அபிராமிக்குத் தெரிய வந்ததோ அன்றிலிருந்து அர்ச்சனாவின் அமைதி நிரம்பிய வாழ்வு மாறிப் போய் விட்டதே..

அர்ச்சனா பெருமூச்சுடன் ஜன்னலருகில் சென்றாள்.. திரை விலக்கிப் பார்த்தவளுக்கு சிறகடிக்கும் உணர்வு வந்தது..

'ஆஹா.. என்னவொரு அற்புதம்..'

கொடைக்கானலின் இயற்கையழகு கொட்டிக் கிடந்தது.. ஜன்னல் வழியே தெரிந்த இயற்கையின் பேரழகில் அவள் அனைத்தையும் மறந்து விட்டாள்.. அறைக்கதவைத் திறந்து

வெளியில் வந்தவள் மாடிப் படிகளில் விரைந்து இறங்கி ஓடித் தோட்டத்தில் நின்றாள்..

விதம் விதமான பூச்செடிகளும் பழ மரங்களுமாக தோட்டம் ஒரு பூங்காவைப் போல மிளிர்ந்தது.. அங்கிருந்து பார்த்தால் சரிந்து இறங்கிய சாலைகளும் வீடுகளும் வரை படம் போல கவர்ந்தன.. அனைத்து வீடுகளும் வரிசை கட்டி நிற்காமல் உயரத்திலிருந்து கீழே என்று மலையின் அழகைத் தன்னுள் அடக்கி மலைவாசஸ்தலத்தை உணர்த்தி நின்றன..

மூர்த்தியின் வீடும் தோட்டமும் அப்படித்தான் இருந்தன.. தோட்டம் படிக்கட்டுக்களுடன் இறங்கியிறங்கி அமைந்திருந்ததில் அர்ச்சனா மனக் கவலைகளை மறந்து அதில் துள்ளி இறங்கினாள்..

"குட் மார்னிங்.."

வண்ணத்துப் பூச்சிகளைத் துரத்திக் கொண்டிருந்தவளை கம்பீரமான குரல் அழைத்தது.. திரும்பிப் பார்த்தாள்.. மூர்த்தி நின்றிருந்தான்.. ஆறடி உயரமும் செதுக்கிய உருவமுமாக கிரேக்க சிற்பத்தைப் போல கம்பீரமான அழகுடன் ஈர்த்தான்.. இரவில் தெரியாத அவனது அழகும் கம்பீரமும் விடியலில் வெளிப்பட்டதில் அர்ச்சனாவின் கன்னி மனது..

'வாவ்..! என்னவொரு ஹேண்ட்சம்..!' என்று வியந்தது..

"குட்மார்னிங் சார்.." என்றாள்..

"என் பெயர் மூர்த்தி.." அவன் இறங்கி அவளருகில் வந்தான்.. அவளது மனம் படபடத்தது..

"தெரியுமே.." அவன் முகம் பார்க்காமல் கொடைக்கானல் மலையின் சிகரங்களைப் பார்த்தபடி சொன்னாள்..

மலைமீது மேகங்கள் தவழ்ந்தன.. அவள் மனதிலும் விலகியிருந்த கவலை மேகங்கள் சூழ்ந்தன.. அவளது முகம் வாடியது.. அவன் அவள் முகத்தை உன்னிப்பாக பார்த்துக் கொண்டிருந்திருக்க வேண்டும்..

"என்ன ஆச்சு..?" என்று புருவங்களை உயர்த்தினான்..

அவனது வசீகரமான புருவ உயர்த்துதலில் அவள் தடுமாறினாள்.. அதுபோன்ற செயலை அதற்கு முன் அவள் பழகிய வட்டாரத்தில் இருந்த ஆண்களிடம் அவள் பார்த்ததில்லை..

"என்ன ஆச்சுன்னா..?"

"பிரைட்டா சூரியனைப் போல இருந்த முகம் திடிர்ன்னு அம்மாவாசை இருட்டைப் போல மாறுதே.. வாட் ஹேப்பன்..? எனிதிங் ராங்..?"

"நத்திங் சார்.."

"இதை நான் நம்பனுமா..?"

அர்ச்சனா மௌனமாக நின்றாள்.. அவன் சிகப்புக் கலரில் ஸ்வெட்டர் அணிந்திருந்தான்.. அடர் சிகப்பு அவனது கவர்ச்சியை அதிகப்படுத்தி அவளை பாடாய் படுத்தியது.. முதல்நாள் இரவு அனுபவம் அவனை அவளுக்கு ஓர் கதாநாயகனைப் போல உருவகித்திருந்தது.. அவனும் கதாநாயகனை மீறிய கவர்ச்சிகரமான அழகுடன் இருந்தான்.. அவன் முகத்தில் படர்ந்திருந்த கடுமைகூட அவனது கவர்ச்சியை அதிகப்படுத்துவதைப் போல அவளுக்குத் தோன்றியது.. முள் முகம் அழகா..? இங்கே அழகாக காட்சி தருகிறதே.. எப்படி..?

"டீ குடிக்காம ரெண்டு பேரும் தோட்டத்துக்கு வந்தாச்சா..?" என்றபடி சாவித்திரி வந்தாள்..

அவளது கையில் பெரிய டிரே இருந்தது.. டிரேயில் தேநீர் கெட்டிலும், கப்புகளும் இருந்தன..

"இங்கே குடுங்க ஆண்ட்டி.." வேகமாக அவளருகில் விரைந்து டிரேயை வாங்கிக் கொண்டாள் அர்ச்சனா..

அதில் சாவித்திரியின் முகம் கனிந்ததைக் கண்டான் மூர்த்தி.. லேசான இளநகை அவனது இதழ்களில் அரும்பியது..

'இவனுக்குச் சிரிக்கக் கூடத் தெரியுமா..?'

மனதில் உதித்த வியப்பை முகத்தில் காட்டாமல் அருகிலிருந்த மர பெஞ்சில் டிரேயை வைத்துக் கெட்டிலை எடுத்துக் கப்புகளில் சூடான டீயை ஊற்றினாள் அர்ச்சனா.. இயல்பான அவளது செயலில் கவரப் பட்டான் மூர்த்தி..

14

அர்ச்சனாவிடம் சாத்வீகமான அமைதி தென்பட்டது.. மெலிதான தென்றலின் வருடலில் அழகான பூவொன்று அசைவதைப் போல அவளது நடமாட்டம் இருந்தது.. அவளைப் பார்க்கும் போது மனதில் இனம் புரியாத நிம்மதி நிலவுவதை உணர்ந்தான் மூர்த்தி.. முதல்நாள் நள்ளிரவில் அர்ச்சனாவுடன் வீட்டுக்கு வந்தவன் சாவித்திரியிடம் அவளை ஒப்படைத்து விட்டுத் தன் அறைக்குப் போய் படுக்கையில் விழுந்தவன்தான், விடிந்த பின்னால்தான் எழுந்தான்.. இரவுகளில் தூக்கம் வருவதில் ஆச்சரியம் ஏதுமில்லை.. அதுவும் கொடைக்கானலைப் போன்ற குளிர் நிரம்பிய மலைப் பிரதேசத்தில் ஹீட்டரைப் போட்டு விட்டுக் கம்பளியைப் போர்த்திக் கொண்டு படுத்தால் ஆழ்ந்த தூக்கம் தானாக வந்து அமிழ்த்தி விடும்.. பாவம்.. மூர்த்திக்குத்தான் அந்தக் கொடுப்பினை வாய்க்காமல் போய் விட்டது.. தூக்கத்திற்கும் அவனுக்குமான தூரம் அதிகமாகிக் கொண்டே இருந்தது.. உறக்கமில்லாத பனி விழும் இரவுகளில் அவன் கொடைக்கானல் மலையின் சாலைகளில் எதையோ தொலைத்து விட்டவனைப் போல ஒரு தேடுதலுடன் சுற்றிக் கொண்டிருந்தான்.. அவனிடமிருந்து தொலைந்து போனது பொருளாக இருந்தால் அவன் தேடிய தேடலுக்கு எப்போதோ அகப்பட்டிருக்கும்.. அவன்தான் அமைதியைத் தொலைத்து விட்டுத் தேடிக் கொண்டிருக்கிறானே.. எப்படி அவனுக்கு அமைதி கிட்டும்..?

நெடுநாள்களாக கிட்டாத தூக்கம் முதல்நாளின் பின்னிரவில் கிட்டியிருந்ததில் மூர்த்தியின் முகம் பொழிவுடன் இருந்தது.. எட்டாத கனியாக வெகு தொலைவில் விலகியிருந்த துயில் எவ்வாறு அவன்மீது இரக்கம் கொண்டு ஆக்ரமித்தது என்று அவனுக்கே விளங்கவில்லை..

'இனம் விளங்கவில்லை - எவனோ

என்னகம் தொட்டு விட்டான்..'

என்ற பாரதியாரின் பாடல் வரிகளைத்தான் அவன் கேள்விப்பட்டிருக்கிறான்.. துயில் வந்து அவனைத் தழுவியதற்கு இனம் விளங்காமல் போகக் கூடும் என்பதை இப்போதுதான் உணர்வுபூர்வமாக உணர்கிறான்.. காரணம் எதுவாக இருக்கக் கூடும் என்ற ஆராய்ச்சியில் இறங்காமல் மனது அமைதியடைந்திருந்தது எதனால் என்றும் அவனுக்குப் புரியவில்லை..

"டீ..."

அர்ச்சனா டீக் கோப்பையை அவனிடம் நீட்டினாள்.. அழகானதொரு ஓவியம் அசைவதைப் போல இருந்தது அவனுக்கு.. கோப்பையைக் கையில் வாங்கிக் கொண்டவனுக்கு ஒரு கோப்பையிலே என் குடியிருப்பு என்று பாடத் தோன்றியது..

அழகிய பெண்ணின் விரல் பட்டால் தேநீர் கோப்பையும் மதுரசம் நிரம்பிய கோப்பையாக மாறிவிடக் கூடுமோ..? கொடைக்கானலின் இளந்தொழிலதிபன்

'உமர் கய்யாம்' ஆக உருமாறி விடுவானோ..?

தேநீர் கோப்பையை வாங்கிக் கொண்ட மூர்த்தியின் செவிகளுக்கு மட்டும் கஜல் இசை கேட்டது..

'என்னடா இது..' அவனுக்குச் சிரிப்பு வந்தது..

பொன்னியின் செல்வன் கதையைப் படிப்பவர்களுக்கு மட்டும் குதிரையின் குளம்போசை செவிகளில்

ஒலிக்குமாம்.. அந்தக் கதையாக அல்லவா இந்தக் கதை இருக்கிறது..

"ஆண்ட்டி.. உங்களுக்கு.."

"ஏம்மா.. நான் எடுத்துக்க மாட்டேனா..? நீ கையில் எடுத்துக் கொடுத்தாத்தான் டீ தொண்டைக்குள் இறங்குமா..?"

"எனக்கு இதில் ஒரு சந்தோசம்ன்னு வைத்துக்கங்களேன்.."

"கெட்டிக்காரிதான் நீ.. எப்படிச் சொன்னா நான் வாயை மூடிக்குவேன்னு கண்டு வைச்சிருக்க.."

சிரித்தபடி தேநீர் கோப்பையை வாங்கிக் கொண்ட சாவித்திரியின் முகத்தில் வாத்சல்யம் நிறைந்திருந்தது.. பிரியத்துடன் அர்ச்சனாவைப் பார்த்தபடி..

"இனியாவது டீயைக் குடிப்பியா...?" என்று கேட்டாள்..

"பின்னே..? இந்தக் கொடைக்கானல் குளிருக்கு இதமா சூடா ஏலக்காய் டீ கிடைச்சிருக்கிறப்பக் குடிக்காம இருப்பேனா..?" என்ற அர்ச்சனா தேநீர் கோப்பையுடன் சாவித்திரியின் பக்கத்தில் உட்கார்ந்தாள்..

அது அழகானதொரு காலைப்பொழுதாக இருந்தது.. தன் துயரத்தை மறந்து கொடைக்கானல் மலைச் சரிவின் இயற்கையில் மனதைப் பறி கொடுத்தவளாய் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள் அர்ச்சனா.. அதைக் கவனித்த சாவித்திரி..

"உனக்கு இந்த ஊரைப் பிடிச்சிருக்கு போல.." என்றாள்..

"யாருக்குத்தான் பிடிக்காது..?" தலையை அசைத்து அர்ச்சனா எதிர் கேள்வி கேட்டபோது அவளது ஜிமிக்கிகள் ஆடிய ஆடலில் மூர்த்தியின் மனமும் சேர்ந்து ஆடியது.. அர்ச்சனாவிடமிருந்த அலாதியானதொரு அழகு அவனை வசீகரித்து வசியம் செய்தது.. அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் வேறு திசையில் பார்த்தான்.. டீயைக் குடித்து முடித்த அர்ச்சன..

"தேங்க்ஸ் ஆண்ட்டி.. தேங்க்ஸ் சார்.. நைட்.. நீங்க உதவி செய்திருக்கலைன்னா என்ன ஆகியிருக்கும்ன்னு எனக்கே தெரியலை.. தெய்வம் போல வந்து எனக்கு இருக்க இடம் கொடுத்தீங்க.. இனி நான் கிளம்பறேன்.." என்று கரம் குவித்தாள்..

"கிளம்பறயா..? எங்கே..?" கண்டனக் குரலுடன் அதட்டினாள் சாவித்திரி..

அர்ச்சனா வியப்புடன் அவளைப் பார்த்தாள்.. சாவித்திரியின் கோபம் அவளை ஆச்சரியப்படுத்தியது.. அர்ச்சனா முதல்நாள் இரவில் அந்த வீட்டிற்கு அடைக்கலமாகத்தான் வந்திருக்கிறாள்.. விருந்தாளியாக அல்ல.. ஓரிரவு தூங்க பாதுகாப்பான இடம் வேண்டும் என்பதற்காக மூர்த்தியுடன் அந்த வீட்டிற்கு வந்தவள் அவள்.. இப்போது விடிந்து விட்டது.. அவளது வழியைப் பார்த்துக் கொண்டு கிளம்ப வேண்டிய நேரமும் வந்து விட்டது.. இதைத்தானே அர்ச்சனா சொன்னாள்..? அதற்காக சாவித்திரி எதற்காக கோபித்துக் கொள்கிறாள்..?

மூர்த்தியும் அர்ச்சனாவை முறைத்துப் பார்த்தான்.. அர்ச்சனா சங்கடமடைந்தாள்... கொடைக்கானல் மலைச்சாரலில் இளைப்பாறும் நிலையிலா அவளிருக்கிறாள்..? அடுத்து என்ன செய்ய வேண்டும் என்ற முடிவை அவள் எடுத்தாக வேண்டும்.. அது புரியாமல் இவர்கள் இருவரும் அவள் என்னவோ சொல்லக் கூடாததைச் சொல்லி விட்டதைப் போல முறைத்துக் கொண்டிருக்கிறார்களே..

"என் பிரண்ட் வீட்டுக்குப் போகனும் ஆண்ட்டி.." மெல்லிய குரலில் விளக்க முயன்றாள் அர்ச்சனா..

"அவங்க வீடுதான் பூட்டிக் கிடந்ததாச் சொன்னீங்களே.." அவள் என்னவோ பொய் சொல்வதைப் போலக் குறுக்கு விசாரணை செய்தான் மூர்த்தி..

"இப்பத் திறந்திருக்கலாமில்லையா..?"

"ஒருவேளை திறக்காமல் பூட்டியே இருந்ததுன்னா..?"

"கொடைக்கானலை விட்டுக் கிளம்ப வேண்டியது தான்.."

"கிளம்பி..? எங்கே போவீங்க..? சாத்தூருக்கா..?"

"என் ஊர் சாத்தூர்ன்னு உங்களுக்கு எப்படித் தெரியும்..?"

சாவித்திரியைப் பார்த்த அர்ச்சனா..

"ஆண்ட்டி சொன்னாங்களா..? அதுக்குள்ளயா..?" என்று ஆச்சரியத்துடன் கேட்டாள்..

"சாவித்திரியம்மா என்னிடமிருந்து எதையும் மறைக்க மாட்டாங்க.. நான் பிறந்தபோது கையில் தூக்கியவங்க இவங்க.. பெரியவனாகி கோவித்துக் கொள்ளும்வரை இவங்களோட இடுப்பை விட்டு என்னை கீழே இறக்கி விட்டதில்லை.. ஸ்கூலுக்கு எனக்கு லன்ச் கொண்டு வந்து ஊட்டி விட்டு இடுப்பில் தூக்கி வைத்துக்குவாங்க.. அதில் கடுப்பாகி டீச்சர்ஸ் சத்தம் போட்டா அவங்ககூட சண்டைக்குப் போவாங்க.. வீட்டுக்கு ரிப்போர்ட் வந்ததில வேறு ஸ்கூலுக்கு மாத்திட்டாங்க.. புது ஸ்கூலில் லன்ச் அவங்களே கொடுத்து விடுவாங்க.. மார்னிங்கில் ஸ்கூலுக்கு வருகிற ஸ்டூடண்ட்ஸ் ஈவினிங்தான் ஸ்கூலை விட்டு வெளியேற முடியும்.. இவங்களோட அளவுக்கு மீறின அன்பாலே கிடைச்ச கிப்ட் அது.. அப்படிப்பட்டவங்க உங்களைப் பத்தின விவரத்தை என்னிடம் சொல்லாம இருப்பாங்களா..?"

"சொன்னதில தப்பில்லை சார்.. என்கூடத்தான் இருந்தாங்க.. எப்போ உங்களிடம் சொன்னாங்கன்னுதான் தெரியலை.."

"அதைத் தெரிந்துக்கிட்டு என்ன செய்யப் போகிறிங்க..?"

"எதுவும் செய்யப் போவதில்லை.. இப்போதைக்கு இங்கேயிருந்து கிளம்புகிறதை மட்டும் செய்யப் போகிறேன்.."

"தாராளமாக் கிளம்புங்க.. குளித்து டிபன் சாப்பிட்டு விட்டுக் கிளம்புங்க.. நானும் கூட வர்றேன்.."

"எதுக்கு..?"

"உங்க பிரண்ட் இருக்கிறாங்களா இல்லை எங்கேயாவது எஸ்கேப் ஆகிட்டாங்களான்னு பார்க்கிறதுக்குத்தான்.."

"நான் வருகிறது அவளுக்குத் தெரியாது சார்.. அதனால எஸ்கேப் ஆக சான்ஸ் இல்லை.."

"ஏன்..? செல் போனில் தகவல் சொல்லியிருக்கலாமே.."

"அவளோட டச் விட்டுப் போய் ரொம்ப காலமாகுது சார்.. போன் பண்ணினா ஸ்விட்ச் ஆஃப்ன்னு வருது.. வேற நம்பருக்கு மாறிட்டான்னு நினைக்கிறேன்.."

"இருக்கலாம்.. பிரண்ட்ஸ் கூட டச்சில் இருக்க வேண்டாமா..?"

"'அவ'ன்னு இல்லை சார்.. வேற யார் கூடவும் நான் டச்சில் இல்லை.. பிரண்ட்ஸ் வந்து போகிறதைப் போல என் வீடு இல்லையே.."

இதைச் சொல்லும் போது அர்ச்சனாவின் முகத்தில் தெரிந்த குன்றலில் மூர்த்தி இரக்கம் கொண்டான்.. சாவித்திரியின் மனதிலோ..

'வாழுகின்ற மக்களுக்கு..

வாழ்ந்தவர்கள் பாடமடி..

பெற்றவர்கள் பட்ட கடன்

பிள்ளைகளைச் சேருமடி..'

என்ற திரைப்படப் பாடல் ஒலித்தது..

அர்ச்சனா என்ன பாவம் செய்தாள்..? இந்த இளம் வயதில் வீட்டை விட்டு வெளியேறி ஊர் விட்டு ஊர் வந்து நிற்கும் அவலம் ஏன் அவளுக்கு வந்தது..? அர்ச்சனாவின் தந்தை மட்டும் மனதை அடக்கிப் புலன்களைக் காத்திருந்தால் இப்படியொரு நிலை அவரது மகளுக்கு வந்திருக்காதே..

"லீவ் இட்.. இப்ப நடக்கிறதைப் பார்க்கலாம்.. நீங்க குளிச்சுட்டு பிரேக்பாஸ்ட் சாப்பிட வாங்க.." மூர்த்தி

தீர்ப்பைச் சொல்லி விட்ட நீதிபதியைப் போல மரபெஞ்சை விட்டு எழுந்து போய் விட்டான்..

சாவித்திரி எதையோ யோசித்தபடி இருக்க, அர்ச்சனா..

"ஆண்ட்டி.. நான் குளிக்கப் போகவா..?" என்று தயக்கத்துடன் கேட்டாள்..

"ம்ம்ம்.." சாவித்திரி தலையசைக்க அர்ச்சனா வீட்டை நோக்கி நடந்தாள்..

ஏனோ அந்த வீட்டை விட்டுக் கிளம்ப வேண்டும் என்று நினைக்கும் போதே பயமாக இருந்தது.. முதல் நாள் இரவில் கிடைத்தப் பாதுகாப்பையும் நிம்மதியான தூக்கத்தையும் நினைத்துப் பார்த்தவளின் மனம் கனத்தது.. பசித்தவளுக்கு பழைய சோறு கிடைத்தாலே அது அமுதத்திற்கு ஒப்பானது.. இங்கே அமிர்தமே அளிக்கப்பட்டதே..

'நன்றி தெய்வமே..'

தாய், தந்தையுடன் வாழ்ந்த நாள்களில் ஒன்றைத் திரும்பப் பெற்றதைப் போன்ற நிறைவு மனதுக்குள்..

'இவர்கள் யார்.. நான் யார்..? எனக்கான அடைக்கலத்தை அளித்தது இவர்களது பெருந்தன்மை என எடுத்துக் கொள்ளலாம்.. அன்பையும், பாசத்தையும் வெகு இயல்பாக வாரி வழங்கினார்களே.. அதை என்னவென்று எடுத்துக் கொள்ள..?'

அங்கிருந்து கிளம்ப மனமில்லாமல் குளித்து உடை மாற்றித் தன் பெட்டியை சரி செய்து கையில் எடுத்துக் கொண்டு அறையை பூட்டி விட்டுக் கீழே வந்தாள்.. டைனிங் ஹாலில் மூர்த்தியும் சாவித்திரியும் பேசிக் கொண்டிருந்தார்கள்.. அவளைக் கண்டதும் மூர்த்தியின் கண்களில் ஒளிர்வு வந்ததை சாவித்திரி கவனித்திருக்க வேண்டும்.. சன்னமான புன்னகையுடன்..

"பெட்டியும் கையுமா வந்து நிற்கிற.. எப்படா இந்த வீட்டை விட்டுக் கிளம்பி ஓடிப் போகலாம்ங்கிற துடிப்போட இருந்த

போல.. அவ்வளவு கொடுமைக்காரங்களா நாங்க..?" என்று அர்ச்சனாவிடம் வம்பிழுத்தாள்..

"கொடுமைக்காரங்களா..? நீங்களா..? விளையாட்டுக்குக் கூட இப்படிச் சொல்லாதீங்க ஆண்ட்டி.." அர்ச்சனா பொலபொலவென கண்ணீர் உகுத்து விட்டாள்..

அபிராமியின் தாயன்பை சாவித்திரியிடம் உணர்ந்தவளால் அவளைப் பிரிய வேண்டுமே என்ற ஏக்கத்தைத் தாங்க முடியவில்லை.. திக்குத் தெரியாத காட்டில் சிறு வெளிச்சப் புள்ளிக் கிட்டாதா என்று அலைந்து திரிந்து கொண்டிருந்தவளின் முன் அருள்ஜோதி ஒளி விட்டு வழி காட்டி அழைத்துச் செல்ல வந்ததைப் போல முன்தினம் இரவில் உணர்ந்தாளே.. இப்போது அந்த அருள் ஜோதியின் ஒளி வெள்ளத்தை விட்டு விலகி, இருள் நிரம்பிய அடர் கானகத்திற்குள் தனித்து நுழைய வேண்டியிருக்கிறதே என்ற துயர வெள்ளம் கரையுடைந்து கண்ணீர் வெள்ளமாக வெளி வந்தது.. தாங்க முடியாமல் தேம்பினாள் அர்ச்சனா..

"ஐய்யே.. பச்சைப் புள்ளையா நீ..?" பாசத்துடன் அரவணைத்துக் கொண்டாள் சாவித்திரி..

இருந்த இடத்தை விட்டு அசையாமல் அவளையே பார்த்துக் கொண்டிருந்த மூர்த்தியின் பார்வையும்.. அவளை அரவணைத்தது.. அவளது துயரம் புரிந்த தோழமை அவனது விழிகளில் பளபளத்ததில்..

'என்ன மாதிரியான சொந்தம் இது..' என பிரமித்துப் போனாள் அர்ச்சனா..

அவளை உட்கார வைத்து சாவித்திரி பரிமாறிய போது அவளது வயிறு நிறைந்ததைவிட பலகோடி மடங்கு அதிகமாக அவளது மனது நிரம்பியது..

"இந்த வீடுதானே..?"

காரைச் சாலையில் ஓரம்கட்டி நிறுத்திய மூர்த்தி கேட்டான்.. 'ஆம்' எனும் விதத்தில் தலையை அசைத்தாள் அர்ச்சனா..

"வீடு பூட்டிக் கிடக்கே.." மூர்த்தி சுட்டிக் காட்டினான்.

அர்ச்சனாவின் முகத்தில் பயமும் கலவரமும் வந்தன.. அவளது முகத்தை மூர்த்தி உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருக்கிறான் என்ற நினைவில் அவற்றை மறைக்க முயன்றாள்.. முடியவில்லை.. அடுத்தது காட்டும் பளிங்கைப் போல மனதின் உணர்வுகளை முகத்தில் பிரதிபலித்து விடும் தன்மை கொண்டவள் அவள்.. அனிச்ச மலர்..! அவளது குணத்திற்கு அவள் லீலாவதியிடம் சிக்க நேர்ந்தது பெருந்துயரம்..

"இவ ஒருத்தி கூடத்தான் அதிகமா பழகியிருக்கேன்.." மன வேதனையுடன் முணுமுணுத்தாள்..

மூர்த்தி பேசவில்லை.. அவள் பேசட்டும் என்பதைப் போல அமைதியாக இருந்தான்.. அர்ச்சனாவின் விழிகளில் நிரம்பியிருந்த அச்சம் அவன் மனதை அசைத்தது..

அர்ச்சனா காரை விட்டு இறங்க முயன்றாள்..

"எதுக்கு..? அதுதான் வீடு பூட்டிக்கிடக்கே.." மூர்த்தி அதட்டினான்..

"எங்கே போயிருக்கா, எப்போ வருவான்னு தெரிந்துக்கலாமே.." பிடிவாதம் பிடித்தாள் அர்ச்சனா..

"சொன்னாக் கேட்க மாட்ட.. நானும் கூட வர்றேன்.."

இயல்பான ஒருமை அவனிடம் வந்திருந்தது.. அர்ச்சனாவுக்கு அது தவறாகத் தெரியவில்லை.. அவனது ஒருமை அழைப்பில் ஒர்வித சொந்தத்தையும் பாதுகாப்பையும் தான் அவள் உணர்ந்தாள்.. அவளுக்கு அந்த அழைப்பு பிடித்தமானதாக இருந்தது.. இருளைக் கிழிக்கும் வெளிச்சக் கீற்றாய் அவனது அழைப்பை உணர்ந்தாள்..

அவர்கள் இருவரும் பூட்டிக் கிடந்த வீட்டை அணுகினார்கள்.. பூட்டைத் தொட்டுப் பார்த்தாள் அர்ச்சனா..

"இதைப் பத்தி எதுவும் ரிசர்ச் பண்ணப் போறியா..?" சிரிக்காமல் கேட்டான் மூர்த்தி..

அர்ச்சனாவுக்கு வெட்கமாகி விட்டது.. சிவந்த அவளது முகத்திற்கு அந்த வெட்கம் வெகு பாந்தமான அழகைக் கொடுத்ததில் மனதிற்குள் புதியதோர் உணர்வை உணர்ந்தான்.. அந்த அழகை அதிகப் படுத்திப் பார்க்கும் ஆசை அவனுக்குள் தோன்றியது..

"இல்லேன்னா பூட்டப்பட்ட பூட்டு, பூட்டியிருக்கும் வீடு, அப்படி, இப்படின்னு கவிதை எதுவும் எழுதப் போறியா..?"

அர்ச்சனாவின் முகம் இன்னும் அதிகமாகச் சிவந்தது.. லஜ்ஜையுடன் அவள் உதட்டைக் கடித்தாள்.. மூர்த்திக்கு அதுதானே வேண்டும்..? அவளது கன்னச் சிகப்பையும், உதட்டுச் சுழிப்பையும் ஆழ்ந்த பார்வையுடன் ரசித்தான்.

'உன் உதட்டோரச் சுழிப்பு..'

மனதுக்குள் மழைச்சாரலாய் பாடல் வந்தது.. இது போன்ற உல்லாச மனநிலை, தொலைந்து போய் வெகு காலமாகிறது.. 'ஒரு காலத்திலே' என்று கதை சொல்வதைப் போல அவன் கதை ஆகி விட்டது... உன்மத்தம் பிடித்தவனாக உறக்கமில்லா இரவுகளோடு சுற்றிக் கொண்டிருந்தவனின் செவிகளில் தாலாட்டுப் பாடலொன்று ஒலிப்பதைப் போல இருந்தது.. அதுதான் முதல் நாளின் பின்னிரவில் அவனை உறக்கத்தில் ஆழ்த்தியதோ..

எதனால் அவளிடம் இனம் புரியாத ஈர்ப்பு உண்டாகிறது என்று அவனால் கண்டு கொள்ள முடியவில்லை.. ஒருவேளை அவனையும், சாவித்திரியையும் போல உறவுகளால் வஞ்சிக்கப்பட்டு தனித்து நிற்பதினால் இருக்குமோ..

அர்ச்சனா முகச் சிகப்பை மறைத்துக் கொண்டு பக்கத்து வீட்டைப் பார்த்தாள்.. அங்கே விசாரிக்கலாமா என்று அவள்

யோசித்த அதே நொடியில்..

"யாரு..?" என்ற விசாரணை பக்கத்து வீட்டிலிருந்து வந்தது..

வாசல் கதவைத் திறக்காமல் ஜன்னலின் கதவுகளை மட்டும் திறந்து, திரைச் சீலைகளை விலக்கி வெளியே எட்டிப் பார்த்த பெண்மணி நாற்பது வயதுகளில் இருந்தாள்..

"சுஹாசினி.." அர்ச்சனா இழுத்தாள்..

"சுஹாசினிக்கு என்ன..?" மிளகாயின் காரத்தோடு அடுத்த கேள்வி வந்தது..

அர்ச்சனா மூர்த்தியைப் பார்த்தாள்.. அவனுக்கு நிகழ்ந்து கொண்டிருந்த விசாரணை வேடிக்கையாக இருந்திருக்க வேண்டும்.. இது உனக்கான விசாரணை என்பதைப் போல நமட்டுச் சிரிப்புடன் பேசாமல் நின்றிருந்தான்..

"சுஹாசினிக்கு ஒன்னுமில்லைங்க.."

"தெரியுதில்ல.. அப்புறம் எதுக்காக சுஹாசினி பெயரைச் சொல்லிக்கிட்டு பூட்டை ஆட்டிக்கிட்டு இருக்க..?"

"இல்ல.."

"எது இல்ல..?"

"எதுவும் இல்லைங்க.."

"எதுவும் இல்லேன்னா இங்கே உனக்கென்ன வேலை..?"

என்னடா இது என்று ஆகி விட்டது அர்ச்சனாவுக்கு.. அக்கம் பக்கத்தில் இருக்கும் வீடுகளில் விசாரித்தால் சுஹாசினியைப்பற்றி ஏதாவது தகவல் தெரியும் என்று பார்த்தால் இந்த அம்மா இந்தக் கடி கடிக்கிறாளே..

'அந்தப் பக்க வீட்டில் கேட்டுப் பார்க்கலாமா..?'

சுஹாசினியின் வீட்டுக்கு இந்தப் பக்கம் இருக்கும் வீட்டில் விவரம் பெயராது என்று அந்தப் பக்க வீட்டைப் பார்த்தாள் அர்ச்சனா..

'நாய்..! ஜாக்கிரதை..' என்ற போர்டு மிரட்டியது..

"அங்கே நாய் இருக்கும் போல இருக்கே.." பயந்து போனாள்..

"இருந்தா என்ன..?" இலகுவாக கேட்டான் மூர்த்தி..

"கடிக்கும்.. குரைக்கும்.." அடுக்கினாள் அர்ச்சனா..

"இந்த அம்மாவை விடவா குரைத்து கடிக்கப் போகுது..?"

மூர்த்தியின் கேள்வியில் அர்ச்சனாவுக்குச் சிரிப்பு வந்து விட்டது.. முல்லைப் பூக்கள் இதழ் விரிப்பதைப் போன்ற அவளது சிரிப்பு மூர்த்தியின் மனதை கொள்ளை கொண்டது.. இந்தச் சிரிப்பை இவள் எங்கே ஒளித்து வைத்திருந்தாள்..?

'பாவம்.. இவளா ஒளித்து வைத்தாள்..? அது தானாக தொலைந்திருக்கிறது..'

"என்ன சிரிப்பு வேண்டிக் கிடக்கு..?" பக்கத்து வீட்டின் ஜன்னலில் இருந்து அதட்டல் வந்தது..

அர்ச்சனா அவசரமாக வாயைப் பொத்திச் சிரிப்பை அடக்கிக் கொண்டாள்.. குறிஞ்சி மலரைப் போன்ற அரிதான சிரிப்பை அடக்கிக் கொள்ள வைக்கிறாளே என்று ஜன்னல் பெண்மணி மீது மூர்த்திக்கு கோபம் வந்தது..

"போர்டை தப்பா மாத்தி மாட்டி வைச்சிருக்கிறாங்க.. ஆக்சுவலா அந்த போர்டை இந்த வீட்டில மாட்டியிருக்கனும்.." என்றான்..

அர்ச்சனா வெடித்துச் சிரித்து விட்டு..

"சும்மாயிருங்க.." என்றாள்..

"நான் என்ன பண்ணினேன்..? நீ அங்கே இருக்க.. நான் இங்கே இருக்கேன்.. அபாண்டமாப் பேசக் கூடாது.."

மூர்த்தியின் பேச்சில் அர்ச்சனாவின் முகம் குங்குமக் கூடையானது.. அதை ஜன்னல் பெண்மணி கவனித்திருக்க வேண்டும்..

"கொடைக்கானலில லேக் இருக்கு.. கோக்கர்ஸ் வால்க் இருக்கு.. பார்க் இருக்கு.. ஃபால்ஸ் இருக்கு.." என்று வரிசைப் படுத்தினாள்..

"இதை எதுக்கு நம்மிடம் சொல்கிறாங்க..?" அர்ச்சனா புரியாமல் கேட்டாள்..

அந்தப் பெண்மணி என்ன சொல்ல வருகிறாள் என்று மூர்த்திக்குத் தெளிவாகப் புரிந்தது.. அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல்..

"அதை என்னிடம் கேட்டா, எனக்கு என்ன தெரியும்..? சொல்கிறவங்களிடம்தான் கேட்கனும்.." என்றான்..

"இந்த அம்மாவிடம் யார் கேட்பது..?"

"நான் கேட்கவா..?"

"வேண்டாம்.. வேண்டாம்.."

"ஏன்..?"

"உங்க லெவலுக்கு இந்தம்மாவிடம் பேசக் கூடாது.. இவங்க மரியாதைன்னா கிலோ என்ன விலைன்னு கேட்கிற ரகமா இருக்காங்க.."

அவன் மீதான அவளது அக்கறையில் ஈர்க்கப் பட்டவனாக அவளை ஆழ்ந்து ஓர் பார்வை பார்த்தான்.. அவள் முகச்சிகப்புடன் தடுமாறினாள்..

"ம்ஹீம்.. காலங்கார்த்தாலேயே வீட்டு வாசலில் மார்னிங் ஷோ..! தேவைதான் எனக்கு.. ஏம்மா.. உனக்கு உன் லவ்வருடன் கொஞ்சிக் குழாவ என் வீட்டு வாசல்தான் கிடைச்சதா..? கொடைக்கானலில இருக்கிற இத்தனை இடங்களில ஏதாவது ஒரு இடத்துக்குப் போய் கொஞ்ச வேண்டியதுதானே.." ஜன்னல் பெண்மணி அலுத்துச் கொள்ள..

"ஹையோ.. இந்தம்மா என்ன இப்படியெல்லாம் பேசறாங்க.." என்று அரண்டு போனாள் அர்ச்சனா..

"அவங்க உன்னையும் என்னையும் லவ்வர்ஸ்ன்னு முடிவே பண்ணிட்டாங்க.." ரசித்துச் சொன்னான் மூர்த்தி..

"லவ்வர்ஸா..?"

"நான் சொல்லலை.. அவங்க சொல்கிறாங்க.. என்னவோ கதை வசனம் எழுதி அவங்களிடம் கொடுத்துப் பேச சொன்னதைப் போல என்னை முறைக்கிறயே.."

மூர்த்தியின் விழிகளில் தெரிந்த சிரிப்பு அவளது இக்கட்டான நிலையை அவன் ரசிப்பதை படம் போட்டுக் காட்டியது..

"இந்த அம்மாவோட சங்காத்தமே வேண்டாம்.."

ஒரு தீர்மானத்திற்கு வந்தவளாய் 'நாய்..! ஜாக்கிரதை..' போர்டு மாட்டப்பட்டிருந்த வீட்டிற்கு நகர்ந்தாள்..

"அங்கே நாய் இருக்குமே.." மூர்த்தி பயமுறுத்தினான்.

"இருக்கட்டும்.."

"கடிக்குமே.."

"இந்தம்மாவை விட அதிகமாக் கடிக்காது.."

"குரைக்குமே.."

"இந்தக் குரைப்பை விட வேற எந்தக் குரைப்பும் பெரிதா இருக்காது.."

"குட் டிசிசன்.."

அவன் மெச்சுகிறானா இல்லை கேலி செய்கிறானா என்று ஒரு மண்ணும் புரியவில்லை.. என்னத்தையோ சொல்லி விட்டுப் போகட்டும் என்று வீரத்துடன் அடுத்த வீட்டை அணுகி காலிங் பெல்லை அழுத்தியவள்..

"லொள்.. லொள்.." என்ற நாயின் குரைப்புச் சப்தத்தில்..

"அம்மாடி.." என்று அலறிப் பின்வாங்கி மூர்த்தியின் முதுகுக்குப் பின்னால் ஒளிந்து கொண்டாள்..

"என்னே உன் தைரியம்.." மூர்த்தியின் கேலியில் முகம் சிவந்தாலும் அவனது முதுகின் மறைவிடத்திலிருந்து அவள் வெளியே வரவேயில்லை..

அவளது அச்சம் அவனுக்கு உவப்பானதாக இருந்தது.. அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்ற நால்வகைக் குணங்கள் கொண்ட மங்கையாக அவள் இருந்தாள்.. அவள் மீதான மூர்த்தியின் ஆர்வம் அதிகமானது..

"யார் நீங்க..?"

கதவைத் திறந்த பெரியவர் அறுபதுகளில் இருந்தார்.. அவருக்குப் பின்னால் பொசுபொசுவென வெண்ணிற முடி அடர்ந்திருக்க நீண்ட மூக்குடன் நாய் நின்றிருந்தது..

அதன் விழிகளில் கோபம் இல்லாமல் சிநேகிதப் பளபளப்பு இருந்ததில் அச்சம் அகன்ற அர்ச்சனா சிறிதளவு தைரியம் வரப் பெற்றவளாக மூர்த்தியின் முதுகுக்குப் பின்னாலிருந்து எட்டிப் பார்த்தாள்.. அவளைக் கண்டதும் நாயின் காதுகள் விடைத்துக் கொண்டன.. அதன் வால் இங்குமங்கும் ஆடியது..

"அட.. எங்க வீட்டு ஜிம்மிக்கு உங்களைப் பிடிச்சு போச்சு போல.." நட்புடன் சிரித்தார் பெரியவர்..

இப்படிப்பட்ட மனிதர் இருக்கும் வீட்டில் வளரும் நாய் சிநேகித குணத்துடன்தான் வளரும் என்று நினைத்துக் கொண்டாள் அர்ச்சனா.. மனிதர்களைப் போல வளர்ப்புப் பிராணிகளும் வளரும் சூழலுக்கேற்ற குணாதிசியங்களுடன் தான் வளர்கின்றன..

"ஐ ஆம் மூர்த்தி.."

அவன் சொல்லி வாய் மூடுவதற்குள் பெரியவரின் முகத்தில் பிரமிப்பு கலந்த ஆச்சரியம் வந்தது..

"யார்..? கொடை உல்லன், யூகலிப்ட்ஸ் ஆயில் பேக்டரியோட முதலாளியா..?" என்று பரபரத்தார்..

"யெஸ்.."

"சாரோட முக ஜாடையைப் பார்த்ததுமே மூர்த்தி சார் போல இருக்கேன்னு நினைச்சேன்.. நீங்க எப்படி இங்கே வந்திருப்பீங்கன்னு சந்தேகப்பட்டுக்கிட்டு பேசாமல் இருந்துட்டேன்.. என் தம்பி மகன் உங்க பேக்டரியிலதான் வேலை செய்கிறான் சார்.."

"ஓ.."

"வாசலிலேயே நிற்கறிங்களே.. ப்ளீஸ் கம் இன்.."

சிகப்புக் கம்பள வரவேற்புக் கிடைக்கும் பெரிய மனிதன் அவன் என்ற உண்மை உறைத்ததில் அர்ச்சனா அவனது முதுகை விட்டு விலகி நின்றாள்.. மூர்த்தியின் புருவங்கள் ஆட்சேபமாக சுருங்கின.. அவளது விலகலை அவன் விரும்பவில்லை.. அதை எப்படிச் சொல்வது என்று தெரியாமல் கோபம் கொண்டான்..

"நீதானே விவரம் கேட்கணும்னு வந்த..? இப்ப என்னவோ உனக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லாததைப் போலத் தள்ளி நிற்கிற..?"

வேறு வகையில் அவனது கோபம் அவள் மீது பாய்ந்தது..

"ஐ ஆம் ஸாரி.." குற்ற உணர்வுடன் அவள் முன்னால் வந்து..

"சார்.. உங்க பக்கத்து வீட்டில இருக்கிற சுஹாசினி என்னுடைய பிரண்ட்.." என்று ஆரம்பித்தாள்..

"பக்கத்து வீட்டில் இருந்த சுஹாசினின்னு சொல்லும்மா.." பிழைதிருத்தம் செய்தார் பெரியவர்..

"ஏன் சார்..?"

"இப்ப அந்தப் பொண்ணு இங்கே இல்லைம்மா.. அவ அப்பாவுக்கு டெல்லிக்கு டிரான்ஸ்பர் ஆகிட்டதினால அவங்க ஃபேமிலி டெல்லிக்கு ஷிப்ட் ஆகி சிக்ஸ் மன்த்ஸ் ஆகுதே.."

'டெல்லிக்குப் போயிட்டாளா..?'

அர்ச்சனாவுக்கு கண்களை இருட்டியது.. அடுத்த வரிசையில் இருக்கும் தோழிகளில் அர்ச்சனாவுக்கு

அடைக்கலம் தருவதைப் போன்ற பெரிய மனதும் சொந்தமும் கொண்ட தோழி யார் என்று சல்லடை போட்டு யோசித்துப் பார்த்தாள்.. எவர் முகமும் நினைவில் வரவில்லை..

"சுஹாசினி வீட்டுக்கா வந்தீங்க..?" பெரியவரின் கேள்விக்கு..

"சும்மா பார்த்து விட்டுப் போகத்தான் வந்தா.. ஷி இஸ் மை ரிலேட்டிவ்.. எங்க வீட்டில்தான் இருக்கா.. சுஹாசினி இவளோட பெஸ்ட் பிரண்டாம்.. பார்க்கனும்னு சொன்னா.. அழைத்துக்கிட்டு வந்தேன்.." என்று கோர்வையாகப் பதில் சொன்னான் மூர்த்தி..

அவன் சமாளித்து விட்ட நன்றி மனதில் வந்தாலும் 'நானென்ன இவனுக்கு உறவுக்காரியா..? ஏன் இப்படிச் சொல்கிறான்..?' என்று ஆட்சேபம் கொண்டாள் அர்ச்சனா..

விண்ணுக்கு மண் எப்படி உறவாக முடியும்..? அவன் எங்கே..! அவளெங்கே..? மலைக்கு மடு உறவாக முடியுமா..?

16

"ஓ.. இவங்க உங்க ரிலேட்டிவ்வா..?"

வயதில் சிறியவளாக இருந்தாலும் அவள் மூர்த்தியின் சொந்தக்காரப் பெண் என்பதால் மரியாதையுடன் விளித்தார் பெரியவர்.. அந்த மரியாதை தனக்குரியது அல்ல என்பதில் அர்ச்சனாவின் மனதில் தாழ்வுணர்வு வந்தது..

அவள் மூர்த்திக்குச் சொந்தக்காரப் பெண் அல்ல.. முதல் நாள் இரவு அறிமுகமாகி அவனது வீட்டில் அடைக்கலம் புகுந்திருக்கும் ஓர் அகதி என்பதை அறிய நேர்ந்தால் இந்தப் பெரியவர் இதே மரியாதையுடன் அவளிடம் பேசுவாரா என்ன..?

வயதில் மிகவும் இளையவள் என்பதால்..

'யாரும்மா நீ..? சுஹாசினிக்கு பெஸ்ட் பிரண்டுன்னு சொல்கிற.. அவளோட அப்பாவுக்கு டிரான்ஸ்பர் ஆகி டெல்லிக்கு குடி போயிட்டாங்கங்கிற விவரம் கூடத் தெரியாம இருக்கிற..' என்றெல்லாம் கேள்வி கேட்டுத் துளைத்தெடுத்திருப்பார்..

மூர்த்தியின் சொந்தக்காரப் பெண் என்ற ஒற்றை வரி அர்ச்சனாவைக் காப்பாற்றி விட்டது..

"ஓகே.. தேங்க்ஸ் ஃபார் திஸ் இன்பர்மேசன்.. நாங்க கிளம்பறோம்.."

அதிர்ந்து நின்றிருந்த அர்ச்சனாவின் கையைப் பிடித்து ஏறக்குறைய இழுத்துக் சென்றான் மூர்த்தி.. முதன் முறையாக உணர்ந்த அவனது கரத்தின் ஸ்பரிசத்தில் அவள் நிலைகுலைந்தாள்.. வலிமையான அந்த இரும்புக் கையின் பிடியிலிருந்து தனது கையை விடுவித்துக் கொள்ளம் சக்தி அவளிடம் இல்லாததைப் போல தொய்ந்து காருக்குள் விழுந்தாள்.. முன் சீட்டில் அவளைத் தள்ளி விட்டு காரின் டிரைவர் சீட்டில் உட்கார்ந்த மூர்த்தி காரைக் கிளப்பிய வேகத்தில் கொடைக்கானலின் மலைப்பாதையில் அது பறந்தது..

"அங்கேயே நின்றா என்ன அர்த்தம்..?" மூர்த்தி சீறினான்..

எதனால் அந்த கோபம் என்று தெரியாமல் மருண்டாள் அர்ச்சனா.. அவள் என்ன தவறு செய்தாள்..?

"வேறு என்ன செய்திருக்கனும்..?" புரியாமல் கேட்டாள்..

அவளை முறைத்த மூர்த்தியின் கோபம் எதற்காக என்று புரியாத போதும் அவளை பாதித்தது.. அவன் கோபித்துக் கொள்கிறானே.. ஏனாம்..?

"அந்தப் பெரியவர் என்ன நினைப்பார்..?" அவன் மேலும் சீறினான்..

"என்ன நினைப்பார்..?" அதற்கும் விழித்தாள் அர்ச்சனா..

"நீ தெரிந்து பேசுகிறாயா.. இல்லை தெரியாமல் பேசுகிறாயான்னே தெரியலை.. இந்த உலகம் உன் பிரண்ட் சுஹாசினியோடு அஸ்தமித்து விடவில்லை.. புரிகிறதா..?"

அர்ச்சனாவிற்குச் சத்தியமாக எதுவும் புரியவில்லை.. அதைச் சொன்னால் அவன் இன்னும் கொஞ்சம் திட்டுவான் என்பதினால் வாயை மூடிக் கொண்டு பேசாமல் இருந்தாள்.. கார் எங்கே போகிறது என்று கேட்கவும் பயமாக இருந்தது.. பஸ் ஸ்டாண்டில் இறக்கி விட்டால் தேவலாம்.. அதை எப்படி அவனிடம் சொல்வது..?

மூர்த்தியின் பங்களாவைக் கண்டதும் மறுபடியும் இங்கே வந்திருக்கிறோமா என்ற மருட்சி வந்தது.. கூடவே தாய் வீட்டிற்கு வந்து விட்டதைப் போன்ற ஓர் பாதுகாப்பு உணர்வு.. தாய்ப் பறவையின் சிறகுகளுக்கு அடியில் புதைந்து கொள்ளும் நிம்மதி.. ஓர் இரவுதான் அங்கு தங்கியிருந்தாள்.. வாழ்நாள் முழுவதும் கிட்டாத அமைதியும் நிம்மதியும் அங்கே எப்படிக் கிட்டியது..?

சாவித்திரியைப் பார்க்கப் போகிறாள் என்பதில் மனதுக்குள் ஓர் மலர்ச்சி.. அவளுக்கும் இவளுக்கும் தொப்புள்கொடி பந்தமா உள்ளது...? இல்லையே.. அப்படியிருந்தும் அவளது மடிதேடி இவளது உயிர் பறப்பதற்கான காரணம் யாது..?

மூர்த்தியின் காரைக் கண்டதும் செக்யூரிட்டி அறையை விட்டு வெளியே ஓடி வந்து செக்யூரிட்டி கேட்டைத் திறந்து விட்டான்.. போர்டிகோவை நோக்கிப் போன பாதையில் சீறிப் பாய்ந்தது கார்.. வேலைக்காரப் பெண்ணிடம் எதையோ சொல்லிக் கொண்டிருந்த சாவித்திரி காரைக் கண்டதும் பேச்சை நிறுத்தி விட்டு அருகில் வந்தாள்.. காருக்குள் இருந்த அர்ச்சனாவைப் பார்த்ததும், என்ன, ஏது என்று கேட்காமல்..

"வா.. வா.." என்று சிரித்தாள்..

அர்ச்சனாவுக்குத்தான் கூச்சமாக இருந்தது.. டாட்டா, பைபை சொல்லி விட்டு பெட்டியுடன் சிநேகிதியின் வீட்டுக்குப் போனவள் போன மச்சி திரும்பி வந்தாள் பூ

மணத்தோடு என்ற கதையாய் போன வேகத்தில் திரும்பி வந்திருக்கிறாளே என்று வெட்கம் வெட்கமாக இருந்தது..

சங்கடத்துடன் இறங்கினாள்.. சாவித்திரி அவளைப் பிரியத்துடன் அணைத்துக் கொண்டாள்.. அர்ச்சனாவிற்கு சற்று சங்கடம் குறைவதைப் போல இருந்தது..

"குறிஞ்சி.. அர்ச்சனாவோட பெட்டியை வாங்கிக் கிட்டுப் போய் என் ரூமில் வை.." சாவித்திரி உத்தரவிட்டாள்..

"இருக்கட்டும் ஆண்ட்டி.." அர்ச்சனா மறுத்தாள்..

"என்ன இருக்கட்டும்..? அதெல்லாம் பெட்டி என் ரூமில்தான் இருக்கும்.. நீயும், மூர்த்தியும் சாப்பிட வாங்க.. இன்றைக்கு சன்டே ஸ்பெசல்.. மட்டன் பிரியாணி, சிக்கன் வறுவல், மீன் பொரியல், அவித்த முட்டை.. மெனு போதுமா இன்னும் வேணுமா..?" சாவித்திரி அர்ச்சனாவின் கையிலிருந்த பெட்டியைப் பிடுங்கி குறிஞ்சியிடம் கொடுத்து விட்டு அர்ச்சனாவின் கையைப் பிடித்து இழுத்தபடி படியேறினாள்..

காரைப் பூட்டி விட்டு ஏதும் பேசாமல் முன் கைகளை மடித்துக் கட்டியபடி நின்று அவர்களையே பார்த்துக் கொண்டிருந்த மூர்த்தியின் பார்வையைச் சந்திக்க அவளுக்கு அச்சமாக இருந்தது.. ஏன் அப்படிப் பார்க்கிறான் என்று தெரியாமல் திகைத்தாள்.. சாவித்திரி அவளை இழுத்தபடி முன்னால் செல்ல அர்ச்சனா திரும்பிப் பார்த்தாள்.. அவன் காரருகே அதே போஸில் நின்றிருந்தான்.. ஏனென்று புரியாமல் இதயம் கனத்தது.. வழியோடு போன வழிப்போக்கி அவள்.. அவன் நினைத்திருந்தால் யார் எக்கேடு கெட்டால் என்ன என்று அவளை கண்டு கொள்ளாமல் விட்டு விலகி நடந்திருக்கலாம்.. அவன் அப்படிச் செய்யவில்லை.. அவளுக்கு அடைக்கலம் கொடுத்து அழைத்து வந்தான்.. இப்போதும் அவள் எங்கு செல்லப் போகிறாள் என்று கேட்டு பஸ்ஸ்டாண்டில் இறக்கி விட்டிருக்கலாம்.. அதைச் செய்யாமல் மறுபடியும் அவனது வீட்டிற்கு அழைத்து வந்திருக்கிறான்..

'என்னிடம் இரக்கம் காட்டாதே..' இறைஞ்சியது அவளது நைந்த உள்ளம்..

'நிரந்தரமில்லாத இந்த அன்பினால் யாதொரு பயனும் ஏற்படப் போவதில்லை.. இதை இழந்து முற்றிலுமாக நான் பிரிய நேரும் போது என் மனம் வலிக்கும்.. கதறும்.. நேசங்களற்ற பாலைவனத்தில் நடந்து கொண்டிருப்பவள் நான்... நீ பாலைவனச் சோலையைக் காட்டாதே.. இதில் நீடித்துத் தங்க என்னால் இயலாது எனும் போது இந்த இளைப்பாறுதல் எனக்கான தேறுதலைத் தரப் போவதில்லை.. எந்த நொடியில் நான் பிரிய வேண்டியிருக்குமோ என்ற நினைவே இந்த நொடிகளை நரகமாக்கி விடும்.. வேண்டாம்.. என் மீதான உனது கருணைப் பார்வையை அகற்றி தளைகளற்ற சுதந்திரப் பாதையில் என்னை நடக்க விடு.. அங்கு தனிமை என்னை சூழலாம்.. விரக்தி என்னை வாட்டலாம்.. அதுவே எனக்கான நிரந்தரம் என்ற உணர்வு என்னை சோர்ந்து வீழச் செய்யாமல் தாங்கி நடக்க வைத்து விடும்..'

அவளது பார்வையின் இறைஞ்சுதலைப் படிப்பவனைப் போல அவனது விழிகள் கூர்மையாக அவளது முகத்தை வட்டமிட்டு ஆராய்ந்தன..

"அங்கேயே ஏன் நிற்கிற மூர்த்தி..? உள்ளே வா.."

சாவித்திரியின் அழைப்பில் அவன் உள்ளே வந்தான்.. அவனைப் பார்க்க முடியாமல் தலை கவிழ்ந்தாள் அர்ச்சனா.. அவனது விழிகளின் தீட்சண்யம் அவளைத் துளைத்தது.. புரியாத சோகத்தில் கனத்த இதயத்தைச் சமாதானப் படுத்தும் வகையறியாமல் அவள் கண் கலங்கினாள்..

"இப்போ என்ன ஆச்சுன்னு கண்கலங்கற..?" சாவித்திரி அதட்டினாள்..

"இவங்க தேடிப் போன பிரண்ட் கொடைக்கானலிலேயே இல்லையாம்.. டெல்லிக்குப் போய் ஆறு மாதமாகுதாம்.. அதுக்குத்தான் இந்த அழுகை.." என்றான் மூர்த்தி..

"அதுக்காக அழுகனுமா..? இந்த சின்ன வயசில எத்தனை சோதனைகளைத் தாண்டி வந்திருக்கிற..? கேட்கும் போதே மனசு பதறுது.. அதுக்கெல்லாம்

கலங்காம உறுதியா நின்ன பொண்ணு இதுக்குப் போய் கலங்கலாமா..?" சாவித்திரி அன்புடன் கடிந்து கொண்டாள்..

"இவங்க அதுக்காக மட்டும் அழலைம்மா.. திரும்பவும் நம்ம வீட்டுக்கு வரவேண்டியதாகிருச்சேன்னு அழறாங்க.. இங்கே வருகிறதில் அவ்வளவு வெறுப்பு.." கசப்புடன் சொன்னான் மூர்த்தி..

'இதுதான் இவனோட கோபத்திற்கு காரணமா..?'

அர்ச்சனா இமைகளை உயர்த்தி அவனைப் பார்த்தாள்.. அதற்காகவே காத்திருந்ததைப் போல அவனது பார்வை அவளது பார்வையைக் கவ்விக் கொண்டது.. மருண்டு போனவள் பார்வையைத் தாழ்த்திக் கொண்டதில் அவன் முகத்தில் மென்மைபடர்ந்தது..

"நான் ஒன்று சொல்வேன்.. கேட்பியா..?" என்றான்.

'ஒன்றென்ன.. கோடி சொல்.. கேட்பேன்..' என்று சொல்லத் துடித்த மனதை அடக்கிக் கொண்டு..

"ம்ம்ம்.." என்று முணுமுணுத்தாள் அர்ச்சனா..

"இப்போதைக்கு லீவைப் போடு.. ஆற அமர யோசித்து ஒரு முடிவுக்கு வா.." யோசனை சொன்னான் அவன்..

"லீவைப் போடனும்தான்.. பட்.. எங்கே இருப்பது..?" அதை யோசனையுடன் அவள் கேட்டதும் அவனுக்கு காணாமல் போயிருந்த கோபம் மீண்டும் வந்து ஒட்டிக் கொண்டது..

"எங்கேயோ போய் தொலை.." எரிந்து விழுந்தான்..

"கோவித்துக்காதீங்க ப்ளீஸ்.." கெஞ்சினாள் அர்ச்சனா..

சாவித்திரிக்கு அவளைப் பார்க்கப் பாவமாக இருந்தது.. நல்ல பெண்.. அறியாத ஊரில் தெரியாத மனிதர்களின் வீட்டில் தங்கத் தயங்குகிறாள்.. அதில் தவறேதும் இல்லையே..

"நீ கோபத்தைக் குறைத்துக்க மூர்த்தி.. அவ நிலையில இருந்து யோசித்துப் பாரு.. அவ தயங்கறதில தப்பில்லன்னு உனக்கே புரியும்.."

"என்னம்மா தப்பில்ல..? இங்கே என்ன சிங்கம், புலி, கரடியா இருக்கு..?"

"இல்லேப்பா.. ஆண்களோட உலகம் வேறு.. பெண்களோட உலகம் வேறு.. அவங்க நாலையும் யோசிக்கனும்.."

"அப்படி யோசித்துத்தான் இந்த மேடம் மரியாதைக்குரிய லீலாவதி அம்மையாருடன் ஒரே வீட்டில் இருந்தாங்களோ..? அந்த வீட்டை விட இந்த வீடு பாதுகாப்பானதுன்னு சொல்லுங்கம்மா.."

சாவித்திரி அர்ச்சனாவைப் பார்த்து இதற்கு என்ன சொல்கிறாய் என்பதைப் போல புன்னகை பூத்தாள்... அர்ச்சனா தவித்துப் போனாள்... அவள் மனதின் உணர்வுகளை எப்படிப் புரிய வைப்பாள்..?

மூர்த்தியை நேரடியாகப் பார்த்த அவளது விழிகளில் தெரிந்த சோகத்தில் அவன் பேச்சை நிறுத்தினான்..

"இந்த வீட்டை விடப் பாதுகாப்பான இடம் இந்த உலகத்தில் வேறு எங்கேயும் இல்லை ஆண்ட்டி.. ஓர்நாள் நைட்தான் இங்கே தங்கினேன்.. வாழ்க்கை முழுவதும்

நான் அனுபவித்த வேதனைகளுக்கு விடிவு வந்ததைப் போல இருந்தது.. அப்படியொரு நிம்மதியான உறக்கத்தை உறங்கினேன்... யாருமே இல்லைன்னு தனிச்சு நின்னவளுக்கு ஆலமரம் போல அடைக்கலம் கொடுத்து நானிருக்கேன் உனக்குன்னு அரவனைச்சுக்கிட்டீங்க.. உங்க மனசு யாருக்கு வரும் ஆண்ட்டி..? சாரைப் போல நல்ல மனிதர்களைப் பார்ப்பதே அரிது.."

"தெரியுதில்ல.. அப்புறமும் ஏன்ம்மா மூர்த்தி சொல்கிறதை மறுத்துப் பேசற..? கொஞ்சநாள் இங்கேயே இருக்கலாமே.."

"இருக்கலாம்தான்.. அதற்குப் பின்னால்..?"

அர்ச்சனாவின் இந்தக் கேள்வியில் சாவித்திரி மூர்த்தியின் முகம் பார்த்தாள்.. அவன் எதுவும் சொல்லாமல் அர்ச்சனாவையே பார்த்துக் கொண்டிருந்தான்..

"என்றைக்கிருந்தாலும் நான் இந்த வீட்டை விட்டு வெளியேறித்தான் ஆகனும் ஆண்ட்டி.. இப்பப் போனா கொஞ்சம் வேதனையோடு போயிரும்.. அதுவே கொஞ்சநாள் கழித்துப் போனா என்னால் தாங்கிக் கொள்ள முடியாது.. நான் தாய், தகப்பனில்லாத

அநாதை ஆண்ட்டி.. அன்புக்காக ஏங்கறவ.. நீங்களும் சாரும் அதை அள்ளியள்ளிக் கொடுக்கிறவங்களா இருக்கறீங்க.. மனசார அந்த அன்பு மழையில நனைஞ்சுட்டு வெளியேறனும்னா எப்படி முடியும் ஆண்ட்டி..? நான் செத்தே போயிருவேன்.. வேண்டாம் ஆண்ட்டி.. என்னைப் போக விடுங்க.. நான் வேற ஏதாவது ஒரு பிரண்ட் வீட்டுக்குப் போயிடறதுதான் எனக்கும் நல்லது.. உங்களுக்கும் நல்லது.. ப்ளீஸ் ஆண்ட்டி.. நான் எங்கேயாவது போயிடறேன் ஆண்ட்டி.."

அர்ச்சனா அழ ஆரம்பித்தாள்.. கேவலுடன் ஆரம்பித்த அவளது அழுகை தேம்பலாகி கதறலானது.. மூர்த்தியின் கண்கள் கலங்கிச் சிவந்தன.. அவன் சட்டென அந்த இடத்தை விட்டு நடந்து விட்டான்..

## 17

'அப்பாடா.. கணக்கு ஒரு வழியா டேலியாகிருச்சு..'

நிம்மதியுடன் கம்யூட்டருக்கு சட்-டவுன் கொடுத்தாள் அர்ச்சனா.. சீட்டை விட்டு எழுந்து ஹேண்ட் பேகில் இருந்த ஸ்வெட்டரை அணிந்து கொண்டு பேக்கை தோளில் மாட்டிக் கொண்டாள்.. மேனேஜரின் அறையை எட்டிப் பார்த்து போய் வருகிறேன் என்று சொல்லி விட்டு விரல் பதிக்கும் இயந்திரத்தில் பெருவிரல் ரேகையைப் பதித்தாள்..

'என்னதான் படித்துப் பட்டம் வாங்கினாலும் இந்த கம்யூட்டர் கடைசியில் கைநாட்டா ஆக்கிருச்சு..'

மனதுக்குள் சிரித்தபடி வங்கியின் கதவைத் திறந்து சாலையில் இறங்கினாள்.. கொடைக்கானலின் குளிர், ஸ்வெட்டரையும் மீறி 'சில்'லென அவளைத் தாக்கியது.. குளிர் நிரம்பிய அந்த சூழல் அவளுக்குப் பிடித்தமானதாக இருந்தது.. வங்கியின் ஓரமாக வாகனங்கள் நிறுத்தி வைக்கப் பட்டிருந்த இடத்துக்கு நடந்தாள்.. புத்தம்புது ஸ்கூட்டி அவளை 'வா' வென கண் சிமிட்டி அழைத்தது.. அருகில் சென்று தொட்டபோது ஒயிலாக தலையை அசைத்து மயக்கியது..

அவள் புதிதாக ஸ்கூட்டி வாங்க முனைந்தபோது மூர்த்தி அதைத் தடுத்தான்..

"என் காரில் டிராப் பண்ணி பிக்-அப் பண்ணிக்க மாட்டேனா..?" என்று வாதாடினான்.

"டோன்ட் மிஸ்டேக் மி சார்.. உங்களை டிபண்ட் பண்ணாம என் வேலையை நானே பார்த்துக்கனும்னு நினைக்கிறேன்.." என்று அர்ச்சனா மறுத்து விட்டாள்..

இந்த வாக்குவாதத்தில் சாவித்திரி இருவருக்குமே ஆதரவு கொடுக்கவில்லை.. இது உங்கள் பிரச்னை என்பதைப் போல புன்னகையுடன் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள்..

'இந்த புன்னகை இவள் கொடுத்தது..' அர்ச்சனாவை கனிவுடன் பார்த்தான் மூர்த்தி..

அர்ச்சனாவின் மீது சாவித்திரி ஆழ்ந்த பாசத்தை வைத்திருந்தாள்... அவளது வரவிற்குப் பின்பு சாவித்திரியிடம் தெரிந்த மலர்ச்சியையும் புத்துணர்வையும் மூர்த்தி கவனித்துக் கொண்டுதான் இருந்தான்.. சாவித்திரி மூர்த்தியின் நிழல்..! அவன் எங்கே நகர்ந்தாலும் தானும் நகர்ந்து வரும் நிழல்..! அவன் பிறந்த போது கையில் எடுத்துக் கொண்ட சேவகி..! அவனை வளர்ப்பதற்காக அவனது தாய், தந்தையால் நியமிக்கப்பட்ட ஆயாதான்..

அவனை பாசத்துடன் அரவனைத்து தன்னலமில்லாத அன்பைப் பொழிந்து வளர்த்ததில் அன்னை..! மூர்த்தியைப் பெற்றெடுத்த தாய் வசுந்தராவின் தூரத்துச் சொந்தம்.. குழந்தையில்லை என்பதால் கணவன் மறுமணம் செய்து கொள்ள சாவித்திரி கணவனைப் பிரிந்து தாய் வீட்டிற்கு வந்து விட்டாள்.. சிறுவயதுத் தோழியின் துயரத்தைக் காணச் சகிக்காமல் தன் குழந்தையை வளர்க்கும் சேவகியென்ற பெயரில் தன் குடும்பத்துக்குள் வசுந்தரா அவளை இழுத்துக் கொண்டாள்... அன்று முதல்

இன்று வரை மூர்த்தியை விட்டு அகலாமல் அவனைக் கண்ணுக்குள் வைத்துக் கவனித்துக் கொண்டிருக்கிறாள் சாவித்திரி..

"உன்னை நான் வளர்க்கலை மூர்த்தி.. என்னைத்தான் நீ வாழ வைக்கிறாய்.. உண்மையில் நீ என் தாய்.."

அடிக்கடி இதைச் சொல்லிக் கண்கலங்கும் சாவித்திரி மூர்த்தியின் யசோதை..! தேவகியான வசுந்தரா பெற்றெடுத்த அருமந்தச் செல்வனை மடியில் ஏந்தி வளர்க்கும் பாக்கியம் பெற்ற புண்ணியவதி..

கூட்டுக் குடும்பத்தில் தன் குழந்தையென்று தனிக் கவனம் எடுத்து வளர்க்க முடியாது.. தவிரவும் வசுந்தரா மெலிதான தேகத்துடன் இருப்பாள்.. அதிர்ந்து வேலை செய்து பழக்கமில்லாதவள்.. மூர்த்தியையும் மிருதுவளா-வையும் சாவித்திரிதான் வளர்த்தாள் என்றாலும் மூர்த்தியின் மீதுதான் சாவித்திரி அதிகப் பாசம் வைத்திருந்தாள்.. அவனைத் தரையில் நடக்க விடாமல் இடுப்பில் சுமந்தாள்.. அதற்கான காரணத்தை அவளது ஆழ்மனமே அறியும்..

தாய்மையடைய முடியாதவள் என்று அவளது கணவன் அவள் கண் முன்னே வேறொருத்திக்குத் தாலி கட்டி அவளை உயிருடன் கொன்று புதைத்தான்.. அவனை வேண்டாம் என்று புறக்கணித்து விலக்கி வைத்து விலகி வந்த வைராக்கியசாலிதான் சாவித்திரி.. அவளுக்கு கிட்டாது என எட்டாக்கனியாய் இருந்த தாய்மையை கிட்ட வைத்தவன் மூர்த்தி.. அவளது பிள்ளைக்கலி தீர்க்கப்

பிறந்து வந்தவன்.. அவளை 'ஆயா' என்று அழைக்காமல் 'அம்மா' என்று அழைத்தவன்..

பரம்பரை கோடிஸ்வரரான மதுசூதனன் சில கட்டுதிட்டங்களைக் கொண்டவர்.. ஆயாவை அம்மா என்று அழைப்பதா என்ற அவரது பலமான ஆட்சேபனையினால் மற்றவரின் முன்பு 'சாவித்திரியம்மா..' என்று அழைக்கப் பழக்கப் படுத்தப் பட்டாலும் தனிமையில் சாவித்திரியை 'அம்மா' என்றுதான் அழைப்பான்..

மூர்த்தியின் தங்கையான மிருதுளா அப்படியல்ல.. அவள் சாவித்திரியிடம் அதிகமாக ஒட்ட மாட்டாள்.. வசுந்தராவுடன்தான் இருப்பாள்.. சாவித்திரியை 'அம்மா' என்று அழைக்காமல் 'சாவித்திரி' என்று பெயர் சொல்லித்தான் அழைப்பாள்.. மூர்த்தியை விட ஆறு வயது இளையவள் என்பதால் மூர்த்தி தங்கையைக் கண்டிப்பான்.. அவனது கோபத்திற்கு பயந்து 'சாவித்திரியம்மா' என்று அழைத்தாலும் அவள் 'அம்மா' என்று சாவித்திரியை அழைத்ததே இல்லை...

பெரிய வீட்டில் அதுவே பெரிய விசயம் என்பதால் சாவித்திரி அதைப் பொருட்படுத்தாமல் மிருதுளாவிடம் அன்பாகவே இருப்பாள்.. வளர, வளர மிருதுளாவிடம் கோடிஸ்வரக் குடும்பத்துக்கேயுரிய குணநலன்கள் வளர ஆரம்பித்தன.. அவள் சாவித்திரியை விட்டு முற்றிலுமாக விலகினாள்.. அவள் சாவித்திரி மதுசூதனன் வீட்டில் சமையல்காரியாக மாறினாள்.. அப்போதும் அவளை விட்டு விலகாமல் 'அம்மா' என்றழைத்து அவள் கையால் பரிமாறினால்தான் சாப்பிடுவேன் என்று அடம் பிடித்து அவளுக்கான தாய்மை ஸ்தானத்தை அங்கீகரித்து அளித்தவன் மூர்த்தி..

சாவித்திரி மூர்த்தியின் மீது உயிரையே வைத்திருந்தாள்.. அவனுக்காக தன் உயிரையும் கொடுப்பாள்.. மதுசூதனனின் வீட்டை விட்டு மனரணத்துடன் மூர்த்தி வெளியேறிய போது எவரும் சொல்லாமல் அவனுடைய நிழலாக அவனைப் பின்பற்றி வெளியேறியவள் சாவித்திரி.. குடும்பத்தின் சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்பட்டு

மனக்குமுறலை வெளிக்காட்ட முடியாமல் சூழ்நிலைக் கைதியாக மூர்த்தியின் தாய் வசுந்தரா நின்றிருக்க.. அவனை வளர்த்த தாயான சாவித்திரி எவருக்கும் கட்டுப் படாமல் எனக்கு என் மகன்தான் முக்கியம் என்று சுதந்திரப் பறவையாக அவனைத் தொடர்ந்தாள்.. அன்று மூர்த்தி இருந்த மனநிலையில் சாவித்திரியின் அன்பும் கவனிப்பும் இல்லாமலிருந்திருந்தால் அவன் என்னவாகி இருப்பான் என்றே சொல்ல முடியாது.. அந்த அளவுக்கு மனிதர்களின் மீதும் உறவுகளின் மீதும் நம்பிக்கையற்றுப் போனவனாக அவன் இருந்தான்..

வளர்த்த மகனின் துயரத்திலிருந்து அவனை மீட்க முடியாமல் தானும் அவனது துயரத்தில் பங்கெடுத்து அதில் புதையுண்டு போன சாவித்திரியின் முகத்தில் எப்போதும் ஓர் சோகம் தவழ்ந்து கொண்டே இருக்கும்.. அர்ச்சனாவின் வரவுக்குப் பின்னால் அது தொலைந்து போயிருந்தது..

மூர்த்தியின் ஆட்சேபனையை மீறி அர்ச்சனா பிடிவாதமாக தனக்கென்று ஓர் ஸ்கூட்டியை வாங்கிக் கொண்டாள்.. அதைத் தவணை முறையில் அவள் வாங்கிய போது..

"நான் பணம் கொடுக்க மாட்டேனா..?" என்று அவன் சண்டைக்கு வந்தான்..

"நமக்குள் இருக்கிற டீலை மறந்துட்டுப் பேசறிங்களே சார்.." புன்னகையுடன் அவள் நினைவூட்டினாள்..

"எதற்கெடுத்தாலும் இதை ஒன்னைச் சொல்லிருவியே.." என்றாலும் அவனும் அதற்கு மேல் அவளை வற்புறுத்தவில்லை..

அர்ச்சனாவின் தோழி கொடைக்கானலில் இல்லை, டெல்லிக்கு குடி பெயர்ந்து விட்டாள் என்றானதும் அர்ச்சனா சாத்தூருக்குக் கிளம்பத் துடித்தாள்.. மூர்த்தியின் கேள்விகள் அவளை தடுத்து நிறுத்தின..

"அங்கே போனதும் உன்னை ஆபத்துக்கள் சூழ்ந்து விடும்.. உனக்குன்னு கவர்ண்ட்மெண்ட் வேலையிருக்கு.. நீ லேடிஸ் ஹாஸ்டலில் தங்கிக்கலாம் என்றாலும் அந்த லீலாவதியும்

பாண்டுரங்கனும் உன்னை நிம்மதியாய் வேலை செய்ய விட்டு விடுவாங்களா..?"

விட மாட்டார்கள் என்பதில் மனம் கலங்கினாள் அர்ச்சனா.. அதற்காக அவள் கொடைக்கானலிலேயே இருந்து விட முடியுமா..?

"ஏன் முடியாது..?" இலகுவாக கேட்டான் மூர்த்தி..

"எப்படி சார் முடியும்..?"

"முடியாததுன்னு இந்த உலகத்தில் எதுவுமே இல்லை.. நாம முயற்சி மட்டும்தான் செய்யனும்.."

"முயற்சி செய்கிறதுக்கும் ஒரு காரணம் இருக்கனுமில்ல..? கொடைக்கானலில் எனக்குன்னு யாரிருக்கா..?"

"ஏன்..? நாங்க இல்லையா..?"

மூர்த்தியின் ஆழ்ந்த குரல் அவளை உலுக்கியது.. சாவித்திரியைப் பார்த்தாள்.. அவளது விழிகளில் தெரிந்த பாசமும் சொந்தமும் அர்ச்சனாவை அரவணைத்தன.. இது எப்படி சாத்தியமாகும் என்று மலைத்தாள் அர்ச்சனா..

"நீ எங்களை யாரோன்னு நினைக்கிற.. நாங்க உன்னை வேத்து மனுஷியா நினைக்கலை.. எங்க சொந்தமாத்தான் நினைக்கிறோம்.." மனத்தாங்கலுடன் சொன்னாள் சாவித்திரி..

"ஆண்ட்டி.. நான்.." அர்ச்சனா அழுது விட்டாள்..

"அழாதேம்மா.." அர்ச்சனாவின் கண்ணீரை துடைத்து விட்டாள் சாவித்திரி..

"உறவுன்னு சொல்லிக்க ஆளில்லாத அநாதை ஆண்ட்டி நான்.."

"இங்கே உறவுன்னு சொல்லிக்க ஊர் முழுவதும் ஆளிருந்தும் மூர்த்தி தனிச்சு நிற்குது.. நான் அதோட நிழலில் நிற்கிறேன்.. என்னோடு நீயும் சேர்ந்து நின்றாத் தப்பில்ல அர்ச்சனா.. மூர்த்தி ஆதரித்து நிழல் கொடுக்கும்

ஆலமரம்..! மூர்த்தியோட நிழலில் நீயிருக்கும் போது யாராலும் உன்னை நெருங்க முடியாது.."

"ஹௌ இஸ் இட் பாஸிபிள்..?"

"முடியும்ன்னு நாம நினைத்தா முடியும் அர்ச்சனா.. உன் பேங்கில இப்போதைக்கு லீவ் சொல்லு... கொடைக்கானலுக்கு டிரான்ஸ்பர் கேளு.. மூர்த்தி அதை ஈஸியா வாங்கிக் கொடுத்து விடும்.. எங்களோடு இருந்தபடி வேலையைப் பாரு.."

கேட்க நன்றாகத்தான் இருந்தது.. மனதுக்கு இதமாகத்தான் இருந்தது.. சுட்டெரித்த வெயிலில் இருந்து தப்பிக்க குளிர் மரத்தின் நிழல் அவளை இருகரம் நீட்டி 'வா' வென அழைக்கிறது.. ஏற்றுக் கொண்டால்தான் என்ன..?

களைத்திருந்த மனது இளைப்பாறுதலை விரும்பியது.. சாவித்திரியின் பாசத்தைப் புறக்கணிக்க அர்ச்சனாவினால் முடியவில்லை.. மூர்த்தியைப் பொருத்தவரை அவன் நேர்மையாளன்.. அவன் வீட்டில் தங்கினால் அர்ச்சனாவிற்கும் பாதுகாப்பு கிடைக்குமே..

"ஓகே ஆண்ட்டி.." சம்மதித்த அர்ச்சனா..

"பட்.. ஒன் கண்டிசன்.." என்றாள்..

"என்ன..?" மூர்த்தியின் புருவங்கள் உயர்ந்தன..

"நான் சொல்லப் போகிறதைக் கேட்டு உங்களுக்குச் செமத்தியா கோபம் வரும்தான் சார்.. என்னோட சுயமரியாதையையும் நீங்க கன்சிடர் பண்ணனும்.."

"பண்ணிட்டாப் போச்சு.."

"இங்கே நான் தங்கறதா இருந்தா பேயிங்-கெஸ்ட்டாத்தான் தங்குவேன்.."

அர்ச்சனா சொன்னதின் அர்த்தம் புரியாமல்..

"பேயிங்-கெஸ்ட்டா..? இவ என்ன மூர்த்தி பேய், அது இதுன்னு பயமுறுத்தறா.." என்று மூர்த்தியிடம் அர்த்தம் கேட்டாள் சாவித்திரி..

"அம்மா.. மேடம் பேயைச் சொல்லலை.. அம்மணி இங்கே தங்கறதா இருந்தா நம்ம விருந்தாளியாத் தங்க மாட்டாங்களாம்.." வேண்டுமென்றே ராகம் இழுத்தான் மூர்த்தி..

"அதுவும் சரிதானே.. இந்த வீட்டிலே ஒருத்தியாத் தங்கிக்கறேன்னு சொல்கிறா போல.. தங்கம் போல இருக்கட்டுமே.."

"டயமண்ட் போல கூட இருக்கட்டும்.. எனக்கொன்னும் அப்ஜெக்சன் இல்ல.. அம்மையார் சொல்கிறதே வேற.."

"என்னவாம்..?"

"பணம் கொடுத்துத் தங்கற விருந்தாளியாத்தான் இருப்பாங்களாம்.. அதாவது மேடம் நம்ம வீட்டை ஹாஸ்டலாக்கறாங்க.."

அவன் கோபமாய் சொல்கிறானா இல்லை கேலியாய் சொல்கிறானா என்று கண்டு பிடிக்க முடியாமல் முகம் சிவந்த அர்ச்சனா பேசாமல் இருந்தாள்.. அவளையே துளைப்பதைப் போல அவன் பார்த்து வைத்தான்.. அதை உணர்ந்தவளாய் லேசாக இமைகளை உயர்த்தி அவனைப் பார்ப்பதும் அவனது பார்வையை சந்தித்து விட்டால் பதறிப் போனவளாக இமைகளைத் தாழ்த்திக் கொள்வதுமாக இருந்தாள்.. அவனது இதழ்களில் புன்னகை அரும்பியது.

"ஓகே.. உன் உணர்வுகளையும் சுயமரியாதையையும் நான் மதிக்கிறேன்.. உன் விருப்பம் போல இந்த வீட்டில் பேயிங்-கெஸ்ட்டா இருந்துக்கலாம்.. இப்போ சந்தோசம் தானே..?"

"சந்தோசம்தான் சார்.. என்னுடைய செலவுகளை நானே பார்த்துக்குவேன்.. அதிலும் நீங்க தலையிடக் கூடாது.."

அடுத்தடுத்த அவளது நிபந்தனைகளில் ஆட்சேபம் கொண்டவனாய் இமைக்காமல் அவளைப் பார்த்து தன் ஆட்சேபத்தை அவன் உணர்த்தினான்.. படபடக்கும் இமைகளோடு அவனது பார்வையை பிடிவாதமாக அவள் எதிர் கொண்டு நின்றதில் இதழோரப் புன்னகையுடன்..

"எதிலும் பிடிவாதம்..! ஊம்..? ஓகே டன்.." என்று அவளது நிபந்தனைகளை ஒப்புக் கொண்டான்..

இப்படித்தான் அர்ச்சனா மூர்த்தியின் இல்லத்தில் அடைக்கலமானாள்..

## 18

ஸ்வெட்டரை மீறித் துளைத்த குளிரை விரும்பி அனுபவித்தாள் அர்ச்சனா.. காட்டன் புடவையும், ஸ்வெட்டரும், தலையைச் சுற்றிக் கட்டப்பட்ட ஸ்கார்ஃபுமாக ஸ்கூட்டியில் செல்லும்போது தன்னைக் கொடைக்கானல்வாசியாகவே உணர்ந்தவளுக்குக் குதூகலமாக இருந்தது.. சாத்தூரும் அங்கு காத்திருக்கும் ஆபத்துக்களும் மறந்தே போய் புதியதோர் உலகத்தில் புகுந்து விட்டதைப் போல உணர்ந்தாள்.. மனமெங்கும் சந்தோசம் நிரம்பியிருந்தது..

வாழ்க்கையின் எந்தத் திருப்பத்தில் பூங்கொத்து காத்திருக்கும் என்பதை அறிந்தவர் யார்..? காலம் நமக்கு மன ரணங்களை மட்டும் பரிசளிப்பதில்லை.. சில நேரம் கனிவு பொங்கும் தருணங்களையும் பரிசளிக்கக் கூடும் என்பதை கணக்கிட்டவர் யார்..? விதி வகுத்த பாதையில் முள்கள் மட்டுமல்ல.. பூக்களும் பரத்தப்பட்டிருக்கும் என்பதை உணர்ந்தவர் யார்..?

சாத்தூரின் சுடு மணலில் நடந்த பாதங்களில் கொப்பளித்த புண்களை பனி விழும் ஓர் இரவு மாற்றியமைத்து குளிர் நிரம்பிய காற்றை இதமாக வீசி புண்களை ஆற்றி மலர் பாதங்களாக மாற்றி விடும் மாயத்தை யார் செய்தது..?

'மூர்த்தி எனும் கந்தர்வன் செய்தான்..'

அர்ச்சனாவின் மனமும் முகமும் கனிந்தன.. 'மூர்த்தி..' என்ற பெயர் மனதில் ஒலித்தாலே போதும்.. அவளது மனமும் முகமும் மென்மையாகி விடுகின்றன.. என்ன செய்தானோ,

ஏது செய்தானோ.. அர்ச்சனா விடுப்பு சொல்லி கொடைக்கானலுக்கு மாறுதல் கேட்ட ஒரு வாரத்திற்குள் அவள் கேட்ட மாறுதல் கிடைத்து விட்டது.. மூர்த்தியின் பங்களா முகவரிக்கு வந்த கொரியரைப் பிரித்துப் படித்த அர்ச்சனா அதை நம்ப முடியாமல் பிரமித்துப் போய் நின்று விட்டாள்..

சாத்தூருக்கு இனி அவள் திரும்ப வேண்டிய தில்லை.. அங்கே அவள் பார்த்து வந்த வங்கி வேலை கொடைக்கானலுக்கு மாற்றலாகி விட்டது.. சாவித்திரியின் அருகே மூர்த்தியின் பங்களாவில் அவள் பணம் கொடுத்துத் தங்கும் விருந்தாளியாக தங்கிக் கொள்ள எந்தத் தடையுமில்லை என்ற நினைவே அவளுக்குத் தித்தித்தது.. கட்டுக்கள் அகன்று விட்டுச் சிறகடிக்கும் சிட்டுக் குருவியைப் போல அவள் மனது சிறகடித்தது.. விட்டு விடுதலையான உணர்வைத் தந்தவனுக்கு நன்றி சொல்ல வார்த்தை வராமல்..

"தேங்க்..யு.." என்று கண்களில் நீர்மல்கத் தடுமாறினாள்..

'இதை நாங்க உனக்குச் சொல்லனும்மா..' சாவித்திரி மனதில் நினைத்துக் கொண்டு நெகிழ்ந்தாள்..

அர்ச்சனா அந்த வீட்டிற்கு வந்து தங்கியிருக்கும் இந்த ஒரு வார காலத்தில் மூர்த்தி இரவு உலாவலுக்கு என்று பனியிலும் குளிரிலும் நனைந்தபடி கொடைக்கானலின் சாலைகளில் சுற்றிக் கொண்டிருக்கவில்லை.. நேரத்தோடு சாப்பிட்டு நேரத்தோடு தூங்கப் போனான்.. அந்தத் தூக்கத்தையும் நிம்மதியாகத் தூங்கினான்..

'அவன் மட்டும்தான் தூங்கினானா..?'

அவன் நிம்மதியாக உறங்குவதில் நிம்மதி கொண்டு சாவித்திரியும் நிம்மதியாக உறங்கினாள்.. அவளது கை வளைவில் முயல் குட்டியைப் போல ஒன்றிக் கொண்டு பாதுகாவலில் இருக்கும் நிம்மதியுடன் அர்ச்சனாவும் நிம்மதியாக உறங்கினாள்..

இந்த நிம்மதியைத் தந்தது தான்தான் என்று தெரியாமல் நன்றி சொல்லிக் கொண்டிருந்த அந்த சின்னஞ்சிறு பெண்ணைத் தட்டிக் கொடுத்து..

"போதும்.. போதும்.. எதுக்கெடுத்தாலும் அழுவியா..?" என்று செல்லமாக அதட்டி பேச்சை மாற்றினாள் சாவித்திரி..

இப்படி நிம்மதி, நிம்மதி உங்கள் சாய்ஸ் என்று நிம்மதியை அள்ளி வழங்கிய அர்ச்சனா தான் பெற்ற மனநிம்மதியுடன் மூர்த்தியின் பங்களாவில் சாவித்திரியின் பராமரிப்பில் ஐக்கியமானாள்..

அர்ச்சனாவுக்கு கொடைக்கானலைப் பிடித்திருந்தது..

"அப்படியா.. எங்க ஊரை உனக்குப் பிடிச்சிருக்கா..? எவ்வளவு பிடிச்சிருக்கு..?" என்ற மூர்த்தியின் கேள்விக்கு வானத்தைச் சுட்டிக் காட்டினாள் அவள்..

அவளுக்கு சாத்தூரைத் தவிர்த்து அனைத்து ஊர்களையும் பிடிக்கும் என்பதில் இரக்கம் கொண்டான் மூர்த்தி.. சிறகில் அடிபட்டிருந்த சிறு பறவையின் காயத்திற்கு மருந்திட்டு வானத்தில் பறக்க வைத்துப் பார்ப்பதில்தான் எத்துனை சந்தோசம் ஏற்படுகிறது..!

அர்ச்சனா சிறகை விரித்துப் பறக்க ஆரம்பித்து விட்டாள்.. உல்லன் ஸ்வெட்டர்.. சால்வையென்று கொடைக்கானல் வாசியாக மாறி விட்டாள்.. அந்த மாற்றத்தில் வெகு இயல்பாக அவள் பொருந்திக் கொண்டது மூர்த்திக்கு மன நிறைவாக இருந்தது.. அவள் பட்ட சோகத்திற்கு அழுத முகமும், வடியும் கண்ணீருமாக வலம் வந்திருக்க வேண்டும்.. அவள் அப்படியில்லை.. சிரித்த முகமாக இருந்தாள்.. சாவித்திரியிடம் செல்லம் கொஞ்சினாள்.. மூர்த்தியுடன் உலாவச் சென்று வந்தாள்.. இரவு உணவு முடிந்ததும் மூவருமாக சேர்ந்து ஹால் சோபாக்களில் உட்கார்ந்து டிவி பார்த்தார்கள்.. சாவித்திரியும் அர்ச்சனாவும் சீரியல்களைப் பார்த்துக் கதையைப் பற்றித் தங்களுக்குள் கலந்தாய்வு செய்து பட்டிமன்றம் போல எதிரெதிர் அணிகளில் நின்று சண்டையிட்டுக் கொள்வார்கள்..

"உங்களையெல்லாம் திருத்தவே முடியாது.."

அவர்களின் சண்டைக்கு மத்தியஸ்தம் செய்ய முடியாமல் மூர்த்தி தலையில் அடித்துக் கொள்வான்..

"திருத்தற அளவுக்கு நாங்க என்ன செய்துட்டோமாம்..?"

இருவரும் தங்களுக்குள் நடந்த சண்டையை மறந்து ஒன்றுகூடி மூர்த்தியிடம் சண்டைக்குப் போவார்கள்..

"உங்களுக்கு சினிமாவும் சீரியலும்தான் வாழ்க்கை.."

"ஆண்களுக்கு மட்டும் என்ன..? எப்பப் பார்த்தாலும் நியுஸ், நியுஸ்ன்னு நியுஸைக் கட்டிக்கிட்டு அலைகிறது தானே வாழ்க்கை..? என்ன ஆண்ட்டி..? நான் சொல்கிறது சரிதானே..?"

"நீ சொல்கிறது எல்லாமே சரியாத்தானே இருக்கும் அர்ச்சும்மா.."

"இங்கே பாருடா.. அர்ச்சும்மாவாம்.. இந்த வாய்தான் சீரியலில வில்லிக்கு ஆதரவாப் பேசி இதே அர்ச்சும்மாவிடம் சண்டை போட்டது.."

"அது அப்போ.."

"எப்போ..?"

"எதிரெதிர் கட்சியில இருந்தப்ப.."

"இப்போ..?"

"ஒரே கூட்டணியில ஐக்கியமாகிட்டோம்ல்ல.."

"பிழைச்சுக்குவீங்கம்மா.. நீங்கள்ளாம் அரசியலில பெரிய தானைத் தலைவியா இருந்திருக்க வேண்டியவங்க.. உங்க நேரம்.. கொடைக்கானலில் இருந்துக்கிட்டு அவஸ்தைப் படாறீங்க.."

"புரிஞ்சுக்கிட்டாச் சரி.."

"இப்போப் புரிஞ்சுக்கிட்டேனில்ல.. அதுசரி.. நம்ம பேங்க் மேடம் என்னவோ நான் நியுஸை மேரேஜ்

பண்ணிக்கிட்டதாச் சொன்னாங்களே.. எதை வைத்து அப்படிச் சொன்னாங்களாம்..?"

"ஹலோ சார்.. நான் உங்களை மட்டும் சொல்லலை.. எல்லா ஆண்களையும் தான் சொன்னேன்.."

"ஏனாம்..?"

"பின்னே என்ன சார்.. காலையில எழுந்து ஜாகிங் போகிறேன் பேர்வழின்னு பார்க் பக்கமாப் போய் கொஞ்சம் நொண்டியடிச்சுட்டு பெஞ்சில உட்கார்ந்து ஊர் நிலவரம் முதல் உலக அரசயில் வரைக்கும் அக்கப் போர் பேசறது.."

"அப்புறம்..?"

"வருகிற வழியில டீக்கடை பெஞ்சில உட்கார்ந்து 'டீ' சாப்பிட்டுக்கிட்டு இன்னும் கொஞ்சம் அரசியலை அலசி ஆராய்கிறது..

"செம ஆராய்ச்சிதான்.. அப்புறம்..?"

"வீட்டுக்கு வந்ததும் 'உஸ்ஸ் அப்பாடா' ன்னு என்னவோ இமயமலையோட எவரெஸ்ட் சிகரத்தையே தொட்டுட்டு வந்ததைப் போல பில்ட் அப் காட்டிக்கிட்டு ஒரு கையில காபியும் மறுகையில காலைப் பேப்பருமா உட்கார்ந்துடறது.."

"அடேங்கப்பா.. அப்புறம்..?"

"காபியைக் குடிச்சு முடிச்சதும் பேப்பரைத் தூக்கிக் கடாசிட்டு டிவியில நியுஸ் சேனலைப் போட்டுக்கிட்டு கொட்டக் கொட்ட முழிச்சுப் பார்க்கிறது.."

"ஆகமொத்தம் ஆண்களின் உலகமே நியூஸ்தான்ங்கிற..?"

"ஆமா.. பின்னே..? நியுஸ் சேனல்கள் எல்லாம் உங்களை நம்பித்தானே ரன் ஆகிக்கிட்டு இருக்கு.."

அர்ச்சனா விட்டுக் கொடுக்க மாட்டாள்.. மூர்த்தியுடன் சரிக்குச் சரியாக வழக்கடிப்பாள்.. அவனுக்கு அவளுடன் வார்த்தையாடுவது என்றால் அல்வாச் சாப்பிடுவதைப் போல.. இருவரும் தம்தம் தூக்கங்களையும்

துயரங்களையும் மறந்து அரட்டையடித்துப் பேசிச் சிரிப்பதைக் கவனித்துக் கொண்டிருக்கும் சாவித்திரியின் மனம் நிறையும்..

அந்த இருவரின் துயரங்களையும் மன வலிகளையும் அறிந்தவள் அவள்.. மருந்தினால் ஆற முடியாத காயங்கள் அவர்களது காயங்கள்.. அவை ஆறினவோ இல்லையோ.. அவற்றின் வலியறியாத சிரிப்போடு அவர்கள் இருப்பதே பெரிதானது அல்லவா..?

காலையில் எழுந்ததும் சாவித்திரி கலந்து கொடுக்கும் காபி.. மூர்த்தியுடன் தோட்டத்தில் உலாவுதல்.. பின்னர் குளித்து காலை டிபனை உண்டு விட்டு மதிய உணவை டப்பாவில் அடைத்துக் கொண்டு வங்கிக்குப் பறந்து விடுவாள் அர்ச்சனா.. கொடைக்கானல் வங்கியில் அவளுக்கு சிநேகிதிகள் கிடைத்திருந்தார்கள்.. அவர்களுக்கு முக மலர்ச்சியுடன் காலை வணக்கம் சொல்லி விட்டு வேலையில் ஆழ்ந்து விடுவாள்.. மாலையில் அவள் வீடு திரும்பும் போது மூர்த்தியும் வீடு திரும்பியிருப்பான்.. மாலை காபி, டிபன்.. சற்று இளைப்பாறுதல்.. இரவு உணவு.. அதன்பின் ஹாலில் கூடி அரட்டை.. நிம்மதியான இரவு உறக்கம்..

வாழ்க்கைதான் ஒரு நதியைப் போல எத்துனை அழகோடு அரவணைத்துக் செல்கிறது..!

கொடைக்கானலின் பசுமை அர்ச்சனாவை ஈர்த்தது.. வார இறுதியின் விடுமுறை தினங்களில் அவள் மூர்த்தியுடன் வெளியில் சுற்றிப் பார்க்கச் செல்வாள்... மணிக்கணக்கில் பேசியபடி அவர்கள் நடப்பார்கள்.. ஏரியில் படகு சவாரி செய்வார்கள்.. அன்றையப் பொழுதை இனிமையாக கழித்து விட்டு வீடு திரும்பும்போது அர்ச்சனாவுக்கு பசியே இருக்காது.. மனம் நிறையும் போது வயிறும் தானாய் நிறைவடைந்து விடுமோ..?

"ஹாய்.."

எதிரில் வந்த காரை ஓட்டி வந்த பெண்மணி கையை அசைத்தாள்.. மூர்த்தியின் பங்களாவுக்கு எதிர்பங்களாவில்

குடியிருப்பவள் அவள்.. பதிலுக்கு கையசைத்த அர்ச்சனாவுக்கு சாத்தூரில் இதுபோன்ற சிநேகிதங்கள் கிட்டியிருக்குமா என்ற மலைப்பு ஏற்பட்டது..

லீலாவதியின் மீதிருந்த அருவெறுப்பினால் அவளை சிறு வயது முதல் அறிந்திருந்த அக்கம் பக்கத்தினர் கூடப் பேசிப்பழக பயந்து தள்ளி நின்றதை ஜீரணித்துக் கொண்டு வாழ்ந்து வந்தவள் அவள்.. அவளுக்கு இப்படியொரு வாழ்வு..

மூர்த்தியின் பங்களாவை அவளது ஸ்கூட்டி நெருங்கியவுடன் பதறிக் கொண்டு ஓடிவந்த செக்யூரிட்டி கேட்டைத் திறந்து விட்டான்..

'நான் ஒன்றும் உன் எஜமானியல்ல..'

சொல்லத் துடித்தது மனது.. எப்போதும் போல அப்போதும் ஒரு சின்னச் சிரிப்பை செக்யூரிட்டியிடம் சிந்தி விட்டு ஸ்கூட்டியைச் செழுத்தினாள்.. போர்டிகோவில் மூர்த்தியின் கார் நின்றிருந்தது.. அவளது மனம் துள்ளியது..

'இன்றைக்கு என்னை முந்திட்டானே..'

அவனைத் தேடும் விழிகளுடன் உள்ளே நுழைந்தாள்.. அவளை எதிர்பார்த்த விழிகளுடன் அவனும் எதிர் கொண்டான்.. அவளுக்காக காத்திருப்பதை மறைக்க முடியாமல்..

"இன்றைக்கு ஆப் ஆன் ஹவர் நீ லேட்.." என்றான்..

"கணக்கு டேலியாகலை.."

"ஏன்..? நீ எதில தப்பு விட்ட..?"

"நான் ஒன்னும் தப்பாய் கணக்குப் போடலை.."

"பின்னே..? கம்யூட்டர் தப்பாய் கணக்குப் போட்டிருச்சா..?"

"ஒருவகையில் அப்படித்தான்.. கம்யூட்டர் மக்கர் பண்ணிருச்சு.."

"மனுசராய் இருந்தா நாலு உதை விட்டு ஏன் மக்கர் பண்றேன்னு கேட்கலாம்.. கம்யூட்டரை என்ன பண்ணுகிறது..? நாம விடற உதையில அது தூள் தூளாகிருச்சுன்னா அதுக்கும் நாமதான் தண்டம் கட்டியாகனும்.."

அவன் பேசியதை ரசித்து அவள் 'களுக்' என்று வாய் பொத்திச் சிரித்தாள்..

"நல்லா இருக்கு.." என்ற கர்ஜனை ஒன்று ஒலித்தது..

'இது மூர்த்தியின் குரல் இல்லையே..'

உடல் தூக்கிப்போட மூர்த்தியைப் பார்த்தாள்.. அவனது முகம் இறுகிப் போயிருந்தது..

"உன் ரூமுக்குப் போ.." அடிக்குரலில் ஆணையிட்டான்..

'ஏன் இப்படிச் சொல்கிறான்..?' காரணம் புரியாமல் திரும்பிப் பார்த்தாள் அர்ச்சனா..

அந்தக் காரணம் நரைத்த தலையும், உக்கிர முகமுமாக வாசல் கதவருகே நின்றிருந்தது..

அர்ச்சனாவின் உடல் நடுங்கியது..

## 19

அப்படியொரு உக்கிர முகத்தை அதுவரை அவள் கண்டதில்லை.. அவளைச் சுற்றியிருந்த கெட்டவர்கள் சிரித்தே கழுத்தை அறுக்கும் ரகத்தைச் சேர்ந்தவர்கள்.. தேனினும் இனிய குரலில் நைச்சியமாகப் பேசிக் காரியத்தைச் சாதித்துக் கொள்பவள் லீலாவதி.. பாண்டுரங்கனோ அர்ச்சனாவைப் பார்த்தவுடன் பல்லை இளிப்பவன்.. அர்ச்சனா வீட்டை விட்டு வெளியேறிய

கடைசிநாளில் கூட லீலாவதிதான் கத்திக் கொண்டிருந்தாள்... பாண்டுரங்கன் அர்ச்சனாவிடம் பல்லைக் காட்டத்தான் முயன்று கொண்டிருந்தான்..

'யார் இவர்..?' அவள் நினைத்து முடிப்பதற்குள்..

"யார் இவ..?" என்று கர்ஜித்தார் அந்தப் பெரியவர்..

அவளுக்குப் பதில் சொல்லாமல் அர்ச்சனாவை முறைத்த மூர்த்தி..

"உன்னை உன் ரூமுக்குப் போகச் சொன்னேன்.. காதில் விழுகலையா..?" என்று சீறினான்..

"இவ ரூமா..? இவளுக்குன்னு இந்த வீட்டில ரூம் வேற இருக்கா..? என்ன நடக்குது இந்த வீட்டில..?" அந்தப் பெரியவரின் உஷ்ணப்பார்வை அர்ச்சனாவை சுட்டது..

"எதுவும் நடக்கும்.. இது என் வீடு.." எரிச்சலுடன் சொன்ன மூர்த்தி..

"இன்னுமா நீ போலை..?" என்று அர்ச்சனாவை விரட்டினான்..

அர்ச்சனா ஒரே தாவலாக மாடிக்கு ஓடி விட்டாள்.. அறைக்குள் அடைபட மனமில்லை.. வந்திருப்பது யார் என்று அறியும் ஆவல் அவளை தடுத்தது.. உறவுகள் இருந்தும் அநாதை என்று மூர்த்தியைப் பற்றி சாவித்திரி சொன்னாளே.. வந்திருப்பது மூர்த்தியின் உறவுகளில் ஒருவரா..?

அர்ச்சனா மாடியிலிருந்த தூண் மறைவில் ஒன்றி மறைந்து நின்று ஹாலில் நடப்பதைக் கவனித்தாள்.. அவள் செய்வது தவறுதான்.. அடுத்தவர்களின் வாக்குவாதங்களை மறைந்திருந்து கவனிக்கக் கூடாதுதான்... அவளுக்கு வேற வழியில்லையே... மூர்த்தியின் கடந்த காலத்தில் என்ன நிகழ்ந்தது

என்று அவள் தெரிநது கொள்ள விரம்பினாள்.. ஏன் அவன் உறவுகளை விட்டு ஒதுங்கி நிற்கிறான்..? பனி விழும்

இரவுகளில் கால் தேய அவன் கொடைக்கானல் மலையைச் சுற்றி வருவதற்கான காரணம்தான் என்ன..,

"உன் வீடா..? எவ்வளவு தைரியம்..! இந்த மதுசூதனன் பெயரைச் சொன்னா கொடைக்கானல் மலையே கிடுகிடுக்கும்.. உன் அப்பன் கூட என் முன்னால் நின்று பேசியதில்லை.. நீ தெனாவெட்டா நெஞ்சை நிமிர்த்திக்கிட்டு என் முன்னால் நின்று பதில் சொல்ற.. இந்த மது சூதனனை யாருன்னு நினைச்ச..?"

"அநியாயத்துக்குத் துணை போகிற வயசான மனுசன்னு நினைக்கிறேன்.. போதுமா.. உங்க பெருமையை என்னிடம் பீற்றாதீங்க. கேட்டுக் கேட்டு என் காது ஜவ்வு கிழிஞ்சிருச்சு.."

"மூர்த்தி.."

"உஸ்ஸ்.. இது உங்க அரண்மனையில்லை.. என்னோட பங்களா.. நான் உழைத்துச் சம்பாதித்த பணத்தில வாங்கியது.. இங்கே வந்து அதிகாரம் பண்ணுகிற வேலை வேண்டாம்.."

மதுசூதனனின் முகத்தில் தாண்டவமாடிய ரௌத்ரத்தில் பயந்து போய் தூணோடு தூணாக ஒன்றிக் கொண்டாள் அர்ச்சனா.. ரத்தமென சிவந்த விழிகளுடன் அவர் மூர்த்தியை பார்த்த பார்வை பாசம் கொண்ட பார்வையாக இல்லை.. அதிகாரத்தை மீறத் துடிக்கும் அடிமையைப் பார்க்கும் ஆக்ரோசப் பார்வையாக இருந்தது..

"எடுத்தெரிந்து பேசியதாலதான் உன்னை என் அரண்மனையில இருந்து வெளியே எறிந்தேன் மூர்த்தி.. மறந்து விட்டுப் பேசுகிறாயா..?"

"மறந்தது யார்..? நானா..? ஹா.. ஹா..! உங்க அரண்மனையும் வேண்டாம்... உங்க உறவும் வேண்டாம்ன்னு தூக்கி எறிந்து விட்டு வெளியே வந்தது நான் தாத்தா.. அதை மறந்துட்டு மறைச்சுப் பேசறிங்க பார்த்தீங்களா.. இதுதான் நீங்க.."

'இவர் மூர்த்தியின் தாத்தாவா..?'

மதுசூதனனின் உக்கிர முகத்தின் ஜாடை மூர்த்தியின் முகத்திலும் இருப்பதை அப்போதுதான் கவனித்தாள் அர்ச்சனா.. வந்திருப்பவர் மூர்த்தியின் தாத்தா என்பதில் அவளுக்குள் வாஞ்சை பெருகியது.. பெருகி என்ன செய்ய..? அவர் முன்னால் நிற்கக்கூட அவளுக்கு அனுமதியில்லையே.. அவள் மனதின் வாஞ்சையை எப்படி அவள் உணர்த்துவாள்..?

"என் வம்சத்துக்கே நீ களங்கம்.."

"எதனால் தாத்தா..? அடுத்தவன் காதலியை நான் அபகரிச்சுட்டேனா..? போட்டுக் கொடுத்து போட்டுக் கொடுத்து என் காரியங்களை சாதிச்சுக்கிட்டேனா..? இதையெல்லாம் செய்தவனை உங்க செல்லப் பேரன்னு செல்லம் கொஞ்சுவீங்க.. என்னை உங்க வம்சத்தின் களங்கம் என்பீங்க.. என்ன ஒரு நியாயம்..! பட்... இதைப் போல நியாங்களைத்தான் உங்களிடம் எதிர்பார்க்க முடியும் தாத்தா.. தி கிரேட் மதுசூதனன் இஸ் எ டிஸ்ஹானஸ்ட் மேன்..!"

"மூர்த்தி.."

"ஐ ஹேட் யு.. உங்க வம்சத்தில பிறந்து தொலைத்து விட்டதைத்தான் நான் களங்கமா நினைக்கிறேன்.. நீங்க உங்க வம்சத்துக்கே ஓர் களங்கம்.. உங்களுக்குப் பேரனா பிறந்து தொலைத்தது நான் வாங்கிய சாபம்.."

"இப்படிப் பேசிப் பேசியே அழிந்து போனடா நீ.."

"நீங்க அழித்தீங்க தாத்தா.. என் காதலை, என் நம்பிக்கையை, என் வாழ்க்கையை குறி வைத்து அழித்தீங்க.. இப்ப எந்த முகத்தோடு என் வீட்டுப் படியேறி வந்து நிற்கறிங்க.."

"இந்த மதுசூதனனின் காலடி படவும் ஒரு தகுதி இருக்கனும்.. உன் வீட்டுக்கு அந்தத் தகுதியில்லை.."

"ஹ.. இதைப் பாருடா.. அழையா விருந்தாளியாய் வந்து நின்றுக்கிட்டு இந்தப் பெரிய மனிதன் பேசுகிற பேச்சை..! மிஸ்டர் ஜனார்த்தனம்..! என் வீட்டுக்குன்னு

ஒரு தரம் இருக்கிறது.. கேடு கெட்ட பேரனுக்காக தரகு வேலை பார்த்த நீங்கள்ளாம் என் வீட்டில் கால் வைத்து என் வீட்டின் தரத்தைக் குறைப்பதை நான் அலோவ் பண்ண மாட்டேன்.. கெட் லாஸ்ட்.."

"டேய்ய் மூர்த்தி.. யாரைப் பார்த்து என்ன வார்த்தை பேசற..?"

"மனச்சாட்சியே இல்லாத ஓர் கிழவனைப் பார்த்துப் பேச வேண்டிய வார்த்தையைத்தான் பேசறேன்.."

"கோவிந்தராஜன் பெற்ற பிள்ளையாடா நீ..? இப்பவும் உன் அப்பன் என் எதிரே நின்று பேச மாட்டான்.. 'அப்பா' என்கிற சொல்லுக்கு அடுத்த வார்த்தை பேச மாட்டான்.."

"இதைச் சொல்ல வெட்கமாக இல்லை..? இது ஒரு பெருமைன்னு திரும்பத் திரும்பச் சொல்லிக்கிட்டு இருக்கீங்களே.. அப்பா பிள்ளை உறவை, ஆண்டான் - அடிமை உறவா மாத்தி வைச்சுட்டு அதைப் பத்தி பெருமையாய் வேற பேசிக்கறிங்க.. வெட்கக் கேடு..!"

"எதுடா வெட்கக் கேடு..? எவளோ ஒருத்தியைக் கொண்டு வந்து வீட்டுக்குள் வைத்திருக்கிறியே.. இதுதான் வெட்கக் கேடு.. பெரிசா நீதி, நேர்மை, நியாயம்ன்னு பிரசங்கம் பண்றியே.. இதுவாடா நேர்மை..?"

"அர்ச்சனா எவளோ ஒருத்தியில்லை.."

"அட..! அவ பெயர் அர்ச்சனாவா.. கர்மம்.."

அர்ச்சனா குன்றிப் போனாள்.. அங்கிருந்து ஓடிவிட வேண்டும் போல இருந்தது.. அவளை ஒரு பெரிய மனிதர் 'கர்மம்' என்கிறார்.. ஏன்..? மூர்த்தியின் பேச்சைக் கேட்டு அவன் வீட்டில் தங்க ஒப்புக்கொண்டது எதில் கொண்டு வந்து விட்டிருக்கிறது..

"மதுசூதனன் என்கிற பெயரைவிட அர்ச்சனா என்கிற பெயர் மோசமில்லை.. அத்துடன் மதுசூதனனைப் போல அர்ச்சனா அநியாயம் செய்பவள் இல்லை.. ஸோ.. எதைச் சொன்னாலும் யோசித்துச் சொல்லனும்.."

"எவளோ ஒரு நாடோடியுடன் என்னை ஒப்பிட்டுப் பேசறியா..?"

"தப்புத்தான் தாத்தா.. அவ கள்ளம், கபடம் இல்லாதவ.. நீங்க சூது, வாதுதான் உங்க சொத்துன்னு வாழ்கிறவர்.. உங்க சொல் பேச்சுக்கு அடங்காத பேரனை பழிவாங்க நீங்க எந்த லெவலுக்கும் இறங்குவீங்க.. உங்களுடன் அவளை ஒப்பிட்டுப் பேசியது என் தவறுதான்.. சேறுடன் செந்தாமரையை ஒப்பிட்டுப் பேசக் கூடாதுதான்.."

"திஸ் இஸ் நாட் பெய்ர் மூர்த்தி.."

"ஷ்யூர் தாத்தா.. நீங்க என் வீட்டுக்கு வந்திருக்கிறது கொஞ்சம் கூட நன்றாக இல்லைதான்.. என்ன செய்கிறது..? உங்களுக்குப் பேரனாப் பிறந்திருந்தும் உங்களோட அநாகரிகம் எனக்கு வரவே மாட்டேன் என்கிறதே... எப்படி தாத்தா என் செக்யூரிட்டியிடம் உங்க கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளச் சொல்வேன்.. ஹௌ கேன் ஐ டூ இட்..?"

மதுசூதனனின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன.. இதுபோன்ற அவமானத்தை அவரது வாழ்க்கையில் அவர் சந்தித்தே இருக்க மாட்டார் என்று தோன்றியது அர்ச்சனாவுக்கு.. ஓர் அரசனைப் போன்ற திமிரும், நிமிர்வும் கொண்டவரை மிக எளிதாக அவமானப் படுத்திக் கொண்டிருந்தான் மூர்த்தி..

'எதனால் இந்த வன்மம்..? இந்த அளவுக்கு வன்மம் பாராட்டுபவனா மூர்த்தி..'

அன்று கண்ட மூர்த்தியின் வேறொரு பரிணாமத்தில் மருட்சி கொண்டாள் அர்ச்சனா.. என்னதான் புரிந்து கொள்ளாமல் அதிகார தோரணையில் பேசினாலும் வந்திருப்பது அவனது தாத்தாவாயிற்றே.. கண்ணியமான தோற்றமும், நேர்த்தியான உடையுமாக ரேமாண்ட் விளம்பரத்தில் வரும் கோடிஸ்வரத் தாத்தாவைப் போல இருந்த மதுசூதனனிடம் மூர்த்தி நடந்து கொண்ட முறை கொஞ்சமும் சரியில்லை என்று அர்ச்சனாவின் மனது விமரிசித்தது..

"திஸ் இஸ் தி லிமிட் மூர்த்தி.."

"நீங்கள்ளாம் லிமிட்டைப் பற்றிப் பேசவே கூடாது.."

"உன் தவறை மறைக்க என்னிடம் மரியாதையில்லாமல் பேசற.."

"தவறா..? நானா..? அதுக்கும் எனக்கும் ரொம்பத் தூரம் தாத்தா.. அர்ச்சனா ஒன்றும் நாடோடியில்லை.. பேங்கில் வேலை பார்க்கிறா.. என் வீட்டில் ஒன்றும் ஓசியா ஒன்றிக்கிட்டு இல்லை.. அவ தங்கறதுக்கும், சாப்பாட்டுக்கும் பணம் கொடுத்து பேயிங்-கெஸ்ட்டா இருக்கிறா.. அவளைப் போல சுயமரியாதையுள்ள பெண்ணைப் பற்றி வாய்க்கு வந்ததைப் பேசினீங்கன்னா நடக்கிறதே வேற.."

"பேயிங் கெஸ்ட்டா இங்கே இருக்கிறதுக்குப் பதில் ஏதாவது ஒரு லேடிஸ்-ஹாஸ்டலில் இருக்க வேண்டியது தானே..? இது என்ன வீடா.. இல்லை ஹாஸ்டலா..?"

"அதைப் பத்தியெல்லாம் நீங்க பேசக்கூடாது.. இங்கே நான் மட்டும் இருந்திருந்தா நிச்சயமா அவ இந்த வீட்டில தங்கிக்க ஒப்புக் கொண்டிருக்க மாட்டா.. சாவித்திரியம்மாவும் இருக்கிறாங்க.. அவ அம்மாவோட ரூமிலதான் தங்கியிருக்கா.. அவளையென்ன மாயான்னு நினைச்சுட்டீங்களா..?"

மதுசூதனனின் முகம் வெளிறியது.. அவர் தேவையில்லாமல் தன் கோட்டை சரி செய்து கொண்டார்.. செருமினார்.. கையில் கட்டியிருந்த உயர்ரக வாட்ச்சில்

மணி பார்த்தார்..

மாயாவைப் பற்றிய பேச்சு அவரை தடுமாற வைப்பதைப் புரிந்து கொண்டாள் அர்ச்சனா.. யார் அந்த மாயா என்று அவளது மனம் குறுகுறுத்தது.. அவளுக்கும் மூர்த்திக்கும் என்ன சம்பந்தம்..?

"அம்மாவா..? உன் அம்மா அரண்மனையில் இருக்கிறா.. இங்கே இருப்பது ஆயா.."

அவர் அடுத்த கண்டனத்தை தெரிவித்தார்.. அர்ச்சனாவுக்கு என்னவோ போல இருந்தது.. சாவித்திரியின் தாய்ப்பாசம் எத்தகையது என்பதை அவள் அறிவாளே.. ஆயாவாக இருந்தால் என்ன..? தன்னலமில்லாத தாயன்பை பொழிபவளைப் பார்த்து 'அம்மா' என்றழைத்தால்தான் என்ன..? அதில் தவறேதும் இல்லையே..

"இவங்களும் என் அம்மாதான்.."

"மூர்த்தி.. மதுசூதனின் பேரன் என்பதை மறந்து விட்டுப் பேசுகிற.."

"பாயிண்டைப் பிடிச்சுட்டிங்களே.. நான் உங்க பேரன் என்பதை மறந்து ரொம்ப நாளாச்சு.."

"அதை நினைவில் வைத்திருந்தால் என் 'மது சாக்லெட் பேக்டரி'க்குப் போட்டியா 'கொடை சாக்லெட் பேக்டரி'யை ஆரம்பித்திருக்க மாட்டியே.."

"போட்டியா ஆரம்பிச்சேனா..? பொய், பொய்யா பேசக்கூடாது என் பங்குக்கு வந்த பரம்பரைச் சொத்தான மது சாக்லெட் பேக்டரியை நீங்க பறிச்சுக்கிட்டிங்க.. எனக்கென்னன்னு நான் புதிதாய் ஒரு பேக்டரியை ஆரம்பித்தேன்.. தட் இஸ் இட்.."

"கெட்டிக்காரத்தனமாய் பேசுவதாய் நினைப்பா..? அமெரிக்காவில படிச்சுட்டு வந்த படிப்பை யூஸ் பண்ணுகிறேன் பேர்வழின்னு சாக்லெட் பேக்டரியையே டோட்டலா மாத்தின.. சாக்லெட்டின் தயாரிப்பில் புதுசா புதுசா எதையோ செய்த.. என் சாக்லெட்டின் பெயர் கெட்டு விடக் கூடாதுன்னு பேக்டரியை திரும்ப வாங்கிக்கிட்டேன்.. நான் செய்தது தப்பு தாத்தா, இனிமே ஒழுங்கா உங்க சொல்பேச்சு கேட்டுக் கம்பெனியை நடத்தறேன்னு என் காலில் விழுந்து கெஞ்சியிருந்தா 'பிழைத்துப் போ'ன்னு அந்த பேக்டரியை பிச்சை போட்டிருப்பேன்.. செய்தியாடா நீ..?"

எப்படி இப்படிப் பேச முடிகிறது என்று மனம் நைந்தாள் அர்ச்சனா.. எதிரில் நிற்பவன் சொந்தப் பேரன்.. அவனிடம்

பாசத்தைக் காட்ட வேண்டாம்.. பிச்சை போடுகிறேன் என்று ஆணவத்தைக் காட்டாமல் இருக்கலாமே..

"ஷட்-அப்.." மூர்த்தி சீறியபோது வயதில் பெரியவர் என்ற மட்டு மரியாதை துளியும் இல்லாமல் மரியாதை குறைவாய் கோபப் படுகிறானே என்று அர்ச்சனாவுக்குத் தோன்றவேயில்லை..

"ஹலோ மிஸ்டர் மதுசூதனன்..! சாக்லெட் பேக்டரி வேண்டும்ன்னு நான் நினைத்திருந்தா சொடக்குப் போடற நேரத்துக்குள்ள அதைக் கைப்பற்றியிருப்பேன்.. அது என்ன நீங்க உழைத்து உருவாக்கிய சொத்தா..? பரம்பரைச் சொத்து..! உங்க தாத்தாவோட பெயரில் இருந்த கம்பெனிக்கு பொடித்தனமா உங்க பெயரை வைத்தீங்க.. பரம்பரையா வந்த பெயரை மாற்றினீங்க.. அப்படிச் செய்ததினால அது நீங்க உருவாக்கின கம்பெனியா ஆகி விடுமா..? கோர்ட்டுக்குப் போயிருந்தாத் தெரியும் சேதி.. உங்க பரம்பரையில பிறந்ததே வெட்கக்கேடுன்னு ஒதுங்கி நிற்கிறவனுக்கு பரம்பரைச் சொத்து எதுக்கு..? 'கொடை குருப்ஸ் ஆஃப் கம்பெனி'யை உலகம் பூரா தெரிய வைத்திருக்கிறேன்.. என்னோட எக்ஸ்போர்ட் சரக்குகளோட குவாலிட்டி எப்படின்னு கேட்டுப் பாருங்க.. தெரியும்.. உங்களையெல்லாம் மனிதனாக்கூட நான் மதித்ததில்லை.. இதில் இவர் காலில விழுந்து நான் கேட்டிருக்கனுமாம்.. குட் ஜோக்.."

மூர்த்தி பொங்கிய பொங்கலில் மதுசூதனனின் முகம் கறுத்து விட்டது..

20

'குளிராதா..?' பரிதவித்தாள் அர்ச்சனா..

ஸ்வெட்டர் கூட அணியாமல் வெறி பிடித்தவனைப் போலத் தோட்டத்தில் உலவிக் கொண்டிருந்தான் மூர்த்தி.. ஹாலின் சோபாவில் தலைமீது கை வைத்து சோகச்சித்திரம் போல

சரிந்திருந்தாள் சாவித்திரி.. நள்ளிரவைத் தொட்டுக் கொண்டிருந்த நேரத்திலும் மூர்த்தியின் பங்களா விளக்குகளின் ஒளிர்வுடன் விழித்திருந்தது.. எவரும் சாப்பிடவில்லை..

"ஸ்வெட்டர் போட்டிருக்கலாமே.." மனம் தாங்காமல் சாவித்திரியிடம் கேட்டாள்..

நிமிர்ந்து பார்த்த சாவித்திரியின் விழிகளில் துயரம் மண்டியிருந்தது..

"யார் சொல்கிறது..?" பதிலுக்குக் கேட்டாள்..

அர்ச்சனா உதட்டைக் கடித்தபடி மௌனமானாள்.. மூர்த்தியின் உன்மத்தம் பிடித்த தோற்றத்தைக் கண்டு அவளே பயந்து போனாளே.. சாவித்திரியால் எப்படி பேசியிருக்க முடியும்..?

"நிஜம்தான்.." முணுமுணுத்தாள்..

"அவரைப் பார்த்தா எனக்கே பயமாய் இருக்கு.. உங்களுக்கும் பயம இருக்கும்தானே.."

"பயமா..? மூர்த்தியிடமா..? எனக்கா..?" உதட்டைச் சுழித்து மறுத்தாள் சாவித்திரி..

"இது பயமில்லைம்மா.. பற்றியெரியும் நெருப்பு.. நான் மடியில் போட்டு வளர்த்த என் பிள்ளை மனசில எரியற நெருப்பை அறிஞ்சவ நான்.. இந்தக் குளிரால என் பிள்ளையோட கொதிப்பை அடக்க முடியுமான்னுதான் பேசாம இருக்கிறேன்.. என் மகன் விடிய விடிய பனி கொட்டற ராத்திரியில கொடைக்கானலைச் சுத்திட்டு வீட்டுக்குத் திரும்பி வர்றப்ப என் மனசு சல்லடை சல்லடையா ஆகும் அர்ச்சனா.. நீ வந்த பின்னாலே அது நின்றிருந்தத.. இந்தப் பெரியமனுசன் வந்து போனார்.. மறந்து போன நினைவுகள் எல்லாம் மறுபடியும் எழும்பி வந்து மூர்த்தியத் துரத்த ஆரம்பிச்சிருச்சு.. என் பிள்ளை தூக்கமில்லாம பித்துப் பிடிச்சதைப் போலச் சுத்திக்கிட்டு இருக்கு.."

அர்ச்சனாவின் இதயம் கனத்தது.. அடைக்கலம் கொடுக்கும் வள்ளல் அமைதியின்றித் தவிப்பதா..? மனம் தாங்காமல் எழுந்து தோட்டத்துக்குச் சென்றாள்.. சாவித்திரி அவளைத் தடுக்கவில்லை.. போர்த்தியிருந்த சால்வையையும் மீறித் துளைத்த குளிரைப் பொருட் படுத்தாமல் மூர்த்தியை அணுகி விட்டாள் அர்ச்சனா.. அவனோ அவளது வரவை உணராதவனாய் பித்துப் பிடித்தவனைப் போல இங்கும் அங்கும் நடந்து கொண்டிருந்தான்..

"பிறை தேடும் இரவிலே - உயிரே..!

எதை தேடி அலைகிறாய்..?"

சன்னக்குரலில் பாடினாள் அர்ச்சனா..! என்ன ஒரு ஆச்சரியம்.. மூர்த்தியின் நடை நின்றது.. அவன் அவளைப் பார்த்து விட்டான்..

அர்ச்சனாவின் விழிகளில் கண்ணீர் பொங்கியது.. அமைதி இழந்து தவிப்பவனை அன்னை போல அரவனைத்துக் கொள்ளத் துடித்தாள் அவள்..

"கதை சொல்ல அழைக்கிறேன் - உயிரே..!

அன்பே..! நீ வா.."

அவள் இருகரம் நீட்டி அழைத்தாள்.. அவன் சிலையானான்.. அவர்களின் மீது பனி பொழிந்து கொண்டிருந்தது.. சாவித்திரி வீட்டுக்குள் இருந்தாள்.. வாசலில் காவல் காக்கும் செக்யூரிட்டியின் அறை தொலைவில் இருந்தது.. அவனும், அவளும் மட்டும் இருந்த தோட்டத்தின் இருள் அவர்கள் இருவரையும் மறைத்தது.. அவள் பாடியதை அவன் மட்டுமே கேட்டான்.. பனி விழும் இரவில் அவர்கள் இருவர் மட்டும் தனித்திருந்த அந்தப் பொழுது சொல்லவொண்ணாப் பரிணாமங்களை உள்ளடக்கியதாக அவர்களை உள்ளிழுத்துப் புதைத்துக் கொண்டது..

"இருளில் கண்ணீர் எதற்கு..?

மடியில் கண்மூடு வா..

அழகே..! இந்த சோகம் எதற்கு..?

நானுன் தாயும் அல்லவா..?"

செழுத்தப்பட்டவனைப் போல அவளருகில் சென்றவனை தன் கைகளுக்குள் புதைத்துக் கொண்டாள் அர்ச்சனா.. தளர்ந்து சரிந்தவனைத் தாங்கிப் பிடிக்க முடியாமல் அருகிலிருந்த மரபெஞ்சில் விழுந்தாள்.. அவளது மடியில் சரிந்தான் மூர்த்தி.. அர்ச்சனாவின் மனம் அன்பின் கனம் தாங்காமல் தள்ளாடியது.. தன்னைப் போர்த்தியிருந்த சால்வையை இழுத்து அவனுக்கும் போர்த்தி விட்டாள்.. மூர்த்தி கண்களை மூடிக் கொண்டான்.. அவனது இமையோரங்களில் வழிந்த கண்ணீரைத் தன் முந்தானைச் சேலையினால் துடைத்து விட்டு அவனது முடிகோதி அமைதிப் படுத்த முயன்றாள் அர்ச்சனா..

"உனக்கென மட்டும் வாழ்ந்த இதயமடி..

உயிர் உள்ளவரை நானுன் அடிமையடி.."

அவனது இதழ்கள் முணுமுணுத்ததில் வேதனையையடந்த அர்ச்சனாவுக்கு என்ன சொல்லி அவனை தேற்றுவது என்று தெரியவில்லை.. அவள் காதலித்ததில்லை.. 'காதல் என்பது ஆள்கொல்லி நோய்' என்று அவளுக்குத் தெரியாது.. மூர்த்தியின் மீது இருக்கும் அளவு கடந்த அன்பினால் மட்டுமே மடியில் சரித்திருந்தவளுக்கு அவனது இதயத்தை வாட்டிக் குற்றுயிரும் குலையுயிருமாக ஆக்கிக் கொண்டிருக்கும் காதல் தோல்வியின் வேதனை எத்தகையதாக இருக்கும் என்று அனுமானிக்க முடியவில்லை.. அவளுக்குத் தெரிந்ததெல்லாம் மூர்த்தியின் மீது அவள் கொண்டிருந்த நேசம் மட்டும்தான்.. அது காதலா என்று கேட்டால் தெரியாது என்பதுதான் அவளது பதிலாக இருக்கும்.. அவளது நேசத்துக்குரியவன் மனவலியில் துடித்துக் கொண்டிருக்கிறான்.. அவனை அமைதிப்படுத்த அவள் என்ன வேண்டுமானாலும் செய்வாள்..

"அழுதால் உன் பார்வையும்

அயர்ந்தால் உன் கால்களும்..

அதிகாலையில் கூடலும்

சோகம் தீர்க்கும்.. போதுமடி.."

அவன் பாடலில் இறைஞ்சினான்.. அர்ச்சனாவின் கன்னி மனம் மருண்டது.. அவன் கேட்டதைக் கொடுக்க அவளால் முடியுமா..?

மனதின் கேள்விக்கு விடை தேடாமல் அவனது முகத்தின் மீது கவிழ்ந்தாள் அவள்.. பரந்த அவனது நெற்றியில் சூடான இதழ்களை அவள் பதித்த கணத்தில் அவனது தலைமீது ஏறியிருந்த பாரம் அகன்று விட்டதைப் போல உணர்ந்தான் மூர்த்தி..

"நிழல் தீண்டிடும் ஆண்மையும்

நிஜம் தேடிடும் பெண்மையும்..

ஒரு பார்வையில் வாழும் இன்பம்.."

அவளது விழிகளில் துளிர்த்த வெப்பக் கண்ணீர் துளிகள் அவன் முகத்தின்மீது விழுந்த போது கடந்த காலத்தின் மனச்சுமை அகன்று மனம் பஞ்சுப் பொதி போல லேசானது..

"என் ஆயுள்ரேகை நீயடி..

என் ஆணி வேரடி..

சுமை தாங்கும் எந்தன் கண்மணி..

எனை சூடும் பனி.."

இப்போது அவன் பாடிய பாடல் அவளுக்கான பாடலாக இருந்தது.. எதிர்பாராத ஒரு கதவு திறந்து ஏதோ ஓர் நதிச் சுழலுக்குள் அவளை அழைத்தது.. சுழலில் மூழ்கிக் கொண்டிருந்தவன் அவளது பிரியத்துக்குரியவன் என்பதால் சற்றும் யோசிக்காமல் தயக்கம் தவிர்த்து அந்தச் சுழலில் இறங்கி விட்டாள் அர்ச்சனா.. அவளைத் தேடிப் பிணைத்து இழுத்த அவனது கைகளுக்குள் அவள் அடங்கினாள்.. உஷ்ணம் நிரம்பிய அவளது உடல் பனியில் குளிர்ந்திருந்த அவனது உடல் மேல் போர்வையாக

போர்த்திக் கொண்டதில் அவளது உஷ்ணம் அவனது உடலுக்கு இடம் மாறியது.. அர்ச்சனாவுக்குள் பூகம்பம் வெடிப்பதைப் போலிருந்தது.. இது அவளா என்று அவள் நடுங்கினாள்.. அபிராமியின் மகள் அவள்.. அன்னிய ஆடவனின் மீது சரிந்திருக்கிறாள்.. இது முறையல்ல என்று கூவியது அவள் மனம்.. விலகும் நினைவை மூர்த்தியின் விழிகளில் இருந்த தேடல் அழித்தது.. அலைபாயும் அவனது நெஞ்சை தடதடக்கும் அவனது மார்பகம் உணர்த்தியதில் அவள் தன்னை ஒப்புக் கொடுத்து விட்டாள்..

"விழியின் அந்தத் தேடலும்..

அலையும் உந்தன் நெஞ்சமும்..

புரிந்தாலே போதுமே..

ஏழு ஜென்மம் தாங்குவேனே.."

புரண்டு அவளைத் தனக்குள் கீழே கொண்டு வந்தவனைத் தாங்கிக் கொண்டாள் அர்ச்சனா.. அவளது முகத்தில் கவிந்த அவன் முகத்தின் முத்தங்களை இமைமூடி ஏற்றுக் கொண்டாள்.. கொதிக்கும் அவன் மனதை குளிர்விக்கும் பனித்துளிகளாய் பனி விழும் இரவில் அவனது மனத்துயரைத் தணித்தாள்..

"அனல் மேலே வாழ்கிறாய்..

நதிபோலே பாய்கிறாய்..

ஒரு காரணம் இல்லையே..

மீசை வைத்த பிள்ளையே.."

அவனது மீசையின் ரோமங்கள் வழவழப்பான அவளது கன்னத்தில் உராய்ந்து சுகமான ஓர் வேதனையைக் கிளப்பியது.. கண்மூடிக் கிடந்தவளின் மீது அவனுக்குள் காதல் பெருகியது.. இதற்கு முன் அவன் இழந்ததைக் காதல் என்று சொல்வதாக இருந்தால், எவளோ ஒருத்தி அவனது துயருக்காக தன்னையே இந்த பனி விழும் இரவில் அர்ப்பணிக்க முன் வருகிறாளே, இதை என்னவென்று சொல்வது..? இது காதல் இல்லையா..?

"இதைக் காதல் என்று சொல்வதா..?

நிழல் காய்ந்து கொள்வதா..?

தினம் கொல்லும் இந்த பூமியில்..

நீ வரும் வரும் இடம்.."

மனம் தாளாமல் அவளது முகத்தில் முகம் புதைத்தான்.. முடிகோதி அணைத்துக் கொண்ட அவளது பரிவில் அவன் பட்ட மன ரணங்கள் ஆறத் துவங்கின.. மெதுவாக விலகி அவன் எழுந்ததில் அவளது காருண்யத்தை கௌரவிக்கும் கண்ணியம் இருந்தது.. அர்ச்சனா எழுந்து கொள்ள கை கொடுத்தான்.. எல்லை கடக்காத அவனது ஆண்மைக்கு அவளது மௌனம் நன்றி தெரிவித்தது.. இவன் இப்படித்தான் இருப்பான் என்ற பெருமையில் அவளது நெஞ்சம் பூரித்தது..

அவர்கள் மௌனமாக வீட்டை நோக்கி நடந்தார்கள்.. அவன்மீது சேர்த்துப் போர்த்தப் பட்டிருந்த சால்வையை இழுத்து அவள்மீது முழுமையாக போர்த்தி விட்டுச் சரி செய்தான்.. மிருதுவான அவளது புன்னகை அவனது கடந்த கால காயங்களை ஆற்றி விடும் வல்லமை கொண்டதாக இருந்தது..

ஒரு பாடல்..! திரைப்படப் பாடல்..! அதற்குத்தான் எத்துனை சக்தி..! மனம் நைந்து போயிருந்த மூர்த்தியையும் தனக்குள் இழுத்து அர்ச்சனாவுடன் சேர்ந்து பாட வைத்து விட்டதே..

காலடியோசையில் சோபாவில் முழங்கால்களில் முகம் பதித்து அமர்ந்திருந்த சாவித்திரி தலை நிமிர்ந்தாள்.. மூர்த்தியுடன் அர்ச்சனா வந்து கொண்டிருந்ததில் பரபரப்பானாள்.. அவள் முகத்தில் வியப்புப் பரவியது..

அதுநாள்வரை அமைதியிழந்து தவித்த மூர்த்தி தனது உலாவலை நிறுத்தி விடிவதற்குள் வீடு வந்ததாக சரித்திரம் இல்லை.. முதன் முறையாக அர்ச்சனாவைக் கண்ட பனி விழும் இரவில் விடிவதற்குள் வீடு திரும்பினான்.. இரண்டாவது பனி விழும் இரவு இது..

"பசிக்குதும்மா.. சாப்பிட என்ன வைத்திருக்கீங்க..?"

எதுவும் நடக்காததைப் போல மூர்த்தி கேட்டதும் கரகரவென அழுது விட்டாள் சாவித்திரி..

"உனக்குப் பிடித்த இடியாப்பம், தேங்காய்பால், தோசை, சிக்கன் வறுவல், சிக்கன் குருமா வைச்சிருக்கேன் மூர்த்தி.. சாப்பிட வா ராசா.."

"செமத்தியான சாப்பாடுதான் போங்க.. இந்தக் குளிருக்கு கோழி வறுவலை ஒரு பிடிபிடிக்கப் போறேன் பாருங்க.."

"பிடிப்பா.. நீ ரசிச்சுச் சாப்பிட்டு எத்தனை நாளாச்சு.."

சாவித்திரி கண்ணீரைத் துடைக்கும் நினைவின்றி ஓடியோடி பரிமாறினாள்..

"நீயும் உட்காரு.." அர்ச்சனாவிடம் சொன்னான் மூர்த்தி.. அவனைப் பார்க்கக் கூச்சப்பட்டு வேறு திசையில் பார்த்தபடி..

"நானும் ஆண்ட்டியும் சேர்ந்து சாப்பிட்டுக்குவோம்.." என்று முணுமுணுத்தாள் அர்ச்சனா..

செம்மை படர்ந்த அவளது முகத்தைப் பார்க்க அவனுக்குப் பிடித்திருந்தது.. சற்றுமுன் தோட்டத்தில் நிகழ்ந்த நிகழ்வுகளில் அவள் லஜ்ஜை கொண்டிருப்பதை புரிந்து கொண்டவனுக்கு உல்லாசமாக இருந்தது.. நிகழ்ந்த நிகழ்வுகளை மனதுக்குள் அசை போட்டவனுக்கு சீழ்க்கையடிக்க வேண்டும் போல இருந்தது.. சன்னமாக விசில் அடித்தான்... சாவித்திரி ஆச்சரியமானாள்.. அர்ச்சனாவைப் பார்த்தாள்.. சிவந்திருந்த அவளது முகம் எதையோ உணர்த்தியது.. அர்ச்சனாவின் தடுமாற்றம் புதிதாக இருந்தது..

மூர்த்தி சாப்பிட்டு எழுந்து கை கழுவி விட்டு வந்தான்.. சூடான பாலை தம்ளரில் நிரப்பி அவனிடம் தந்தாள் சாவித்திரி.. அர்ச்சனாவையே பார்த்தபடி மூர்த்தி பாலை உறிஞ்சிக் குடித்ததை கவனித்தவளுக்கு எதுவோ புரிவதைப் போல இருந்தது..

"ஈவினிங் யார் போன் பண்ணினதும்மா..?" எதையோ கேட்க வேண்டும் என்று கேட்டு வைத்தான் அவன்..

"மாயா பேசினாப்பா.." ஏதோ நினைவில் சொல்லி விட்டுப் பதறிப் போனவளாக மூர்த்தியைப் பார்த்தாள் சாவித்திரி..

அவள் வளர்த்த பிள்ளை இப்போதுதான் மனமிரங்கி தன் உலாவுதலை நிறுத்தி விட்டு வீட்டுக்குள் நுழைந்து வயிறாரச் சாப்பிட்டிருக்கிறான்.. மறுபடியும் அவனது அமைதியைப் பறித்து பனி கொட்டும் இரவில் அவன் அலையத் துரத்தி விடும் பெயரை அவள் சொல்லி விட்டாளே..

'வெளியில் போய் விடாதே மூர்த்தி..' அவளது விழிகள் கெஞ்சின..

அவள் பயந்ததைப் போல எதுவும் நடக்கவில்லை..

"மாயாவா..? அவ பேசினா போனை கட் பண்ணிருங்கம்மா.." வெகு சாதாரணமாகச் சொல்லிவிட்டு அர்ச்சனாவைப் பார்த்தபடி மாடிப்படிகளில் ஏறி விட்டான் மூர்த்தி..

"அந்த மாயா யார் ஆண்ட்டி..?" கேள்வி கேட்டவளை உற்றுப் பார்த்தாள் சாவித்திரி..

மெல்லிய உடல் வாகும், களங்கமற்ற முகமுமாக இருந்த அந்தச் சின்னப் பெண் தான் எதைச் சாதித்திருக்கிறோம் என்பதை அறிவாளா என்று பிரமித்தது அவளது மனம்..

"அந்த மாயாதான் மூர்த்தியின் காதலி..!"

அர்ச்சனாவை நேர்கொண்ட பார்வை பார்த்தபடி சொன்னாள் சாவித்திரி.. அவள் நினைத்தைப் போல அர்ச்சனாவின் முகம் மாறிவிட்டது.. ஏக்கமும் நிராசையும் ஒன்றுசேர ஏழைத்தனமான பார்வையொன்றை பார்த்து வைத்தாள் அர்ச்சனா..

மதுசூதனன்..!

கொடைக்கானலின் நம்பர் ஒன் கோடிஸ்வரர்.. ஏலக்காய் எஸ்டேட்டுகளின் அதிபதி..! சாக்லெட் பேக்டரிக்கு சொந்தக்காரர்..! என்ன ஒன்று.. அத்தனை சொத்துக்களும் பரம்பரையாய் வந்த சொத்துக்கள்.. கோடிஸ்வரரின் மகனாகப் பிறந்ததைத் தவிர வேறு எந்த சாதனையையும் அவர் சாதித்ததில்லை..

பிறக்கும்போதே தங்க ஸ்பூனை வாயில் கவ்விக் கொண்டு பிறந்ததினாலோ என்னவோ அவருக்குத் 'தான்' என்ற ஆணவமும் தலைக்கனமும் மிக மிக அதிகம்.. யாரையும் மதிக்க மாட்டார்.. அவர் பெற்ற பிள்ளைகளை அடிமைகளைப் போல நடத்துவார்..

ஒற்றை மகனாய் பிறந்த மதுசூதனனுக்கு மூன்று மகன்கள்.. மூத்தமகன் ஜனார்த்தனத்திற்கு ஏற்காடு, எஸ்டேட் அதிபரின் மகளான யமுனாவை மணம் முடித்து வைத்தார்.. ஜனார்த்தனம்-யமுனா தம்பதியருக்கு நவீன், நீரஜா என்று இரண்டு பிள்ளைகள்.. இரண்டாவது மகனான கோவிந்தராஜன்தான் மூர்த்தியின் தந்தை.. அவருக்கு ஊட்டி எஸ்டேட் அதிபரின் மகளான வசுந்தராவுடன் திருமணம் நடந்தது.. மூர்த்தியும், மிருதுளாவும் என இரண்டு பிள்ளைகளைப் பெற்றெடுத்த வசுந்தரா கருணையின் மறுவடிவம்.. மதுசூதனனின் மூன்றாவது மகன் ராமநாதன்.. அவருக்கு கேரளத்தில் மணம் முடித்து வைத்திருந்தார் மதுசூதனன்.. வயநாட்டு எஸ்டேட் அதிபரின் மகளான கோமளாதான் மதுசூதனன் குடும்பத்தின் கடைக்குட்டி மருமகள்.. ராமநாதன்-கோமளா தம்பதியருக்கு ராஜேஸ், ராதிகா என்று இரு பிள்ளைகள்..

பரம்பரையாய் வந்த சொத்துக்களின் பெயர்களை 'மது' என்று மாற்றினார் மதுசூதனன்.. மது சாக்லெட் பேக்டரி, மது எஸ்டேட் என்று அனைத்துச் சொத்துக்களும் மது உண்டு போதையுடன் தள்ளாடின.. தனக்கென்று அரண்மனையையும் மாதாமாதம் வாடகைப் பணத்தைக் கொட்டும் 'ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ்'சுகளையும், ஸ்டார்

ஹோட்டலையும் நிறுத்திக் கொண்ட மதுசூதனன் மற்ற சொத்துக்களைப் பேரன்களுக்குப் பிரித்து கொடுத்தார்..

அதையும் அவர் செய்திருக்க மாட்டார்.. அனைத்தையும் அவர்தான் சம்பாதித்து உருவாக்கி வைத்திருப்பதைப் போல ஆணவமாக இருந்திருப்பார்.. அப்படி இருக்க முடியாமல் அவரது கடைசி சம்பந்தியான மலையாள வயநாட்டு எஸ்டேட் அதிபரின் மிரட்டல் வதைத்து விட்டது..

"சொத்துக்காரன் எண்டுதான் எண்ட செல்ல மோளை ஆ கொடைக்கானல் எஸ்டேட் ஒனரோட கடைசி மோனுக்கு விவாகம் கழிச்சுக் கொடுத்தேன்... ஆ கிழவன் என்னடான்னா எண்ட மருமகனுக்கு மோன் ஜனிச்சு வளர்ந்து விவாகம் கழிக்கிற பருவத்தில வந்து நிற்கிற வரைக்கும் சொத்தைப் பிரிச்சுக் கொடுக்காம இறுக்கிப் பிடிச்சுக்கிட்டு இருக்கான்.. இனியும் ஞான் தாமதிச்சா ஞான் ஈ வயநாட்டு எஸ்டேட்டுக்கு ஓனரா இருக்கிறதில அர்த்தமில்ல.. எண்ட மருமகனுக்குக் கிட்டாத சொத்து எண்ட கொச்சு மோனுக்காவது கிட்டனும்.. இல்ல.. ஞான் ஆ மதுசூதனனை வெட்டனும்.."

வயநாட்டின் வயலென்ஸ் கொலைமிரட்டல் மாநிலம் தாண்டி கொடைக்கானல் மதுசூதனனின் செவிகளை எட்டியதில் அவர் குலை நடுங்க உடனடியாக பாகப் பிரிவினைக்கு ஏற்பாடு பண்ணி விட்டார்..

மூன்று சம்பந்திகளில் அதிக ரத்தம் கொதிப்பு உள்ள வயநாட்டு சம்பதியின் மகள் வழிப் பேரனான ராஜேஸீக்கு கொடைக்கனாலின் ரிசார்ட்டுகளைக் கொடுத்துக் கோபத்தைத் தணித்து விட்டார்.. அதில் ஜனார்த்தனின் மகன் நவினுக்கு ஏகப்பட்ட வருத்தம்.. அவனுடைய அப்பாதான் குடும்பத்தில் மூத்த மகன் என்பதினால் ரிசாட்டுகள் அவனுக்குத்தான் கிடைக்கும் என்று நினைத்திருந்தான்.. அந்த நினைப்பில் மண்விழுந்து விட்டதை அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.. உரிமைக்குரல் எழுப்பி போர் முரசு கொட்டலாம் என்றால் வயநாட்டு மலை அதிபரின் முரட்டுத் தோற்றம் அவனை அச்சுறுத்தியது... ஆனானப்பட்ட மதுசூதனனின்

ஆணவத்தையே கேள்விக்குறியாக்கிய மனிதர் நவினையெல்லாம் ஒரு பொருட்டாக நினைப்பாரா..?

வயநாட்டு வயலென்ஸோடு எதற்கு வம்பு என்று வாயை மூடிக் கொண்ட நவீன் அடுத்து கண் வைத்தது சாக்லெட் பேக்டரியின் மீதுதான்.. உடனடியாக பணம் கிடைக்கும் தொழில் அது.. வெளி மாநிலங்களுக்கும், வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதியாவது.. அது மூர்த்தியின் பங்குக்குப் போய் விட்டதில் அவனுக்குள் கொந்தளிப்பு ஏற்பட்டது.. எஸ்டேட்டை அவன் பங்குக்குக் கொடுத்த மதுசூதனன்..

"எங்க பரம்பரையின் பெயரைச் சொல்லும் எஸ்டேட் மூத்த மகனின் பங்குக்குப் போகனும்.. அதுதான் முறை.." என்று பெரிய பிரசங்கம் ஒன்றைச் செய்து நவீனை சோதித்து வைத்தார்..

மதுசூதனனை எதிர்க்கும் வல்லமையும் துணிச்சலும் நவீனுக்கு இல்லை.. அவரைக் குல்லாப் போட்டு வைத்துக் கொண்டால்தான் அவரது காலத்திற்குப் பிறகு அவர் பொறுப்பில் இருந்த ஷாப்பிங் காம்ப்ளெக்ஸீகளையும், ஸ்டார் ஹோட்டலையும் கைப்பற்ற முடியுமென்ற நீண்ட காலத் திட்டத்துடன்.. அவன் வாயைத் திறக்காமல் கொடுத்ததை வாங்கிக் கொண்டான்..

அப்படியே விட்டு விட நவீன் ஒன்றும் முட்டாளில்லையே.. அவன் வேறு ஒரு வழியில் காய் நகர்த்த ஆரம்பித்தான்..

பேத்திகளில் நவீனின் தங்கையான நீரஜாவுக்கு வைர நகைகளும், வத்தலக்குண்டில் இருந்த பழத்தோட்டமும் சென்னையில் இருந்த பங்களாக்களில் ஒன்றும் கொடுக்கப்பட்டன.. மூர்த்தியின் தங்கை மிருதுளாவுக்கு வைர நகைகள், கொடை ரோட்டில் இருந்த பழத் தோட்டம், சென்னையில் இருந்த பங்களாக்களில் ஒன்று என்று பிரித்துக் கொடுக்கப்பட்டன.. கடைசி மகனின் மகளும் வயநாட்டு மலை அதிபரின் மகள் வழிப் பேத்தியுமான ராதிகாவுக்கு வைர நகைகள், கேரளாவில் இருந்த தேயிலைத் தோட்டம், சென்னையில் இருந்த

பங்களாக்களில் ஒன்று என்று பார்த்துப் பார்த்துப் பரிசீலனை செய்து வயநாட்டு மலை அதிபரின் மனம் கோணி விடாதபடி படுகவனமாக வழங்கப்பட்டன..

மதுசூதனனின் மகன்களும், மகன்வழிப் பேரன், பேத்திகளும் பாகப் பிரிவினையை ஏற்றுக் கொண்டு கையெழுத்தப் போட்டுக் கொடுத்தபோது மூர்த்தியின் பங்குக்கு வந்த சாக்லெட் பேக்டரியில் ஓர் இக்கன்னாவை உண்டாக்கி வைத்தான் நவீன்..

பெரியவருக்கு எப்போதுமே மூர்த்தியைப் பிடிக்காது.. எஸ்டேட்டில் வேலை செய்யும் தொழிலாளிகளை அவர் அடிமை போல நடத்துகிறார் என்று அடிக்கடி அவருடன் மோதுவான் மூர்த்தி.. அவருடைய தவறுகளைச் சுட்டிக் காண்பிப்பான்.. சாக்லெட் பேக்டரியை அவர் பாழடிக்கிறார் என்பான்.. இவற்றையெல்லாம் ஒன்றுக்குப் பத்தாய் உருவேற்றிப் போட்டுக் கொடுத்து மூர்த்தியை மதுசூதனனின் முக்கிய எதிரியாக அவர் நினைக்கும்படி அவருக்கு மூளைச் சலவை செய்து வைத்திருந்தான் நவீன்..

"தாத்தா.. இப்பவே மூர்த்தி பெயருக்கு சாக்லெட் பேக்டரியை மாற்றிக் கொடுத்திட்டிங்கன்னா அவன் பேக்டரியை நாசம் செய்து விடுவான்.. கண்ட்ரோலை உங்க கையில் வைத்துக்கங்க.. அவன் எப்போ பேக்டரியை ஒழுங்கா நிர்வாகம் பண்ணுகிறான்னு உங்களுக்குத் தோணுதோ.. அப்ப ஃபேக்டரியை அவன் பெயருக்கு எழுதி வையுங்க.. அதுதான் புத்திசாலித்தனம்.."

பாகப் பிரிவினையிலும் பிரிவினை செய்யும் அதி பயங்கரக் கெட்டிக்காரன் நவீன்.. தனது பங்குக்கான சாக்லெட் பேக்டரியைப் பெற்றுக் கொண்டேன் என்று மூர்த்தி கையெழுத்துப் போட்டுக் கொடுத்திருந்த பத்திரத்தில் அதற்கான பணத்தைப் பெற்றுக் கொண்டேன் என்று மாற்றி டைப் அடிக்க வைத்திருந்தான் நவீன்.. மதுசூதனின் சொல்படி அதைச் செய்ததாகக் காண்பித்துக் கொண்டான்..

மதுசூதனனுக்கு மற்றவர்களைக் 'கண்ட்ரோல்' பண்ணப் பிடிக்கும்.. அதுவும் மூர்த்தியைக் கண்ட்ரோல் பண்ணுவதென்றால் அவருக்கு அல்வாச் சாப்பிட்டதைப் போல அவ்வளவு பேரானந்தமாக இருக்கும்.. அதற்கு வழி செய்து விட்ட நவீன் அவருக்குச் செல்லப் பேரனாக ஆனான்..

பத்திரத்தைப் படித்துப் பார்க்காமல் கையெழுத்துப் போடும் அளவிற்கு மூர்த்தி சோம்பேறியும் அல்ல.. முட்டாளும் அல்ல.. மதுசூதனனின் மீது அவனுக்குத் துளியளவும் நம்பிக்கை இருந்ததில்லை... அவன் பத்திரத்தைப் படிக்க முனைந்தபோது வேகமாக ஓடி வந்த நவீன்..

"மூர்த்தி, சித்தி மாடிப்படியிலே கால் சறுக்கி விழுந்துட்டதா போன் வந்திருக்குடா.. க்விக், சீக்கிரமா வா.. ஹாஸ்பிடலுக்குப் போகனும்.." என்று பதறினான்..

அம்மாவுக்கு ஒன்று என்றால் சர்வாங்கமும் பதறாதா..? மூர்த்தி அவசரமாக படித்துப் பார்க்காமல் கையெழுத்துப் போட்டு விட்டு வீட்டுக்கு ஓடினால் அங்கே வசுந்தரா தோட்டத்தில் பூஜைக்காக பூப்பறித்துக் கொண்டிருந்தாள்..

"அடிபட்ட காலோடு பூப்பறித்துப் பூஜை செய்யலைன்னா சாமி கோபித்துக்குமா..?" மூர்த்தி தாயைச் சப்தம் போட்டான்.. அவளோ..

"அடி பட்டிருக்கா..? யாருக்குடா..?" என்று குழம்பிப் போனவளாக மகனைக் கேள்வி கேட்டாள்..

"நீங்க மாடிப்படியில் சறுக்கி விழுந்து அடிபட்டு விட்டதா நவீன் ஓடி வந்தானேம்மா.."

"இல்லையே மூர்த்தி.. அவன் ஏன் அப்படிச் சொல்லனும்..?"

'ஏன் சொல்லனும்..?'

யோசித்த மூர்த்திக்குப் பளிச்சென்று உண்மை விளங்கி விட்டது.. பல்லைக் கடித்தான்.. மகன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த வசுந்தரா..

"என்னப்பா ஆச்சு..?" என்று கலக்கமாகக் கேட்டாள்.

"என்ன ஆச்சா..? உங்க மைத்துனர் மகனும், மாமனாரும் என் முதுகில குத்திட்டாங்கம்மா.. துரோகிங்க.."

"மூர்த்தி.."

"பாகப்பிரிவினைப் பத்திரத்தில ஏதோ கோல்மால் நடந்திருக்கும்மா.. என்னைப் படித்துப் பார்க்க விடாம கையெழுத்துப் போட வைச்சுட்டாங்க.."

"கடவுளே..!"

வசுந்தரா நெஞ்சைப் பிடித்துக் கொண்டு அப்படியே உட்கார்ந்து விட்டாள்... தீரனான மகனைப் பெற்றிருந்தாலும் அவனுக்கு உரிமையான சொத்துக் கிடைக்காமல் போய் விடுமோ என்று பெற்ற மனது பதறியது..

பாகப் பிரிவினை பத்திரம் மூர்த்தியின் சந்தேகத்தை ஊர்ஜிதம் செய்தது... பெயருக்குத்தான் சாக்லெட் பேக்டரி கைக்கு வந்திருக்கிறது.. அதன் உரிமையாளர் மதுசூதனன்தான் என்பதில் மூர்த்தி வெகுண்டாள்..

"இப்ப என்ன நடந்து போச்சுன்னு இந்தக் குதி குதிக்கிற..? மத்த பேரன், பேத்திகளைப் போல நீ இருந்திருந்தா உனக்கான பங்கை நான் கொடுத்திருப்பேன்.. நீ அப்படியில்லையே.." திமிராகப் பேசினார் மதுசூதனன்..

"வேறு எப்படியிருக்கிறேன் தாத்தா.. புட்டியும், குட்டியுமா அலைகிறேனா..?" துளைக்கும் பார்வையோடு கேட்டான் மூர்த்தி..

"கேட்டிங்களா தாத்தா.. நீங்க யூத்தா இருந்தப்ப ஜல்சாப் பண்ணிக்கிட்டு அலைஞ்சீங்களாம்.. அதைச் சொல்லிக் காட்டறான்.." அதைச் சொல்லிக் காட்ட வேண்டுமென்ற நீண்ட நாள் அவாவுடன் காத்திருந்த நவீன் போட்டுக் கொடுத்துப் புண்ணியத்தைக் கட்டிக் கொண்டான்..

"அப்ப.. நான் அப்படி அலைஞ்சேன்னு சொல்கிறயா..?" மதுசூதனன் மத்தளம் கொட்டினார்..

"இதானே வேணாம்ங்கிறது.. உங்களுக்கு இளமை ஊஞ்சலாடுது பாருங்க.. உங்களைப் போய் புட்டியும், குட்டியுமா அலைகிறீங்கன்னு சொல்லிக் காட்டறேன்.. பேரன், பேத்திகளுக்குக் கல்யாணம் பண்ணி வைத்துக் கொள்ளுப் பேரன் பேத்திகளைப் பார்க்கிற வயசில இருக்கிறவர் நீங்க... நினைப்பில வைத்துக்கங்க... நான் சொல்கிறது இப்ப பட்டியும், குட்டியுமா அலைகிறவங்களைப் பத்தி.." மூர்த்தியின் பார்வை நவீனைச் சுட்டெரிப்பதைப் போலப் பார்த்து அவன் யாரைச் சொல்கிறான் என்பதைச் சொல்லாமல் சொல்லியது..

"நீ எப்படி வேண்டுமானாலும் பேச்சை மாத்துவடா.."

"எப்படி..? நீங்க பத்திரத்தோட செண்டென்ஸையே மாத்தியிருக்கீங்களே.. அப்படியா..?"

"அது என் பாட்டன், பூட்டன் உருவாக்கின கம்பெனிடா.. அதோட பெருமை குலையாம நீ கட்டிக் காப்பாத்துவன்னு நம்பிக்கை வந்தாத்தான் உன்னிடம் ஒப்படைப்பேன்.."

"இல்லைன்னா.."

"ஒப்படைக்க மாட்டேன்.."

"அந்த பேக்டரியில என்ன பெருமை இருக்கு..? ஓட்டையும் உடைசலுமான நிர்வாகம்... சீனியர் சிட்டிசன்களான லேபர்ஸ்ன்னு அரதப் பழசா இருக்கு.. இதில அதோட பெருமையை நான் கட்டிக் காப்பாத்தனுமாம்.. இல்லை.. தெரியாமத்தான் கேட்கிறேன்.. அது என்ன நீங்க சுயமா சம்பாதிச்சு உருவாக்கின பேக்டரியா..?"

அந்தக் கேள்வியில் மதுசூதனனின் அதிகார மையம் ஆட்டம் கண்டது.. அஸ்திவாரம் குழுங்கியது.. அவருடைய பிள்ளைகள் கூடக் கேட்க அஞ்சும் கேள்வியை அஞ்சா நெஞ்சனான மூர்த்தி அச்சமில்லாமல் அவரைப் பார்த்துக் கேட்டான்..

'அச்சமில்லை.. அச்சமில்லை..

அச்சமென்பதில்லையே..

இச் சகத்தில் உள்ளோர்கள்

எதிர்த்து நின்ற போதிலும்

அச்சமில்லை.. அச்சமில்லை..

அச்சம் என்பதில்லையே..'

எட்டயபுரத்தின் முண்டாசுக் கவியின் எழுச்சிமிக்க வரிகளுக்கான எடுத்துக்காட்டாக மதுசூதனனை எதிர்த்து நின்றான் மூர்த்தி..

"உங்க பாட்டன், பூட்டன் சம்பாதித்த சொத்துங்கறிங்களே.. உங்க பாட்டனும், பூட்டனும் எனக்கு யாரு..? வழியில் போகிற வழிப் போக்கர்களா..?"

நல்ல நல்ல கேள்விகளைத்தான் கேட்டான் மூர்த்தி.. மற்றவர்கள் என்றால் வெட்கித் தலை குனிந்திருப்பார்கள்.. மதுசூதனன் வெறி பிடித்தவர்.. அப்படிச் செய்யாமல் மூர்த்தியைத் துவம்சம் செய்தால் என்ன என்ற வெறி கொண்டார்..

"உங்க பாட்டனும், பூட்டனும், அவங்கவங்க காலத்தில பரம்பரைச் சொத்தை ஒன்றுக்குப் பத்தாகப் பெருக்கிக் காண்பிச்சாங்க.. சொத்து உங்க கைக்கு வந்த போது நீங்க என்னத்தைச் செய்து கிழித்தீங்க..? உங்க காலத்தில நீங்க உருவாக்கின சொத்துன்னு ஒன்றைக் கை காட்டுங்க பார்க்கலாம்.. ஒன்றுமே இல்லை.. பரம்பரைச் சொத்தை வைத்துக்கிட்டுப் பந்தாக் காண்பித்தீங்க.. நீங்களும் எதுவும் செய்யலை.. உங்க மகன்களையும் எதுவும் செய்ய விடலை.. சொத்தைப் பிரித்துக் கொடுத்தால் தானே அவங்களால் எதுவும் செய்ய முடியும்..? நீங்கதான் அத்தனை சொத்துக்கும் நீங்கதான் அதிபதின்னு ஆட்டம் போட்டுக்கிட்டு இருந்தீங்களே.. நல்லவேளை..! சித்தப்பாவுக்கு மலைநாட்டில பெண் எடுத்தீங்களோ.. நாங்க பிழைத்தோமோ... வயநாட்டுத் தாத்தா

துப்பாக்கியைத் தூக்கிக்கிட்டு கொடைக்கானல் மலையில வந்து குதிச்சிருவாருன்னு பயந்து பாகத்தைப் பிரித்தீங்க.. தேங்க் யு சித்தி.. என் அண்ணன், தம்பி, தங்கைகள் சார்பாக நான் தேங்க்ஸ் சொன்னேன்னு வயநாட்டுத் தாத்தாவுக்குப் போன் போட்டுச் சொல்லிருங்க.."

மதுசூதனனின் கடைசி மருமகளான கோமளா மூர்த்தியின் நன்றியுரையில் திணறிப் போனாள்.. மாமனாரின் கோப முகத்தைப் பார்க்கப் பயந்தவளாக வசுந்தராவின் முதுகின் பின்னால் ஒன்றிக் கொண்டு மூர்த்தியைப் பார்த்து உதட்டில் ஒற்றை விரலை வைத்துப் 'பேசாமல் இரு..' என்று சைகை காட்டினாள்..

மூர்த்தியா பேசாமல் இருப்பான்..? அவன் பேச வேண்டியதை எல்லாம் பேசித் தீர்த்து விட்டுத்தான் வெளியே போனான்.. அவன் பேசிய பேச்சுக்களில்..

"வயதான காலத்தில் உங்களுக்கு எதுக்கு ஷாப்பிங் காம்ப்ளெக்ஸீம், ஸ்டார் ஹோட்டலும்..?" என்று கேட்ட கேள்வி மட்டும் நவீனுக்குப் பிடித்தமானதாக இருந்தது..

"இருக்க அரண்மனை, போட்டுக்க பரம்பரை வைர நகைகள்.. செலவளிக்க பேங்க் பேலன்ஸ்ன்னு இருந்துக்கிட்டு ஹோட்டலையும் ஷாப்பிங் காப்ளெக்ஸீகளையும் கைப்பற்றிக்கிட்டு இருக்கீங்களே.. நீங்கள்ளாம் ஒரு பெரிய மனுசன்.. பொடித்தனமான வேலைகளுக்கு நீங்கதான் பெஸ்ட் எக்ஸாம்பிள்.. இதில இவரு பரம்பரைப் பெருமையைப்பற்றி வாய் கிழியப் பேசறாரு.. உங்க பரம்பரையில யாராவது ஒரு தாத்தா இப்படியாப்பட்டவரா இருந்திருக்காங்களா..? நீங்க மட்டும் ஏன் இப்படி இருக்கீங்க..?"

மூர்த்தி கிழித்த கிழியில் நைந்து நொந்து போன மதுசூதனன் மூர்த்தியை எதிரியாகப் பார்க்க ஆரம்பித்தார்.. மூர்த்தியுடன் பேசுபவர்களைக் கூடத் தள்ளி வைத்தார்.. பெற்ற தாய், தகப்பனிடம் கூட மூர்த்தி பாசத்துடன் பேச முடியாமல் போனது..

"மூர்த்தி.. சாப்பிட வா.."

மகனை வசுந்தரா அழைக்கும் போதே..

"வசுந்தரா.. என்னோட வைர அட்டிகையைப் பார்த்தியா..?" என்று அலமேலுவின் குரல் எழும்பி விடும்.

"இல்லையே அத்தை.." மாமியாருக்குப் பதில் சொல்ல விரைந்து விடுவாள் வசுந்தரா..

"அப்பா.." தகப்பனிடம் பேச நினைத்து அணுகுவான் மூர்த்தி..

"கோவிந்த்.. நம்ம ஆடிட்டரைப் பார்க்கச் சொன்னேனே.. பார்த்தியா..?" மதுசூதனன் அதிகாரமாக கோவிந்தராஜனை வெளி வேலைக்கு அனுப்பி விடுவார்..

பெற்றவர்களுக்கே இப்படியெனும் போது மற்றவர்களைப் பற்றிச் சொல்ல வேண்டாம்.. அகன்று, பரந்து, விரிந்திருந்த அந்த அரண்மனையில் மூர்த்தி தனிமைப் படுத்தப் பட்டான்.. மதுசூதனனுக்குத் தெரியாமல், அவரது அதிகாரத்திற்குப் பணியாமல் அஞ்சாமையுடன் மூர்த்தியைப் பார்த்துப் பேசிப் பாசம் காட்டுவது மூன்று பேர்தான்... மூர்த்தியின் தங்கை மிருதுளா, மூர்த்தியின் சித்தப்பா ராமநாதனின் பிள்ளைகளான ராஜேஸ், ராதிகாதான் அவர்கள்..

"அண்ணா.." என்ற மனம் நிறைந்த பாச அழைப்போடு அவர்கள் மூர்த்தியிடம் பேசிப் பழகுவார்கள்..

அதைப் பற்றிய விசாரணைக்கு மதுசூதனன் அவர்களை அழைத்தால் அவர்கள் மதுசூதனனும், அலமேலுவும் கடை பிடிக்கும் வழிமுறையையே கடைபிடித்துத் தப்பித்து விடுவார்கள்..

"மிருதுளா.." மதுசூதனன் அழைப்பார்..

"அம்மா.. கூப்பிட்டிங்களா..?" வசுந்தராவிடம் ஓடி விடுவாள் மிருதுளா..

"ராதிகா.." அலுமேலு அதட்டுவாள்..

"ஹலோ.. ஹலோ.. இருடி.. சிக்னல் கிடைக்கல.."

வராத போன் அழைப்பிற்கு பதில் சொல்லியபடி அலமேலுவின் குரல் காதில் விழாததைப் போல தோட்டத்துக்குப் போய் விடுவாள் ராதிகா..

இவர்கள் இருவருக்கும் மேலே இருப்பான் ராஜேஸ்.. அவனிடம் பேச வேண்டும் என்று மதுசூதனன் உதட்டைப் பிரித்தாலே போதும்.. இவன்..

"இப்பத்தான் வயநாட்டில இருந்து தாத்தா பேசினார் தாத்தா.. உங்களைப் பற்றி விசாரித்தார்.." என்பான்..

'பயபுள்ள.. நல்லபடியாச் சொன்னானா, இல்லையா..?'

மதுசூதனன் கிலி பிடித்தவராக கேட்க வந்ததைக் கேட்க மறந்து..

"ஹி..ஹி.. அவர் நல்லாயிருக்காரா..?" என்று வழிவார்..

"அவருக்கென்ன தாத்தா.. நூறு பேர் வந்தாக்கூட பந்தாடற உடம்புவாகு.. நல்லாத்தான் இருக்கார்.. நீங்க எப்படி இருக்கீங்கன்னுதான் கேட்டார்.."

மலைவளநாட்டுத் தாத்தா அடித்தால் மதுசூதனன் தாங்குவாரா என்று மேலும் கீழுமாகப் பார்த்து வைக்கும் ராஜேஸின் பார்வையில் கதிகலங்கிப் போய் விடும் மதுசூதனன் அவனிடம் பேச்சை வளர்க்கப் பயப்படுவார்..

'அஃது..' என்ற பார்வையோடு நகர்ந்து விடும் ராஜேஸின் மலைவள நாட்டுத் தாத்தாவிற்கு மூர்த்தியை மிகவும் பிடிக்கும்..

"ஈ கொடைக்கானல் கொட்டாரத்தில ஞான் வளர நேசிக்கும் மனுசன் மூர்த்தி மட்டுமல்லோ.. ஈ மனுசனும் எண்ட கொச்சு மோன்தானாக்கும்.." என்று அவர்

வளர்க்கும் பாசப் பயிரை நினைத்து ஊமையாகி விடுவார் மதுசூதனன்..

அரண்மனையில் மூர்த்தியின் தேவைகளைப் பார்த்துப் பார்த்துச் செய்து பசியாற வேளா வேளைக்குப் பரிமாறி கவனித்துக் கொள்வது சாவித்திரி மட்டும்தான்.. வசுந்தரா

பிறந்த ஊரிலிருந்து வரவழைக்கப் பட்டவள் என்பதால் மதுசூதனனின் பேச்சுக்கும் அலமேலுவின் அரட்டலுக்கும் கட்டுப்பட மாட்டாள்.. மற்றவைகளில் தகப்பனாரின் பேச்சிற்கு மறு பேச்சுப் பேசாத கோவிந்தராஜன்..

"இந்த சாவித்திரியை வேலையை விட்டுத் தூக்கு.." என்ற மதுசூதனனின் கட்டளைக்கு மட்டும் கட்டுப்பட மாட்டார்..

"ஸாரிப்பா.. சாவித்திரியை வசுந்தரா அழைத்து வந்திருக்கா.. கடைசி வரைக்கும் அவளை வேலையை விட்டு அனுப்ப மாட்டேன்னு வசுவுக்கு நான் வாக்குக் கொடுத்திருக்கேன்.." என்று சொல்லி விடுவார்..

மனைவிக்குக் கொடுத்த வாக்கை மீறச் சொன்னால் எங்கே மகன் தகப்பன் பேச்சை மீறி விடுவானோ என்ற பயத்தில் வாயை இறுக்கி மூடிக் கொள்வார் மதுசூதனன்..

"சொல்பேச்சுக் கேட்காத வேலைக்காரிக்கு வெட்டியாச் சம்பளம் கொடுக்கனுமா..? சாவித்திரியோட கணக்கைப் பார்த்துச் செட்டில் பண்ணி அனுப்பிச்சுரு யமுனா.." அலமேலு மூத்த மருமகளுக்கு கட்டளையிடுவாள்..

"ஆகட்டும் அத்தை.." யமுனா உற்சாகமாகி விடுவாள்..

அந்த அரண்மனையில் கடைசி மருமகளான கோமளாதான் வசுந்தராவுடன் ஒற்றுமையாக இருப்பாள்.. யமுனா சூழச்சியும், வன்மமும் நிறைந்தவள்.. அவளிடமிருந்து மற்ற இரு மருமகள்களும் விலகியே நிற்பார்கள்.. அதில் யமுனாவுக்கு பலத்த கோபம் உண்டு..

"சாவித்திரி எங்க ஊர்க்காரி அத்தை.. எனக்குத் தூரத்து சொந்தம் கூட.. பணத்துக்காக அவள் இங்கே வேலை பார்க்கலை.. எனக்காக இருக்கிறா.. அவ கணக்கை செட்டில் பண்ணும் உரிமை இங்கே யாருக்கும் கிடையாது.. அப்படிச் செய்ய நினைத்தா நிறைய கணக்கு வழக்குகளைச் செட்டில் பண்ணித் தரச் சொல்லி எங்கப்பாவையும் அண்ணன் தம்பிகளையும் இங்கே வரவழைப்பேன்.. கோமளாவோட அப்பா மட்டும்

கோபக்காரரில்ல.. என் அப்பாவும், அண்ணன் தம்பிகளும் அப்படித்தான்.." வசுந்தரா போடும் போட்டில்..

"இந்தா பாரு யமுனா.. நான் என்ன சொன்னாலும் ஆகட்டும் அத்தைன்னு தலையை ஆட்டுகிற வேலையை இதோடு நிறுத்திக்க.. சாவித்திரி யாரு..? நம்மளை நம்பி வந்திருக்கிறவ.. அவளை வெளியே அனுப்பினா நம்ம பரம்பரை கௌரவம் என்ன ஆகிறது..?" என்று மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போட்டுப் பேச்சை மாற்றி விடுவாள் அலமேலு..

எங்கே, எப்போது, எப்படி அடிக்க வேண்டும் என்ற வித்தையைக் கற்றுக் கைக்குள் வைத்திருப்பவர்கள் மதுசூதனனும், அலமேலுவும்.. அவர்கள் மூர்த்தியை அடிக்கும் நாளுக்காக காத்திருந்தார்கள்..

சாக்லெட் பேக்டரியில் மூர்த்தி செய்த சீர்திருத்தங்களும், மற்ற அவனது செயல்பாடுகளும் குற்றங்களைப் போல மதுசூதனனிடமும் அலமேலுவிடமும் சொல்லப்பட்டன.. அவர்களின் மனதிலிருந்த வன்மம் அதிகரித்துக் கொண்டேயிருந்தது.. அப்போதுதான் தன் மனதிலிருந்த ஒருதலைக் காதலை அவர்களிடம் வெளிப்படுத்தினான் நவீன்..

நவீனுக்காகப் பெண் தேட ஆரம்பித்திருந்த நேரம் அது.. பார்க்கும் பெண்களையெல்லாம் பிடிக்கவில்லை யென்று சொல்லித் தட்டிக் கழித்துக் கொண்டிருந்தான்..

"என்னடா நவீன் இது.. காலா காலத்தில கல்யாணம் பண்ணிக்க வேண்டாமா..?" மதுசூதனன் கோபப்பட்டார்..

"மனதுக்குப் பிடித்த பெண்ணைக் கண்ணில காட்டினா நான் மாட்டேன்னு ஏன் சொல்லப் போறேன் தாத்தா.."

நவீன் நயவஞ்சகமாகப் பதில் சொன்னான்..

"உன் மனசுக்குப் பிடித்த பெண் யாருன்னு எங்களுக்கு எப்படிடா தெரியும்..? அதைக் கண்டு பிடிக்க வெத்தலையில் மை தடவிப் பார்க்கிற ஜோஸியரைத்தான் கூப்பிடனும்.." என்றாள் அலமேலு..

"யாரையும் கூப்பிட வேண்டாம்.. என் மனதுக்குப் பிடித்த பெண் உங்களுக்கும் தெரிந்தவள்தான்.." புதிர் போட்டான் நவீன்..

"எங்களுக்குத் தெரிந்தவளா..? யாருடா அவ..?"

தாத்தாவும், பாட்டியும் ஆர்வமாகி விட்டதைப் புரிந்து கொண்ட நவீன் சோகமாக முகத்தை வைத்துக் கொண்டு..

"சொல்லி என்ன பிரயோசனம் தாத்தா.. தி கிரேட் மதுசூதனனால முடியாதது எதுவுமில்லைதான்.. பட்.. அவ யாருன்னு நான் சொன்னாலும் அவளை எனக்குக் கல்யாணம் பண்ணி வைக்க உங்களாலே முடியாது தாத்தா.." என்று அவரது சுய மரியாதையைக் கிளறி விட்டான்..

"இந்த மதுசூதனனாலே முடியாததுன்னு எதுவுமில்லடா.." சுண்டெலி சிங்கம் போல மார்தட்டிக் கொண்டது..

'கிழிச்ச..' மனதுக்குள் சொல்லிக் கொண்டு.. வெளியே..

"முடிந்தாலும் நீங்க அதைச் செய்ய மாட்டிங்க.. நீதி, நேர்மை, நியாயம்ன்னு தேவையில்லாததையெல்லாம் பேசுவீங்க.. நீதி, நேர்மை, நியாயமெல்லாம் ஒழுங்கானவனுக்குத்தான் தாத்தா.. பெரியவங்க என்கிற மரியாதையில்லாத ரௌடியோட விசயத்தில எல்லாம் இதுகளை இழுத்துப் போடக் கூடாது.. தாத்தா.." என்றான் நவீன்..

"என்னத்தடா குழப்பற..?" மதுசூதனன் தலையைச் சொறிந்தார்.. அவருக்கு ஒரு மண்ணும் புரியவில்லை..

அலமேலுக்கு எதுவோ புரிவதைப் போல இருந்தது.. அவள் மனிதர்களின் ஆழ்மனதில் இருக்கும் ஆசைகளைத் துல்லியமாக இனம் கண்டு கொள்பவள்.. அவள் அறிந்த ஒரு பெண்ணைப் பார்க்கும் போதெல்லாம் நவீனின் கண்களில் மின்னும் ஆசையைப் பலமுறை அவள் பார்த்திருக்கிறாள்..

"மாயாவைச் சொல்கிறாயா நவீன்..?" அவள் கேட்டுவிட்டாள்..

"மாயாவா..?" மதுசூதனன் அதிர்ச்சியானார்..

மூர்த்தி உயிருக்குயிராகக் காதலிக்கும் மாயாவையா நவீன் தன் மனதுக்குப் பிடித்த பெண் என்று சொல்கிறான்..?

23

மாயா..!

மைதாமாவும், சந்தனமும், அரைத்த மஞ்சளும் சேர்ந்து வந்தால் என்ன நிறத்திலிருக்குமோ அது போன்றதொரு நிறத்துடன் மிளிர்பவள்.. மாசு, மருவற்ற வெள்ளை வெளேர் என்ற சருமத்திற்குச் சொந்தக்காரி.. அகன்ற கருவிழிகளும் ஒல்லியான தேகமுமாக ஆளை அயர வைக்கும் பேரழகுடன் திகழ்பவள்.. மூர்த்தியின் காதலி..!

மாயாவின் பெற்றோர் சென்னையில் வசித்தார்கள்.. அப்பா தொழிலதிபர்.. அம்மா கணவரின் தொழில்களில் பங்குதாரர்.. இருவரும் நிற்க நேரமில்லாமல் பணத்தைத் துரத்திக் கொண்டு ஓடிக் கொண்டிருப்பவர்கள்.. ஒற்றைப் பெண் குழந்தையைக் கவனித்து வளர்க்க முடியாமல் கொடைக்கானல் கான்வென்டில் சேர்த்திருந்தார்கள்.. மாயா ஹாஸ்டலில் தங்கிப் படித்து வந்தாள்.. மூர்த்தி அவளுக்கு சீனியரோ சீனியர்..

பிளஸ்-டூ படித்துக் கொண்டிருந்தவன் ஓர் மழை நேரத்துக் காலை வெயிலில் பள்ளி மைதானத்தில் கால் தடுக்கி விழுந்து விட்டக் குழந்தைப் பெண்ணாக மாயாவை சந்தித்தான்.. அப்போது அவள் ஆறாம் வகுப்பில் இருந்தாள்.. பெரிய விழிகளும் குண்டுக் கன்னமுமாக இருந்த அந்த அழகுச் சிறுமியின் கரிய விழிகளில் தெரிந்த ஏக்கம் மூர்த்தியை பாதித்தது.. கை தூக்கி விட எவரும் முன்வராமல் கை கொட்டிச் சிரித்த அவமானத்தில் அழுகையை அடக்க முயன்றபடி அவள் எழுந்து கொள்ள

முனைந்தபோது அவள் முன் வலிய கரம் ஒன்று நீண்டது.. திகைப்புடன் நிமிர்ந்து பார்த்தவளிடம் சிநேகிதமாக சிரித்த மூர்த்தி..

"கமான்.." என்றான்..

கைகொட்டிச் சிரித்த மற்றவர்களின் சிரிப்புக்கும், மூர்த்தியின் சிரிப்புக்கும்தான் எத்துனை வித்தியாசம்..!

மாயாவின் விழிகளில் தெரிந்த ஏக்கம் தொலைந்து போனது.. அழுகையை அடக்கியதில் துடித்த இதழ்கள் மலர்ந்து சிரித்தன.. மூர்த்தியின் கையைப் பற்றியபடி எழுந்து நின்றாள்..

"தடுக்கி விழாதவங்க யாரிருக்கா..? சொல்லு.. கால் தடுக்கினா விழுந்துதானே ஆகனும்..? இதுக்குப் போய் மூட்-அவுட் ஆகலாமா..?"

இதமாக மூர்த்தி பேசிய விதம் மாயாவைக் கவர்ந்து விட்டது.. பனிரெண்டாம் வகுப்பில் படிக்கும் சீனியர் மாணவன் என்ற தோரணையுடன் பரிவாகப் பேசியவனை ஆர்வமாக பார்த்து வைத்தாள்.. அரும்பு மீசையும், அலைபாயும் கரிய முடியும், உயரமான தோற்றமுமாக அவன் ஒரு கதாநாயகனைப் போல இருந்தான்.. குழந்தையிடம் பேசும் பரிவுடன்தான் அவளிடம் பேசினான்.

"எந்த ஊர்..?"

"சென்னை.."

"ஹாஸ்டலா..?"

"ம்ம்ம்.."

"உன் பெயர் என்ன..?"

"மாயா.."

"எந்த கிளாஸ்..?"

"சிக்ஸ்த் ஸ்டாண்ட்ர்டு.."

"இனிமே கீழே விழுந்தா எழுந்துக்கப் பார்க்கனும்.. அழக்கூடாது.."

சிரிப்புடன் அறிவுறுத்தி விட்டுப் போய் விட்டான்.. அவளைப் பற்றிய விவரங்களைக் கேட்டவன் அவனைப் பற்றி எதுவும் சொல்லவில்லையே என்று அவள் மனம் சிணுங்கியது..

'இவன் சொல்லாட்டி என்ன.. நானே கண்டு பிடிச்சுக்கறேன்..'

நினைத்ததைப் போல அவனைப் பற்றிய அனைத்து விவரங்களையும் அவள் சேகரித்து விட்டாள்..

"அந்த சீனியரா..? அவன் ரௌடி ஸ்டூடண்ட்.. யாராய் இருந்தாலும் சட்டுன்னு கை நீட்டிருவானாம்.. டேன்ஜரஸ் ஃபெல்லோ.."

"உன்னிடம் அவனைப்பத்தின ஒப்பினியனைக் கேட்டேனா..? யார் அவன்னு சொல்லுடின்னா.. 'டேன்ஜரஸ் ஃபெல்லோ'ங்கிறா.."

"அவன் பெரிய பணக்கார வீட்டுப் பையன்டி.."

"இங்கே படிக்கிற எல்லோருமே ரிச் பேமிலிதான்.."

"இவன் ரிச்சோ ரிச்.. கொடைக்கானலிலே இவங்க பேமிலிக்கு சாக்லெட் பேக்டரி, ஸ்டார் ஹோட்டல், எஸ்டேட், ஹாப்பிங் காம்ப்ளெக்ஸ், ரிசார்ட்ஸ்ன்னு நிறைய புராப்பர்ட்டீஸ் இருக்கு.. சென்னையிலும் ஈஸி ஆர் ரோட்டில ரிசார்ட்டுகள் இருக்கிறதாச் சொல்லிக்கிறாங்க.. அங்கே பங்களாஸ் வேற இருக்காம்.."

மாயாவின் மனதில் மூர்த்தி எவ்வளவு ஆழமாகப் பதிந்தானோ அதைவிட ஆழமாக அவன் மிகப்பெரிய பணக்காரக் குடும்பத்தில் பிறந்தவன் என்ற விவரமும் பதிந்து விட்டது.. அதன் பின்னால் அவள் தினமும் மூர்த்தியின் வகுப்புக்கு அருகில் சென்று வருவாள்.. அவனைப் பார்ப்பாள்.. அவன் மரத்தடியிலோ வகுப்பிலோ சக மாணவர்களுடன் அரட்டையடித்துக் கொண்டிருப்பான்.. இவள் வந்து போவதை அவன் பார்த்ததில்லை.. இப்படியே

நாள்கள் கழிந்து அவன் பள்ளியிறுதித் தேர்வை எழுதி முடித்து விட்டுப் பள்ளியை விட்டுச் சென்று விட்டான்.. அடுத்த கல்வியாண்டில் அவனைப் பார்க்க முடியாமல் பிழியப் பிழிய அழுதாள் மாயா.. அவளது மனதை இனம் புரியாத சோகம் ஆக்ரமித்துக் கொண்டது..

"என்னடி நீ.. இப்படி ஆகிப் போயிட்ட..?"

கொடைக்கானலைச் சேர்ந்த வகுப்புத் தோழி விசாரித்தாள்.. என்னவென்று மாயா சொன்னதும் அவளை ஒரு தினுசாய் பார்த்து வைத்தாள்..

"செவன்த் ஸ்டாண்டர்டிலேயே லவ்வா..?"

"ச்சீ.. அப்படியொன்னுமில்ல.."

"பின்னே..?"

"எனக்கு அவன் எங்கேயிருக்கான்னு தெரியனும்டி.. இனிமே அவனை பார்க்கவே முடியாதா..?"

"அவனை எதுக்குடி நீ பார்க்கனும்..?"

"தெரியலை.."

"என்னவோ செய்து தொலை.. அவன் எங்கே போனாலும் கொடைக்கானலுக்கு வந்துதான் ஆகனும்.."

"எப்படி..?"

"அவனோட பேமிலி இங்கேதானேடி இருக்கு..?"

"தட்'ஸ் தி பாயிண்ட்.."

மாயா குதூகலமானாள்.. மூர்த்தி சென்னையில் பி.ஈ படிப்பதாகவும் விடுமுறை தினங்களில் கொடைக்கானலுக்கு வந்து போவான் என்றும் அந்தத் தோழி கூறினாள்.. அப்படி அவன் வரும் தினங்களில் சந்தர்ப்பம் கிடைத்தால் மாயா அவனைப் பார்க்கலாம் என்றும் யோசனை சொன்னாள்.. வருடத்திற்கு ஒருமுறை அப்படிப்பட்ட சந்தர்ப்பம் கிடைக்கத்தான் செய்தது.. மாயா அவனை தொலைவிலிருந்து பார்த்தாள்.. அவன் அவளைப்

பார்த்ததில்லை.. என்ஜினியரிங் படிப்பை முடித்து அவன் கொடைக்கானலுக்கு வந்தபோது கோக்கர்ஸ் வால்க்கிஸில் ஓர்நாள் அவன் மாயாவைச் சந்தித்தான்..

மாயா பிளஸ்-ஒன் முடித்து பிளஸ்-டூவில் காலடி வைத்திருந்தாள்.. உயரமாக அழகாக அன்றுதான் பூத்த புது மலர்போல அழகின் இலக்கணமாய் இருந்தவளை அவன் பார்த்தபோது யாரோ ஒருத்தியைப் பார்ப்பதைப் போலப் பார்த்தபடி கடந்து செல்லப் போனான்.. இருவரும் எதிரெதிர் திசைகளில் இருந்து நடந்து வந்தார்கள்.. அவனைப் பார்த்த மாயாவின் பார்வையில் தெரிந்த மின்னல் அவனைக் கடந்து செல்ல விடாமல் கால்களைக் கட்டிப் போட்டது.. அவன் தேங்கி நின்றான்..

'யார் இவள்..?'

பதினேழு வயதுப் பிராயத்துக்கேயுரிய வனப்பு அவளிடம் குடி கொண்டிருந்தது.. யௌவனத்தின லாவண்யமும் ரம்யமும் அவளிடம் நிறைந்திருந்தன.. சிறுமிக்குரிய அறியாமை அகன்று கன்னிப் பருவத்தின் குறுகுறுப்பு அவள் முகத்தில் விரவியிருந்தது.. படபடக்கும் இமைகளோடு மூர்த்தியை அவள் பார்த்த பார்வையில் மூர்த்தி அப்படியே நின்று விட்டான்..

"ஹௌ ஆர் யு..?" மாயா கேட்டாள்..

தெரிந்தவளைப் போல அவள் கேட்ட கேள்வியில் புருவங்களை உயர்த்தியவன்..

"ஃபைன்.. ஹூ ஆர் யு..?" என்று பதிலுக்கு கேட்டான்..

"ஐ ஆம் மாயா.. ஸ்கூலில் உங்களுக்கு ஜூனியர்.."

"ஓ.. என்னை ஸ்கூலில் பார்த்திருக்கிறாயா..?"

"ம்ம்ம்.."

மூர்த்திக்கு வியப்பாக இருந்தது.. அவனை விட ஆறுவயது இளைய சிறுமி அவனைக் கண்காணித்திருக்கிறாள் என்பதில் அவனுக்குள் பரவசம் பரவியது.. அவன் எம்.பி.ஏ படிக்கப் பூனா போனான்.. போவதற்கு முன்னால் அவளைச்

சந்தித்துச் சொல்லி விட்டுச் சென்றான்.. செல்போனில் உறவு வலுத்தது.. மாயா பள்ளிப் படிப்பை முடித்து சென்னையின் பொறியியல் கல்லூரியில் சேர்ந்தாள்.. சுதந்திரப் பறவையாய் சிறகை விரித்தவளைத் தேடி வந்து சந்தித்தான் மூர்த்தி.. காதல் வளர்ந்தது.. அவளில்லாமல் அவனில்லையென்று ஆகிப் போனான் மூர்த்தி..

எம்.பி.ஏ முடித்து கொடைக்கானலுக்குத் திரும்பினான்... மாயா அவனைச் சந்திக்கக் கொடைக்கானலுக்கே வந்து சென்றாள்.. அவர்களது காதல் விவகாரம் இரு வீட்டாருக்கும் தெரிய வந்தது.. மாயாவின் ஸ்டேட்டஸ் மதுசூதனன் குடும்பத்தின் ஸ்டேட்டஸ்க்கு இணையாக இருந்ததில்..

"உன் வாழ்க்கையிலேயே நீ செய்த உருப்படியான காரியம் இதுதாண்டா.. எங்கே எப்போதும் போல பொதுவுடைமைத் தத்துவத்தைப் பேசிக்கிட்டு ரோட்டில் போகிற எவளோ ஒருத்தியை இழுத்துக் கொண்டு வந்து இவளைத்தான் நான் கட்டிக்கப் போகிறேன்னு சொல்லிருவியோன்னு பயந்துக்கிட்டே இருந்தேன்.. கடவுள் என்னைக் காப்பாற்றி விட்டார்.." என்று நெஞ்சை நீவி விட்டுக் கொண்டார் மதுசூதனன்..

மாயாவின் பெற்றோர் மதுசூதனனிடம் சம்பந்தம் பேச வந்தார்கள்.. தன் சம்மதத்தை மதுசூதனன் தெரிவித்து விட்டார்.. மாயாவின் படிப்பு முடிந்ததும் திருமணம்

என்று பேசி முடித்தனர்.. திருமணம் முடிவாகி விட்ட உரிமையில் மாயா கொடைக்கானலுக்கு அடிக்கடி வருவாள்.. மதுசூதனனின் வீட்டில் தங்குவாள்..

அந்தக் குடும்பத்தின் மருமகள் என்ற சொந்தத்துடன் அனைவரிடடும் பழகுவாள்..

மூர்த்தியின் காதலி, அவனது வருங்கால மனைவி என்ற அடையாளத்துடன் இருக்கும் மாயாவை அடையத் துடித்தான் நவீன்.. அவள் வரும்போது பேசிப் பழக முனைவான்.. அவள் இரண்டொரு வார்த்தைகளில் கழன்று

விலகிச் சென்று விடுவாள்.. அந்தப் புறக்கணிப்பு நவீனின் மனதைச் சுட்டுக் கொண்டிருந்தது..

"ஏன் தாத்தா.. மாயாவை நான் காதலிக்கக் கூடாதா..?" நவீன் ஆத்திரமாகக் கேட்டான்..

உன் மனதில் இருக்கும் பெண் யார் என்று கேட்ட கேள்விக்கு மாயாவின் பெயரை அவன் சொல்லி விட்டதில் அதிர்ச்சியாகியிருந்த மதுசூதனன்..

"முட்டாளாடா நீ.." என்று மூத்த பேரனைக் கோபித்துக் கொண்டார்..

"நீங்க என்ன சொன்னாலும் என் தாத்தான்னு உங்க காலைச் சுற்றிச்சுற்றி வருகிறேனில்ல.. நான் முட்டாள்தான் தாத்தா.." மிகச் சரியாக அவரது வாயை அடைத்தான் நவீன்..

"எல்லாம் சரிதாண்டா.. அந்தப் பெண் மூர்த்தியைக் காதலிக்குதே.." தாடையைத் தடவினார் மதுசூதனன்..

"ஏன் காதலிக்குது..? அவன் மதுசூதனன் குடும்பத்தில் பிறந்தவன்.. மதுசூதனனோட பேரன் அப்படிங்கிற அடையாளம் அவனுக்கு இருக்கிறதாலே காதலிக்குது.. அதை இல்லாம ஆக்குங்க தாத்தா... அப்புறம் எப்படி அந்தக் காதல் நிலைக்குதுன்னு நானும் பார்க்கிறேன்.." வழி சொல்லிக் கொடுத்தான் நவீன்..

"எப்படிடா..?" மதுசூதனன் அவன் விரித்த வலையில் மாட்டிக் கொண்டார்..

'ஒரே கல்லில் இரண்டு மாம்பழம்..'

குதூகலமானான் நவீன்.. மூர்த்தியிடமிருந்து சாக்லெட் பேக்டரியையும் பறிமுதல் செய்து விடலாம்.. அதன் மூலம் அவனைச் செல்லாக் காசாக்கி மாயாவின் குடும்பத்தாரை விலக வைத்து மாயாவையும் அடைந்து விடலாம்..

நல்லவர்கள் தீட்டும் திட்டங்கள் பலித்தால் நாடு நலமாக இருக்கும்.. அதுவே தீயவர்கள் தீட்டும் திட்டங்கள் பலிக்க ஆரம்பித்தால் என்ன ஆகும்..?

நடக்கக் கூடாது எல்லாம் நடக்கும்..

மூர்த்தியின் வாழ்வில் அதுதான் நடந்தது.. அது, இது என ஆயிரம் காரணங்களைக் கூறி மூர்த்தியிடமிருந்த சாக்லெட் பேக்டரியைப் பறித்து நவீனுக்குக் கொடுத்து விட்டார் மதுசூதனன்.. அதையும் அவன் பணம் கொடுத்து வாங்கியிருப்பதாக கிரயப் பத்திரம் பதிவாகியிருந்தது.. அடுத்த சில நாள்களில் என்ன நடந்ததோ, ஏது நடந்ததோ.. நவீனுக்கும் மாயாவுக்கும் திருமணம் நிச்சயமாகி விட்டது..

அன்றைய மாலைப் பொழுதை வாழ்நாள் முழுவதும் மூர்த்தி மறக்கவே மாட்டான்.. சொத்துக்கள் பறிக்கப் பட்டதைப் பற்றிய கவலை ஏதுமின்றி புதிய தொழில்களை ஆரம்பிக்கும் ஏற்பாடுகளை அவன் ஆரம்பித்திருந்தான்.. கோவிந்தராஜன் அதற்கான பணஉதவியைச் செய்தார்.. வசுந்தரா அவளது வைர நகைகள் இருந்த வெட்டகத்தை அப்படியே தூக்கி மகனிடம் கொடுத்து விட்டாள்..

"அப்பா கொடுத்த பணம் கடன்தான்ம்மா.. உங்க நகைகளை அடமானமாத்தான் வைக்கப் போறேன்.. சீக்கிரமா அப்பாவோட பணத்தையும், உங்க நகைகளையும் திருப்பிக் கொடுத்திருவேன்ம்மா.."

உறுதியுடன் சொன்ன மகனை பனித்த கண்களுடன் அரவணைத்துக் கொண்ட வசுந்தரா..

"நீ செய்வ மூர்த்தி.. நாங்க உன்னை நம்பறோம்டா.." என்று அழுதாள்..

கோவிந்தராஜன் அழவில்லை என்றாலும் மகனுக்கு இழைக்கப்படும் அநீதிகளைப் பொறுக்க முடியாத துயர் அவரது விழிகளில் மண்டியிருந்தது.. மூர்த்தி தொழில்களை ஆரம்பிப்பதில் முனைப்பாக இருந்த ஓர் பொன் மாலைப் பொழுதில்தான் மனதில் பலத்த அடியை வாங்கினான்..

மதுசூதனனின் அரண்மனையின் தோட்டம் வண்ண விளக்குகளால் ஒளிர்ந்து கொண்டிருந்தது.. அரண்மனையின் போர்டிகோவையும் தாண்டிய கார்களின் வரிசை தெரு முழுவதும் இரு பக்கமும் அணி வகுத்திருந்தது.. தோட்டம் முழுவதும் வட்ட வடிவத்தில் அமைக்கப் பட்டிருந்த டேபிள், சேர்களின் அமைப்பு.. அதில் நிறைந்திருந்த விருந்தினர்கள்.. தோட்டத்தின் ஓரத்தில் போடப்பட்டிருந்த அழகிய மேடை..

'என்னத்தை செலபரேட் பண்றானுங்க..'

மூர்த்தி எரிச்சலுடன் காரை விட்டு இறங்கிய போது இருண்ட முகத்துடன் ஓடி வந்த மிருதுளா..

"அண்ணா.. வீட்டுக்குள் வராதே.. அப்படியே திரும்பிப் போய் விடு.." என்று பதறினாள்..

"ஏன்..?" மூர்த்திக்கு ஒன்றும் புரியவில்லை..

அதற்குள் தடதடவென அங்கே ஓடி வந்த ராஜேஸும் ராதிகாவும் மூர்த்தியின் காரை வழி மறிப்பதைப் போலக் கைகளை விரித்து மறித்துக் காரைத் திருப்பச் சொன்னார்கள்..

"ஏண்டா..?"

"சொன்னாக் கேள் அண்ணா.. நீ தாங்க மாட்ட.."

"எதைத் தாங்க மாட்டேன்..?"

தோட்டத்தைப் பார்த்தான் மூர்த்தி.. மேடையில் உடைத்த பாசிப் பருப்பின் வண்ணத்தில் பொடிப் பொடியாய் கற்கள் பதிக்கப்பட்ட பிரிண்டட் சேலையை அணிந்து கூந்தலை அலங்கரித்து தேவலோக அப்சரஸ் போல நின்றிருந்தாள் மாயா..

'சும்மாவே இவ செம அழகா இருப்பா.. இதில அழகு படுத்தினா இப்படித்தான்.. தன் அழகாலே மத்தவங்களைப் படுத்தி வைப்பா..' மாயாவை ரசித்த மூர்த்தி..

"இவ ஏண்டா நம்ம வீட்டுத் தோட்டத்தில மேடையில நிற்கிறா.. இன்றைக்கு கொடைக்கானல் வரப் போகிறதா என்னிடம் சொல்லவே இல்லையே.. நம்ம வீட்டில ஏதாச்சும் பங்சனா..? அதில் அட்டெண்ட் பண்ண வந்திருக்கிறாளா..? வீட்டில இருக்கிற எனக்கு ஒரு வார்த்தை சொல்லலை.. வெளியூரில இருக்கிற அவளுக்குத் தகவல் சொல்லி கிளம்பி வந்திருக்கிறான்னா அவ என்னைப் பத்தி என்னடா நினைப்பா..?"

மூர்த்தியின் கேள்வியில் மனமுடைந்து போன மிருதுளாவும் ராதிகாவும் வாய்விட்டு அழ ஆரம்பித்து விட்டார்கள்.. ராஜேஸ் இரக்கம் கலந்த கோபத்துடன் மேடையை வெறித்து விட்டு..

"ஷிட்.." என்று வெறுப்புடன் முகத்தைத் திருப்பிக் கொண்டான்..

"ஷட்-அப் ராஜேஸ்.." மூர்த்தி சீறினான்..

"மாயா உன் அண்ணி.. அவளைப் பார்த்து என்ன வார்த்தை சொல்கிறன்னு யோசித்துத்தான் சொல்கிறயா..? மைண்ட் யுவர் வெர்டுஸ்.."

"எல்லாம் மைண்ட் பண்ணியாச்சு அண்ணா.. எதையும் தாங்க முடியலை.. ச்சே.. இவங்கள்ளாம் மனிதப் பிறவியில் சேர்த்தியா..?"

"ராஜேஸ்.."

"அண்ணா.. உனக்கு எப்படிச் சொல்லிப் புரிய வைப்பேன்..? இந்த மாயா எனக்கு மட்டும் அண்ணியில்லை அண்ணா.. இனி உனக்கும் இவங்க அண்ணிதான்.."

"என்னடா சொல்கிற..?"

மூர்த்தி பார்த்துக் கொண்டிருந்தபோதே கோட், சூட்டுடன் நவீன் மேடையேறி மாயாவின் தோளில் கை போட்டு நின்றான்.. மூர்த்தி ஸ்தம்பித்தான்.. மாயாவின் பெற்றோரும் அங்கிருந்ததை அப்போதுதான் கவனித்தான்.. அவர்களும் நவீனின் பெற்றோரும்

மேடையில் தேங்காய், வாழைப்பழம், வெற்றிலை பாக்கு இருந்த தட்டை மாற்றிக் கொண்டார்கள்.. நவீனும், மாயாவும் மோதிரம் மாற்றிக் கொள்ள, மதுசூதனன் அடுத்த முகூர்த்ததில் நவீன்-மாயா வின் திருமணம் நடக்கப் போகிறது என்று அறிவித்தார்..

கண்ணிமைக்கும் நேரத்தில் நடந்து முடிந்து விட்ட நிச்சயதார்த்தத்தில் அதிர்ந்து நின்ற மூர்த்தியை கோவிந்தராஜனும், வசுந்தராவும் இழுத்துச் சென்று விட்டார்கள்.. தன்னுணர்வுக்கு வந்த மூர்த்தி மாயாவிடம் கொதித்தான்..

"நானாடி உன்னைத் தேடி வந்தேன்..? நீதானே என்னைத் தேடி வந்த..? காதல் சொன்ன..?"

"அது தப்புன்னு என் பேரண்ட்ஸ் எனக்குப் புரிய வைத்துட்டாங்க.. காதல் வேறு.. கல்யாணம் வேறு.."

"ஓ..! வாட் எ பிலாசபி..! இது தெரியாம இரண்டும் ஒன்றுன்னு இத்தனை நாளா நினைத்துக்கிட்டு இருந்தேன் பாரு.. நான் முட்டாள்தாண்டி.. ஆமாம்.. தெரியாமல்தான் கேட்கிறேன்.. காதலுக்குன்னு எந்தவிதக் கமிட்மெண்டும் இல்லையா..? நைட், அண்ட் டே போனில் கொஞ்சறது.. நேரில் கிளம்பி வந்து கட்டிப் பிடிச்சுக்கிறது.. கண்டபடி உரசறது.. முத்தம் கொடுக்கிறது.. முதுகில் உப்பு மூட்டை ஏறியதைப் போலத் தோளில் தொற்றிக்கிட்டு ஊரைச் சுத்தறது.. இது மட்டும்தான் கமிட்மெண்ட்டா..?"

"மூர்த்தி.."

"அறைஞ்சேன்னா பாரு.. என் பேரைச் சொல்கிறதுக்கும் ஒரு தகுதி வேணும்.. உனக்கு அது இல்லை.."

"அதையேதான் நானும் சொல்கிறேன்.. என்னை மேரேஜ் பண்ணிக்கிறதுக்கும் ஒரு தகுதி இருக்கனும்.. உங்களுக்கு அது இல்லை.."

நிதானமாக மாயா சொன்னதில் நிலை குலைந்து போனான் மூர்த்தி.. அவனிடம் பேசப் பயந்து படபடக்கும் இமைகளோடு அவனது காதலை யாசித்து நின்ற மென்மை

ததும்பும் மாயாவின் தோற்றம் அவனது மனக் கண்களில் வந்து போனது..

'அந்த மாயாவா இவள்..?'

"வெறும் ஆவேசம் இருந்தால் மட்டும் போதாது மிஸ்டர் மூர்த்தி.. அந்தஸ்தும் இருக்கனும்.. நீங்க கோடிஸ்வரக் குடும்பத்தில் பிறந்தவர்ன்னு கன்பர்ம் ஆனபிறகுதான் நான் உங்களைக் காதலிக்க ஆரம்பித்தேன்.. ஈக்குவல் ஸ்டேட்டஸில நீங்க இல்லாம இருந்திருந்தா நிச்சயமா உங்களைக் காதலிச்சிருக்க மாட்டேன்.."

"ஏய்.. இதுக்குப் பெயர் காதலில்லைடி.. கணக்குப் பண்றது.. காதல்ன்னு சொல்லி காதலை அசிங்கப் படுத்தாதே.."

"ஹ..! பேச்சுக்கொன்றும் குறைச்சலில்லை.. பரம்பரைக் கோடிஸ்வரக் குடும்பம்.. பட்.. அதில பிறந்த நீங்க ரோட்டில நிற்கறிங்க.. ஏன்..? உங்க பெரியப்பா, சித்தப்பா பிள்ளைகள் அவங்களுக்கான ஷேர்களோடு கோடிஸ்வரன்களாக லைஃபை லீட் பண்ணிக்கிட்டு இருக்காங்க.. எதனால்..? உங்க குடும்பத்தில் பிறந்த பெண்களுக்கும் ஈக்குவலா ஷேர் கிடைத்திருக்கு.. உங்களுக்கு எதுவுமே கிடைக்கலை.. இந்த செகண்டில் நீங்க இந்த வீட்டில் ஒண்டிக்கிட்டு இருக்கிற அகதி.. இந்த வீட்டின் பேரனாக உரிமையோடு இருக்கலை.. இந்த பொசிசனில் இருக்கிற உங்களுக்கு என் வீட்டில் எப்படி என்னை மேரேஜ் பண்ணிக் கொடுப்பாங்கன்னு நினைக்கறீங்க..?"

மாயாவின் கேள்வி வாழ்வின் நிதரிசனத்தைப் படம் பிடித்துக் காட்டியது.. இதுதான் நீ.. இவ்வளவுதான் நீ.. பணமில்லாவிட்டால் நீ செல்லாக் காசு என்று வாழ்வு அவனைப் பார்த்துக் கை கொட்டிச் சிரித்தது..

'இவளையா நான் காதலித்தேன்..?'

வெறுப்புடன் அவளை வெறித்துப் பார்த்தான் மூர்த்தி.. கடந்த சில தினங்களாக நடந்து முடிந்த நிகழ்வுகளுக்கான

காரண காரியங்கள் அந்த நொடியில் அவனுக்குப் புரிந்தன.. திட்டமிட்டே மதுசூதனன் அவனிடமிருந்த சாக்லெட் பேக்டரியைப் பறித்திருக்கிறார்.. நவீன் அதை விலை கொடுத்து வாங்கி விட்டதாக பத்திரம் தயார் பண்ணியிருக்கிறார்..

'இவரெல்லாம் பெரிய மனிதனா..?'

உறவுகள் ஒன்றுகூடி முதுகில் குத்த முடியும் என்பதில் மனம் நொந்து போனான் மூர்த்தி.. மதுசூதனனை அவனுக்குப் பிடிக்காதுதான்.. அவரை அவன் வெறுத்ததில்லையே.. அவரது குறைகளை அவன் சுட்டிக் காட்டுவான்.. தட்டிக் கேட்பான்..

'அதற்காக இத்தனை பெரிய தண்டனையா..? நவீன் மட்டும்தான் அவருக்குப் பேரனா..? நான் அவருடைய பேரன் இல்லையா..? காலில் விழுந்து ஜால்ரா போட்டால்தான் எனக்கான பரம்பரைச் சொத்து எனக்குக் கிடைக்குமா..?'

அந்த நொடியில் அனைத்தையும் உதறினான் மூர்த்தி.. பற்று, பாசம் அறுத்தெரிந்த போதி மரத்தடி புத்தனைப் போல வீட்டை விட்டு வெளியேறினான்.. அவனை அந்த முடிவுக்குள் அவனுடைய உறவுகள் தள்ளி விட்டு விட்டார்கள்.. மாயா பேசிய பேச்சுக்கள் அவனது காதுகளில் ஒலித்துக் கொண்டே இருந்தன..

"நவீன் எஸ்டேட்டுக்கும், சாக்லெட் பேக்டரிக்கும் சொந்தக்காரரா இருக்கிறார்.. நீங்க எதுவுமில்லாமல் நிற்கறிங்க.. நவீனோட பேரண்ட்ஸ் என்னைப் பெண் கேட்டப்ப என்னோட பேரண்ட்ஸ் இதையெல்லாம் எடுத்துச் சொன்னாங்க.. நானும் யோசித்துப் பார்த்தேன்.. கொடைக்கானல் மதுசூதனனின் குடும்பத்தில் நவீனுக்கு இடமிருக்கு.. உங்களுக்கு இல்லையே.. மதுசூதனனின் பேரன் என்கிற அடையாளமும்.. அவருடைய குடும்பத்தைச் சேர்ந்தவர் என்பதும் முக்கியமில்லையா..?"

"எனக்கு அது முக்கியமில்லை.."

"எனக்கு அது முக்கியம்.. இன்னும் சொல்லப் போனால் அது மட்டும்தான் முக்கியம்.."

"ச்சே..! 'இப்படிப்பட்டவ நீ'ன்னு தெரிந்திருந்தா உன்னைத் திரும்பிக்கூடப் பார்த்திருக்க மாட்டேண்டி.."

"நானும் இதைத்தான் சொல்கிறேன்.. இப்படிப் பிழைக்கத் தெரியாத மனிதரா நீங்க இருப்பீங்கன்னு தெரிந்திருந்தா உங்களைத் திரும்பிக் கூடப் பார்த்திருக்க மாட்டேன்தான்.."

இப்படிச் சொன்ன மாயாதான் இப்போது அடிக்கடி போன் செய்கிறாள்.. மூர்த்தியிடம் பேச வேண்டும் என்று மன்றாடுகிறாள்.. தன் தவறைச் செரி செய்து கொள்ளத் தனக்கு ஒரு வாய்ப்புக் கொடுக்க வேண்டும் என்று கெஞ்சுகிறாள்.. என்னதான் இருந்தாலும் அவள் மூர்த்தியின் காதலி அல்லவா என்று வாதாடுகிறாள்..

காதலியின் துரோகத்தாலும் உறவினர்களின் சதியாலும் முதுகில் குத்தப்பட்டு இந்த வீடும், உறவுகளும் எனக்கு வேண்டவே வேண்டாம் என்ற முடிவை எடுத்து அனைத்தையும் உதறிவிட்டுத் தனி மனிதனாக வீட்டை விட்டு வெளியேறிய மூர்த்தி இன்று நவீனை விடப் பணக்காரனாக, வெற்றிப் படிகளில் ஏறிக் கொண்டிருக்கும் இளம் தொழிலதிபனாக, மாறி விட்டானே... இவன் மதுசூதனின் பேரன் என்று அடையாளம் காட்டப் பட்ட காலம் மாறிப் போய் இவர் மூர்த்தியின் தாத்தா என்று மதுசூதனனை அடையாளம் காட்டும் காலத்தை வெகு விரைவில் அவன் கொண்டு வருவான் என்று எவர்தான் எதிர்பார்த்தது..?

வெறுத்துப் போனவனாக வீட்டை விட்டு வெளியேறிய மூர்த்தியை சாவித்திரி மட்டுமே பின்தொடர்ந்தாள்.. மகனைப் பின்பற்ற முடியாமல் கல்லில் வடித்த சிலையாக கண்களில் துளிர்த்த கண்ணீரை விழுங்கியபடி அசையாமல் நின்றிருந்த கோவிந்தராஜனின் பார்வைக்குக் கட்டுப்பட்டு துடிக்கும் உயிரோடு சுவரில் சாய்ந்து நின்று விட்டாள் வசுந்தரா.. மிருதுளாவோ அண்ணனைக் கட்டிக் கொண்டு..

"போகாதே அண்ணா.." என்று கதறினாள்..

"ஆமாம் அண்ணா.. போகாதே.." ராதிகா மூர்த்தியின் கால்களைக் கட்டிக் கொண்டு கண்ணீர் வீட்டாள்..

ராஜேஸ் மட்டும்தான்..

"போ, அண்ணா.." என்று உறுதியுடன் சொன்னான்..

"என்ன வார்த்தை சொல்லுகிறாய் ராஜேஸண்ணா.." மிருதுளா பதறினாள்..

"அண்ணன் போகட்டும் மிருது.. இது அண்ணன் இருக்க வேண்டிய வீடல்ல.. இனி அண்ணன் இங்கே இருக்கக் கூடாது.. எதிரிகளுடன்கூட இருந்து விடலாம்.. துரோகிகளுடன் இருக்க முடியாது.. இருக்கவும் கூடாது.. எதிரி முகத்துக்கு நேரேதான் வெறுப்பை உமிழ்வான்.. மார்பில் குத்துவான்.. துரோகி அப்படியல்ல.. அவன் முதுகுக்குப் பின்னால் புறம் பேசுவான்.. உறவாடிக் கழுத்தறுப்பான்.. முதுகில் குத்துவான்.. நடந்திருப்பது கேடு கெட்ட துரோகம்..! இதற்கும் மேல் இங்கேயிருந்து இவங்க முகத்தில் விழித்தால் பாவம்.. அண்ணன் போகட்டும்.. ஜெயித்துக் காட்டட்டும்.."

அந்த ஒன்று விட்ட தம்பியின் உறுதியான வார்த்தைகள் வென்றன.. வீட்டை விட்டு வெளியேறிய மூர்த்தி வென்று காட்டி விட்டான்.. ஒன்று விட்ட தம்பியின் நம்பிக்கையை காப்பாற்றி விட்டான்.. கொடைக்கானலின் முதன்மையான தொழிலதிபனாக மாறி விட்டான்..

அடுத்தவர்க்கு கனவிலும் தீங்கு நினைக்காத வசுந்தராவும், கோவிந்தராஜனும் தங்களின் சொந்தச் சேமிப்பையும், நகைகளையும் மகனுக்குக் கொடுத்தார்கள்.. அவர்களின் மனம் போல மூர்த்தி தொட்டதெல்லாம் துலங்கியது.. கைகள் கட்டப்பட்ட நிலையில் அவன் நினைத்ததை செயலாற்ற முடியாமல் முடங்கிக் கிடந்த போதே.. 'மது சாக்லெட் பேக்டரி..'யில் எத்தனையோ சாதித்தான்.. இப்போது கைகள் கட்டப்பட முடியாமல் சுதந்திரமாக செயல் படலாம்.. எத்தனை சாதிக்கக் கூடாது..?

மூர்த்தி சாதிக்கப் பிறந்தவன்.. அவன் முதன் முதலில் ஆரம்பித்த 'கொடை சாக்லெட் பேக்டரி..' வெகு விரைவில் விற்பனையில் முன்னணிக்கு வந்து விட்டது... வெளி மாநிலங்களுக்கும், வெளிநாடுகளுக்கும் 'கொடை சாக்லெட்ஸ்' ஏற்றுமதியாக ஆரம்பித்ததில் நவீன் பொரும ஆரம்பித்தான்..

"என்னுடைய சாக்லெட்டுக்கு போட்டியா கொடை சாக்லெட்டை ஆரம்பித்து உங்களைப் பழி வாங்குகிறான் தாத்தா.." என்று மதுசூதனனிடம் போட்டுக் கொடுத்தான்..

சாக்லெட் பேக்டரி மட்டும் அவனுடையதாம்.. மூர்த்தி பழிவாங்குவது மட்டும் மதுசூதனனையாம்..

இப்படியெல்லாம் பேச நவீனால் மட்டுமே முடியும்.. அதைக் கூர்ந்து நோக்காத 'மக்கு' தாத்தா கோவிந்தராஜனைக் கூப்பிட்டுச் சப்தம் போட்டார்..

"என்ன நினைச்சுக்கிட்டு இருக்கான் உன் மகன்..? போட்டி பேக்டரி ஆரம்பிக்கிறானா..? இழுத்து மூடச் சொல்லு.."

"என்னால் அப்படிச் சொல்ல முடியாதுப்பா.."

உணர்ச்சிகளைத் துடைத்த முகபாவத்துடன் அமைதியாகப் பதில் சொல்லி மதுசூதனனை அதிர வைத்தார் கோவிந்தராஜன்..

அதுவரை அவர் தகப்பனின் வார்த்தைக்கு மறுவார்த்தை பேசியதில்லை.. தான் பெற்ற மகனுக்காக பரிந்து நின்றதில்லை.. குரலை உயர்த்தாமல் முதன் முறையாக அவர் பேசிய பேச்சு மதுசூதனனைத் தாக்கியது.

"அவன் வீட்டை விட்டு வெளியே போயிட்டான்ப்பா.. போகாதே.. இந்த வீட்டில் பிறந்தவன் நீ, இது உன் வீடுன்னு நான் தடுத்து நிறுத்தலை.. ஏன்னா, நீங்க அதைச் செய்யலை.. உங்களுக்குக் கட்டுப்பட்டு நானும் அதைச் செய்யவில்லை.. குடும்பத்தை விட்டு வெளியேறி விட்டவனிடம் போய் இதைச் செய், அதைச் செய்யாதேன்னு நான் எப்படிப்பா சொல்ல முடியும்..? பெத்த தகப்பனா என் மகனுடைய உரிமைகளை என்னால் கொடுக்க முடியலை..

அவனுக்கு நடந்த அநியாயத்தை தட்டிக் கேட்க முடியலை.. வாயிருந்தும் ஊமையாய் இருந்துட்டு இப்ப வாயைத் திறந்து அவனைக் கேள்வி கேட்டா பதிலுக்கு அவன் என்னை எத்தனையோ கேள்விகளைக் கேட்டு வைப்பானே.. அதுக்குப் பதில் சொல்ல என்னால் முடியுமாப்பா..?"

ஊமை பேசினால் இப்படித்தான் ஊசி முனைகளை நெஞ்சில் செழுத்திப் பேசி வைப்பார்களோ..!

மதுசூதனனுக்கு இதயம் வலித்தது.. மகன் கேட்கும் கேள்விக்கு தன்னால் பதில் சொல்ல முடியுமா என்று மதுசூதனனின் மனம் கேட்ட கேள்விக்கு அவரால் பதில் சொல்ல முடியவில்லை.. மூர்த்தி சங்கிலித் தொடர்களாக கொடை உல்லன், கொடை யூகலிப்ட்ஸ் என்று ஆரம்பித்து கொடை எஸ்டேட்டில் வந்து நின்றான்.. தாயின் வைர நகைகளை மீட்டுக் கொடுத்தான்.. தகப்பனிடம் வாங்கிய பணத்தை வட்டியுடன் அடைத்து விட்டான்..

கோவிந்தராஜனும், வசுந்தராவும் மறுக்காமல் வாங்கிக் கொண்டார்கள்.. 'இவன் எங்கள் மகன்..' என்ற பெருமிதம் அவர்களுக்குள் பொங்கியது.. மூர்த்தி வளர வளர நவீனின் ரத்த அழுத்தம் கூடிக் கொண்டே போனது.. இரவுகளில் அவன் தூக்கத்தைத் தொலைத்து தவித்தான்..

"நவீன்.. உனக்கு நியூஸ் தெரியுமா..?"

நவினின் நெருங்கிய நண்பன் சொன்ன போது அவன் ஏதோ ஒன்றைச் சொல்ல வருகிறான் என்ற அசட்டையுடன்..

"என்ன நியூஸ்டா.." என்றான்..

"மூர்த்தி புதிதா இடம் வாங்கிப் போட்டிருக்கிறான்.."

"போட்டாப் போடட்டும்.."

"ஒன்னு இல்லடா.. முக்கியமான பிளேஸாப் பார்த்து மூன்று இடங்கள் வாங்கிப் போட்டிருக்காண்டா.."

"முப்பது இடம் கூட வாங்கிப் போடட்டும்.. அதில உனக்கு என்ன பிரச்னை..?"

"பிரச்னை எனக்கு இல்லை நவீன்.. உனக்குத்தான் பிரச்னை.."

ஆழ்ந்த குரலில் நவீனையே உற்றுப் பார்த்தபடி நண்பன் பேசியதில் நவீன் திகைத்துப் போனான்..

"என்னடா..?" அவன் குரலில் பயம் வந்திருந்தது..

"அந்த இடங்களில மூர்த்தி, ஷாப்பிங் காம்ப்ளக்ஸ், ஸ்டார் ஹோட்டல், ரிசார்ட்ஸ்கள்ன்னு கட்டப் போகிறானாம்.."

"என்னது..?" நவீனின் வயிற்றில் கபகபவெனத் தீ பரவியது..

எவையெல்லாம் அவனது கனவுகளோ அவைகளை மூர்த்தி உருவாக்கப் போகிறான்.. உருவாக்கி அவற்றின் உடமையாளனாக கோலோச்சப் போகிறான்..

ஏற்கனெவே ராஜேஸ் மூணாறில் ரிசார்ட்டுகளைக் கட்டிக் கொண்டிருந்தான்.. அவனுக்கு அவனுடைய மலையாள நாட்டுத் தாத்தா பண உதவிகளை செய்து கொண்டிருந்தார்.. அடுத்ததாக ஊட்டியிலும், சிம்லாவிலும் ஸ்டார் ஹோட்டல்களைக் கட்டப் போவதாக பேச்சு அடிபட்டது..

"ம்ஹீம்.. அவனுக்கு அவனுடைய அம்மாவைப் பெற்ற தாத்தா அள்ளியள்ளிக் கொடுக்கிறார்.. எனக்கு அப்படியா..?" அவன் யமுனாவிடம் பாய்ந்தான்..

அவனுக்கே இத்தனை 'அதுப்பு' இருந்தால் அவனைப் பெற்ற தாயான யமுனாவுக்கு எத்தனை 'அதுப்பு' இருக்கும்..?

அவள் மகனை மிகச் சரியான இடத்தில் தாக்கினாள்.

"ராஜேஸுக்குத்தான் அவனுடைய அம்மாவைப் பெற்ற தாத்தா பண உதவி செய்கிறார்.. அவன் முன்னேறுகிறான்.. மூர்த்திக்கு எந்தத் தாத்தாடா உதவி செய்கிறார்..? அவனுடைய சொந்தத் தாத்தாவே அவனுக்குக் கொடுத்த சொத்தைப் பிடுங்கி உன்னிடம் கொடுத்துட்டு வெறும்பயலாய் வெளியில் துரத்தி விட்டார்.. அவன்

ராஜேஸை விட அதிகமாக பிழைத்துக் காட்டியிருக்கிறானே.. எப்படிடா..? உனக்கும்தான் உன் பங்குக்கு எஸ்டேட் வந்தது.. மூர்த்தியோட பங்கான சாக்லெட் பேக்டரியும் வந்தது.. இது இரண்டையும் வைத்து நீ எவ்வளவோ சாதித்துக் காட்டியிருக்கலாமே.. செய்யலையே.. அதை நான் சொல்லிக் காண்பித்தேனா..? எனக்குக் கொடுத்து வைத்தது இவ்வளவுதான்னு வாயை மூடிக்கிட்டு இருக்கலை..? ராஜேஸ் அவனுடைய அம்மாவைப் பெற்ற தாத்தா கொடுக்கிற பணத்தை வைத்து மட்டுமே தொழிலை விரிவுபடுத்தலை.. அவன் பங்குக்கு வந்த ரிசார்ட்டுகளை மாடலைஸ் பண்ணினான்.. புதிதா மாற்றிக் காட்டினான்.. வந்த வருமானத்தைச் சிந்தாம மூணாறில் இடம் வாங்கிப் போட்டான்.. அதில் ரிஸார்ட் கட்டப் பணஉதவி மட்டும்தான் அவனுடைய அம்மாவைப் பெற்ற தாத்தா செய்கிறார்.. நீ வெண்ணையை உருக்கினா நெய் தானா வரும்.. மோர் கூட இல்லாம வெறும் சட்டியை வைத்துக்கிட்டு இருந்தா கரண்டியில என்ன வரும்..? சட்டியில இருந்தாத்தானேடா கரண்டியில வரும்..?"

நவின் திறந்த வாயை இறுக்கமாக மூடிக் கொண்டான்.. உடனடியாக வெளிநடப்பு செய்யாவிட்டால் யமுனா இன்னும் அதிகமாக் கழுவிக் கழுவி ஊற்றுவாள் என்பதினால் இது போன்ற சமயங்களில் ஆபத்பாந்தவனாக கை கொடுக்கும் செல்போனை காதில் வைத்துக் கொண்டு வராத போன் காலுக்கு..

"ஹலோ.. இதோ.. அங்கேதான் வந்துக்கிட்டு இருக்கேண்டா.." என்று பதில் சொல்லியபடி ஓடோடி விட்டான்..

'அஃது..' யமுனா கைகளைத் தட்டி வெற்றி முரசு கொட்டி விட்டு வீட்டுக்குள் சென்று விட்டாள்..

தொழிலில் மூர்த்தி முன்னேற நவீன் பின்னேறினான்.. நவீனின் மனதுக்குள் அபாய மணியடித்தது.. மாயாவுடன் அவனுக்கு நிச்சயதார்த்தம் தான் நடந்து முடிந்திருந்தது.. திருமணம் நடைபெற வில்லை என்பதை அவனது அறிவு சுட்டிக் காட்டியது.. மாயாவின் அப்பாவை மனதார

சபித்தான்.. அந்த மகராஜனால் அல்லவா அவனது திருமணம் ஆறு மாதங்களுக்குப் பின்னால் நடக்க வேண்டும் என்று தள்ளிப் போடப் பட்டது..!

மகளுக்கு நிச்சயதார்த்தம் நடந்து முடிந்து விட்ட மகிழ்வுடன் அவர் திருமணத்தேதியைக் குறித்திருக்க வேண்டாமோ..? அதை விட்டு விட்டு மதுசூதனனின் கையைப் பிடித்துக் கொண்டு..

"என்றைக்கு இருந்தாலும் எங்க மாயா உங்க வீட்டு மருமகள்தான்.. உங்க பேரனுக்குப் பெண் கொடுக்க நான் கொடுத்து வைத்திருக்கனும்.. நாளைக்கே மேரேஜை பண்ணி விடனும்னு எனக்கும் ஆசைதான்.. அதில ஒரு சிக்கல் இருக்கு.." என்று குண்டைத் தூக்கிப் போடலாமா..?

"சிக்கலா..? என்ன சிக்கல்..? என்னிடம் சொல்லுங்க.. எவ்வளவு பெரிய இடியாப்பச் சிக்கலாக இருந்தாலும் நான் தீர்த்து வைக்கிறேன்.." மார்தட்டினார் மதுசூதனன்..

'கிழித்தீங்க..' பற்றிக் கொண்டு வந்தது நவீனுக்கு..

'பாட்டன், பூட்டன் சம்பாதித்து வைத்த சொத்தை ஆண்டு அனுபவித்ததை விட இந்தக் கிழம் புதிதாக என்னத்தைச் செய்தது..? இது கிழித்த கிழிக்கு

இடியாப்பச் சிக்கலைத் தீர்த்து வைத்து விடுமாம்.. கேட்கிறவன் வெளியூர்காரனா இருந்தா இந்தக் கிழம் கொடைக்கானலிலே வெயில் காயுதுன்னு கதை விடும்..'

"பிஸினெஸ்ஸில சிக்கல் வந்தா உங்களிடம் சொல்லலாம்.. இது ஜாதகத்தில வந்திருக்கிற சிக்கல்.." என்றார் மாயாவின் அப்பா..

'இது வேறயா..? இவ்வளவு நாளா பேசாம இருந்த ஜாதகம் என் கல்யாணத்தப்பத்தான் வேலையைக் காட்டனுமா..?' நவீனுக்கு மொட்டைச் சுவரில் முட்டிக் கொள்ளலாம் போல இருந்தது..

"ஜாதகத்தில என்ன சிக்கல்..? மலையாளத்தில இருந்து சோழி உருட்டிப் போட்டுக் குறி சொல்கிற ஜோசியக்காரரை

வரச் சொல்லி என்னன்னு கேப்போமா..?" மதுசூதனன் ஆலோசனை சொன்னார்..

'யோவ் தாத்தா.. கூடவே உன்னோட கடைசி சம்பந்தியையும் கதகளி ஆடிக்கிட்டே வரச் சொல்லவா..? அவர் வந்தாத்தான் நீ அடங்குவ..' நவீன் கொதித்தான்..

"அதெல்லாம் தேவையில்லைங்க.. எங்க குடும்ப ஜோஸியர் சோழியை உருட்டிப் போடாமல் ஜாதகக் கட்டங்களை வைத்தே அருமையாய் ஜோசியம் சொல்லிருவார்.." மாயாவின் அப்பா மறுத்து விட்டார்..

"அப்புறம் என்னங்க..? உங்களுக்குத்தான் கைவசம் அருமையான ஜோசியர் இருக்காரே.. சிக்கலைத் தீர்க்க வேண்டியதுதானே.." மதுசூதனன் கேட்டார்..

"சிக்கலைத் தீர்க்கத்தான் மேரேஜைத் தள்ளிப் போடனும்னு சொன்னேன்.. மாயாவின் ஜாதகப்படி அவளுக்கு இன்னும் மாலை பூக்கலை.." மாயாவின் அப்பா நவினை சோதித்தார்..

"மாலை பூக்கலையா..? அப்படின்னா மாலை பூக்கிறவரை கல்யாணத்தைத் தள்ளிப் போட வேண்டியதுதான்.." மதுசூதனன் ஆமோதித்து இன்னும் அதிகமாக நவீனை சோதித்து வைத்தார்..

'பேசாமல் சன்யாசம் வாங்கிக்கிட்டுப் போய் விடலாமா..?'

இப்படியா கைக்கு எட்டிய மாயாவின் உறவு கல்யாணத்தை எட்டாமல் அவனை சோதித்து வைக்கும்..?

நவீன் பூப்பூப்பதைப் பற்றித்தான் கேள்விப்பட்டிருக் கிறான்.. ஜாதகத்தில் மாலை பூப்பதைப் பற்றி இப்போதுதான் கேள்விப் படுகிறான்..

மாலை பூக்காமல் மாயாவின் ஜாதகம் அவனை சோதனைக்குள்ளாக்கி திருமணத்தை தள்ளிப் போட வைத்தது.. ஆறு மாதத்தில் மூர்த்தி தொழிலில் அசுர வளர்ச்சியை எட்டியதில் மாலை பூத்தும் மாயா மனம் மாறியவளாய் திருமணத்தை தள்ளிப் போட்டாள்.. அது,

இது என்று அவள் ஒரு ஆறு மாதத்திற்கு திருமணத்தை ஒத்தி வைத்ததில் ஒரு வருட காலம் ஓடோடி விட்டது..

இப்போது மூர்த்தி கொடை குரூப்ஸ் ஆஃப் கம்பெனிஸின் முதலாளி.. உடுத்திய உடையுடன் வீட்டை விட்டு வெளியேறியவன் தற்காலிகமாக நண்பனின்

கெஸ்ட் ஹவுஸில் தங்கினான்.. தாயினும் சாலப் பரிந்து அவனைக் கவனித்துக் கொண்டாள் சாவித்திரி.. மன அமைதியில்லாமல் இரவு முழுவதும் கொட்டும் பனியில் ஊரைச் சுற்றி விட்டு விடியும் போது வீடு திரும்பி அசதியுடன் தூங்கிப் போகிறவனை சுக்குக் காபியுடன் எழுப்பி விடுவாள் சாவித்திரி.. யூகலிப்ட்ஸ் இலைகளைப் போட்டுக் கொதிக்க வைத்த வெந்நீர் குளியலுக்காக காத்திருக்கும்.. குளித்து முடித்து வருபவனுக்கு சூடான இட்லியும் கோழிக் குருமாவும் பரிமாறுவாள், மிளகு, சீரகம் போட்ட கோழி சூப்பைக் குடிக்கக் கொடுப்பாள்..

சமையல் கூட சில நேரங்களில் மருத்துவகுணம் கொண்டதாக இருக்கும்.. சாவித்திரியின் சமயோசித சமையலும் பராமரிப்பும் கொடைக்கானலின் பனி மூர்த்தியைத் தாக்கி விடாமல் பாதுகாத்தன..

ஆறே மாதங்களில் மூர்த்தி புதிதாக பங்களாவை வாங்கி குடி போனான்.. சாவித்திரிக்கு உதவியாக வேலைக்கும், சமையலுக்கும் ஆள்கள் அமர்த்தப் பட்டார்கள்.. காவலுக்கு செக்யூரிட்டி, தோட்டத்தைச் சீர் செய்ய தோட்டக்காரன் என்று மாளிகைவாசம் மறுபடியும் ஆரம்பமானது.. மதுசூதனனின் வீட்டில் 'ஆயா' வாக இருந்த சாவித்திரி மூர்த்தியின் பங்களாவில் 'எஜமானியம்மா' வாக மாறினாள்..

வசுந்தரா மகனைக் கானை அவனது பங்களாவுக்கு வந்து போவதுண்டு.. கோவிந்தராஜன் வருவதில்லை.. பூங்காக்களில் செல்போனில் சொல்லி வைத்துக் கொண்டு தந்தையும் மகனும் சந்தித்துக் கொள்வார்கள்... மிருதுளா, ராஜேஸ், மற்றும் ராதிகா தளைகளில் பிணைக்கப்பட்டாலும் அதை அறுத்து எறிந்து விட்டு

அண்ணனைச் சந்தித்துக் செல்வார்கள்.. பகல் பொழுதுகளில் மூர்த்தியை தனிமை அண்டாது.. இரவு நேரங்களில் மாயாவின் நினைவும் அவள் செய்த துரோகமும் அவனுடைய சொந்த தாத்தாவும், பெரியப்பா மகனும் முதுகில் குத்திய துயரமும் சேர்ந்து அவனை தூங்கவிடாமல் துரத்தியடித்தன.. துரத்தும் நினைவுகளில் இருந்து தப்பிக்க அவன் வெளியே சுற்ற ஆரம்பித்தான்..

இதனிடையே மாயா மறுபடியும் அவனுக்கு நூல் விட ஆரம்பித்தாள்.. மூர்த்தி அருவெறுப்புடன் அவளது செல்போன் அழைப்புக்களைத் துண்டித்தான்.. இப்படித்தான் ஆகும் என்று யூகித்து துப்பறிந்த நவீன் இதைக் கண்டு பிடித்து மாயாவிடம் சண்டைக்குப் போனான்.. அவளோ..

"இதைக் கேட்க நீ யார்..?" என்று கேட்டாள்..

"நான் யாரா..? உனக்காக நிச்சயிக்கப்பட்ட மாப்பிள்ளை..!"

"ஹ..! காதலித்தவனையே ஸ்டேட்டஸ் பத்தலைன்னு ஒரு செகண்டில தூக்கியெறிஞ்சவ நான்.. நீ எம்மாத்திரம்..? அன்றைக்கு மூர்த்தியோட ஸ்டேட்டஸைவிட உன் ஸ்டேட்டஸ் கூட இருந்தது.. மூர்த்தி ரோட்டில் இருந்தார்.. இப்ப சிச்சுவேசன் சேன்ஜ் ஆகிருச்சே.. மூர்த்தி உன்னை விட உயரத்துக்கு போய் விட்டார்.. நீ..? ஆரம்பிச்ச இடத்திலேயே புள்ளியா நிற்கிற.. ஆக்டிவ்னெஸ் இல்லாத உன்னை நான் எப்படி மேரேஜ் பண்ணிக்க முடியும்..?"

இதுதான் மாயா.. செய்தார்க்கு செய்த வினை என்பதைப் போல துரோகம் செய்து பழக்கப்பட்டு விட்ட நகுலனை அவன் செய்த துரோகமே தாக்கி விட்டது.. அவன் பேச்சிழந்தான்..

"தாத்தா.. உங்களை விட அவன் பெரிய ஆள்ன்னு ஊர் முழுக்க சொல்லிக்கிட்டு அலையறான்.." என்று அவனால் முடிந்த ஒரே காரியமான பற்ற வைத்தலை செவ்வனே செய்தான்..

மதுசூதனனும் சாவி வைத்த பொம்மையைப் போல மூர்த்தியின் வீட்டுக்குச் சென்றுக் கத்தி அவமானப்பட்டுத்

திரும்பி வந்தார்..

இரவுகளில் நிம்மதியிழந்தவனாக ஊரைச் சுற்றிக் கொண்டிருந்த மூர்த்தியின் நிம்மதியை பனிவிழும் இரவில் மீட்டுக் கொடுத்து அவன் மனதில் குடி புகுந்தாள் அர்ச்சனா.. அவன் இரவுகளில் உறங்க ஆரம்பித்தான்..

25

"நெஞ்சுக்கு நிம்மதி.. ஆண்டவன் சந்நிதி..

நினைத்தால் எல்லாம் உனக்குள்ளே..

கொஞ்சும் மனமும் குளிர்ந்த வாழ்வும்

கொண்டு வந்தால் என்ன நமக்குள்ளே.."

குறிஞ்சியாண்டவர் கோவிலுக்குச் சென்று விட்டுத் திரும்பும் வழியில் உட்கார்ந்து பாடிக் கொண்டிருந்த அர்ச்சனாவைப் பார்க்கப் பார்க்க மூர்த்தியின் மனதில் அமைதி நிரம்பியது..

அவள் பின்னலை முன்னால் இழுத்து மடியில் போட்டு விரல்களால் அதை நிமிண்டியபடியே வெகு இயல்பாக பாடியதைப் பார்க்கப் பாந்தமாக இருந்தது.. அவளது பார்வையும், பாடலும் அவனைத் தாலாட்டி சீராட்டின..

"பழக்கம் என்பது பழகுவது - அது

விலக்கும் போது விலகுவது..

பாசம், நேசம் காதல்தானே

வாழ்வதற்கென்றே வளருவது..?"

'காதல்' என்ற வார்த்தையில் முகம் மாறினான் மூர்த்தி.. அவனது முகபாவத்தைக் கவனித்த அர்ச்சனாவின் புருவங்கள் என்ன என்று கேட்பதைப் போல உயர்ந்து

இறங்கின.. அவனது பதிலை எதிர்பார்க்காமல் பாடலில் அவனுக்கு அவள் வழி சொன்னாள்..

"நிழல் தொடருவது.."

மூர்த்தி சாவித்திரியை நினைத்துக் கொண்டான்.. அவன் எங்கே சென்றாலும் தொடரும் தாய்மையின் நிழல் அல்லவா அவள்..

"மதி மயங்குவது.."

மாயாவின் அழகிலும் பேச்சிலும் தடுமாறிய அறிவை நினைத்து அவன் பெருமூச்சு விட்டான்..

"வழி நேற்றும் இன்றும் மாறுவது.."

அர்ச்சனா கை நீட்டினாள்.. அவன் இறுக்கமாக பற்றிக் கொண்டான்.. மாயாவுடன் நடந்த வழியை மறந்து அர்ச்சனாவுடன் நடக்க ஆரம்பித்தான்.. மாறிய வழி அவன் மன ரணத்தை ஆற்றிடும் வழியாக இதமாக இருந்தது..

"பாதையில் எத்தனை காலடிகள் - இந்த

பயணத்தில் எத்தனையோ வழிகள்.."

அர்ச்சனா பாதையைக் காண்பித்தாள்.. அவன் நடந்த காலடித் தடத்தில் அவளது காலடித்தடத்தைப் பதித்துச் சிரித்தாள்..

"காதலில் ஓர்வழி.. கவலையில் ஓர்வழி..

கவனித்துப் பார்க்கட்டும் உன் விழிகள்.."

அவன் முன்னால் சென்று நின்று இரண்டு கைகளையும் விரித்து குனிந்து..

"ஒன்றைத் தேர்ந்து எடு.."

என்று பாடினாள்.. மூர்த்தியின் விழிகள் மின்னின.. காற்றில் பறந்த அவளது முந்தானைச் சேலையில் முகம் பதிக்க அவன் மனம் விரும்பியது.. அதை அவனது பார்வை சொல்லியதில் அவள் மனம் துள்ளியது..

"அதை சேர்ந்து விடு.."

இரண்டே எட்டில் அவளை அணுகியவன் அவளைச் சேர்ந்து அவளைத் தன்னுள் சேர்த்து அணைத்துக் கொண்டதில் மூச்சுத் திணறிப் போனவள் அவன் மார்பில் முகம் புதைத்தாள்..

"இந்த உலகத்தின்

சுகங்களை வாழ்ந்து விடு.."

கிசுகிசுப்பாக வெளி வந்தது அவளது குரல்.. அவளது காதோரமாக இதழ்களைப் பதித்தவன்..

"வாழச் சொன்னால் வாழ்கிறேன்..

மனமா இல்லை வாழ்விலே..

ஆழக்கடலில் சோலையாக

அழைத்துக் சென்றால் வாழ்கிறேன்.."

என்று பாடியதில் கண்மூடித் கிறங்கினாள்.. அந்தக் கிறக்கத்தை வெகுநேரம் நீடிக்க விடாமல்..

"வெரிகுட்.. ஆன் ரோடில பாட்டுக்குப் பாட்டு.. தேர்ட் கிளாஸ் பெண்ணோடு ஊர் சுற்றினா, இப்படித்தான் ஸ்டேட்டயை மறந்து நிற்கத் தோணும்.." என்ற கோபக்குரல் ஊடே புகுந்து அவர்களை விலக வைத்து..

'யார்..?' அர்ச்சனா இமை கொட்டி விழித்தாள்..

அழகாக இருந்த அந்தப் பெண் மாயாவாக இருக்கக் கூடுமோ என்று மருண்டது அவளது உள்ளம்..

"இப்படி ஒன்றும் தெரியாத பேபியைப் போல இமை கொட்டி விழித்துத்தானே என் மூர்த்தியைக் கைக்குள் போட்டுக்கிட்ட..?" என்று சீறி தான் மாயாதான் என்பதை நிரூபித்தாள் அவள்..

"உன் மூர்த்தியா..?" இகழ்ச்சியாக மாயாவை ஏற இறங்க மூர்த்தி பார்த்த பார்வைக்கு அவள் அந்த இடத்தை விட்டு ஓடி ஒளிந்திருக்க வேண்டும்..

அவள் அதைச் செய்யவில்லை.. அதை விட்டு..

"யாரடி நீ..?" என்று அர்ச்சனாவை அதட்டினாள்..

"மை வுட்-பி.." அர்ச்சனாவுக்குப் பதில் மூர்த்தி பேசினான்..

"வாட்..?" மாயாவுக்கு பேச்சே வரவில்லை..

"'வுட்-பி' ன்னாத் தெரியாதா..? என் வருங்கால மனைவி.. நிகழ்காலக் காதலி..! போதுமா..?" இடக்காக கேட்டான் மூர்த்தி..

"மூர்த்தி.." மாயா அலறினாள்..

"ஷட்-அப்.." மூர்த்தி வாயில் விரலை வைத்துச் சீறினான்.. அவனது முகம் கோபத்தில் ஜிவுஜிவுத்திருந்தது.

"என் பெயரைச் சொன்ன.. கொன்றுடுவேன்.. ஜாக்கிரதை.. யாரைப் பெயர் சொல்லிக் கூப்பிடுகிற..?"

"நான் உங்க மாயா.."

"ச்சீ..! இப்படிப் பேச உனக்கு நாக்குக் கூசலை..? என்னிடம் சொத்து இல்லைன்னதும் என் பெரியப்பா மகனைக் கல்யாணம் பண்ணக்கச் சம்மதித்து

அவனுடன் நிச்சயதார்த்த மேடையில் நின்றவள்தானேடி நீ..? இன்னைக்கு எனக்கு சொத்து வந்ததும் உறவு கொண்டாடிக்கிட்டு வருகிறயே.. வெட்கமாக இல்லை..?"

"நான் உங்க காதலி.."

"ஊஹீம்.. காதல் என்கிற வார்த்தையைச் சொல்லாதே.. உன்னை மாதிரியான ஆள்கள் அந்த வார்த்தையைச் சொன்னால் அதுக்கான புனிதமே போய்விடும்.. காசைப் பார்த்துத்தான் காதல் வரும்ன்னா அதுக்கான அர்த்தமே வேற.."

அர்ச்சனாவுக்கே சங்கடமாகி விட்டது.. மாயாவின் முகம் அவமானத்தில் கன்றி விட்டதைப் பார்க்கப் பார்க்க அவளுக்கு என்னவோ போல ஆகிவிட்டது.. என்னதான்

இருந்தாலும் மூர்த்தி இந்த அளவுக்கு அவளை அவமானப் படுத்தியிருக்கக் கூடாது என்று தான் அவள் நினைத்தாள்..

மாயாவோ அர்ச்சனாவை எதிரியைப் பார்ப்பதைப் போலப் பார்த்தாள்.. மூர்த்தி பேசியதைவிட அந்தப் பேச்சை அர்ச்சனாவின் முன்னிலையில் அவன் பேசியதுதான் அவளை அதிகமாக பாதித்தது..

'உன்னை என்ன செய்கிறேன் பார்..'

அவள் விழிகளில் வழிந்த வன்மத்தில் அர்ச்சனா பயந்து போனவளாக மூர்த்தியின் முதுகின் பின்னால் ஒன்றிக் கொண்டாள்..

"இவளைப் பார்த்து நீயேன் பயப்படற..? உன்னைப் போல நேர்மையான பெண்ணைப் பார்த்து இவதான் பயந்து ஒளியனும்.. நீ வெளியில் வா.."

அர்ச்சனாவின் கையைப் பிடித்து இழுத்து முன்னால் கொண்டு வந்து அவளது விரல்களுடன் விரல் கோர்த்து நடக்க ஆரம்பித்தான் மூர்த்தி.. அர்ச்சனாவுக்காக கார் கதவைத் திறந்து விட்டு அவள் ஏறியதும் கதவைச் சாத்தி விட்டுக் காரைச் சுற்றிச் சென்று டிரைவிங் சீட்டில் அமர்ந்து காரைக் கிளப்பினான்... அனைத்தையும் கண்களில் நெருப்புப்பொறி பறக்கப் பார்த்துக் கொண்டிருந்தாள் மாயா.. அவளது இதயம் வெறி கொண்டு தவித்தது..

பங்களாவுக்குத் திரும்பியதும் சாவித்திரியிடம் நடந்த நிகழ்வுகளைக் கூறிவிட்டாள் அர்ச்சனா.. சாவித்திரிக்குக் கவலையானது.. அவள் வசுந்தராவுக்குப் போன் போட்டாள்.. சற்று நேரத்தில் வசுந்தாவும் கோவிந்தராஜனும் அங்கே வந்து விட்டார்கள்..

"வாங்கய்யா.."

மகன் உழைத்து வாங்கியிருந்த பங்களாவில் முதன் முதலாக காலடி வைத்த கோவிந்தராஜனை கைகுவித்து வரவேற்ற சாவித்திரி முந்தானைச் சேலையால் சோபாவைத் துடைத்துவிட்டு அவரை உட்காரச் சொன்னாள்..

"நீ மாறவே மாட்டியா சாவித்திரி.." கோவிந்தராஜன் அவளை அன்புடன் கடிந்து கொண்டார்..

வசுந்தரா கணவரின் பக்கத்தில் உட்கார்ந்தபடி..

"அவன் எங்கே..?" என்று கேட்டாள்..

"பேக்டரிக்குப் போயிருக்கு.."

"அந்தப் பொண்ணு..?"

"பேங்குக்குப் போயிருச்சு.."

"ம்ம்.. நீ சொல்கிறதெல்லாம் நிஜமா..?"

"நிஜம்தான்ம்மா.. இந்தப் பொண்ணு வந்த பின்னாலே நம்ம மூர்த்தி தம்பியோட அமைதி திரும்பி வந்திருச்சும்மா.. நம்ம அத்தனை பேரோட கண்ணீராலே மாற்ற முடியாததை இந்தப் பெண்ணின் அன்பு மாற்றி விட்டது.. மூர்த்தி இப்ப ராத்திரி நேரத்தில தூங்காம ஊரைச் சுத்தறதில்லைம்மா.. நேரத்துக்குச் சாப்பிட்டுட்டுத் தூங்கப் போயிருது.."

"கடவுளே..! உனக்கு நன்றி.."

கை குவித்து கடவுளை வணங்கிய வசுந்தரா அழ ஆரம்பித்தாள்.. மனைவியின் தோள்களில் ஆதரவாகத் தட்டிக் கொடுத்த கோவிந்தராஜன் யோசனையுடன் சாவித்திரியைப் பார்த்து..

"அந்தப் பெண்ணோட ஊர் எது..?" என்று கேட்டார்.

"சாத்தூர்ங்கய்யா.."

"அப்பாம்மா..?"

"ரெண்டு பேரும் இறந்துட்டாங்களாம்.. சித்தின்னு சொல்லிக்கிட்டு ஒருத்தி இருக்கிறாளாம்.. அவளாலே தான் இந்தப்பொண்ணு வீட்டை விட்டு வெளியே வந்து ஊர் விட்டு ஊர் டிரான்ஸ்பர் வாங்கியிருக்கு.."

"தெளிவாச் சொல்லு சாவித்திரி.."

சாவித்திரி சொன்னாள்.. அவள் சொல்லச் சொல்ல கோவிந்தராஜனின் நெற்றிச் சுருங்கங்கள் அதிகமாயின.. அர்ச்சனாவைப் பற்றிய விவரங்கள் அவருக்குத் திருப்தியளிக்கவில்லை என்பதை அவரது முகச்சுளிப்பு அறிவித்தது..

"என்னென்னவோ சொல்கிறாயே சாவித்திரி.. ஏழைப் பெண்ணாக இருந்தாலும் பரவாயில்லை.. பேக்ரவுண்டு நன்றாக இருக்க வேண்டாமா..? இந்தப் பெண்ணின் பிறந்த வீடு இப்படியிருக்கே.."

சாவித்திரி எதுவும் பேசாமல் வசுந்தராவைப் பார்த்தாள்.. கோவிந்தரஜனிடம் சாவித்திரியால் மறுத்துப் பேச முடியுமா..? வசுந்தராதான் அதைச் செய்ய வேண்டும்.. வசுந்தராவும் அதைச் செய்தாள்..

"உங்க வீடு மட்டும் எப்படியிருக்காம்..?"

"வசு.."

"என்னைப் பேச வைக்காதீங்க.. சொல்லிட்டேன்.. தம்பியின் காதலியைத் தன் பெண்டாட்டியாக்கிக்கனும்னு பார்த்த பெரியப்பாமகன்.. அதுக்குத் துணை போன பெரிய மனுசன்.. இதுதானே உங்கவீடு..? இதைவிட அசிங்கம் வேற எதுவும் இல்லை.."

"அந்தப் பெண் ஏழைன்னு நான் சொல்லலைடி வசு.."

"பெத்தவர் செய்த தப்புக்கு மகளைத் தண்டிக்காதீங்க.. சொல்லிட்டேன்.. ஒரு பாவமும் அறியாத என் மகனுக்குச் சொத்தைக் கொடுக்காம பிடுங்கி அதைத் தன்னோட மூத்த மகனின் மகனுக்குக் கொடுத்தும் இல்லாம என் மகனோட காதலியை அந்த நவீனுக்கு நிச்சயம் பண்ணி என் மகனைத் தண்டிச்சார் உங்க அப்பா.. அதனால என் செல்லமகன் வீட்டை விட்டே வெளியேறினானே.. அந்தக் கொடுமைக்கு என்ன பதிலைச் சொல்லப் போறிங்க..?"

"ஒரு குணம் கெட்ட பெண் இந்தப் பெண்ணின் சித்தின்னு சொல்லிக்கிட்டு இருக்கா வசு... அவளிடம் போயா நாம் சம்பந்தம் பேசுவது..?"

"எனக்கு நல்லா வந்திரும் வாயிலே.. சொல்லிட்டேன்.. அவளிடம் போய் எதுக்குங்க சம்பந்தம் பேசனும்..? அர்ச்சனாவரட்டும்.. கேட்போம்.. அவளுக்கு அப்பாம்மா ஸ்தானத்தில இருந்து பேச அவ ஊரில ஒருத்தர் கூடவா இருக்க மாட்டாரு..?"

"அப்ப, நிச்சயமா அந்தப் பெண்ணை நம்ம மூர்த்திக்கு கல்யாணம் செய்து வைத்து விடலாம்ன்னு சொல்கிறயா..?"

"சொல்லிட்டேன், சொல்லிட்டேன்னு எத்தனை தடவை சொன்னாலும் உங்க மண்டையிலே ஏறாதா..? என் மகனோட மன அமைதியை மீட்டுத் தந்திருக்கிறா அந்த 'அர்ச்சனா..' அவளை என் மகனுக்கு கல்யாணம் பண்ணி வைக்க இந்த அளவுக்கு நீங்க யோசிப்பீங்களா..?"

வசுந்தரா லெப்ட் அண்ட் ரைட் விட்டதில் கை கட்டி வாய் பொத்தாத குறையாக தலையை ஆட்டி சம்மதம் சொன்னார் கோவிந்தராஜன்.. அன்று மதிய உணவை அங்கேயே உண்டு விட்டு அவர்களுக்கென மூர்த்தி தயார் படுத்தி வைத்திருந்த அறையில் முதன் முதலாக ஓய்வெடுத்தார்கள்.. கண்ணயர்ந்து உறங்கி எழுந்த கோவிந்தராஜன்..

"இப்படித் தூங்கி ரொம்ப நாளாகிருச்சுல்ல..?" என்றார்..

'ஆமாம்..' எனும் விதத்தில் தலையை மேலும் கிழும் ஆட்டிய வசுந்தராவின் விழிகளில் கண்ணீர் ததும்பியது.

"வேண்டாம்டி.. இனியெல்லாமே நல்லதுதான் நடக்கும்.." மனைவியை அணைத்துக் கொண்டார் கோவிந்தராஜன்..

அர்ச்சனாவுடன் காதல் அரும்பிய பிறகு அவள் வீட்டிற்கு வரும் நேரம் பார்த்து மூர்த்தியும் வந்து சேர்ந்து விடுவான்.. அன்று என்னவோ சொல்லி வைத்ததைப் போல அவர்கள் இருவரும் ஒரே நேரத்தில் பங்களாவின் காம்பவுண்டுக்குள் முன் பின்னாக நுழைந்து ஒருவரையொருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டார்கள்.. அர்ச்சனாவுடன் பேசியபடி வீட்டுக்குள் வந்த மூர்த்தி பெற்றோரைப் பார்த்ததும்..

"அப்பா.. அம்மா.." என்று அவர்களுக்கு அருகில் விரைந்தான்..

'இவங்கதான் மூர்த்தியின் பேரண்ட்ஸா..?' அர்ச்சனா அப்படியே நின்று விட்டாள்.. கோவிந்தராஜனின் பார்வை அவளை அளவிட்டதை புரிந்து கொண்டவளின் உடல் நடுங்கியது.. அவர் அவளை மருமகளாக ஏற்றுக் கொள்வரா..?

"இப்படி வாம்மா.. பக்கத்தில உட்காரு.." வசுந்தரா அன்புடன் அவளைக் கை நீட்டி அழைத்தாள்..

"இருக்கட்டும்ங்க.." அர்ச்சனா உட்காரவில்லை.. அந்த பயமும் பணிவும் கோவிந்தராஜனை இளக்கியது..

"உட்காரும்மா.. உன்னிடம் பேசனும்.."

அவர் சொன்னதும் சோபாவின் நுனியில் அமர்ந்தாள் அர்ச்சனா.. என்ன பேசப் போகிறாரோ என்ற அச்சத்தில் தொண்டை வறண்டது..

"மூர்த்திக்கு உன்னைக் கல்யாணம் பண்ணி வைக்கனும்னு வசுந்தரா ஆசைப்படறா.. அவளுக்காகவும் என் மகனுக்காகவும் நான் இதை ஒப்புக்கறேன்.. பட், உன் அப்பாம்மா ஸ்தானத்தில இருந்து தாரை வார்த்துக் கொடுக்க உனக்குன்னு யாராவது இருக்காங்களா..?"

கோவிந்தராஜனின் கேள்வியில் மூர்த்தி கோபமாகி மறுத்துப் பேசப் போனான்.. அவனை கையமர்த்தித் தடுத்த அர்ச்சனா..

"ஒருவர் இருக்கிறார்.." என்றாள்..

"யாரும்மா அவர்..?"

"நடராஜன்.. என் அப்பாவின் நண்பர்.."

நடராஜனுக்குத் தகவல் பறந்தது.. அவர் மனைவியுடன் கொடைக்கானலுக்கு வந்து அர்ச்சனாவின் திருமணத்தைப் பேசி முடித்தார்.. ஒரு சுபயோக சுபநாளில் மூர்த்தி-அர்ச்சனாவின் திருமணச் சடங்குகள் நடந்து

கொண்டிருந்தபோது லீலாவதி பத்ரகாளி போல அங்கு பிரசன்னமானாள்.

## 26

"நிறுத்துங்க கல்யாணத்தை.."

இந்த டயலாக்கை கேட்டவுடன் மந்திரம் சொல்லிக் கொண்டிருந்த அய்யர் அடக்க ஒடுக்கமாக ஓரம் கட்டி அமர்ந்து கொண்டு..

"இது என்ன சினிமா கிளைமாக்ஸா..?" என்று கேட்டு வைத்தார்.. மாப்பிள்ளை கோலத்தில் இருந்த மூர்த்தியின் முறைப்பு..

'இருக்கு அய்யரே உனக்கு..' என்றது..

"கல்யாணத்தை நிறுத்தச் சொன்னவாளை விட்டு விட்டு என்னை முறைக்கறேளே.. இது நோக்கே நன்னாயிருக்கா..?" அய்யர் நியாயம் கேட்டார்..

"சித்த வாயை மூடிக்கிட்டு இருக்கேளா..?" மூர்த்தி கையைக் கொண்டு வாயைப் பொத்தி டெமான்ஸ்ட்ரேசன் செய்து காண்பித்தான்..

"இது நேக்கே நன்னாத் தெரியுமே.." அய்யர் கரம் கொண்டு திருவாய் மூடினார்..

"நான் சொல்கிற வரை இதையே கண்டினியூ பண்ணனும்.." அய்யருக்கு அதட்டல் போட்டுவிட்டு என்ன நடக்கிறது என்று கவனிக்க ஆரம்பித்தான் மூர்த்தி..

"யாரும்மா நீ..? எங்கே வந்து யார் கல்யாணத்தை நிறுத்தச் சொல்கிற..?" மதுசூதனனின் வயநாட்டு மலையாள சம்பந்தி கர்ஜித்தார்..

மூர்த்தியின் திருமணத்தில் கலந்து கொள்வதற்காக வயநாட்டில் இருந்து அவர் வந்திருக்க, உள்ளூரில் இருந்த

மதுசூதனன் குளிர் காய்ச்சல் என்று சாக்குப் போக்கு சொல்லிவிட்டு கம்பளியை இழுத்துப் போர்த்திக் கொண்டு அரண்மனையில் பதுங்கி விட்டார்.. அவரைக் கவனித்துக் கொள்ள அலமேலு பாட்டி.. ஒத்தாசைக்கு மூத்த மகன் ஜனார்த்தனம்.. கூடமாட உதவி செய்ய ஜனார்த்தனத்தின் மனைவி யமுனா.. பெற்றவர்களைப் பாதுகாக்க நவீனும், நீரஜாவும் என்று சொல்லி வைத்துக் கொண்டு மூர்த்தியின் திருமணத்தைப் புறக்கணித்தார்கள்..

மற்றபடி உள்ளூர், வெளியூர் பிரமுகர்கள், கோவிந்தராஜன் - வசுந்தரா, வசுந்தராவின் பிறந்த வீட்டுச் சொந்தங்கள், மூர்த்தியின் சித்தப்பா சித்தியான ராமநாதன்-கோமளா, அவர்கள் பெற்ற ராஜேஸ்-ராதிகா, மூர்த்தியின் தங்கை மிருதுளா, கோமளாவின் பிறந்த வீட்டுச் சொந்தங்கள் என்று மண்டபம் நிரம்பி வழிந்தது..

"நான் யாரா..? கல்யாணப் பெண்ணோட அம்மாவுக்குத் தெரியாம பொண்ணைக் கடத்திக்கிட்டு வந்து திருட்டுத்தாலி கட்டப் பார்த்துக்கிட்டு என்னிடமே

நீ யாருன்னு கேக்கறிங்களா..? கேட்டுக்கங்கய்யா.. நானு இந்தா மாலையும் கழுத்துமா மணமேடையில் உக்காந்திருக்காளே அர்ச்சனா.. அவளோட அம்மா.. இவரு அவளைக் கட்டிக்கிறதுக்காக நிச்சயம் பண்ணி வைச்சிருந்த மாப்பிள்ளை.. இவருக்கும் இவளுக்கும்

தான் கல்யாணம் நடக்கிறதா இருந்தது.. கட்டிக்கப் போகிறவங்கதானேன்னு ஒரே வீட்டில ஒன்னு மண்ணா வாழ்ந்துக்கிட்டு இருந்தாங்க.. சின்னச் சண்டையில இந்தப் பொண்ணு சொல்லாமக் கொள்ளாம வீட்டை விட்டு ஓடி வந்திருச்சு.. ஓடி வந்த பொண்ணுக்கு ஒளிச்சு வைச்சுக் கல்யாணம் பண்ணப் பாக்கறிங்களே.. நீங்கள்ளாம் பெரிய கட்டிக்கப் போகிறவன்னு ஆசையாசையா இவகூட வாழ்ந்தக்கிட்டு இருந்தாரே.. இவருக்கு என்ன பதிலைச் சொல்லப் போறிங்க..?"

அர்ச்சனா நெஞ்சைப் பிடித்துக் கொண்டு மயங்கிச் சரிந்தாள்.. மாலையும் கழுத்துமாக மணமேடையில்

மூர்த்தியின் மடியில் மயங்கிச் சரிந்தவளை மடியில் தாங்கிக் கொண்ட மூர்த்தி.. மிகச்சரியாக திருமண நாளன்று லீலாவதியை அங்கே அழைத்து வந்தது யார் என்று பார்த்தான்.. அலட்சியப் பார்வையுடன் மாயா நின்றிருந்தாள்.. அவளது விழிகள்..

'என்னைப் பார்த்து 'ச்சீ'ன்னு சொன்னியே.. இப்ப உன் காதலியைப் பார்த்து இந்த ஊர் உலகமே 'ச்சீ'ன்னு சொல்லப் போகுது.. இதுக்கு என்ன செய்யப்போகிற..?' என்று வன்மம் கலந்த ஏளனத்துடன் கேட்டன..

வெளி மாநிலங்களில் இருந்தும் வெளிநாடுகளில் இருந்தும் மூர்த்தியுடன் வியாபாரத் தொடர்வில் இருந்த நண்பர்கள் அனைவரும் வந்திருந்தார்கள்.. அத்தனை பேரும் மேல்தட்டு வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள்.. மூர்த்தியின் மரியாதை கத்தி முனையில் நிறுத்தி வைக்கப்பட்டு விட்ட அந்தச் சூழலில் நடராஜன் கர்ஜித்தார்..

"உனக்குப் பதிலை நான் சொல்கிறேன் லீலாவதி.. கேட்க யாருமில்லைன்னு இஷ்டத்துக்கு கதை கட்டினா சும்மா விடமாட்டேன்.. இங்கே போலிஸ் உயர் அதிகாரிகள் வந்திருக்காங்க.. உன்னை உள்ளே தள்ளி களி திங்க வைச்சுருவாங்க.. ஜாக்கிரதை.."

"போலிஸா..?" லீலாவதி பயந்து பின்வாங்கினாள்..

"ஏம்மா.. இங்கே போலிஸெல்லாம் இருப்பாங்கன்னு நீ சொல்லவே இல்லையே.." என்று மாயாவிடம் கேட்டு அவளையும் மாட்டி விட்டாள்..

பாண்டுரங்கனோ எனக்கும் இதற்கும் யாதொரு சம்பந்தமுமில்லை என்பதைப் போலத் துள்ளிக் குதித்து தள்ளி நின்று கொண்டான்.

"அதுசரி.. இதெல்லாம் உன் வேலைதானா..?" மாயாவை முறைத்த ராஜேஸ் தன் வயநாட்டு தாத்தாவிடம்.

"தாத்தா.. இந்த மாயாதான் மூர்த்தி அண்ணாவை வருசக் கணக்கில் காதலிக்கிறதாச் சொல்லிக்கிட்டு பின்னாடியே அலைந்தவங்க.. அண்ணனுக்கு சொத்தில பங்கு

கிடைக்கலேன்னு தெரிந்ததும் நவீன் அண்ணாவை மேரேஜ் பண்ணிக்க சம்மதம் சொன்னவங்க.. எங்கேஜ்மெண்ட் நடந்து முடிந்ததுதான் உங்களுக்குத் தெரியுமே.." என்று சொன்னான்..

"ஈ பெண்குட்டிதான் ஆ மாயாவோ..? கர்மம்.. இதெல்லாம் பெண் குட்டின்னு ஜீவிதம் செஞ்சு.. எண்ட குருவாயூரப்பா.. மலையாள பகவதி.. ஈ பெண்குட்டியின் வதனம் நோக்கக்கூட எனிக்கு இஷ்டமில்லா... பணமிருந்தாத்தான் புருசன்.. இல்லையெண்டா வேறு ஒரு புருசன்னு தடம் மாறுகிற பெண்குட்டிக்கு எந்து பேரு கொச்சுமோனே..?"

"அதை என் வாயாலே சொல்ல முடியாது தாத்தா.."

மாயா திருமண மண்டபத்தில் இருந்தவர்கள் முன்னிலையில் மறுபடியும் அவமானப்பட்டுப் போனாள்.. நீயெல்லாம் ஒரு பெண்ணா என்று அனைவரும் பார்த்த பார்வையில் மண்டபத்தை விட்டு ஓடிப் போனாள்..

"இந்தப் பொண்ணு பணம் தர்றேன்னு சொல்லிக் கூப்பிட்டுக்கிட்டு வந்துட்டு பாதியிலே ஓடிப் போனாளே.." லீலாவதி சத்தம் போட்டாள்..

"உஷ்ஷ்.." வாயில் ஒற்றை விரலை வைத்து அவளை அடக்கிய நடராஜன் அடக்கி வைத்திருந்த கொந்தளிப்பையெல்லாம் கொட்டித் தீர்த்தார்..

"யாருக்கு யார் அம்மா..? அர்ச்சனா அபிராமி பெற்ற பெண்.. என் நண்பர் வீரப்பனோட மகள்.. எம்.காம் படித்துட்டு பேங்கில் வேலை செய்கிறவள்.. கொடைக்கானலிலே பங்களா, ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ் கட்ட இடம்ன்னு சீர் செனத்தியோடு மூர்த்திசாரைக் கல்யாணம் பண்ணிக்கப் போகிற பெரிய இடத்துப் பெண்..! நீ அர்ச்சனாவின் வீட்டில் குடியிருக்கிற கேடு கெட்ட பெண்.. இவன் உன்னோட காதலன்.. கல்யாணம் பண்ணிக்காம நீயும், இவனும் சேர்ந்து வாழ்கிறீங்க.. உங்க ரெண்டு பேருக்கும் ஒரு பையன் இருக்கான்.. உன் புருசனை நீ என்னென்னவோ சொல்லுவியா..?"

"என் பையன் இவளோட தம்பி.."

"தன் வீட்டில அர்ச்சனா உன்னைக் குடி வைத்தது எதுக்கு..? தாய் தகப்பன் இல்லாம தனியா இருக்கோமே.. துணைக்கு ஒரு குடும்பம் இருக்கட்டுமேன்னு அர்ச்சனா நினைத்தா.. உன் பையனிடம் தம்பி, தம்பின்னு பழகினா அவன் அர்ச்சனாவுக்குத் தம்பியாகிருவானா..? டி.என்.ஏ டெஸ்ட் எடுத்துப் பார்த்தா உண்மை தெரிஞ்சிருமே.. உன் மகன் இந்த பாண்டுரங்கனுக்குப் பிறந்தவனா இல்லை அர்ச்சனாவின் தம்பியான்னு.."

"டி.என்.ஏ டெஸ்ட்டா.." பாண்டுரங்கனின் முகம் வெளிறிவிட்டது..

அதற்கும் மேல் வீரப்பனுக்கும் தனக்கும் நடந்த கல்யாணத்தைப் பற்றிச் சொன்னால் அசிங்கமாகி விடும் என்று லீலாவதி வாயை மூடிக் கொண்டாள்.. வயிற்றில் பாண்டுரங்கனின் குழந்தையை சுமந்து கொண்டு அதை வீரப்பனின் குழந்தையென்று பொய் சொல்லி வழக்கு வைத்து வீரப்பனை தாலிகட்ட வைத்து விட்ட குற்றத்திற்காக போலீஸ் அவளை அரெஸ்ட் செய்து விட்டால் என்ன செய்வது என்ற பயம் அவளை பிடித்துக் கொண்டது..

"இதோ பார்.. அர்ச்சனாவின் வீட்டை விற்றாகி விட்டது.. வாங்கியிருப்பது பெரிய ஆள்.. இன்னும் இரண்டே நாளில் நீ மூட்டை முடிச்சுடன் வீட்டை விட்டு வெளியேறலைன்னா அவரோட ஆள்கள் உன்னை எப்படிக் காலி பண்ணனுமோ அப்படிக் காலி பண்ணிருவாங்க.."

நடராஜன் விசமக்காரர்.. உன்னை எப்படி காலி பண்ண வைக்கனுமோ என்று சொல்ல வேண்டியதை வேண்டுமென்றே எப்படிக் காலி பண்ணனுமோ என்று சொல்லி பயமுறுத்தி வைத்தார்..

"அந்த வீட்டு மேலே லோன் இருக்கே.." லீலாவதி வீடாக்கண்டியாக வாதாடினாள்..

"லோன் அமொண்டைக் கட்டி விட்டு மீதத் தொகையை கொடுத்துத்தான் பெருமாள் வீட்டை வாங்கியிருக்காரும்மா.."

"பெருமாளா..?" லீலாவதியின் சர்வாங்கமும் ஒடுங்கி விட்டன..

பெருமாள் சாத்தூரில் மிகப்பெரிய பணக்காரர்.. அடியாள்கள் படைகொண்ட அடாவடிக்காரர்.. அவரை எதிர்த்து நிற்பவர்களை இருந்த இடம் தெரியாமல் அழித்து விடுவார்.. அவர் வாங்கியிருக்கும் வீட்டில் லீலாவதி ஓர் நிமிடம் குடியிருந்தால்கூட ஆபத்து அவளைத் தேடி வெற்றிலை பாக்கு வைத்து அழைக்காமலே வீடு வந்து சேர்ந்து விடும்..

மூர்த்தியின் தந்தையிடம் சம்பந்தம் பேசும் போதே அர்ச்சனாவுக்குத் தான்தான் கார்டியன் என்று அறிமுகப் படுத்திக் கொண்டார் நடராஜன்.. லீலாவதியைப் பற்றி மூச்சுக்கூட விடவில்லை.. மூர்த்திக்கு அனைத்து விவரங்களும் தெரிந்திருக்கும் போது அனைவருக்கும் அதைபற்றிச் சொல்ல வேண்டிய அவசியமில்லை என்று மூர்த்தி நடராஜனிடம் சொல்லியிருந்தான்..

நடராஜன் தன் பொறுப்பில் வீரப்பன் ஒப்படைத்திருக்கும் சாத்தூர் பங்களாவும், வீடும் அர்ச்சனாவுக்குச் சொந்தம் என்பதைச் சொல்லி அவற்றை விற்று கொடைக்கானலில் பங்களாவும், இடமும் வாங்கித் தருவதாக சொன்னார்.. கோவிந்தராஜனுக்கு சந்தோசமாகி விட்டது.. மருமகளை எவரும் குறைவாக பேசிவிட முடியாது என்ற நிம்மதி அவருக்கு தாய் வீட்டுச் சீதனமாக அவரது மருமகள் பங்களாவையும், வீட்டையும் கொண்டு வருகிறாள்.. அத்துடன் நூறு பவுன் நகை வேறு..

"அபிராமியின் நகைகளை வீரப்பன் என்னிடம்தான் கொடுத்து வைத்திருக்கிறார்.. அர்ச்சனாவின் சேமிப்பில் செய்த நகைகளுடன் அதைச் சேர்த்தால் நூறுபவுன் வரும்.. உங்கள் தகுதிக்கு இது ரொம்ப ரொம்ப கம்மிதான்..

இருந்தாலும் எங்க அர்ச்சனா உங்க வீட்டுக்கு சீர், செனத்தியோடுதான் மருமகளாய் வருவா சார்.."

நடராஜன் சொன்னபடி உடனடியாக அர்ச்சனாவின் பெயரில் இருந்த பங்களாவை விற்று கொடைக்கானலில் புதிய பங்களா ஒன்றை வாங்கிக் கொடுத்து விட்டார்.. லீலாவதி குடியிருந்த வீட்டை விற்பதுதான் அவருக்குத் தலைவேதனையாக இருந்தது.. பெருமாளை அணுகினார்..

"இதுக்கா இம்புட்டுக் கவலைப்படறீங்க..? நீங்க சொல்கிற அர்ச்சனா வேலை பார்த்த பேங்கிலதான் என்னோட அக்கவுண்ட் இருக்கு.. பேங்குக்குப் போகிறப்ப பார்த்திருக்கேன்.. அமைதியான பொண்ணு.. முகத்தில எப்பவும் ஒரு சோகம் இருக்கும்.. அதுக்குக் காரணம் அந்த லீலாவதிதானா..? கவலையை விடுங்க.. லோனை அடைச்சுட்டு வீட்டை நான் வாங்கிக்கறேன்.. என் வீட்டில் அந்த லீலாவதி எப்படிக் குடியிருக்கிறாள்ன்னு பார்த்துடறேன்.. யாருகிட்ட..?"

பெருமாள் லீலாவதி குடியிருந்த வீட்டை வாங்கிக் கொண்டார்.. லோன் போக மீதிப் பணத்தை கொடுத்து விட்டார்.. அந்தப் பணத்தில் கொடைக்கானலில் முக்கியமான பகுதியில் அர்ச்சனாவின் பெயருக்கு நடராஜன் இடம் வாங்கிப் போட்டு விட்டார்..

"வீடு கட்ட மனை இருக்கு.. சேர்த்து வைச்ச பணம் இருக்கு.. அபேஸ் பண்ணின நகை இருக்கு.. இதுவே அதிகம்.. நாம வேற வீட்டுக்கு குடிபோய் விடலாம்.." பாண்டுரங்கனின் காதில் ஓதி அவனைக் கைப்பற்றிக் கொண்டு லீலாவதி இடத்தைக் காலி செய்து விட்டாள்..

"கல்யாணப் பொண்ணு மயக்கமாயிருக்காளே.." அய்யர் மந்திரம் சொல்லத் தயங்கினார்..

"தண்ணி தெளிச்சா எழுந்திருச்சுவாளே.." மூர்த்தி தண்ணீரை அர்ச்சனாவின் முகத்தில் தெளித்து அவளை எழுப்பி உட்கார வைத்தான்..

"கெட்டிமேளம்.. கெட்டிமேளம்.."

அனைத்து திருமணங்களிலும் நடப்பதைப் போல எங்கிருந்தோ ஒருகுரல் ஒலிக்க நாதஸ்வரமும் கெட்டி மேளமும் இணைந்து ஒலித்தன.. மூர்த்தி-அர்ச்சனாவின் திருமணம் இனிதே நடந்து முடிந்தது..

அது பனி விழும் இரவு..! மழையும் பொழிந்து கொண்டிருந்தது... குடையில்லாமல் நனைந்தபடி மூர்த்தியும் அர்ச்சனாவும் கொடைக்கானலின் சாலையில் நடந்து கொண்டிருந்தார்கள்.. குளிரில் நடுங்கியவளைத் தன் ஜெர்கினுக்குள் இழுத்துக் கொண்டு சூடேற்றினான் மூர்த்தி.. கிளர்ச்சியடைந்த அர்ச்சனா தவித்தாள்.. மூர்த்தியின் கழுத்தை வளைத்தாள்..

"வீட்டுக்குப் போகலாம்.." தாபத்துடன் குழைந்தது அவள் குரல்..

"எதுக்கு..?" அவளது கழுத்தில் சூடான முத்தத்தை பதித்தான் மூர்த்தி..

"குட்டிஸ் ரெண்டு பேரும் சாப்பிட்டாங்களோ என்னவோ.."

அவர்களின் பிள்ளைச் செல்வங்களான முகுந்தனையும், அப்சராவையும் அர்ச்சனா நினைவு படுத்தியதில் அவன் அவளது கையைக் கிள்ளி..

"நமக்கு கல்யாணமாகி ஆறு வருசமாச்சு... பிள்ளைகள் வந்தாச்சுன்னு நினைவு படுத்தறியா..? உன்னை.." என்று அடிப்பதைப் போல பாவனை செய்தான்..

அர்ச்சனா கலகலவென சிரித்தாள்.. பனி விழும் இரவுதான் எத்தனை குளுமையானது..!

வெண்புகை போல பனி அவர்களைச் சுற்றிக் கவிந்திருந்தது.. மழைச்சாரல் போல பொழிந்த பனிச் சாரலில் நனைந்த அர்ச்சனா குளிரில் நடுங்கினாள்.. உள்ளங்கைகளைத் தேய்த்து உஷ்ணமாக்கி அவளது கன்னங்களில் வைத்துக் கதகதப்பையூட்டிய மூர்த்திக்கு அவளது முகத்தைப் பார்த்தால் நிலவைப் பார்ப்பதைப் போல இருந்தது..

"பனி விழும் இரவு..

நனைந்தது நிலவு.."

கனத்த அவனது குரலில் அவள் கன்னிப் பருவத்திற்குத் திரும்பினாள்.. இரண்டு குழந்தைகளுக்குத் தாயான பின்பும் இளமைப் பருவத்தின் தலைவாசலில் நிற்பதைப் போன்ற ஓர் சிலிர்ப்பு அவனது தொடுகையிலும் பார்வையிலும் உண்டாகிறதே.. அது எப்படி..? ஓர் நொடியில் கிளர்ச்சியை விதைத்து விடுகிறானே..

"இளங்குயில் இரண்டு..

இணைகின்ற பொழுது.."

அவனுள் புதைந்தவளைத் தழுவிக் கொண்டவனின் பாடல் பூத்தூறலாய் அவளது காதுகளில் புகுந்தது..

"பூப்பூக்கும் ராப்போது

பூங்காற்று தூங்காது..

வா.. வா.. வா.."

அவனது தாபக்குரல் அவளை அழைத்தது.. புல்வெளியில் அவன் சரிந்து அமர்ந்தான்.. மழை நின்றிருந்தாலும் குளிர்காற்று உடலைத் துளைத்தது.. புல்வெளியின் ஊடே இருந்த பூமரங்களில் இருந்து உதிர்ந்த பூக்கள் பாய் போட்டு அவர்களை அழைத்ததில் தவித்தாள் அர்ச்சனா..

"பூவிலே ஒரு பாய் போட்டு

பனித்துளி தூங்க..

பூவிழி இமை மூடாமல்

பைங்கிளி ஏங்க.."

அவளது நெற்றியில் சூடான இதழ் பதித்துச் சூடேற்றிப் பாடினான் மூர்த்தி.. அர்ச்சனாவின் உடல் நடுங்கியது..

"இரவுப் பொழுது இந்த நேரம்..

இனியும் மனதில் என்ன பாரம்..?

துணையை விலக்கி வைத்தால் பாவம்..

தேவையில்லாத தாபம்.."

மூர்த்தியின் விரல்கள் அவளது மேனியில் ஊர்ந்தன.. அவள் புரண்டு அவனது மார்பில் சயனித்தாள்..

"தனிமையே போ..

இனிமையே வா..

நீரும் வேரும்

சேர வேண்டும்.."

சேரத்துடித்த தம்பதியினரைச் சூழல் கட்டிப் போட்டது.. வீடு போக வேண்டும் என்ற நினைவு அவர்களை எழுப்ப யத்தனிக்க, விலக முடியாத தாகம் அவர்களைத் தளை போட்டுப் பிணைத்து படுத்தி வைத்தது..

"காவலில் நிலை கொள்ளாமல்..

தாவுதே மனது..

காரணம் துணையில்லாமல்

வாடிடும் வயது.."

தந்தையாகி விட்ட வயதினன் பாடிய பாடலில் அவள் வாய் பொத்திச் சிரித்தாள்.. மனதுக்குப் பிடித்தவளை மனைவியாக்கிக் கொண்டவன் துணையில்லாமல் வாடுகிறவனைப் போல முகத்தை வைத்துக் கொண்டு ஏக்கப் பெருமூச்சை விட்டதில் அவளது சிரிப்பு அதிகரித்தது..

"ஆசை கொல்லாமல் கொல்லும்..

அங்கம் தாளாமல் துள்ளும்..

என்னைக் கேட்காமல்

ஓடும் இதயம்..

உன்னைத் தேடி வந்து கூடும்.."

அவனது நெருக்கம் அதிகரித்ததில் அவள் அவனது மார்பில் கை வைத்துத் தள்ளி விட்டுத் துள்ளி எழுந்தாள்.

"விரகமே.. ஓர் நரகமோ..? சொல்..

பூவும் முள்ளாய் மாறிப் போகும்..

பனி விழும் இரவு..

நனைந்தது நிலவு.."

குளிர் நிரம்பிய பாடலுடன் அவர்கள் பங்களாவை நோக்கி நடந்தார்கள்.. சாவித்திரியின் இருபக்கமும் அமர்ந்து கைகளை அவளது மடியில் ஊன்றி கதை கேட்டுக் கொண்டிருந்த நான்கு வயது முகுந்தனும்.. இரண்டு வயது அப்சராவும் தாய், தந்தையைப் பார்த்ததும் முகத்தைத் திருப்பிக் கொண்டார்கள்.. அவர்களை விட்டு விட்டு மூர்த்தியும் அர்ச்சனாவும் தனித்து உலாவப் போய் விட்டு வந்ததில் கோபமாம்.. மூர்த்தியை வளர்த்து ஆளாக்கி விட்டு அவனது பிள்ளைச் செல்வங்களையும் வளர்க்க ஆரம்பித்திருக்கும் சாவித்திரி குழந்தைகளின் கோபத்தில் சிரித்தாள்..

"குட்டிங்க சாப்பிட்டிருச்சுங்களா..?"

பொறுப்பு மிக்கத் தாயாகக் கவலைப்பட்டாள் அர்ச்சனா..

"ஊஹீம்.. அப்பாம்மா வந்தாத்தான் வாயைத் திறக்குங்களாம்.. அரட்டி வைச்சிருக்குதுக.." சாவித்திரி சொன்னாள்..

"அப்சராக் குட்டிக்கு அப்பா மேல கோபமா..?" மூர்த்தி மகளை அள்ளிக் கொண்டான்..

"முகுந்த் கண்ணா.. அம்மாகூடப் பேச மாட்டியா..?" அர்ச்சனா மகனைத் தூக்கித் தோளில் சாய்த்துச் செல்லம் கொஞ்சினாள்..

மூர்த்தி உயரேத் தூக்கிப் போட்டுப் பிடித்ததில் அப்சரா கோபத்தை மறந்து மூர்த்தியின் கழுத்தைக் கட்டிக் கொண்டது.. முகுந்தனோ தாயின் செல்லத்தில்..

"இல்லியே.. அம்மாகூட 'டூ' இல்லையே.." என்று உடனடியாக சமாதானப் புறாவைப் பறக்க விட்டான்..

'இதுக கோபம் இவ்வளவுதான்..'

பெற்றோரின் பெருமிதத்துடன் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்ட மூர்த்தி, அர்ச்சனாவின் விழிகளில் தாய், தந்தையின் கர்வம் வழிந்தோடியது..

இரவில் பிள்ளைகள் சாவித்திரியின் அரவணைப்புடன் தூங்கிவிட மூர்த்தியும் அர்ச்சனாவும் அவர்களின் படுக்கையறைக்குள் நுழைந்தார்கள்.. அர்ச்சனா கதவைத் தாழிடுவதற்குள் மூர்த்தியின் கரம் அவளை வளைத்து இழுத்துக் கொண்டது.. தாகத்துடன் அவளை ஆட்கொள்ள ஆரம்பித்தவனுக்கு தாபத்துடன் இசைந்து கொடுக்க ஆரம்பித்தாள் அர்ச்சனா..

நவீனுக்கும் மாயாவுக்கும் நடந்த நிச்சயதார்த்தம் முறிந்து போனது.. வருடக் கணக்கில் காதலித்த மூர்த்தியையே தூக்கியடித்து விட்டு நவீனுடன் நிச்சயதார்த்த மேடையில் நின்றவளுக்கு அவனைத் தூக்கியடித்து விட்டு அடுத்தவனுக்கு கழுத்தை நீட்டத் தெரியாதா என்ன..?

மாயா வெளிநாட்டுத் தொழிலதிபர் ஒருவனை மணந்து கொண்டு விமானத்தில் ஏறிப் பறந்து விட்டாள்.. நவீன் தாய்வழி உறவில் ஒரு பெண்ணை மணந்து கொண்டான்.. மதுசூதனனின் பெயர் மறக்கப்பட்டுக் கொடைக்கானலில் மூர்த்தியின் பெயர் முதன்மையான பணக்காரனாக உச்சரிக்கப்பட்டது..

மிருதுளாவுக்கு சென்னையில் வரன் பார்த்து மணம் முடித்து வைத்தான் மூர்த்தி.. தங்கைக்குத் தன் பரிசாக சென்னையில் ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ் ஒன்றைக் கட்டிக் கொடுத்தான்.. ராஜேஸ் வயநாட்டில் கேரளத்து அழகியைத் திருமணம் செய்து கொண்டு நவீனின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொண்டான்.. திருவனந்தபுரத்தில் ஸ்டார் ஹோட்டல், பங்களாக்கள், எக்ஸ்போர்ட்டு பிஸினெஸ் என்று வளம் கொழிக்கும் பணக்காரனுக்கு வாழ்க்கைப் பட்டாள்

ராதிகா.. நவீனின் தங்கை நீரஜாவுக்கு குன்னூரில் மணமகன் அமைந்தான்..

வாழ்க்கை அவரவருக்கான பாதைகளை சரிவரத்தான் அமைத்துக் கொடுக்கிறது..

திசை மாறும் பறவைகள் எல்லாம் திசையின்றிப் போய் விடுவதில்லை.. தடம் மாறும் பாதங்கள் எல்லாம் வழி மாறிப் போய் விடுவதில்லை..

ஏதேனும் ஓர் திசை கிடைக்கும்.. எங்கோ ஓர் பாதை தோன்றும்.. பாலைவனத்திலும் சோலை இருக்கும்..

ஆதலினால் மக்களே..! வாழ்ந்து பார்ப்போம் வாருங்கள்.. நம் முன் இருப்பது மலர் பாதையோ, முள் பாதையோ, பயணத்தை ஆரம்பிப்போம்.. வலிகள்

என்றும் நிரந்தரமில்லை.. சோகம் மட்டும் நம் சொந்தமில்லை..

பனிவிழும் இரவில் சந்தித்துக் கொண்ட மூர்த்தியும் அர்ச்சனாவும் அவரவரின் வாழ்வில் அடிபட்ட மன வலியுடனும், ஆறாத மன ரணங்களுடனும்தான் சந்தித்துக் கொண்டார்கள்.. அந்த நாளில், அந்த இரவில், அந்தப் பனியில், அந்த நொடியில் அவர்கள் சந்தித்துக் கொள்ள வேண்டும் என்பதுதான் விதி.. காலம் அவர்களைச் சோதித்துக் கொண்டேதான் இருந்ததா..? வாழ்க்கை அவர்களை வஞ்சித்துக் கொண்டேதான் இருந்ததா..?

இல்லையே.. அவர்கள் ஒருவருக்கொருவர் மருந்தானார்கள்.. மண ரணத்தை ஆற்றி வாழ்வில் கை கோர்த்து இணைந்து நடக்க ஆரம்பித்தார்கள்.. முகுந்தன், அப்சரா என்று இரண்டு அழகுப் பெட்டகங்களுக்குத் தாய், தந்தையாகி வாழ்வை வாழ்வாக ரசித்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்..

அனைவரின் வாழ்விலும் பனிவிழும் ஓர் இரவு வரத்தான் செய்யும்.. அதன் குளுமைக்காக நிகழ்கால வெப்பத்தைத் தாங்கிக் கொண்டு ஓட ஆரம்பித்தால் ஒரு குறைவும் வராது..

சரிதானே..?

... சுபம் ...